Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 09-12-2017 Issued: 09-12-2017

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

சனிக்கிழமை, ஜூன் 24, 2017—தொகுதி 27—எண் 1

**Saturday the 24th June 2017—Volume 27—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. 3.00] **Price Rs. 3.00**

**24–6–2017**

**உள்ளடக்கம்**

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் vii-xii

Governor and Council of Ministers xiii-xvi

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் *1-45*

**2. தகவல் கோரல்—**

*(அ)* பேரறிவாளனுக்கு பரோல் வழங்கிடக் கோருதல் *45-46,48-49*

திரு. மு.க. ஸ்டாலின் *45-46*

திரு. உ. தனியரசு *48*

*(ஆ)* NEET தேர்வு முடிவுகள்–தமிழக மாணவர்கள் பாதிப்பு *46-47,50-55*

திரு. துரைமுருகன் *46*

திருமதி எஸ். விஜயதரணி *47*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் *50-55*

திரு. தங்கம் தென்னரசு *52*

முனைவர் க. பொன்முடி *54*

*(இ)* கூம்பு வடிவிலான ஒலிபெருக்கிகளைப் பள்ளிவாசல்களில் பயன்படுத்தக் கோருதல் *47-48*

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் *47-48*

| | பக்கங்கள் |
|---|---|
| **2. தகவல் கோரல்**—தொடர்ச்சி | |
| (ஈ) சில துறைகள் தொடர்பான வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படாதது | 49 |
| *திரு. ஜெ. அன்பழகன் | 49 |
| (உ) தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோருதல் | 67 |
| திரு. த. மனோ தங்கராஜ் | 67 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு**— | |
| பல்லாவரம் தொகுதி, குடிநீர் வழங்குதல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுதல் | 55-60 |
| திரு. இ. கருணாநிதி | 55-57 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 57-60 |
| **4. கவன ஈர்ப்பு**— | |
| திருத்தணி நகராட்சி, வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | 61-66 |
| திரு. பி.எம். நரசிம்மன் | 61-65 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 61-66 |
| திரு. துரைமுருகன் | 66 |
| மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் | 68 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**— | |
| (அ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017 | 69 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 69 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி | |
| (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 | 70-71 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 70,71 |
| திரு. அர. சக்கரபாணி | 70 |
| திருமதி எஸ். விஜயதரணி | 70 |
| *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | 70-71 |
| (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 | 71-72 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 71,72 |
| திரு. எஸ். ஆஸ்டின் | 72 |
| திருமதி எஸ். விஜயதரணி | 72 |
| *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | 72 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 45—சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 73-146, 149-200 |
| (ஆ) கோரிக்கை எண் 52—மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | |
| *மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா | 73,89,107, 116-118, 167-197 |
| *திருமதி பி. கீதா ஜீவன் | 108-116 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 118-120 |

பக்கங்கள்

**6. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன் — *120*

திரு. வி. ராதாகிருஷ்ணன் — *121-128*

திரு. டி.எ. ஏழுமலை — *128-137*

*திரு. வி.எஸ். காளிமுத்து — *78,95 137-146*

திருமதி ப. சத்யா — *150-155*

*திருமதி ம. வரலட்சுமி — *75, 91, 155-166*

திரு. மு.க. ஸ்டாலின் — *196-197*

*டாக்டர் (திருமதி) பூங்கோதை — *86,103-104, 197-198*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி — *198*

**7. விதி 110–ன்கீழ் அறிக்கை**—

மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கி நாசா–வின் முதல் பரிசு பெற்ற கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி, திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழுவினருக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை — *146-147*

**8. மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கிய கரூர் மாவட்டம், திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழுவினருக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்கியது–முதலமைச்சருக்கு நன்றி**— *147-149*

திரு. எச். வசந்தகுமார் — *148*

திரு. V. செந்தில்பாலாஜி — *148*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் — *149*





பக்கங்கள்

**9. அரசினர் தீர்மானம்**—

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — *200-201*

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—

(அ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017 — *201-203*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *201, 203*

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — *203-216*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *203,207, 211-213,216*

திரு. எஸ். ஆஸ்டின் — *204-209*

திருமதி எஸ். விஜயதரணி — *209-210, 214*

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் — *210-211, 215*

திரு. மு.க. ஸ்டாலின் — *213-214*

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — *216-218*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *217-218*

**11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — *219*

**ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர்—திரு. சிஎச். வித்யாசாகர் ராவ்**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| **1. முதலமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் |
| **2. வனத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** வனம் |
| **3. பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை |
| **4. கூட்டுறவுத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன் |

5. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்

6. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்

7. **மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)

8. **சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்

9. **உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**
தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்



10. **சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

11. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

12. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**
சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

13. **உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**
உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

14. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**
கைத்தறி மற்றும் துணிநூல்

15. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**16. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**17. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**18. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத்தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்

**19. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**
வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

**20. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**21. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**
வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்



**22. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**
பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**23. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:**
குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்

**24. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்

**25. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**26. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:**
தகவல் தொழில்நுட்பம்

**27. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:**
ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**28. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:**
கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்

**29. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள் மற்றும் தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

**30. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள் மற்றும் சிறு பான்மையினர் நலன்

**31. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:**
கால்நடை பராமரிப்பு

.



**GOVERNOR AND COUNCIL OF MINISTERS**

**GOVERNOR – THIRU Ch. VIDYASAGAR RAO**

**MEMBERS OF THE COUNCIL OF MINISTERS**

1. **Chief Minister** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**
Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports

2. **Minister for Forests** .. **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:**
Forests

3. **Minister for School Education & Sports and Youth Welfare** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**
School Education, Archaeology, Youth Welfare and Sports Development Department

4. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**
Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

5. **Minister for Electricity, Prohibition & Excise** .. **The Hon. Thiru P. Thangamani:**
Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act

6. **Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme** .. **The Hon. Thiru S.P. Velumani:**
Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme

| | | |
|---|---|---|
| 7. | **Minister for Fisheries, Finance and Personnel & Administrative Reforms** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation, Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training) |
| 8. | **Minister for Law, Courts & Prisons** | .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons |
| 9. | **Minister for Higher Education** | .. **The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology |
| 10. | **Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme** | .. **The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme |
| 11. | **Minister for Industries** | .. **The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives |
| 12. | **Minister for Environment** | .. **The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control |
| 13. | **Minister for Food & Civil Supplies** | .. **The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 14. | **Minister for Handlooms & Textiles** | .. **The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles |



| | | |
|---|---|---|
| 15. | **Minister for Housing & Urban Development** | **The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 16. | **Minister for Health & Family Welfare** | **The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare |
| 17. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |
| 18. | **Minister for Information & Publicity** | .. **The Hon. Thiru Kadambur Raju**: Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press |
| 19. | **Minister for Revenue** | .. The Hon. Thiru R.B. Udhayakumar: Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies |
| 20. | **Minister for Tourism** | The Hon. Thiru Vellamandi N. Natarajan: Tourism, Tourism Development Corporation |
| 21. | **Minister for Commercial Taxes** | .. The Hon. Thiru K.C. Veeramani: Commercial Taxes, Registration and Stamp Act |

| | | |
|---|---|---|
| 22. **Minister for Milk & Dairy Development** | .. | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development |
| 23. **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries |
| 24. **Minister for Labour** | .. | **The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board |
| 25. **Minister for Transport** | .. | **The Hon. Thiru M.R. Vijayabhaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 26. **Minister for Information Technology** | .. | **The Hon. Dr. M. Manikandan:** Information Technology |
| 27. **Minister for Adi Dravidar & Tribal Welfare** | .. | **The Hon. Tmt V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. **Minister for Khadi & Village Industries Board** | .. | **The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan |
| 29. **Minister for Hindu Religious & Charitable Endowments** | .. | **The Hon. Thiru Sevvoor S. Ramachandran**: Hindu Religious & Charitable Endowments and Tamil Official Language & Tamil Culture |
| 30. **Minister for Backward Classes & Minorities Welfare** | .. | **The Hon. Tmt S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare |
| 31. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P. Balakrishna Reddy:** Animal Husbandry |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்*

### மாற்றுத் தலைவர்கள்#

*திரு. சு. ரவி*

*திரு. பி.எம். நரசிம்மன்*

*திரு. வி.வி. இராஜன் செல்லப்பா*

*திரு. சு. குணசேகரன்*

*திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*

*திரு. P. வெற்றிவேல்*

### செயலாளர் (பொறுப்பு)

*திரு. க. பூபதி*

---

# *14–6–2017 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் |
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ. | .. இணைச் செயலாளர் |
| திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. பாண்டுரங்கன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) |
| திரு. ஜி. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) |
| திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |

| | |
|---|---|
| திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி சீ. உஷா, பி.காம். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட். | .. தலைமை நிருபர் |
| திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சு. சந்தனமதி, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி த. சுஜாதா தேவி, பி.இ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்.சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. முரளீதரன் நாயர் | .. சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அம்பேத்குமார், திரு. எஸ். | .. வந்தவாசி (செ.வ.) |
| 2. | அம்மன் கே. அர்ச்சுணன், திரு. | .. கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | அரசு, டாக்டர் ஆர்.டி. | .. செய்யூர் (செ.வ.) |
| 4. | அரவிந்த் ரமேஷ், திரு. எஸ். | .. சோழிங்கநல்லூர் |
| 5. | அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி. | .. கோயம்புத்தூர் வடக்கு |
| 6. | அலெக்சாண்டர், திரு. வீ. | .. அம்பத்தூர் |
| 7. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 8. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 9. | அன்பழகன், திரு. க. | .. கும்பகோணம் |
| 10. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 11. | அன்பழகன், திரு. ஜெ. | .. சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி |
| 12. | அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. | .. திருவெறும்பூர் |
| 13. | ஆடலரசன், திரு. ப. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ. | .. நத்தம் |
| 15. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. கவுண்டம்பாளையம் |
| 16. | ஆறுமுகம், திரு. பா. | .. கந்தர்வகோட்டை (செ.வ.) |
| 17. | ஆஸ்டின், திரு. எஸ். | .. கன்னியாகுமரி |
| 18. | இரத்தினசபாபதி, திரு. ஏ. | .. அறந்தாங்கி |

| | | |
|---|---|---|
| 19. | இரவிச்சந்திரன், திரு. கே.எஸ். | .. எழும்பூர் (செ.வ.) |
| 20. | இராதாமணி, திரு. கு. | .. விக்கிரவாண்டி |
| 21. | இராமசாமி, திரு. கரி. | .. காரைக்குடி |
| 22. | இராமச்சந்திரன், திரு. ஆர்.டி | .. குன்னம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. எம். | .. ஒரத்தநாடு |
| 24. | இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். | .. அருப்புக்கோட்டை |
| 25. | இராமலிங்கம், திரு. கே.வி. | .. ஈரோடு மேற்கு |
| 26. | இராஜன் செல்லப்பா, திரு. வி.வி. | .. மதுரை வடக்கு |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | .. தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. இரா. | .. சேலம் வடக்கு |
| 29. | இராஜேந்திரன், திரு. சி.வி. | .. பர்கூர் |
| 30. | இன்பசேகரன், திரு. பி.என்.பி. | .. பெண்ணாகரம் |
| 31. | இன்பதுரை, திரு. ஐ.எஸ். | .. ராதாபுரம் |
| 32. | ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல். | .. ஆற்காடு |
| 33. | ஈஸ்வரன், திரு. எஸ். | .. பவானிசாகர் (செ.வ.) |
| 34. | உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. | .. உடுமலைப்பேட்டை |
| 35. | உதயகுமார், திரு. ஆர்.பி. | .. திருமங்கலம் |
| 36. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 37. | உமா மகேஸ்வரி, திருமதி கு. | .. விளாத்திகுளம் |
| 38. | எடப்பாடி கே. பழனிசாமி திரு. | .. எடப்பாடி |
| 39. | எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன், திரு. | .. சாத்தூர் |



| | | |
|---|---|---|
| 40. | எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. | .. காஞ்சிபுரம் |
| 41. | ஏழுமலை, திரு. டி.எ. | .. பூந்தமல்லி (செ.வ.) |
| 42. | கடம்பூர் ராஜு, திரு. | .. கோவில்பட்டி |
| 43. | கணேசன், திரு. வெ. | .. திட்டக்குடி (செ.வ.) |
| 44. | கணேஷ், திரு. ஆர். | .. உதகமண்டலம் |
| 45. | கதிர்காமு, டாக்டர் கா. | .. பெரியகுளம் (செ.வ.) |
| 46. | கருணாநிதி, கலைஞர் மு. | .. திருவாரூர் |
| 47. | கருணாநிதி, திரு. இ. | .. பல்லாவரம் |
| 48. | கருணாஸ், திரு. சே. | .. திருவாடனை |
| 49. | கருப்பணன், திரு. கே.சி. | .. பவானி |
| 50. | கலைச்செல்வன், திரு. V.T. | .. விருத்தாசலம் |
| 51. | கனகராஜ், திரு. ஆர். | .. சூலூர் |
| 52. | கஸ்தூரி வாசு, திருமதி வி. | .. வால்பாறை (செ.வ.) |
| 53. | காந்தி, திரு. ஆர். | .. ராணிப்பேட்டை |
| 54. | காமராஜ், திரு. இரா. | .. நன்னிலம் |
| 55. | கார்த்திகேயன், திரு. க. | .. ரிஷிவந்தியம் |
| 56. | கார்த்திகேயன், திரு. ப. | .. வேலூர் |
| 57. | கார்த்திக், திரு. நா. | .. சிங்காநல்லூர் |
| 58. | காளிமுத்து, திரு. வி.எஸ். | .. தாராபுரம் (செ.வ.) |
| 59. | கிரி, திரு. மு.பெ. | .. செங்கம் (செ.வ.) |
| 60. | கீதா, திருமதி, ம. | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 61. | கீதா ஜீவன், திருமதி பி. | .. தூத்துக்குடி |
| 62. | குணசேகரன், திரு. சு. | .. திருப்பூர் தெற்கு |
| 63. | குமரகுரு, திரு. இரா. | .. உளுந்தூர்பேட்டை |

64. கோதண்டபாணி, திரு. மு. .. திருப்போரூர்
65. கோவிந்தராசு, திரு. மா. .. பேராவூரணி
66. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
67. சக்திவேல், திரு. எ.பி. .. சேலம் தெற்கு
68. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (செ.வ.)
69. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
70. சண்முகம், திரு. அ. .. கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
72. சத்திய நாராயணன், திரு. ப. .. தியாகராய நகர்
73. சத்யா, திருமதி ப. .. பண்ருட்டி
74. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
75. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
76. சந்திரசேகர், திரு. இரா. .. மணப்பாறை
77. சந்திரபிரபா, திருமதி மு. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
78. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
79. சரவணன், திரு. எஸ்.எஸ். .. மதுரை தெற்கு
80. சரஸ்வதி, திருமதி பொன். .. திருச்செங்கோடு
81. சரோஜா, டாக்டர் வி. .. ராசிபுரம் (செ.வ.)
82. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
83. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வா.)
84. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (செ.வ.)
85. சிவசுப்பிரமணி, திரு. வே.பொ. .. மொடக்குறிச்சி
86. சின்னதம்பி, திரு. ஆர்.எம். .. ஆத்தூர் (செ.வ.)
87. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்



88. சீத்தாபதி, திருமதி, பெ. .. திண்டிவனம் (செ.வ.)
89. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
90. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
91. சுந்தரராஜ், திரு. ஆர். .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
92. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
93. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
94. சுப்ரமணி, திரு. பெ. .. தருமபுரி
95. சுரேஷ் ராஜன், திரு. என். .. நாகர்கோவில்
96. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
97. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிச்செட்டி பாளையம்
98. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
99. செந்தில்பாலாஜி, திரு. V. .. அரவக்குறிச்சி
100. செம்மலை, திரு. S. .. மேட்டூர்
101. செல்லூர் கா. ராஜூ, திரு. .. மதுரை மேற்கு
102. செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ். .. தென்காசி
103. செல்வம், திரு. கு.க. .. ஆயிரம் விளக்கு
104. செல்வராசு, திரு. எம். .. முசிறி
105. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
106. சேகரன், திரு. கே.வி. .. போளூர்
107. சேகர், திரு. C.V. .. பட்டுக்கோட்டை
108. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
109. சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு. .. ஆரணி

110. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
111. தங்கதுரை, திரு. ஆர். .. நிலக்கோட்டை (செ.வ.)
112. தங்கப்பாண்டியன், திரு. சௌ. .. ராஜபாளையம்
113. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
114. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
115. தமிமுன் அன்சாரி, திரு. எம். .. நாகப்பட்டினம்
116. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
117. தமிழ்ச்செல்வன், திரு. ரா. .. பெரம்பலூர் (செ.வ.)
118. தனபால், திரு. ப. .. அவினாசி (செ.வ.)
119. தனியரசு, திரு. உ. .. காங்கேயம்
120. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
121. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
122. துரை. கி. சரவணன், திரு. .. புவனகிரி
123. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. தூசி கே. மோகன், திரு. .. செய்யாறு
126. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு கிழக்கு
127. நடராஜன், திரு. அ. .. பல்லடம்
128. நடராஜ், திரு. ஆர். .. மயிலாப்பூர்
129. நந்தகுமார், திரு. ஏ.பி. .. அணைக்கட்டு
130. நரசிம்மன், திரு. பி.எம். .. திருத்தணி
131. நல்லதம்பி, திரு. அ. .. திருப்பத்தூர்



132. நிலோபர் கபில், டாக்டர் (திருமதி) .. வாணியம்பாடி
133. நீதிபதி, திரு. பா. .. உசிலம்பட்டி
134. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி மேற்கு
135. பரமசிவம், டாக்டர் V.P.B. .. வேடசந்தூர்
136. பரமேஸ்வரி, திருமதி மு. .. மணச்சநல்லூர்
137. பலராமன், திரு. ப. .. பொன்னேரி (செ.வ.)
138. பவுன்ராஜ், திரு. எஸ். .. பூம்புகார்
139. பழனி, திரு. கே. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
140. பழனியப்பன், திரு. பெ. .. பாப்பிரெட்டிப்பட்டி
141. பழனிவேல் தியாக ராஜன், திரு. .. மதுரை மத்தி
142. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
143. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
144. பன்னீர்செல்வம், திரு. வி. .. கலசப்பாக்கம்
145. பாண்டி, திரு. ச. .. முதுகுளத்தூர்
146. பாண்டியராஜன், திரு. க. .. ஆவடி
147. பாண்டியன், திரு. கே.ஏ. .. சிதம்பரம்
148. பாரதி, திரு. பி.வி. .. சீர்காழி (செ.வ.)
149. பார்த்திபன், திரு. என்.ஜி. .. சோளிங்கர்
150. பாலகிருஷ்ணா ரெட்டி, திரு. பா. .. ஓசூர்
151. பாலசுப்பிரமணி, திரு. ஆர். .. ஆம்பூர்
152. பாஸ்கரன், திரு. க. .. சிவகங்கை
153. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

154. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்
155. பிரகாஷ், திரு. ஒய். .. தளி
156. பிரபு, திரு. அ. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)
157. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
158. புகழேந்தி, திரு. சு. .. மதுராந்தகம் (செ.வ.)
159. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியண்ணன் அரசு, திரு. .. புதுக்கோட்டை
163. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்
164. பென்ஜமின், திரு. பா. .. மதுரவாயல்
165. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி
166. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்
167. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
168. மணிகண்டன், டாக்டர் எம். .. இராமநாதபுரம்
169. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்
170. மதிவாணன், திரு. உ. .. கீழ்வேளூர் (செ.வ.)
171. மருதமுத்து, திரு. அ. .. கெங்கவல்லி (செ.வ.)
172. மனோகரன், திரு. அ. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
173. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்
174. மனோரஞ்சிதம், திருமதி நா. .. ஊத்தங்கரை (செ.வ.)
175. மனோன்மணி, திருமதி ப. .. வீரபாண்டி



176. மஸ்தான், திரு. கே.எஸ். .. செஞ்சி
177. மாசிலாமணி, டாக்டர் இரா. .. மயிலம்
178. மாணிக்கம், திரு. கி. .. சோழவந்தான் (செ.வ.)
179. மாரியப்பன் கென்னடி, திரு. சோ. .. மானாமதுரை (செ.வ.)
180. முத்தையா, டாக்டர் எஸ். .. பரமக்குடி (செ.வ.)
181. முருகன், திரு. ஆர். .. அரூர் (செ.வ.)
182. முருகன், திரு. பி. .. வேப்பனஹள்ளி
183. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
184. முருகையா பாண்டியன், திரு. ஆர். .. அம்பாசமுத்திரம்
185. முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம். .. கடையநல்லூர்
186. மூர்த்தி, திரு. கே.எஸ். .. பரமத்தி–வேலூர்
187. மூர்த்தி, திரு. பி. .. மதுரை கிழக்கு
188. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
189. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
190. மோகன், திரு. எம்.கே. .. அண்ணா நகர்
191. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
192. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
193. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)
194. ராசேந்திரன், திரு. சபா. .. நெய்வேலி
195. ராதாகிருஷ்ணன், திரு. வி. .. மயிலாடுதுறை
196. ராமர், திரு. எ. .. குளித்தலை

197. ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என். .. ஜெயங்கொண்டம்

198. ராமு, திரு. அ. .. குன்னூர்

199. ராஜலெட்சுமி, திருமதி வி.எம். .. சங்கரன்கோவில் (செ.வ.)

200. ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈஎம்.ஆர். .. அந்தியூர்

201. ராஜா, திரு. சி. .. சங்கரி

202. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

203. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

204. ராஜேந்திரன், திரு. சு. .. அரியலூர்

205. ராஜேந்திரன், திரு. வி.ஜி. .. திருவள்ளூர்

206. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்

207. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

208. லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ். .. திருநெல்வேலி

209. லோகநாதன், திரு. கோ. .. கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)

210. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி

211. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு

212. வளர்மதி, திருமதி சீ. .. ஸ்ரீரங்கம்

213. வாகை சந்திரசேகர், திரு. .. வேளச்சேரி

214. விருகை V.N. ரவி, திரு. .. விருகம்பாக்கம்

215. விஜயகுமார், திரு. க.நா. .. திருப்பூர் வடக்கு

216. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

217. விஜய பாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

218. விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர். .. கரூர்



219. விஜியகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி

220. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

221. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

222. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

223. வெல்லமண்டி ந. நடராஜன், திரு. .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

224. வெற்றிவேல், திரு. ச. .. ஓமலூர்

225. வெற்றிவேல், திரு. P. .. பெரம்பூர்

226. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

227. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

228. ஜக்கையன், திரு. எஸ்.டி.கே. .. கம்பம்

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயந்தி பத்மநாபன், திருமதி சி. .. குடியாத்தம் (செ.வ.)

231. ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா. .. மடத்துக்குளம்

232. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (செ.வ.)

233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) நியமனம்

235. வெற்றிடம் .. டாக்டர்இராதாகிருஷ்ணன் நகர்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஆர். முத்துக்குமாரசாமி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, ஆனி 10, திருவள்ளுவர் ஆண்டு – 2048

## 2017 ஜூன் 24, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு."

அன்பு மற்றவர்களிடம் விருப்பம் உடையவராய் வாழும் தன்மையைத் தரும். அதுவே அனைவரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பையும் தரும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**81—**

### சாலை அமைத்தல்

***2717—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், நாயக்கன்பாளையம் ஊராட்சி, பெரும்பதி, பெருக்குபதி மற்றும் பசுமணி ஆகிய கிராமங்களில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2017 ஜுன் 24

மாண்புமிகு கவுண்டம்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள், அவரது தொகுதியிலுள்ள பெரும்பதி, பெருக்குபதி மற்றும் பசுமணி ஆகிய கிராமங்களுக்கு சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்தச் சாலைகள் வனத் துறை சட்ட விதிகளின்படி right of way இல்லாமல் 2 கி.மீ. நீளமும், 3.5 மீட்டர் அகலமும் கொண்ட மண் சாலைகளாகும். ஒரு ஹெக்டேருக்குக் குறைவான, நிலம் தான் தேவை என்று இருந்தால் அவர் குறிப்பிட்ட மலைவாழ் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகளுக்கு வன உரிமைச் சட்டம் 2006–ன்படி நில மாற்றம் செய்து அனுமதி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றிருக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், நாயக்கன்பாளையம் ஊராட்சி, கோவனூரிலிருந்து பாலைமலை வரை ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 5 கி.மீ. தொலைவிற்கு மத்திய வனத் துறையின் அனுமதி பெற்று தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சாலையிலிருந்து பெரும்பதி, பெருக்குபதி மற்றும் பசுமணி ஆகிய கிராமங்கள் தலா 1 கி.மீ. தொலைவுதான் உள்ளன. மாவட்ட வனத் துறையின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. ஆகவே, இந்த நிதியாண்டில் வனத் துறையின் அனுமதியுடன் நிதி ஒதுக்கி மலைவாழ் மக்கள் வாழும் அந்தப் பகுதிகளுக்கு சாலை அமைத்துக் கொடுப்பார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜுன் 24]

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பெரும்பதி, பெருக்குபதி மற்றும் பசுமணி ஆகிய கிராமங்களில் 11 கி.மீ. நீளம் செல்லும் பாதையில் 5 கி.மீ. நீளத்திற்குச் செல்லும் சாலையானது மாங்குழி, பசுமணி ஆகிய ஊர்களில் உள்ள மலைவாழ் மக்கள் வாழும் குடியிருப்புகளை இணைக்கும் சாலையாக இருந்தாலும், right of way-வழிப்பாதை உரிமம் இதற்கு இல்லை. இதுதவிர குஞ்சூர்பதி முதல் பசுமதிபுதூர் வரைச் செல்லும் மண் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் 2 கி.மீ. நீளமும் 3.5 மீட்டர் அகலமும் உள்ள பாதையை, பெரும்பதி மற்றும் பெருக்குபதி மலைவாழ் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வன உரிமைச் சட்டம் 2006–ன்படி வன நில மாற்றம் செய்து நிதி ஆதாரங்களின் அடிப்படையில் அனுமதி வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையின் பிரதான மாவட்டங்களான கோவை, திருப்பூர் மாவட்டங்கள் பயன்பெறுகின்ற பரம்பிக்குளம், பெருவாரிப்பள்ளம், தூனக்கடவு போன்ற அணைகளுக்குச் செல்கின்ற பாதை நீண்டகாலமாகப் பழுதுபட்டுள்ளது. அந்தப் பாதைகளைச் செப்பனிடுவதற்காக வனத் துறையின்மூலம் முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு வருவதாக அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த அணைகளுக்குச் செல்கின்ற பாதைகளைச் செப்பனிடுவதற்கான உத்தரவினை வழங்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூன் 24

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த அணைகளின் பாதைகளில் உள்ள வழிகள், தடங்களையெல்லாம் ஆய்வு செய்து, அரசினுடைய நிதி நிலையையும் கருத்தில்கொண்டு வனச் சட்டத்திற்குட்பட்டு அந்தப் பாதைகள் வருமானால், நிச்சயமாக விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, மயிலாடும்பாறை–மல்லப்புரம் சாலை கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக போடப்படாமல் இருக்கிறது. பேருந்துகளும் இயக்கப்படாமல் இருக்கின்றன. மதுரை மாவட்டத்தையும், தேனி மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய சாலை. தயவுகூர்ந்து இந்த நிதியாண்டு அந்தச் சாலையை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, கடமலைமேலை யூனியனில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் தார்ச் சாலைகள் நிறைய இருக்கின்றன. அச்சாலைகள் 100 ஆண்டுகளுக்கும் மேலாக இதே நிலையில்தான் உள்ளன. இடையிடையே 50 மீட்டர், 60 மீட்டர், 70 மீட்டர் என தார்ச் சாலை வனப் பகுதிக்குள் போவதால் அந்தச் சாலைகள் முழுவதுமாக மக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் அவர்கள் சிரமப்படுகிற சூழ்நிலை வருகிறது. ஆகவே, வனத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அந்த 100 மீட்டர், 50 மீட்டர், 15 மீட்டர் சாலையை உபயோகப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்குமாறு அன்போடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் குறிப்பிட்ட ஆண்டிப்பட்டி பகுதி அடர்த்தியான காப்புக் காடுகளைக் கொண்டுள்ளது என்பது



2017 ஜூன் 24]

நேரடியாகவே எனக்குத் தெரியும். சென்ற 6 மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் ஏற்கெனவே அவர்கள் இந்த வினாவை எழுப்பியுள்ளார்கள். அந்த காப்புக் காடுகளில் மத்திய அரசாங்கத்தின் சட்டத்திற்கு விதி விலக்கு அளிக்கின்ற அந்த உரிமையைப் பெற்று, தமிழ்நாடு அரசாங்கத்தின் ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு அனுமதி வழங்கப்படுகின்ற அந்த வழிப்படி அந்த பாதையைச் சரி செய்து, பராமரிப்பதற்குரிய சூழ்நிலையை நிதிநிலை ஆதாரத்தை ஆராய்ந்து செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேகமலையில் தனியார் எஸ்டேட் வைத்திருப்பவர்கள் வனத் துறையினுடைய அனுமதி இல்லாமல் மரங்களை வெட்டி அங்கு ஒரு பிரச்சினையை உருவாக்குகிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் சட்டத்தின்படி அவர்களை நடக்கவும், மரங்களை வெட்ட வேண்டாம் என்றும் அறிவுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அவரும் அதை என்னிடம் கூறியிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு பகுதியில் முல்லைபூகாணி நிரப்பு செல்லும் சாலை பயன்பாட்டில் உள்ள சாலைதான். ஆனால் 20 ஆண்டுகளாக செப்பனிடப்படவில்லை. அது வனத் துறைக்குச் சம்பந்தமான வனப் பகுதிகள் இருக்கக்கூடிய சாலைதான். மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் இதற்குண்டான சாலை நிதி அபரிமிதமாக உள்ளது. ஆகையால் இந்தச் சாலையை உடனடியாகச் செப்பனிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பிற்குரிய உறுப்பினர்

[2017 ஜூன் 24

அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் சாலைகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். வனக் கட்டுப்பாடு சட்டங்கள் மத்திய அரசால் நெறிமுறைப்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வரப்பெறுகின்றன. ஒரு ஹெக்டேர் அதாவது 2.5 ஏக்கர் வரை மட்டுமே நிலம் தேவைப்படும்போது மாநில அரசிற்கு அனுமதி வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்குமேல் சாலைகள் அமைக்க, வன நிலம் தேவைப்படும்பட்சத்தில் அதில் உரிய விவரங்களுடன் சாலை அமைக்கக்கோரும் துறையோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையோ, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையோ மத்திய அரசிற்கு இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில் மத்திய அரசு அனுமதி வழங்குகிறது. இந்த நடைமுறையை கடுமையாகப் பின்பற்றி வருகிறது. வன நிலம் சார்ந்த பொது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என முழு ஈடுபாட்டுடன் அதே பின்பற்றுதலுடன் செயல்பட்டுவரும் மாநில அரசும் அந்தப் பகுதிகளுக்கு நிதி ஆதாரங்களின் அடிப்படையில் சாலைகளைச் செப்பனிடும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் குறிப்பிட்டுள்ள நிதி ஆதாரத்தையும் கருத்தில் கொண்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

முற்பகல் 10–10

**திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட காளிங்கராயன் மற்றும் எல்.பி.பி. பாசனப் பகுதிகளில், வறட்சியின் காரணமாகக் குறைந்த அளவேயுள்ள நிலத்தடி நீரினைப் பயன்படுத்தி, விவசாயிகள் அங்கு தீவனப் பயிர் மற்றும் காய்கறி பயிர்களைப் பயிரிட்டு வருகின்றனர். அந்த விவசாய நிலங்களில் ஆயிரக்கணக்கான மயில்கள் புகுந்து அந்தத் தீவன மற்றும் காய்கறி பயிர்களை நாசம்



2017 ஜூன் 24]

செய்து வருகின்றன. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வனத் துறைமூலமாக அந்த மயில்களையெல்லாம் வலை வைத்து பிடித்து, வனப் பகுதியில் விட்டால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் என்ற வேண்டுகோளோடு, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மயில்களால் ஏற்படும் பிரச்சினைகளை குறிப்பிட்டிருக்கிறார். ஈரோடு மற்றும் கோவையை ஒட்டியுள்ள மாவட்டங்களிலும் விவசாயிகளுக்குக் கடுமையான பிரச்சினையை ஏற்படுத்தி வருவதாக ஏற்கெனவே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எல்லோரும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர். முன்னாள் அமைச்சராக இருந்த திரு. தோப்பு வெங்கடாச்சலம் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். மயில்களின் முட்டைகளை அகற்றி, அதன்மூலமாக உயிர் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல் சம்பந்தப்பட்ட வனத் துறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மயில்களின் முட்டைகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை இந்த நிதியாண்டிலேயே செயல்படுத்துவதற்குரிய சூழ்நிலையை, நிதிநிலைமைகளை ஆராய்ந்து, பரிசீலிக்கப்படும். விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்க, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூன் 24

82—

## துணை மின் நிலையம்

*2051—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாலங்காட்டில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருவாலங்காடு பகுதியில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இடம் கேட்கப்பட்டிருந்தது. இடம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். இடம் கிடைத்தவுடன் அந்தப் பணிகளை ஆரம்பிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறைகூட, சட்டப் பேரவையிலே நான் கேட்டிருந்தேன். திருவாலங்காடு பகுதியில் மின் அழுத்தம் காரணமாக, அங்கு பல நாட்கள் மின்சாரம் இல்லாமலும், குறைந்த மின் அழுத்தம் காரணமாக பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படுகின்றன விவசாயத்திற்கு முறையான மின்சாரம் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகப் பதிலில் கூறியுள்ளார். திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலிருந்து இடம் வழங்கப்படும் என்று அவர்கள் சொல்லியுள்ளனர்.



2017 ஜூன் 24]

ஆனால், வாடகைப் பணத்தைக் குறித்து ஏற்கெனவே மின்சாரத் துறை விளக்கம் அளித்து, long term lease–க்கு வேண்டுமென்று கேட்கப்பட்டு, அதற்கு இன்னும் முறையான அனுமதி அந்தத் துறையிலிருந்து கொடுக்கப்படாத சூழ்நிலையில், இந்த 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கும் பணியானது கிட்டத்தட்ட ஒரு வருடமாகக் காலதாமதமாகிறது. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் ஏற்கெனவே கடம்பத்தூர் ஒன்றியத்தில் 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று கூறினார். அதற்கும் இன்று வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை. வேலைகளும் தொடங்கப்படவில்லை. அதேநிலைதான் பூண்டி ஒன்றியத்திலும் உள்ளது. இதுபோன்ற காலதாமதத்தால் திருவள்ளூர் தொகுதியிலே குறைந்த மின் அழுத்தம் காரணமாக மக்கள் பல்வேறு பிரச்சினைகளால் இன்றைக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கத்தில் 16 Mega Volt Amp. திறன் உள்ளது. விவசாயத்திற்கு அது போதுமானதாக இல்லை. ஆகவே, கூடுதலாக ஒரு மின் மாற்றியை அமைத்திடவேண்டும். மேலும், மப்பேட்டில் ஒரு 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல், மின் தடை என்பது இல்லை. மின் பளு வேண்டுமென்றால் குறைவாக இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய பகுதிகளில், தற்போது திருவாலங்காடு பகுதிக்கு 21 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கடம்பத்தூர் 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திலிருந்தும் அதேபோல், 11 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மோசூர் 110/33 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திலிருந்தும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2X16 MVA அளவிலான மின்மாற்றிகளை இன்னும் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதிகரித்துவரும் மின் பளுவினைக் கருத்தில் கொண்டு திருவாலங்காடு பகுதியில் 33/11 கிலோ வோல்ட் துணை

[2017 ஜூன் 24

மின் நிலையத்தை 2X8 MVA அளவிலான மின்மாற்றிகளுடன் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் நிலம் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கின்றார்கள், மின் வாரியம் அதை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் எப்போதுமே வாடகைக்கு இடம் எடுப்பது கிடையாது. அவர்கள் மாதம் 60,000 ரூபாய் வாடகை கேட்கின்றார்கள். குறைந்தபட்சம் 60–லிருந்து 99 வருடங்கள் lease–க்கு தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். அதிலே பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அனைத்தையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு விரைந்து நடவடிக்கை எடுத்து, கூடியவிரைவில் அந்தப் பணியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாம்பரம்பாக்கத்திற்கு 110/33 கே.வி.ஏ. துணை மின் நிலையம் கேட்டீர்கள். இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இனிமேல் tender விடுகின்ற பணிதான். பட்டறைபெரும்புதூரிலும் நிலமானது மேய்க்கால் புறம்போக்காக இருக்கின்ற காரணத்தினால் அரசுக்கு வந்திருக்கின்றது. அதற்கும் விரைந்து நடவடிக்கை எடுத்து அந்த இடத்தையும் கையகப்படுத்தி துணை மின் நிலையம் அமைக்கப்படும். திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த 5 ஆண்டுக் காலத்தில் 56 துணை மின் நிலையங்கள் அமைப்பதாக இருக்கின்றோம். அதற்கான இடங்கள் கண்டறியப்பட ஒவ்வொரு இடமாக ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். சென்ற 5 ஆண்டுக் காலத்தில் 9 துணை மின் நிலையங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓராண்டுக் காலத்திற்குள் 2 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எங்கெல்லாம் தேவையோ, எங்கெல்லாம் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றதோ அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில்



2017 ஜூன் 24]

நிறைவாக இருந்தாலும் இந்தப் பணிகளெல்லாம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஓராண்டுக் காலமாக தாமதமாகிக் கொண்டு இருப்பதினால் இதை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு கோரிக்கை. திருவள்ளூர் நகருக்குக் குடிநீர் வழங்கக்கூடிய வெள்ளியூர் குடிநீர் திட்டத்தில் 9 power pumps இருக்கின்றன. முன்பு அங்கு மின்சாரம் நிலையாக வந்துகொண்டிருந்தது. இப்போது குறைந்த மின்னழுத்தம் காரணமாக தண்ணீரைப் பம்ப் செய்ய முடியவில்லை. அந்த 9 power pumps வேலை செய்யவில்லை. இதனால் திருவள்ளூர் நகரத்திற்குக் குடிநீர் பிரச்சினை இருக்கின்றது. வெள்ளியூரிலிருந்துதான் குடிதண்ணீர் வரவேண்டுமென்ற ஒரு நிலை. இப்போது 10 நாட்களுக்கு ஒரு முறை, 6 நாட்களுக்கு ஒரு முறை என்று தண்ணீர் திடீரென்று வருகிறது. ஏற்கெனவே generator போட வேண்டுமென்று நகராட்சியிலும் மனு கொடுத்திருக்கிறோம். அதனால் அந்த இடத்தில் முறையான மின்சாரம் வழங்க நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சிக்கு வழங்குகின்ற மின்சாரத்தில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது; அதனால் pumping செய்ய முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நகராட்சி நிருவாகத்திற்குச் சொல்லி, dedicated power என்று சொல்லக்கூடிய தனிப்பாதைக்கு அவர்கள் விண்ணப்பிப்பார்கள் என்று சொன்னால் உடனடியாக, மின்சார வாரியம் அதற்கு நடவடிக்கை எடுக்கும். நீங்கள் நகராட்சியோடு பேசி, நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கத்தின் தலைவர் டாக்டர் கலைஞர்

[2017 ஜூன் 24

அவர்களுக்கும், எங்களை இயக்குகிற எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், புத்தூர் ஊராட்சி, கீழமரயம் கிராமத்தைச் சேர்ந்த ஏ. ராமு என்கின்ற விவசாயி 50,000 ரூபாய் வைப்புத் தொகைக் கட்டியும் கடந்த 6 ஆண்டுக் காலமாக மின் இணைப்பு பெறாமல் அல்லலுக்குள்ளாகி இருக்கிறார். நான் பேசுவது என் தொகுதியின் ஆதாரமான செய்தி என்றாலும்கூட, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதிக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு துணைக் கேள்விகளுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆவல். சீக்கிரம் பேசி முடித்தீர்களென்றால், இன்னொரு வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லையென்றால் மற்ற உறுப்பினர்களுக்கு நான் வாய்ப்புக் கொடுக்க முடியாமல் போய்விடும்.

**முனைவர் கோவி. செழியன்:** இல்லை, இல்லை, துறையினுடைய அமைச்சர் அவர்களிடம் நான் முக்கியமான கேள்வி கேட்கிறேன். நான் ஒன்றும் தவறாகக் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் ஆரம்பித்து மெதுவாக போனீர்களென்றால், நான் எப்படி நேரத்திற்குள் முடிக்க முடியும்?

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நிறைய கேள்வி கேட்பதற்கு வாய்ப்புக் கொடுக்க முடியாமல் போய்விடும்.

**முனைவர் கோவி. செழியன்:** கடந்த 6 ஆண்டுக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் புதிய மின் இணைப்பு இலவசமாகவோ, வைப்புத் தொகை கட்டியவர்களுக்கோ வழங்கப்பட்டிருக்கிறதா எனது தொகுதியில் ஏதேனும் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2017 ஜூன் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது விவசாய மின் இணைப்பு என்று நினைக்கின்றேன். 50,000 ரூபாய் கட்டியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார். இப்போது 2010 வரைக்கும் அந்த seniority–யிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய துறை மானியக் கோரிக்கையில் அறிவித்திருக்கின்றோம். Tatkal Scheme அறிவித்திருக்கின்றோம். அவர்கள், Tatkal Scheme–ன்கீழ் பணத்தைக் கட்டினால், அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், “நிச்சயமாக 6 வருடங்கள் ஆகிவிட்டன” என்று கூறுகின்றார்கள். 6 வருடங்கள் வரை மின் இணைப்பு கொடுக்கப்படாமலிருக்க நிச்சயமாக வாய்ப்பு இல்லை. தற்போது, 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை வழங்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்ற நிலையிருந்தால், ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். 6 ஆண்டுகளுக்கு குறைவாக இருந்தால் உடனடியாக மின் இணைப்பு பெற வேண்டுமெனில், Tatkal Scheme–ஐ பயன்படுத்திக் கொள்ளலாம். Tatkal Scheme–ன்கீழ் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும். இரண்டாவதாக, அவருடைய தொகுதியில் எத்தனை இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். அந்த விவரம் என்னிடம் தற்போது இல்லை. பிறகு சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**83—**

**கூட்டுறவு நூற்பாலை**

***22125—திரு. V. செந்தில்பாலாஜி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2017 ஜூன் 24

அரவக்குறிச்சி தொகுதி, மலைக்கோவிலூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள், "அரவக்குறிச்சி தொகுதி, மலைக்கோவிலூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?" என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். அரவக்குறிச்சி தொகுதி, மலைக்கோவிலூரிலுள்ள கலைக்கப்பட்ட கரூர் மாவட்ட நூற்பாலையினை மீண்டும் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.

**திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், கழகத்தின் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய திரு. டி.டி.வி. தினகரன் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பாகவும், பாசமாகவும், பொதுநலத்தோடும், உலகெங்கும் பரந்து விரிந்து வாழ்ந்து வரும் இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் நோன்பு இருக்கும் இந்த மாதத்தில், அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டியைச் சேர்ந்த முகமது ஷாருக் ரிஃபாத்ராஜ் என்பவர் உலகிலேயே மிகச் சிறிய செயற்கைக்கோளை உருவாக்கி, அதற்கு KALAMSAT என பெயரிட்டுள்ளார். அந்த செயற்கைக்கோள், அமெரிக்காவின் நாசா விண்வெளி அமைப்பின் ராக்கெட்மூலம் விண்ணில் ஏவப்பட்டது. தமிழகத்திற்கும், அரவக்குறிச்சி தொகுதிக்கும், பள்ளப்பட்டிக்கும் பெருமை சேர்த்துள்ள முகமது ஷாருக் ரிஃபாத்ராஜ் அவர்களுக்கு என் சார்பாகவும், பள்ளப்பட்டி மக்கள் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2017 ஜூன் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி 54 ஊராட்சிகள், 5 பேரூராட்சிகள், 2 இலட்சம் வாக்காளர்களை உள்ளடக்கிய மிகப்பெரிய பரந்து விரிந்த தொகுதியாகும். இந்தத் தொகுதியில் ஏற்கெனவே இயங்கி வந்த, அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட மலைக்கோவிலூர் கூட்டுறவு நூற்பாலை, அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை மக்கள் பயன்படக்கூடிய வகையில் வேலைவாய்ப்பினை வழங்கிக் கொண்டிருந்த நூற்பாலையாக, சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கூட்டுறவு நூற்பாலையினை மீண்டும் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அரவக்குறிச்சி தொகுதியில் டி.என்.பி.எல். காகித ஆலை மட்டுமே புரட்சித் தலைவர் அவர்களால் தொழிற்சாலையாக துவக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டு, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிக் கொண்டிருக்கின்ற நிறுவனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தக் கூட்டுறவு நூற்பாலையினை மறுபரிசீலனை செய்து மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனினும், அதற்கான வாய்ப்பு இல்லையெனில், 51.33 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட அந்தக் கூட்டுறவு நூற்பாலையின் இடத்தை தொழில் துறைக்கு ஒப்படைத்து, தொழில் துறை மூலமாக டி.என்.பி.எல். காகித ஆலை நிறுவனத்தின் மற்றொரு அலகினை அந்தப் பகுதியிலே தொடங்கி, அரவக்குறிச்சி தொகுதியின் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலையின் குவிந்த நட்டம் அதிகமாக இருந்ததால், ஆலையினைத் தொடர்ந்து இயக்க இயலாத நிலையில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 82–ன்கீழ், சட்டப்பூர்வ ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளின்படி,

[2017 ஜூன் 24

17–12–2012 அன்று கலைக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமல்ல, அந்த ஆலை இருந்த இடத்திலிருந்த scrap வரை அனைத்தும் ஏலம் விடப்பட்டு, பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன; நிலம் மட்டும்தான் மீதமிருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்த இடத்தை தொழில் துறை வசம் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்துள்ளார்கள். அரசினுடைய எந்தத் துறைக்கு வேண்டுமானாலும், அந்த நிலத்தை ஒப்படைப்புச் செய்ய கைத்தறித் துறை தயாராக இருக்கிறது. சட்டவிதிகளின்படி அந்த நிலம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.

முற்பகல் 10–25

**திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால் டி.என்.பி.எல். காகித ஆலை நிறுவனம் தொடங்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டது. 2–வது யூனிட்டாக மணப்பாறை தொகுதி, மொண்டிபட்டியில் மாண்புமிகு அம்மா அவர்களால் காகித ஆலை நிறுவனம் தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அந்த ஆலையை தனது பொற்கரங்களால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியிலுள்ள மலைக்கோவிலூர் கூட்டுறவு நூற்பாலை 59 ஏக்கர் இடத்தில் அமைந்திருக்கிறது. அந்த இடம் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிச்சாலையில் அமைந்திருக்கிறது. இரண்டு துறைகளின் அமைச்சர்களும் கருத்திலேகொண்டு, இரண்டு துறைகளும் ஒன்றிணைந்து செயல்பட்டு, மலைக்கோவிலூர் கூட்டுறவு நூற்பாலை இடத்தினை தொழில் துறைக்கு பெற்றுத்தந்து, அரவக்குறிச்சி தொகுதி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித ஆலை நிறுவனத்தினுடைய மூன்றாவது யூனிட்டை, அங்கு உருவாக்கிட முன்வரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜூன் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**84—**

## தரம் உயர்த்துதல்

***4618—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதி, பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை விதிமுறைகளுக்குட்பட்டு தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயிற் சிறந்த கோயிலும் இல்லை. புரட்சித் தலைவி சொல் மிக்க மந்திரம் இல்லை. ஆயிரம் உறவில் பெருமைகள்

[2017 ஜூன் 24

இல்லை. எங்கள் அன்னையே அன்பின் எல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், பெத்தநாயக்கனூர் கிராமத்திலுள்ள ஒருவரால் 3 ஏக்கர் 20 சென்ட் நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அரசுமூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2 மருத்துவர்கள் இருக்கவேண்டிய துணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது ஒரு மருத்துவர்தான் இருக்கிறார். இந்த துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்து 31 வருடங்கள் ஆகின்றன. என்னுடைய கிராமத்தையும் சேர்த்து சுற்றுவட்டாரத்திலுள்ள கர்ப்பிணிகள் மற்றும் நோயாளிகள் இங்கு அதிகமாக வருகின்றனர். எனவே பெத்தநாயக்கனூர் துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை அம்மா அவர்களின் அரசு தரம் உயர்த்தித்தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த துணை ஆரம்ப சுகாதார நிலையம் என்பது ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினுடைய கொள்கைப்படி, ஓர் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த வகையிலே உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய அந்த ஒன்றியத்திலே பெரியபோது ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு ஐந்து மருத்துவர்களைக் கொண்டு சிறப்பாகச் செயல்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு மருத்துவர்தான் இருக்கின்றார் என்று சொல்கின்றார். உடனடியாக அந்த மருத்துவர் பணியிடம் நிரப்பப்படும். மேலும், கர்ப்பிணிகளுக்கான சேவை வசதிகள் மேம்படுத்தப்படும். எனவே, ஏற்கெனவே ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அங்கு மேம்படுத்தப்பட்டிருப்பதால், வருகின்ற காலங்களிலே அங்கு வரக்கூடிய நோயாளிகளின்



2017 ஜூன் 24]

எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை ஒன்றியம் முதலில் பொள்ளாச்சி தொகுதியின் பாதி கிராமங்களையும், வால்பாறை தொகுதியின் பாதி கிராமங்களையும் உள்ளடக்கியிருந்தது. தற்போது ஆனைமலை ஒன்றியம் முழுவதுமே வால்பாறை தொகுதியில் அமைகிறது. எனவே இந்த துணை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தினால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும். இட வசதியும் இருப்பதால், தரம் உயர்த்தப்பட்டால் சுற்றியுள்ள 12 கிராமங்களுக்கும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது துணை ஆரம்ப சுகாதார நிலையம் அல்ல. அது அரசு ஆரம்ப சுகாதார நிலையம். பொதுவாக கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக, 2 டாக்டர்களிலிருந்து 5 டாக்டர்களை நியமித்து தரம் உயர்த்த வேண்டுமென்று கொள்கை முடிவு எடுத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதுபோல தமிழ்நாட்டிலே இதுவரை 235 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே மட்டும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மொத்தம் 386 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோரிக்கையை வரும் காலத்திலே நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

[2017 ஜூன் 24

முற்பகல் 10–30

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இப்போது டாக்டர்கள் எல்லாம் பணியமர்த்தப்பட்டு, அவர்கள் மேற்படிப்பிற்காக சென்றுவிட்டனர். என்னுடைய தொகுதியைச் சார்ந்த கோணலூர் மற்றும் ஆவூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இன்றைக்கு டாக்டர்கள் இல்லாத நிலை இருக்கிறது. நர்சுகளும் இல்லாததால், 24 மணி நேரமும் பிரசவம் பார்க்கக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மேற்படிப்பிற்காக சென்ற டாக்டர்களின் குழப்பத்தின் காரணமாக, டாக்டர்கள் இல்லாத ஒரு நிலை இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர்கள் மற்றும் நர்சுகளை உடனடியாக நியமிக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படிப்பிற்காக மருத்துவர்கள் செல்வதனால் எந்தவொரு குழப்பமும் இல்லை. எத்தனை பணியிடங்களிலுள்ள அவர்கள் மேற்படிப்பிற்குச் சென்றிருக்கிறார்கள் என்பது கணக்கெடுக்கப்பட்டு, ஏற்கெனவே M.R.B.-மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின்–மூலமாகத் தேர்வு நடத்தப்பெற்று, கிட்டத்தட்ட 3,000 மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு தயார் நிலையில் இருக்கின்றனர். அவர்களில் 400 பேர் கலந்தாய்வின் மூலமாக பணி நியமனம் செய்யப்பட்டுவிட்டனர். மேலும், கூடுதலாக 1,224 பணியிடங்களுக்கு இப்போது கலந்தாய்வு நடத்தப்படவிருக்கிறது என்பதையும், உடனடியாக அவர்களெல்லாம் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட



2017 ஜூன் 24]

ராமநத்தம் முதல் வேப்பூர் வரை தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. அங்கு நாள்தோறும் விபத்துகள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால், 80 கிலோ மீட்டர் தூரமுள்ள திருச்சிக்கோ அல்லது 70 கிலோ மீட்டர் தூரமுள்ள விழுப்புரத்திற்கோதான் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றிட அவசர விபத்து சிகிச்சை மருத்துவமனை ஒன்றை தேசிய நெடுஞ்சாலையில் கழுதூர் அல்லது ஆவட்டியில் அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் தாங்கள் குறிப்பிடுவதுபோல எந்தெந்த இடங்களிலெல்லாம் விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன, அந்த விபத்துகள் நடைபெற்ற இடங்களிலிருந்து, எத்தனை மணித்துளிகளிலே, அந்த விபத்தைக் கையாளுவதற்கு, stabilisation செய்வதற்கு, அருகிலே இருக்கக்கூடிய விபத்துக் காய சிகிச்சை மையங்களுக்குச் செல்லலாம்; ஏதேனும் தாமதமாகக்கூடிய சூழல் இருக்கின்றனவா என்பதையெல்லாம் ஆய்வு செய்து, கண்டறிந்து அந்த அடிப்படையில், இப்போது தமிழ்நாட்டில் புதிய விபத்துக் காய சிகிச்சை மையங்கள் அமைப்பதற்கு நிதி ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. இந்தத் துறைக்கான மானியக் கோரிக்கையில் நல்ல அறிவிப்புகள் எல்லாம் உங்களுக்கு காத்திருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, மொரப்பூர் ஒன்றியத்தில், தாளநத்தம், கேத்துரெட்டிப்பட்டி, புட்டிரெட்டிப்பட்டி என மூன்று ஊராட்சிகள் உள்ளன. இந்த மூன்று ஊராட்சிகளிலும் 20,000–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ளது.

[2017 ஜூன் 24

இவர்கள் மருத்துவ வசதி பெறவேண்டுமென்று சொன்னால், 8 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கக்கூடிய கடத்தூர் பகுதிக்குச் செல்ல வேண்டும். அந்த வகையில் அங்கே சென்று மருத்துவ வசதி பெறுவது சிரமமாக இருக்கிறது. தாளநத்தம், கேத்துரெட்டிப்பட்டி பகுதிகளைச் சார்ந்த மக்கள் மருத்துவ வசதியைப் பெற செல்ல வேண்டுமென்று சொன்னால் புட்டிரெட்டிப்பட்டியில் ஓர் இரயில் நிலையம் உள்ளது; இரயில்வே கேட் இருக்கிறது. ஆகவே, அதை கடந்து செல்வதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. இதுகுறித்து, நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் குறிப்பு இருக்கும் என்று கருதுகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியிலுள்ள வத்தல்மலைக்கும், முத்தம்பட்டிக்கும் இரண்டு மருத்துவமனைகள் கொடுத்து எனது தொகுதி மக்களைப் பயனடையச் செய்திருக்கிறீர்கள். அதற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தற்போது அவர்கள் இரயில்வே கேட்டைக் கடந்து செல்வதில் கூடுதலாக சிரமம் இருக்கின்ற காரணத்தினால், தாளநத்தம், புட்டிரெட்டிப்பட்டி பகுதிகளை மையமாகக் கொண்டு, அங்குள்ள மக்கள் பயன்பெறும் வகையில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தேவைப்படுகின்ற இடங்களிலெல்லாம் விதிமுறைகளுக்குட்பட்டு தொடங்கி வருகிறது. அந்த வகையிலே மரியாதைக்குரிய, நம்முடைய அருமை அண்ணன், முன்னாள் அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டிலே மிக அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொகுதிக்கு வாங்கிக் கொடுத்தவர் என்ற பெயரைப் பெற்றிருக்கிறார். மரியாதைக்குரிய அண்ணன் அவர்களின் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியில் கடந்த ஆண்டு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஐந்து புதிய ஆரம்ப சுகாதார



2017 ஜூன் 24]

நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் கடந்த மாதம்தான், தாங்களே சென்று திறந்து வைத்திருக்கிறீர்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**85—**

## வேளாண் பண்ணை

***12236—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் நவீன வேளாண் பண்ணை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செஞ்சி சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில் காக்குப்பம், இருவேல்பட்டு, வடக்கனந்தல் மற்றும் வானூர் ஆகிய நான்கு இடங்களில் மாநில அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. மேற்கண்ட நான்கு இடங்களில் உள்ள மாநில அரசு விதைப் பண்ணைகள்மூலம் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் ஆதார விதைத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே, செஞ்சி தொகுதியில் மேலும் ஒரு நவீன வேளாண் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

[2017 ஜூன் 24

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் செஞ்சி மற்றும் மேல்மலையனூர் ஆகிய இரண்டு வட்டங்கள் உள்ளன. இப்பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் தங்கள் பிரதானத் தொழிலான விவசாயத்தைச் சார்ந்து வாழ்கின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை விதை சுத்திகரிப்பு செய்வதற்காக, விழுப்புரம் மாவட்டம், இருவேல்பட்டு, வடக்கனந்தல், வானூர் மற்றும் காக்குப்பம் போன்ற பகுதிகளுக்குச் சுமார் 70 கி.மீ. தொலைவு கடந்து, செல்ல வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி செஞ்சி தொகுதியில் நவீன வேளாண் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 34 அரசு விதைப் பண்ணைகள், ஐந்து மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகள் மற்றும் ஒரு மாநில பயறு பெருக்கப் பண்ணை அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்திற்கு ஓராண்டிற்கான நெல் விதை தேவை 1,488 மெட்ரிக் டன். ஆனால், தற்போது 2,050 மெட்ரிக் டன் நெல் விதை கையிருப்பிலுள்ளது. சிறு தானியங்கள் விதை தேவை 36 மெட்ரிக் டன். ஆனால் 45 மெட்ரிக் டன் கையிருப்பு இருக்கிறது. பயறு விதை தேவை 400 மெட்ரிக் டன், ஆனால், கையிருப்பு 590 மெட்ரிக் டன் இருக்கிறது. ஆகவே, விழுப்புரம் மாவட்டத்திற்குத் தேவையான விதை அளவைவிட, அங்குள்ள 4 பண்ணைகளின்மூலம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளடங்கிய செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்குத் தனியாக நவீன வேளாண் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலிருந்து விதைப் பண்ணைகளுக்குச் செல்ல வேண்டிய தூரம் அதிகமாக இருப்பதால், அவசியம் தேவை என்கிறார். எனவே, அரசு நிலம் கிடைப்பதைப்பொறுத்து, அங்கு விதைப் பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பரிசீலனைக்குக் கொண்டு சென்று, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜூன் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி மற்றும் மேல்மலையனூர் ஆகிய இரு வட்டங்களில், செஞ்சி, வல்லம் மற்றும் மேல்மலையனூர் ஆகிய ஒன்றியங்களில் சுமார் ஐம்பதாயிரம் ஹெக்டேரில் நெல், உளுந்து, மணிலா போன்ற தானிய வகைகள் நிகர சாகுபடி ஆகின்றன. மழைக் காலங்களில் சாகுபடி இரு மடங்காக அதிகரிக்கும். மேற்படி நிலங்களில் விளையும் பொருட்களை அதிகளவில் சாகுபடி செய்ய, நிகர சாகுபடி நிலங்களுக்கு அரசின் உத்தேச அளவுபடி மூன்றில் ஒரு பங்கு கொண்ட தரச் சான்று பெற்ற விதைகளை வழங்குவதற்கு செஞ்சி தொகுதியில் நவீன வேளாண் பண்ணை அல்லது விதை சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட வேண்டுமென்றும், அதற்கேற்ற நிலங்கள் உள்ளன என்பதையும், உலகிற்கே உணவு அளிக்கின்ற விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, அதை நிறைவேற்றிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும், அப்போதுதான் விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விவசாயிகளுக்காகவே முக்கியப் பங்காற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளின் இறப்பு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். விவசாயிகள் எந்த சூழ்நிலைகளில் இறந்திருந்தாலும், அவற்றைக் கருத்தில்கொள்ளாமல், அவர்களுடைய குடும்ப சூழ்நிலை, வறுமை நிலையைக் கருதி, 82 விவசாயிகளின் குடும்பங்களுக்குத் தலா மூன்று இலட்சம் ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கியிருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜூன் 24

செஞ்சியில் தேவையான அளவு அரசு நிலம் இருந்தால், தேவையின் அடிப்படையில், அரசு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, அங்கு விதைப் பண்ணையும், விதை சுத்திகரிப்பு நிலையமும் அமைப்பதற்கான சூழ்நிலை வகுத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**86—**

## புதிய வட்டம்

***6160—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியிலுள்ள திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவை பூர்த்தியாகாததால், திருச்சிற்றம்பலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கச் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.



2017 ஜூன் 24]

**திரு. மா. கோவிந்தராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி வணங்குகிறேன். அவர்கள் வழியிலே நல்லாட்சி நடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிற்றம்பலம், பேராவூரணி தொகுதிக்குட்பட்ட சுமார் 40 பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த 40 பஞ்சாயத்துகளும் பட்டுக்கோட்டை தாலுகாவோடு இணைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக OAP—முதியோர் ஓய்வூதியம்—பெற கையெழுத்து வாங்க வேண்டுமென்றாலும் ஏறத்தாழ 35 ரூபாய், 40 ரூபாய் பேருந்துக் கட்டணம் செலுத்தி, அந்த கையெழுத்தைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, கருணையோடு என்னுடைய கோரிக்கையை பரிசீலித்து திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்தால், உத்தேச திருச்சிற்றம்பலம் வட்டத்திலே, திருச்சிற்றம்பலம், குறிச்சி, ஆண்டிக்காடு குறு வட்டங்களில் 62 வருவாய் கிராமங்கள் இருக்கும். மேற்கண்ட 3 குறு வட்டங்களின் கூடுதல் பரப்பு 139.47 சதுர கிலோ மீட்டர் ஆகும். ஒரு வட்டம் உருவாக்க அரசாணை (நிலை) எண் 279–ன்படி குறைந்தபட்ச பரப்பளவு 250 சதுர கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். ஆனால், மேற்கண்ட 3 குறு வட்டங்களையும் சேர்த்து 139.47 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மட்டுமே உள்ளது. மேலும், பட்டுக்கோட்டை வட்ட தலைமை இடத்திலிருந்து திருச்சிற்றம்பலம் குறு வட்டம் அருகிலேயேதான் அமைந்திருக்கிறது. திருச்சிற்றம்பலம் குறு வட்டத்திற்கு மிக அருகிலேயே பேராவூரணி வட்டமும் அமைந்துள்ளது. பேராவூரணி வட்டம் நான்கு குறு வட்டங்களைக் கொண்ட சிறிய வட்டம் என்பதாலே பேராவூரணி வட்டத்திலிருந்தும், அதிலே அடங்கிய கிராமங்களை இதிலே சேர்க்க இயலாது.

[2017 ஜூன் 24

மேலும், திருச்சிற்றம்பலம், குறிச்சி குறு வட்டங்கள் பேராவூரணி ஒன்றியத்திலும், ஆண்டிக்காடு குறு வட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திலும் அடங்கியவையாகும். திருச்சிற்றம்பலம் சரகத்தில் 29 கிராம ஊராட்சிகள் மட்டுமே அடங்கியுள்ளன. எனவே, திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

பட்டுக்கோட்டைக்கு அடுத்த தொகுதியாக பேராவூரணி வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே முன் வைத்திருக்கிறார்கள். மக்கள் நலன் சார்ந்து, மக்களுடைய வசதிக்காக முன்வைத்த அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்து, விதிமுறைகளைப் பூர்த்தி செய்யுமானால், பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.

**திரு. மா. கோவிந்தராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில், எங்கள் தொகுதியைச் சார்ந்த மாண்புமிகு திரு. எம்.ஆர். கோவேந்தன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருந்த காலத்திலேயே திருச்சிற்றம்பலத்தை ஒரு தனி வட்டமாக அமைக்க வேண்டும் என்கின்ற ஆய்வு நடைபெற்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கருணையோடு எங்கள் பகுதியிலே ஒரு வருவாய் வட்டத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களை நாடி அரசு என்கின்ற தத்துவத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே, அவர்களுடைய செயல் இருக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.



2017 ஜூன் 24]

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதியில் உலகப் புகழ்பெற்ற கிறித்துவ ஆலயம் அமைந்திருக்கிற வேளாங்கண்ணியைத் தலைமையிடமாகக் கொண்டு, விதிமுறைகளை ஓரளவு தளர்த்தியாவது ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அமைத்து, தனி வட்டமாகப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை உங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும் முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த வகையிலே வருவாய்த் துறையின் வரலாற்றில் இதுவரையிலே இல்லாத வகையில் எங்கெங்கெல்லாம் தேவைகள் இருக்கின்றனவோ, எங்கெங்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைக்கின்றார்களோ அந்தக் கோரிக்கைகளை கனிவோடு பரிசீலனை செய்து, வருவாய்த் துறை வரலாற்றிலே இதுவரை இல்லாத வகையிலே 70 புதிய வட்டங்களை உருவாக்கிய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—45

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'விதிமுறைகளைத் தளர்த்தி' என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். விதிமுறைகளைத் தளர்த்தி அந்த வேலையைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்காது. ஆகவே, விதிமுறைகளுக்குட்பட்டு, புதிய வட்டம் உருவாக்குவதற்கு, அருகிலிருக்கும் வட்டங்களில் இருக்கக்கூடிய கூடுதல் வருவாய் கிராமங்களை உள்ளடக்கிக் கொண்டுவந்து, இதுகுறித்து மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.

**திரு. கோ. லோகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தை மூல மந்திரமாகக் கொண்டு, தமிழக மக்களுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்து, தன்னையே அர்ப்பணித்த தியாகத் தாய், நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே மிகவும் சிறப்பான முறையில் தமிழகத்திலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்தினான் குப்பம் சட்டமன்றத் தொகுதி, கீழ்வைத்தினான் குப்பம் ஊராட்சி ஒன்றியம், கீழ்வைத்தினான் குப்பம் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டத்தை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசாணை நிலை எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003–ல் வரையறுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**87—**

## படகு குழாம்

***4276—திரு. ஆர். பாலசுப்பிரமணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, நாயக்கனேரி மலைக் கிராமத்தில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, நாயக்கனேரி மலைக் கிராமத்தில் உள்ள ஏரியில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா என்று ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள் வினவியிருக்கிறார்கள். வேலூர் மாவட்டம், நாயக்கனேரி மலைக் கிராமம் ஆம்பூரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்குள்ள ஏரியை விடுத்து அருகில் வேறு எந்த சுற்றுலாத் தலமும் அந்தப் பகுதியிலே இல்லை. இந்தக் கிராமம் வனப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ளதால், சாலை பேருந்து வசதிகளும் போதுமானதாக இல்லை. எனவே, ஆம்பூர் தொகுதி, நாயக்கனேரி மலைக் கிராமத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் படகு குழாம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் தற்போது இல்லை என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள்.

[2017 ஜூன் 24

**திரு. ஆர். பாலசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் உறங்கிக் கொண்டிருக்கும், எங்களை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அம்மா அவர்களையும், கழக பொதுச் செயலாளர் மற்றும் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களையும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, நாயக்கனேரி ஊராட்சியில் படகு குழாம் அமைத்துத் தர வேண்டுகிறேன். வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர் பெரிய நகரமாக விளங்குகிறது. இங்கு பொழுதுபோக்கு அம்சம் எதுவும் இல்லை. ஆம்பூர் நகரத்தில் அரசாங்க இடம் எதுவும் இல்லாத காரணத்தினால், நகரின் மக்கள் விடுமுறை நாட்களில் எந்தவித பொழுதுபோக்கு வசதிகளும் இல்லாமல் மன வேதனையடைகிறார்கள். அதனால், ஆம்பூர் நகரத்திற்கு அருகில் உள்ள நாயக்கனேரி மலைக் கிராமத்தில் உள்ள ஏரியில் படகு சவாரி தலம் அமைத்துக் கொடுத்தால் ஆம்பூர் மக்களும், மலைப் பகுதியைச் சேர்ந்த மக்களும் மிகவும் சந்தோஷப்படுவார்கள். எனவே, நாயக்கனேரி மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின்மீது வரும் காலங்களில் இப்பகுதிக்கு வருகைத் தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின் கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையைப் பெற்று, அரசின் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கோரப்படும் வசதிகள் அனைத்தும் செய்து தர ஆவன செய்யப்படும் என்பதனை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள்.



2017 ஜூன் 24]

**திரு. ஆர். பாலசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுதி மக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனி கவனத்திற்கு எடுத்துச் சென்று நான் கோரிய நாயக்கனேரி மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கோரிக்கை முழுவதுமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு நிதிநிலைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரியில் 100 அடி சாலையை ஒட்டியிருக்கின்ற மிகப் பெரிய ஏரி. ஏற்கெனவே மாநகராட்சி மூலமாக அந்த ஏரியைச் சுத்தப்படுத்தி படகுக் குழாம் அமைப்பதற்குண்டான ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றன. அதை சுற்றுலாத் துறை செய்யுமா என்று மாண்புமிகு வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் என்னை கேட்கச் சொன்னார். வெளியே செல்கிறேன். வந்தால் கேளுங்கள் என்றார். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Proxy எல்லாம் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்.

வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூன் 24

88—

## வாசனை திரவியத் தொழிற்சாலை

***136—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் பகுதியில் மல்லிகைப் பூ வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினம் பகுதியில் மல்லிகைப் பூ வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 30,000 விவசாயிகள் 10,000–க்கு மேற்பட்ட ஏக்கரிலே மல்லிகைப் பூ பயிரிட்டு ஒரு நாளைக்கு சுமார் 200 டன் பூக்களை விளைவித்து, தினமும் சந்தைப்படுத்த கிருஷ்ணகிரி மாவட்டத்திலே வசதியில்லாத காரணத்தினால் பெங்களூரு பூ மார்க்கெட்டுக்குக் கொண்டுபோய் விற்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு ஒரு பருவத்திலே 200 கிலோ பூ விளைகிறது. 10,000 ஏக்கருக்கு ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட எவ்வளவு விளையும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கே விட்டுவிடுகிறேன். வருடத்திலே ஜனவரி, பிப்ரவரி, நவம்பர், டிசம்பர், மாதங்களைத் தவிர மற்ற 8 மாதங்களிலே இந்த மல்லிகை, ஜாதிமல்லி, ரோஜா உள்ளிட்ட பூக்களெல்லாம் விளைந்து கொண்டிருக்கின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து ஒரு நாளைக்கு 200 டன்னும், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களிலிருந்து 50



2017 ஜூன் 24]

டன்னும், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியிலிருந்து சுமார் 20 டன்னும், திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து சுமார் 20 டன்னும் ஆக ஒரு நாளைக்கு பெங்களூரு பூ மார்க்கெட்டுக்கு மட்டும் 300 டன் மல்லிகைப் பூவைக் கொண்டுபோய் குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருக்கின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் பூவை பறிக்கின்ற பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்திலே பூவை விற்க வழியில்லாத காரணத்தினால் பெங்களூரு பூ மார்க்கெட்டுக்குக் கொண்டுபோய் அநியாய விலைக்கு விற்கின்றனர். ஆகவே மல்லிகை, குண்டுமல்லி, ஜாதிமல்லி, கனகாம்பரம், ரோஜா, செண்டுமல்லி ஆகிய பூக்களை விளைவிக்கும் விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு கிருஷ்ணகிரியை மையமாகக் கொண்டு வாசனைப் பவுடர் மற்றும் செண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்றை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பகுதியில் 410 ஹெக்டேர் பரப்பளவில் வருடத்திற்கு 3,500 மெட்ரிக் டன் மல்லிகை மலர்கள் உற்பத்தியாகின்றன. இவை உள்ளூர் பயன்பாட்டிற்கும், வெளி மாவட்டங்களுக்கும் மற்றும் வெளி மாநிலங்களுக்கும் பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இப்பகுதியில் உற்பத்தியாகும் மல்லிகை மலர்கள் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்கு போதுமானதாக இல்லை. மல்லிகை மலர்களில் குண்டு மல்லி, முல்லை மற்றும் ஜாதி மல்லி ஆகிய வகைகள் உள்ளன. இவற்றில் ஜாதி மல்லி மட்டுமே வாசனை திரவியம் தயாரிக்க ஏற்றதாகும். சிறிய அளவில், தொழிற்சாலை அமைக்க வேண்டுமெனில் நாள் ஒன்றுக்கு 5 மெட்ரிக் டன் பூக்கள் இருந்தால் மட்டுமே அது பொருளாதாரரீதியாக இலாபகரமாக இருக்கும்.

முற்பகல் 10–55

எனவே, இப்பகுதியில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைப்பது சாத்தியமற்றதாக உள்ளது. மேலும், காவேரிப்பட்டினம்

[2017 ஜூன் 24

பகுதியிலிருந்து மல்லிகைப் பூ கொள்முதல் செய்து, வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க தனியார் எவரேனும் முன்வரும்பட்சத்தில், மாவட்டத் தொழில் மையம்மூலம், தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டப்பட்ட வரி மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம் போன்ற மானிய உதவிகளை வழங்கி, புதிய தொழிற்சாலை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப் பூவிலிருந்து தயார் செய்யப்படும் scent, powder உள்ளிட்ட பொருட்களுக்கு நமது நாட்டில் மட்டுமல்லாமல் வெளி நாடுகளிலும் நல்ல வரவேற்பு உள்ளது. அதேபோல, நேற்றையதினம் நான் இந்த மன்றத்தில் வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்திப் பேசுகின்றபோது, மாம்பழத்தையும், மல்லிகைப் பூவையும் உற்பத்தி செய்வது கிருஷ்ணகிரி மாவட்டம். ஆனால், அவற்றிலிருந்து உற்பத்தியாகும் மாம்பழக்கூழ், scent, வாசனை திரவியங்கள், பவுடர் உள்ளிட்டவற்றுக்குத்தான் உலகம் முழுவதும் நல்ல வரவேற்பு உள்ளன. ஆனால், வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால், கஷ்டப்பட்டு, நஷ்டப்பட்டு மாம்பழத்தையும், மல்லிகைப் பூவையும் நம்முடைய விவசாயிகள் விளைவிக்கிறார்கள். ஆனால், அதற்குண்டான அந்த மாம்பழச் சாறு தயாரிக்கின்ற ஆலை, வாசனைத் திரவியம் தயாரிக்கும் ஆலை அரசு சார்பில் இங்கு இல்லாத காரணத்தினால் நம்மிடத்திலிருந்து வாங்கக்கூடிய வெளி நாட்டு வியாபாரிகள், அவர்கள் பெயரில் brand–ஐ வைத்து வியாபாரம் செய்து கொள்கிறார்கள். பிள்ளை பெறுவது நாம். ஆனால், பெயர் வைப்பது அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செங்குட்டுவன், மைக்கிலிருந்து சிறிது தூரம் தள்ளி நின்று பேசுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே Krishma Juice என்ற brand பெயரை வைத்து, மாம்பழக் கூழ்



2017 ஜூன் 24]

ஏற்றுமதி மையம் அமைப்பதற்குண்டான ஏற்பாடுகளையெல்லாம் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களும், எங்கள் தளபதியார் அவர்களும் செய்தார்கள். ஆனால், இப்போது அது நின்றுபோய் இருக்கிறது. ஆகவே, குறைந்த முதலீடு, அதிகமான வருமானம், அதிக வேலைவாய்ப்பு, விவசாயிகளுக்கு நல்ல வாழ்வு கிடைக்கக்கூடிய வகையிலே, சிறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, அதிகாரிகளுடைய குழுவை எங்களுடைய மாவட்டத்திற்கு அனுப்பி, இந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 48,000 ஏக்கரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இதன்மூலம் 3 இலட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு மாம்பழம் உற்பத்தியாகிறது. இம்மாவட்டத்தில் 52 மாம்பழக் கூழ் தயாரிக்கும் தனியார் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விளையும் மாம்பழங்களுடன், அருகாமையில் உள்ள தருமபுரி, திருவண்ணாமலை, தேனி, சேலம் மாவட்டங்களிலிருந்தும் மாம்பழங்களைக் கொள்முதல் செய்து பதப்படுத்துகின்றன. ஆண்டிற்கு இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழத்திலிருந்து 1 இலட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் தங்களது உற்பத்தியில் 10 விழுக்காட்டினை மட்டுமே நேரடியாக ஏற்றுமதி செய்கின்றன; 90 விழுக்காட்டினை ஏற்றுமதியாளர்கள் மூலமே ஏற்றுமதி செய்கின்றன. ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலை ஆரம்பிக்க சுமார் 2 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு ஆகிறது. மேலும், ஒரு நிறுவனத்திற்கு, ஒரு பருவத்திற்கு 3,500 முதல் 4,000 மெட்ரிக் டன் வரை மாம்பழங்கள் தேவைப்படுகின்றன. இதிலிருந்து 1,800 முதல் 2,000 மெட்ரிக் டன் மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யப்படுகின்றது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழம் கொள்முதல் செய்து, மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க தனியார் எவரேனும் முன்வரும்பட்சத்தில் மாவட்டத் தொழில் மையம்மூலம், தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம்,

மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டப்பட்ட வரி மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம் போன்ற மானிய உதவிகளை வழங்கி, புதிய தொழிற்சாலைகளை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**89—**

## பேருந்து பணிமனை

***8651—திரு. இ. பெரியசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூரில் பேருந்து பணிமனை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆத்தூரில் தனியாக பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

**திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் புதிய வட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டை தொகுதி, பழனி தொகுதி, திண்டுக்கல் தொகுதி, ஒட்டன்சத்திரம் தொகுதி, வேடசந்தூர் தொகுதி, நத்தம்





தொகுதி ஆகிய 6 தொகுதிகளை நகரப் பேருந்துகள் மூலமாக இணைக்கின்ற மையப் பகுதியாக ஆத்தூர் உள்ளது. ஏற்கெனவே, புதிய வட்டமாக உருவாக்கப்பட்டு ஆத்தூருக்கு எல்லா அலுவலகங்களும் பெரும்பாலும் வந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையிலே ஆத்தூர் எல்லா தொகுதிகளையும் இணைக்கின்ற காரணத்தாலும், நகரப் பேருந்து வசதியை மேம்படுத்துவதற்காகவும், மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், கடந்த கலைஞர் ஆட்சியின்போது முன்னாள் அமைச்சர் அண்ணன் நேரு அவர்கள் ஆத்தூரில் பணிமனை அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை இந்த அவையிலே தெரிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில், எந்த அரசாக இருந்தாலும் வருகின்ற மாற்று அரசாக இருந்தாலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியது கடமையாக இருக்கிறது. எனவே, ஆத்தூர் தொகுதி மக்களுடைய நலன் கருதி அந்தப் பணிமனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் ஆத்தூரிலே பணிமனை அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். ஆத்தூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலே திண்டுக்கல்லில் 3 பணிமனைகள் இருக்கின்றன. 30 கிலோ மீட்டர் தொலைவிலே ஒட்டன்சத்திரத்திலே ஒரு பணிமனையும், 32 கிலோ மீட்டர் தொலைவிலே வத்தலக்குண்டிலே ஒரு பணிமனையும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பகுதியிலே இயங்கக்கூடிய பேருந்துகளைக் கணக்கிலே கொண்டால் இந்த 5 பணிமனைகளே போதுமானதாக உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற 5 ஆண்டுக் காலத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 74 புதிய பணிமனைகளை அமைப்பதற்கு ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே இதுவரையில் 40 பணிமனைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய பணிமனைகளுக்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

[2017 ஜூன் 24

**திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 74 புதிய பணிமனைகளை உருவாக்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அவையிலேயே அறிவிக்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் அந்த 74 பணிமனைகளில் ஆத்தூருக்கும் ஒரு பணிமனை வழங்கியிருக்கலாம். ஏனென்றால், கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றுவது ஒவ்வொரு அரசினுடைய கடமை. குறிப்பாக ஆத்தூர் தொகுதியிலிருந்து திருப்பூர் மற்றும் பல நகரங்களில் 10 ஆயிரம் பேருக்கும் மேலாக பணி செய்துகொண்டிருக்கின்றார்கள். பழநியாக இருந்தாலும், ஒட்டன்சத்திரமாக இருந்தாலும், நிலக்கோட்டையாக இருந்தாலும், நத்தமாக இருந்தாலும், திண்டுக்கல்லாக இருந்தாலும் ஒவ்வொரு தாலுகாவிலும், ஒரு பணிமனை இருக்கிறது. ஒரு தாலுகாவிற்கு ஒரு பணிமனை என்ற அடிப்படையிலே நகரப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லாடிப்பட்டி கிராமத்தில் சுமார் 1,000 குடும்பங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமத்தைச் சுற்றி மேல்கூடலூர், வெளவால்குன்றம், மட்டப்பாறை ஆகிய கிராமங்களிலிருந்து மாணவர்கள் செ.குன்னத்தூர் கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றுதான் பள்ளிக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தக் கிராமத்து மக்களுக்கு இதுவரை பேருந்து வசதி செய்து தரப்படவில்லை. எனவே, செஞ்சி பணிமனையிலிருந்து பேருந்து தடம் எண் 15 மற்றும் விழுப்புரம் பணிமனையிலிருந்து தடம் எண் 15 ஆகியவற்றை இயக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.



2017 ஜூன் 24]

முற்பகல் 11–05

வல்லம் ஒன்றியம், திருவம்பட்டு கிராமத்தில் தடம் எண் 16, காலையிலும், மாலையிலும் பள்ளி மாணவர்களுடைய வசதிக்காக இயக்கப்பட்டது. மாலையில் அந்தத் தடம் எண் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த மாணவர்களுடைய கோரிக்கையையேற்று மாலையிலும் அந்தப் பேருந்தை இயக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வல்லம் ஒன்றியம், ராஜாம்புலியூர் கிராமத்திலிருந்து காலையிலும், மாலையிலும் சுமார் 20 பேர் செஞ்சி பகுதிக்குக் கட்டுமானப் பணிக்குச் சென்றுவருகிறார்கள். இதுவரை அந்தக் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து தரப்படவில்லை. இந்தக் கோரிக்கைகளையெல்லாம் உள்ளடக்கி 20–7–2017 அன்று பொது மேலாளரைச் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றினை நான் அளித்திருக்கிறேன். பள்ளி மாணவர்களுடைய கோரிக்கை. தற்போது பள்ளிகள் திறக்கப்பட்டுவிட்டன. எனவே, அந்தக் கோரிக்கை மனுவின்மீது உரிய நடவடிக்கை எடுத்து மேலே குறிப்பிடப்பட்ட கிராமங்களுக்கு பேருந்து வசதியை ஏற்படுத்தித் தர மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி, மூல வினாவிற்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே பள்ளி மாணவர்கள் சென்று வருவதற்கு பேருந்து வசதி இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இயங்கக்கூடிய பேருந்துகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படுமாயின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பேருந்துகளை இயக்குவதற்கு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜுன் 24

**90—**

## கால்நடைக் கிளை நிலையம்

***6210—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, பொசியம்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தானத்தில் சிறந்தது அன்னதானம். ஒருவருக்கு உணவு கொடுத்தால் அவருக்கு உயிர் கொடுத்ததற்குச் சமமாகும். தமிழக மக்களின் பசி தீர்க்க விலையில்லா அரிசி, அம்மா உணவகம், கோயில்களில் அன்னதானம் மட்டுமல்லாமல் ஐந்தறிவுக் கொண்ட கால்நடைகளுக்கும் பசியினைப் போக்க மலிவு விலையில் பசுந்தீவனம், உலர் தீவனம் வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே பாதையில் பயணம் செய்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கி, கால்நடைகளுக்கு உலர் தீவனம் வழங்கிட போதுமான நிதி ஒதுக்கீடு செய்து, கால்நடைகளைக் காப்பாற்றிய அன்பு அண்ணன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'மறப்போம், மன்னிப்போம்' என்பது நம் முன்னோர்களின் வாக்கு. மன்னிப்பதுதான் மனித பண்புகளில் மிகவும் உயர்ந்த பண்பு. உயர்ந்த பண்புகளின் உறைவிடமாக இருப்பவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்பால், பண்பால் இந்த அவையை வழிநடத்தும் பால்போல் தூய மனம் கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ம. கீதா



2017 ஜுன் 24]

அவர்கள் கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, பொசியம்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேள்வியெழுப்பியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, பொசியம்பட்டியில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக, அதாவது 4,679 அலகுகள் உள்ளதால், பொசியம்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

**திருமதி ம. கீதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும் மகிழ்விக்கும் வகையில் இம்மண்ணுலகை ஆண்டு, மறைந்த ஒரே தாய், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆணுக்கு நிகர் பெண்ணில்லை என்று சூளுரைத்தவர்கள் மத்தியில் தன்னைப்போல் பல வீரமங்கைகள் உருவாக வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் பெண்ணினத்திற்காக எத்தனையோ திட்டங்களை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதனைச் செயல்படுத்திவிட்டுச் சென்ற எங்கள் இனத்தின் குல தெய்வம், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் நல்லாசியுடன் நல்லாட்சியினை நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியம், தென்னிலை ஊராட்சி, பொசியம்பட்டியைச் சார்ந்த பொதுமக்கள் கால்நடைக் கிளை நிலையத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர்கள் 8 கிலோ மீட்டர் பயணம் செய்து, அதற்கு

[2017 ஜூன் 24

அருகிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பொதுமக்களின் சிரமத்தை மனதில் எடுத்துக் கொண்டு, அந்த மக்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்து, கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடலூர் ஒன்றிய மக்களின் சார்பாக தங்கள் வாயிலாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடலூர் ஒன்றியம், கடலூர் ஊராட்சி, இடையப்பட்டியில் உள்ள மக்கள் கால்நடைக் கிளை நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 9 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்களுக்கும் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே அந்தக் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

**திருமதி ம. கீதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகத் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

**திரு. அ. பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், மலைக்கோட்டாலம் ஊராட்சியில் சுமார் 5,000 கால்நடைகளும், சின்னசேலம் ஒன்றியம், குதிரைச்சந்தலூர் ஊராட்சியில் 5,000 கால்நடைகளுக்கு மேலும் உள்ளன. எனவே, இந்த இரண்டு ஊராட்சிகளுக்கும் கால்நடை மருந்தகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை



2017 ஜூன் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால் 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் அந்தப் பகுதிகளில் 3,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) பேரறிவாளனுக்கு பரோல் வழங்கிடக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மத்திய சிறையில் ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கக்கூடிய பேரறிவாளனுக்கு பரோல் கோரிக்கை அரசின் சார்பிலே நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பேரறிவாளன் உள்ளிட்டவர்களையெல்லாம் விடுதலை செய்திட வேண்டுமென்ற தீர்மானமும் இதே மாமன்றத்தில், நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே விடுதலை செய்திட வேண்டுமென்று தலைமைச் செயலாளர் அவர்கள் கடந்த 2016 ஆம் ஆண்டு, அதாவது, 2–3–2016 அன்று மத்திய உள் துறைச் செயலாளருக்கு இதுபற்றி கருத்துக் கேட்டு கடிதமும்

எழுதியிருக்கிறார்கள். விடுதலை செய்திட மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கின்ற இந்த நிலையில், அரசு அவருக்கு பரோல் வழங்குவதற்கு தயங்குவது ஏன்? இதுபோன்ற வழக்கில், நடிகர் சஞ் சய் தத் போன்றவருக்கெல்லாம் மத்திய அரசின் அனுமதியின்றி மாநில அரசே பரோலை வழங்கியிருக்கிறது. எனவே, அதை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, மாநில அரசு உடனடியாக, பேரறிவாளனுக்கு பரோல் வழங்கிட வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமான அறிவிப்பு ஒன்றை நீங்கள் இன்று காலையில்தான் என்னிடத்தில் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில்தான் இருக்கிறது. பார்த்துவிட்டு, பின்னர் விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறேன்.

## (ஆ) NEET தேர்வு முடிவுகள்–தமிழக மாணவர்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தியைத் தங்கள்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களின் கவனத்திற்கும் கொண்டுவருகிறேன். NEET தேர்வினுடைய result தற்போது வந்திருக்கிறது. ஆனால், அந்தத் தேர்வினுடைய result–ஐப் பார்த்தால், தமிழக மாணவர்கள் பலமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். தமிழ்நாடு படுபாதாளத்திற்குப் போயிருக்கிறது. இதிலிருந்து எப்படி மீள்வது என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது. இதனால் வருங்கால சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டுவிடும். எனவே, NEET தேர்வினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற தமிழகத்தை மீட்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக நான் எதிர்பார்க்கிறேன். இல்லாவிட்டால், பெரும்பாலான மாணவச் சமுதாயம் அடிபட்டு எதிர்காலமே இருண்டுவிடும். அத்தகைய நிலையில் இருக்கிறது. எனவே, இதுவொரு serious–ஆன பிரச்சினை. நாம் எத்தனையோ சட்டங்கள், திட்டங்கள் போட்டாலும், வருங்கால சமுதாயம் இல்லையென்றால் நம்மால் என்ன செய்ய முடியும்? ஆகையால், இதுவொரு முக்கியமான பிரச்சினை என்பதால் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திருமதி எஸ். விஜயதரணி, இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள் அல்லவா? (குறுக்கீடு) நீங்களும் NEET தேர்வு சம்பந்தமான கேள்வியைத்தான் கேட்கப் போகின்றீர்களா? சரி, கேளுங்கள்.

*முற்பகல் 11–15*

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வைப் பொறுத்தவரை, இந்தச் சட்டமன்றத்தில் அனைவரும் ஒருமித்த மனதோடு ஒரு சட்டத்தை இயற்றி, ஜனாதிபதி அவர்களின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு நாம் அனுப்பி வைத்திருந்தோம். ஆனால், இதுவரை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகப் பரிந்துரை செய்யாமல் மத்திய அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. இதையே தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் இழைக்கும் துரோகமாக நான் பார்க்கிறேன். NEET தேர்வைப் பொறுத்தவரை தற்போது தேர்வு முடிவுகள் வந்திருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்றால், இந்தப் பிரச்சினையில் மாநிலத்தின் norms என்னவாக இருக்குமென்று நாங்கள் அறிய விரும்புகிறோம். அடுத்தபடியாக இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணப்பட வேண்டுமென்றால் சட்டம் ஏற்கப்படவேண்டும். அதற்கான முயற்சியை விட்டுவிடாமல் தொடர்ந்து மேற்கொண்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, அதற்குண்டான norms–ஐ அரசாங்கம் ஏற்படுத்திட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

## (இ) கூம்பு வடிவிலான ஒலிபெருக்கிகளைப் பள்ளிவாசல்களில் பயன்படுத்தக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், அதேபொருள் சம்பந்தமான பிரச்சினையா? வேறு பிரச்சினையா? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிவாசல்களில், சர்ச்சுகளில், கோயில்களில்

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2017 ஜூன் 24

எல்லாம் கூம்பு வடிவிலான ஒலிபெருக்கிகள் இருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்த வேண்டுமென்று கடந்த 10 நாட்களாக காவல் துறை அதிகாரிகள் கெடுபிடி செய்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இதுசம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றம் அரசாங்கத்தின் அறிவுரையை எதிர்பார்த்து இருக்கிறது. தற்பொழுது நோன்பு காலம்; தொழக்கூடிய காலம்; பெருநாளை சந்திக்கிற நேரம். இதேபோன்ற சூழ்நிலை சென்ற வருடம் ஏற்பட்டபோது மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்த கெடுபிடிகள் எல்லாம் தடுக்கப்பட்டன. நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். இப்பொழுது நோன்பு காலத்தில் இரவு நேரங்களில் காவல் துறை அதிகாரிகளிடம் தொடர்ந்து சொல்லி convince செய்ய வேண்டியதிருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து நேரடியாக அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 70 decibel அளவில்தான் வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் போதும். அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். கட்சிக்கு ஒருவருக்குதான் வாய்ப்புத் தருவது வழக்கம். எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். எல்லோரும் எழுந்து வாய்ப்புக் கேட்டால், எப்படி என்னால் வாய்ப்புத் தரமுடியும்? Zero Hour–ல் இப்படி எல்லோரும் வாய்ப்புக் கேட்டால், நான் எப்படி சபையை நடத்துவது? திரு. அன்பழகன், வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள்.

### (அ) பேரறிவாளனுக்கு பரோல் வழங்கிடக் கோருதல்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26 ஆண்டுகளாக வேலூர் மத்திய சிறையில் ஒருநாள்கூட விடுப்பு இல்லாமல் சிறைபட்டுக் கிடக்கிற பேரறிவாளன் விடுதலை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பொருள் குறித்துதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.



2017 ஜூன் 24] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். திரு. தனியரசு நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை அதுகுறித்துப் பேசுவதற்கு நான் அனுமதித்து, அவரும் பேசி நான் பதிவுசெய்துள்ளேன். உங்களுடைய அறிவிப்பும் இருக்கிறது. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதை நான் வாய்ப்பு வரும்போது எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ். இதே பொருள் குறித்துதானா? (குறுக்கீடு) நீங்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பார்க்கலாம். உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லா நாட்களும் இப்படி எனக்குத் தொல்லை கொடுத்தால் (குறுக்கீடு) இல்லை, எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், எல்லா உறுப்பினர்களும் எழுந்து Zero hour–ல் வாய்ப்புக் கேட்டால் என்னால் எப்படி வாய்ப்புத் தரமுடியும்? (குறுக்கீடு) திரு. அன்பழகன், உங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் சொல்வதால் இன்றைக்குப் பேச அனுமதிக்கிறேன். நான் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். இனிமேல் இதுமாதிரி எழுந்து வாய்ப்புக் கேட்டால் என்னால் வாய்ப்புத் தர முடியாது.

### (ஈ) சில துறைகள் தொடர்பான வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், என்ன விஷயம் என்று சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி கேள்வி நேரத்தில் பல கேள்விகள் கேட்கப்பட்டு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் தந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, காவல் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்றவற்றில் இதுவரை கேள்விகள் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள். அதெல்லாம் தேவையானபோது நான் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ் உங்கள் கட்சியில் முதல் வரிசையில் இருக்கிற திருமதி விஜயதரணிக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். உங்களுக்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள்.

[2017 ஜூன் 24

## (ஆ) NEET தேர்வு முடிவுகள்–தமிழக மாணவர்கள் பாதிப்பு–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களும் NEET தேர்வு முடிவையொட்டி அரசின் அடுத்த நிலைப்பாடு என்ன என்பதைக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இதுகுறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பியபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நிலைப்பாட்டினை நான் தெளிவாகச் சுட்டிக்காட்டினேன்.

முற்பகல் 11–20

இன்றைக்கு NEET தேர்வின் result வந்திருக்கிறது. நம்முடைய சட்டமன்றத்தில் ஏற்கெனவே இரண்டு மசோதாக்கள், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அவை மத்திய அரசின் பரிசீலனையில் இன்று இருந்து கொண்டிருக்கின்றன. அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி நான் ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்திருந்தேன்.

இன்றைய சூழ்நிலையில், தமிழ்நாட்டில் +2 தேர்வுகள் எழுதிவிட்டு காத்துக்கொண்டிருக்கும் அத்தனை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் உணர்வுகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிகுந்த கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர் அவர்கள், Advocate General மற்றும் சட்ட நிபுணர்கள் என அத்தனை பேரும் மிகுந்த கவனத்துடன் நம்முடைய மாணவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இன்றைய சூழ்நிலையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு, உச்ச நீதிமன்ற Bench தீர்ப்பு, மத்திய அரசின் சட்டம் இவற்றையெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு மிகுந்த கவனத்தோடு செயல்படுகிறது.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல், 4.2 இலட்சம் பேர் State Board–ல் Biology exam எழுதியிருக்கிறார்கள். 4,675 மாணவர்கள் C.B.S.E. தேர்வு எழுதியிருக்கிறார்கள். State Board–ல் Biology exam



2017 ஜூன் 24] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

எழுதிய 4.2 இலட்சம் பேர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய அத்தனை பேரின் உணர்வு. அதற்காகத்தான் இந்த மாமன்றத்தில் இரண்டு மசோதாக்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அழுத்தம் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாணவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள். State Board Biology மாணவர்கள் NEET தேர்வில் மதிப்பெண்கள் குறைவாக வாங்கியிருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்தச் செய்தி பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வந்திருக்கின்றது. அப்படி குறைவாக மதிப்பெண்கள் வாங்கினாலும்கூட, அந்த மாணவர்களின் பிரதிநிதித்துவம் எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாது என்பதை மிகுந்த கவனத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், கருத்திலேகொண்டு, சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து, 22 ஆம் ததி மாலை ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையில் இந்த அரசின் நிலைப்பாட்டைச் சொல்லியிருக்கிறோம். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், மத்திய அரசிடம் இரண்டு மசோதாக்கள் இன்னும் pending ஆக இருக்கின்ற காரணத்தினால், சட்டமன்றத்தில் நம்மால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒத்துக்கொள்ளப்பட்டால், +2 தேர்வு அடிப்படையிலே மாணவர்களுக்கான மருத்துவச் சேர்க்கை நடைபெறும். ஒருவேளை இதில் காலதாமதம் ஏற்படுகிறபோது, 4.2 இலட்சம் மாணவர்கள் பெரும்பான்மையாக State Board–ல் தேர்வு எழுதியிருக்கிறார்கள். 4,675 மாணவர்கள் Central Board exam எழுதியிருக்கிறார்கள். விகிதாச்சாரப்படி எடுத்துக்கொண்டால்கூட கிட்டத்தட்ட 95 சதவிகிதம் State Board மாணவர்களும், 5 சதவிகிதம்தான் Central Board மாணவர்களும் இருப்பார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துதான், சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்து இப்போது 15 சதவிகிதம் C.B.S.E. பாடத் திட்டத்தில் தேர்வு எழுதியவர்களுக்கும், நம்முடைய மாநில மாணவர்களின் உரிமையை நிலைநாட்டக்கூடியவகையில், அரசு மிகுந்த கவனத்தோடு 85 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கி அரசாணை வெளியிட்டிருக்கிறது என்ற செய்தியை, நீங்கள் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்தச் செய்தியை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, திட்டமிட்டப்படி 26 ஆம் தேதி இதற்கான application வெளியிடப்படும். 27 ஆம் தேதியிலிருந்து +2 முடித்த அனைத்து

மாணவர்களும் download செய்து, application பெற்றுக்கொள்ளலாம். All India Counselling முடிந்த பிறகு, 17 ஆம் தேதி திட்டமிட்டப்படி தமிழ்நாடு அரசினுடைய மருத்துவப் படிப்பிற்கான கலந்தாய்வு மாணவ, மாணவிகளுக்குத் தொடங்கும். அந்தக் கலந்தாய்வு இந்த உள் ஒதுக்கீடு அடிப்படையில் இருக்கும். நிச்சயமாக இந்த உள் ஒதுக்கீட்டை அனைத்து உறுப்பினர்களும், அனைத்து கட்சியினரும் ஏற்பார்கள். நீங்களெல்லாம் இந்த மாநிலத்தின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை தொடர்ந்து வைத்தீர்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து இந்த நல்ல முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான முடிவை அறிவிப்பாக உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றார். பொறுமையில்லாமல் இப்படியெல்லாம் நீங்கள் செய்து கொண்டிருந்தீர்கள் என்றால், பின்னர் ஆளாளுக்கு தனியே கேள்வி கேட்க எழுந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் clarification கேளுங்கள். திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவரே திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கு recommend செய்திருக்கிறார்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, உள் ஒதுக்கீடு பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே, நாம் கொண்டு வந்த சட்டத்திற்கு எந்தவித பாதகமும் வந்துவிடாமல் காப்பாற்றக்கூடிய மிகப் பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல, மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இருக்கக்கூடிய மிக முக்கியமான எதிர்பார்ப்பு, +2 தேர்வில் பெற்றிருக்கக்கூடிய



மதிப்பெண்களின் நிலை என்ன? நீங்கள் இப்போது கொண்டு வர இருக்கின்ற counselling–ல் +2 தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா? அல்லது NEET marks alone will be taken into consideration–ஆ என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது. எனவே, +2 தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களையும் கணக்கிலே எடுத்துக்கொள்ளக்கூடிய வகையிலே, உங்களுடைய இந்தக் கலந்தாய்வு அமையுமா என்பதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார். இந்த முடிவு என்பது (குறுக்கீடு) மிகுந்த சட்ட பாதுகாப்பு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது உண்மை. எனவே, சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலும், நம்முடைய மாநிலத்தின் உரிமையை நிலைநாட்டக்கூடிய வகையிலும் மிகுந்த கவனத்தோடு இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. உரிய சட்டப் பாதுகாப்பு வழங்க வழிவகை செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

முற்பகல் 11–25

இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில், சட்டத்தின்படி அங்கே மசோதாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் based on the +2 marks, அது இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், based on the NEET marks. அந்த NEET marks அடிப்படையில் counselling நடத்துவோம். அப்படி NEET marks அடிப்படையில் counselling நடத்தும்போது, இருக்கக்கூடிய அனைத்து சீட்களும் C.B.S.E. syllabus–க்கு போய்விடக் கூடாது என்பதற்காக பெரும்பான்மையாக இருக்கக்கூடிய 4.2 இலட்சம் மாணவர்களுடைய பிரதிநிதித்துவத்தை நிலைப்படுத்தக்கூடிய வகையில் 85 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின், State Board–ல் 6,877 பள்ளிக்கூடங்களில் படித்த அந்த மாணவர்களுக்கான உரிமையை நிலைநாட்டக்கூடிய வகையில் அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜூன் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, என்னவென்று சொல்லுங்கள்.

**முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET–ல் ranking போடும்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற மாணவர்கள் எழுதியதற்கு மட்டும் rank போடுகின்றார்களா அல்லது இந்திய மாணவர்கள் அடிப்படையில் rank போட்டு உங்களுக்கு அனுப்புகின்றார்களா? முக்கியமாக தமிழ்நாட்டு மாணவர்கள் எத்தனை பேர் பாஸ் செய்திருக்கின்றார்கள் என்று அவர்களுக்கு NEET–ல் மார்க் போடுகின்றார்களா? இந்திய அளவில் NEET–ல் rank போட்டு தமிழ்நாட்டில் select பண்ண வேண்டும் என்று அனுப்புகின்றார்களா? ஏனென்றால் அந்த 15% quota என்பது மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த 15% quota–ல் All India Level–ல் select பண்ணுகின்றார்கள். மீதி இருக்கின்ற 85% தமிழ்நாடு quota–வில் நாம் select பண்ணுகின்றோம். அதில் நீங்கள் 69% இட ஒதுக்கீடு கொடுப்பதற்கு right இருக்கின்றது என்று பத்திரிகையில் செய்தி வெளி வந்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு கூறியவாறு, இன்றைய பத்திரிகையில் என்ன எழுதியிருக்கின்றார்கள் என்றால், +2 மார்க்கையும், NEET–ல் வாங்கிய மார்க்கையும் சேர்த்து வைத்து ranking போட வேண்டும் என்று. பத்திரிகையாளர்களும் குழப்பமாக இருக்கின்றது என்றுதான் எழுதுகின்றார்கள். இப்போதுள்ள குழப்பமே, அதெல்லாம் உண்டா, இல்லையா? நீங்கள் அதையெல்லாம் கேட்க வேண்டும். சட்டம் இப்போது வரும் என்று எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக President–ன் கையெழுத்து வாங்கியெல்லாம் இந்த ஆண்டு அதைச் செய்ய முடியாது. அதற்கான வாய்ப்புகளை நாம் விட்டுவிட்டோம். இப்போது நாம் இதை வைத்துத்தான் செய்ய வேண்டும் என்கின்ற ஒரு சூழ்நிலை வரும்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற கிராமப்புற மாணவர்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் 69 சதவிகித இட ஒதுக்கீட்டையும் வலியுறுத்திப் பெற வேண்டும். இந்த +2 மதிப்பெண்களையும் சேர்த்து counselling வைப்பதற்கான உரிமையைப் நீங்கள் கேட்டுப் பெற வேண்டும் என்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இதில் குழப்பம் எதுவும் இல்லை. All India–ல்



2017 ஜூன் 24] **[டாக்டர் சி. விஜய பாஸ்கர்]**

இருக்கக்கூடிய அந்த 15% சீட் போக மீதியுள்ள இடங்களுக்கு மட்டும்தான் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று அரசாணை மிகத் தெளிவாகப் போடப்பட்டிருக்கின்றது. அதை வேண்டுமானால் உங்களுக்குத் தருகின்றோம். ஏற்கெனவே இருக்கக்கூடிய இந்த pending Act, Amendment – சட்டத் திருத்தம், எப்படி வந்தால், எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று அனைத்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த 15% All India quota போக மீதமுள்ள கிட்டத்தட்ட 3,277 seats நம்முடைய அரசுக் கல்லூரிகள் போல் Deemed University, தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய seats. இந்த அத்தனை இடங்களும் All India quota போக– எஞ்சியுள்ளது. அதனால்தான் நம்முடைய counselling–ஐ 17 ஆம் தேதி வைக்கின்றோம். ஏன் 17 ஆம் தேதி வைக்கின்றோம் என்றால், 17 ஆம் தேதிக்குள் All India counselling நடந்து முடிந்துவிடும். 16 ஆம் தேதி அவர்களுடைய counselling முடிந்துவிட்டால் அதனைத் தொடர்ந்து நம்முடைய counselling–ஐ 17 ஆம் தேதி ஆரம்பிக்கின்றோம். அந்த சீட் போக மீதமுள்ள சீட்டுக்குத்தான் நாம் இதைப் போட்டிருக்கிறோம். இந்த NEET mark evaluation என்பது தமிழ்நாட்டு அளவில் இருக்கக்கூடிய (குறுக்கீடு) இப்போது அதைத்தான் சொல்லப் போகின்றேன். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய NEET எழுதியவர்களுக்கு மட்டும்தான். அப்போதுதான் இந்த பிரதிநிதித்துவம் நிலைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பல்லாவரம் தொகுதி, குடிநீர் வழங்குதல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல்லாவரம் தொகுதியில் போதிய குடிநீர் வழங்க வேண்டியது குறித்தும், பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக, நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

[2017 ஜூன் 24

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாதக் காலமாக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு subject–க்கு போய்விட்டோம். உட்காருங்கள்.

**திரு. இ. கருணாநிதி:** பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் குடிநீர் 20 நாட்களுக்கு ஒரு முறை, 30 நாட்களுக்கு ஒரு முறைதான் வருகின்றது. Metro water குடிநீர்– செம்பரம்பாக்கத்திலிருந்து வரும் நீர் தற்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஏனென்று சொன்னால் அங்கே குடிநீர் இல்லை. ஆகவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பழைய வாலாஜாபாத் பகுதியில் இருக்கின்ற பழையசீவரத்திலிருந்து குடிநீர் வருகின்றது. இப்போது பல்லாவரம் நகராட்சிக்கு 45 இலட்சம் லிட்டரும், பம்மல் நகராட்சிக்கு 6 இலட்சம் லிட்டரும், அனகாபுத்தூர் நகராட்சிக்கு 6 இலட்சம் லிட்டரும்தான் வரப்பெறுகின்றது. இது போதுமானதாக இல்லை. 30 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வருவதால், மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே நாம் ஒரு திட்டத்தைத் தீட்டி, கடந்த ஆண்டு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் பல்லாவரம் நகராட்சிக்கு கிட்டத்தட்ட 99 கோடி ரூபாயில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொண்டு மார்ச் மாதம் தொடங்கப்படுவதாக இருந்தது. ஆனால் அது தற்போது காலதாமதமாகி இருக்கின்றது. இந்த ஆண்டுக்குள்ளாவது அந்தப் பணி நடைபெறுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டுவிடுகிறேன். பம்மலில் 43 கோடி ரூபாய் மதிப்பில் மெட்ரோ வாட்டர் திட்டப் பணிகள் நிறைவடையும் நிலையில் இருக்கின்றது. நான் ஒரு கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைக் குறித்து நான் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசியபோது சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அண்ணன் தளபதி அவர்கள் வட நெமிலியில் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதிலிருந்து பல்லாவரம் நகராட்சிக்கு குடிநீர் வரப்பெறுமேயானால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக மற்ற பகுதிகளான பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், திருநீர்மலை ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வரும். எனவே, இந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.





அடுத்ததாக, வாலாஜாபாத் பகுதியில் இருக்கின்ற மேலச்சேரி கிராமத்தில் ஒரு புதிய pumping station அமைத்துக் கொடுத்தால், 50 இலட்சம் லிட்டர் குடிநீர் அந்தப் பகுதிகளுக்கு தொடர்ந்து வரப்பெறும். அடுத்த ஆண்டாவது, குடிநீர்த் தட்டுப்பாடு வராத அளவில், நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அரசின் கவனத்தை நான் ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, இரண்டையும் சேர்த்துச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டில் இதே சட்டமன்றத்தின் முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், இந்தத் திட்டத்திற்கு முதன் முதலில் நிதியை ஒதுக்கீடு செய்து அறிவித்தார்கள். ஆனால், பாதாளச் சாக்கடைத் திட்டம் பகுதியாக நிறைவுபெற்ற நிலையில், 54 கி.மீ–க்கு 24 கோடி ரூபாயில் இன்னும் திட்டம் தொடங்கப்படாமல் இருக்கின்றது. அது எப்போது நிறைவேறும்?

சென்னை புறநகர்ப் பகுதிகளில், பாதாளச் சாக்கடைத் திட்டத்தை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும். பல்லாவரம் தொகுதியில், அனகாபுத்தூர் நகராட்சி, பம்மல் நகராட்சி, திருநீர்மலை பேரூராட்சி மற்றும் பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதிகளிலும் நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, இங்கே பொதுவாக பல பதில்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 142 வருடங்களில் இல்லாத வறட்சி, 62 சதவிகித மழைப் பொழிவு

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 ஜூன் 24

குறைவு, தண்ணீர் வறட்சி இயற்கையால் வந்த சூழ்நிலையின் காரணமாகத்தான். என்றாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், தண்ணீர் வழங்கி வருகிறது. பல்லாவரம் சிறப்பு நிலை நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பாலாற்றிலிருந்து தினசரி 5 மில்லியன் லிட்டர் குடிநீர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தின்மூலமாக 2 மில்லியன் லிட்டர் மற்றும் உள்ளூர் ஆதாரங்கள்மூலம் 206 சிறு மின்விசைப் பம்புகள், 430 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 3 திறந்த வெளிக் கிணறுகள் ஆகியவற்றின்மூலம் 3.50 மில்லியன் லிட்டர் என மொத்தம் 10.50 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு, 49 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இதற்கு முன்னால் 3 நாட்களுக்கு ஒரு முறை விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கும் கடும் வறட்சியின் காரணமாக, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தின்மூலம் 2–6–2017 ஆம் தேதி முதல் இப்பகுதிக்குக் குடிநீர் வழங்க இயலவில்லை. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது சொன்னீர்கள். ஆனால், எஞ்சிய இரண்டு ஆதாரங்கள்மூலம் 4 மில்லியன் லிட்டர், 3.30 மில்லியன் லிட்டர் என மொத்தம் 7.30 மில்லியன் லிட்டர் குடிநீர் தற்போது பெறப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

குடிநீர்க் குழாய்மூலம் குடிநீர் வழங்க இயலாத பகுதிகளுக்கு நகராட்சிக்குச் சொந்தமான 3 tanker லாரிகள்மூலமும், 14 தனியார் வாடகை லாரிகள் மூலமும், நாளொன்றுக்கு 102 நடைகள்மூலம் 10 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வழிகளில் பல்லாவரம் நகரப் பொது மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 34 லிட்டர் என்ற அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் 5 நாட்கள்/6 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் நாட்களை கூடுதலாகச் சொன்னீர்கள். அது குறித்தும் கண்டிப்பாக அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோடைக் காலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்த் தேவையை சமாளிக்கும் பொருட்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியின்மூலம் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 6 எண்ணிக்கையிலான ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, ஒப்பந்த லாரிகள்மூலம் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற



2017 ஜூன் 24] [திரு. எஸ்.பி. வேலுமணி]

வளர்ச்சித் திட்டம், 3–ன்கீழ் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் 99 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 7 எண்ணிக்கையிலும், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் 3 எண்ணிக்கையிலும், பகிர்மானக் குழாய் அமைக்கும் பணிகள் என ஆகமொத்தம் 73 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் அனைத்தும், டிசம்பர் 2017–ல் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு வரும். பல்லாவரம் நகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் மொத்தமாக 29.09 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு தினசரி, 135 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

முற்பகல் 11–35

பம்மல் நகராட்சியில் தற்போதைய குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க மாநில பேரிடர் நிதியின்மூலம் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் 7 புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு நகராட்சிக்குச் சொந்தமான 4 குடிநீர் லாரிகள் மற்றும் 5 தனியார் லாரிகள்மூலம் நகராட்சிப் பகுதிகளுக்கு 52 நடைகள்மூலம் மொத்தம் 9 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகின்றது. நாள்தோறும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 6 இலட்சம் லிட்டர் குடிநீரும், உள்ளூர் நீராதாரங்கள்மூலம் 23.70 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. புதிய ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் ஏனைய ஆதாரங்கள்மூலம் 9 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப்பெற்று ஆகமொத்தம் 32.70 இலட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 43 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகின்றது.

குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் – மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பம்மல் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ள உலக வங்கி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 43 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஜனவரி 2014–ல் பணிகள் தொடங்கப்பட்டு தற்போது 75 சதவிகிதப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 2017–ல் திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 75,800 பம்மல் நகராட்சி மக்கள் பயன்பெறும் வகையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

அனகாபுத்தூர் நகராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 6 முதல் 7 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு, 7 நாட்களுக்கு ஒரு முறை விநியோகம்

செய்யப்படுகின்றது. மேலும், 221 எண்ணிக்கையில் சிறு மின்விசைப் பம்புகள்மூலம் நாள்தோறும் 13.50 இலட்சம் லிட்டர் குடிநீரும், 117 எண்ணிக்கையிலான கைப்பம்புகள்மூலம் 1.70 இலட்சம் லிட்டரும், நகராட்சிக்குச் சொந்தமான 2 லாரிகள் மற்றும் 9 தனியார் லாரிகள்மூலம் நாள்தோறும் 2.50 இலட்சம் லிட்டரும், 13 சவ்வூடு பரவல் முறையிலான குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்மூலம் 1.20 இலட்சம் லிட்டரும் குடிநீர் வழங்கப்பட்டு, ஆக மொத்தம் 24.90 இலட்சம் லிட்டர் பெறப்பட்டு தினந்தோறும் நபர் ஒருவருக்கு 52 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது கடுமையான வறட்சி என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதுபோல் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் 2004–ல் ஆரம்பித்தார்கள். நெம்மேலி, மீஞ்சூர் ஆகிய இடங்களில் ஆரம்பித்து 28% பணிகளை நீங்கள் முடித்தீர்கள். அதன் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முடித்து வைத்தார்கள். இத்திட்டம் வரையறுக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த 400 எம்.எல்.டி. திட்டத்திலிருந்து உங்களுக்கு 38 எம்.எல்.டி. வழங்க வரையறை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே 3 முறை மத்திய அரசாங்கத்தினை வலியுறுத்தி அத்திட்டம் முன்னுரிமையில் சேர்ந்திருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் டெல்லி சென்றபோதும் இத்திட்டம் உடனடியாக வரவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். நேற்றுகூட 400 எம்.எல்.டி. உடனே வரவேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் வரும்போது 38 எம்.எல்.டி. உங்களுக்குக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும்.

பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைப் பற்றி சொன்னீர்கள். பல்லாவரத்தில் ஏற்கெனவே விடுபட்ட பணிகள் அனைத்தும் எடுத்துக்கொள்ளப்படும். சென்னை விரிவாக்கம் செய்யப்படுவதால் எஞ்சியப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் சென்னை விரிவாக்கப் பணிகளில் மெட்ரோ வாட்டர் துறையினர் செய்துகொண்டிருக்கிறார்கள். உங்களுடைய பகுதியை ஆய்வு செய்து வைத்திருக்கிறார்கள். அடுத்த கட்டமாக, உங்களுடைய நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகள் நிதியாதாரத்திற்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான் உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். உட்காருங்கள்.



## 4. கவன ஈர்ப்பு

### திருத்தணி நகராட்சி, வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். "திருத்தணி நகராட்சிப் பகுதியில் ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாயந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிப்பதற்கு விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

திருத்தணி நகரம், திருத்தணி நகராட்சி எல்லைக்குள் வருகிறது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி மேற்படி நகராட்சியின் மக்கள்தொகை 44,785 ஆகும். இன்றைய தேதியில் மக்கள்தொகை 55,752 ஆகும். திருத்தணி வருவாய் கிராமத்தில், பாறை, மலை, பச்சரிசி மலை, கல்லாங்குத்து, பாறைமேடு, தீர்வை ஏற்பட்ட தரிசு, கிராம நத்தம் என பல்வேறு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பில் 2951 குடும்பங்கள் வசித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளன. இக்குடும்பங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வந்தபோதிலும், பொதுவான தடையிருந்த

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2017 ஜூன் 24

காரணத்தினால் அவர்களுக்குப் பட்டா வழங்க இயலவில்லை. மேலே கண்டறியப்பட்ட 2,951 குடும்பங்களில் 1,765 குடும்பங்கள் கிராம நத்தத்தில் உள்ளன. இந்தக் கிராம நத்தத்தில் நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் நிலவரித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக திருத்தணி நகராட்சியிலும் நிலவரித் திட்டப் பணிகள் தொடங்கப்படும். திருத்தணி நகராட்சிப் பகுதியில் நிலவரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டவுடன் நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி, உரிய நடவடிக்கை மேற்கொண்டு 1,765 குடும்பங்களுக்கு நத்தம் பட்டாக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆட்சேபணையுள்ள அரசு நிலத்தில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்மூலம் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித் தரும் திட்டம் நடைமுறையில் உள்ளது. எனவே, இத்திட்டத்தின்கீழ் தகுதியின் அடிப்படையில் எஞ்சியுள்ள குடும்பங்கள் பயன்பெற வழிவகை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பிறகு 32 ஆண்டுகள் கழித்து ஆளுகின்ற கட்சிக்கே மீண்டும் ஆளுகின்ற வெற்றியை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரம் படைத்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற ஆண்டு 3 இலட்சம் ஏழையெளிய நபர்களுக்கு கால நிர்ணயம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க உத்தரவிட்டு அதனை நிறைவேற்றி சாதனைப் படைத்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

முற்பகல் 11–40

அதன் அடிப்படையில் இந்த ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு 3.5 இலட்சம் நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க ஆணையிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். நாட்டில் வறுமையை அறவே அகற்றி கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார பாதுகாப்பினை அளித்து, ஏழையெளிய மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியினை உறுதிபடுத்துவதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய



2017 ஜூன் 24] [திரு. பி.எம். நரசிம்மன்]

குறிக்கோளாகும். தமிழ்நாட்டில் குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப் பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்குவதே அம்மா அவர்களின் திட்டமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன் விவர அறிக்கையிலிருந்து கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, திருத்தணி நகராட்சியில் ஆட்சேபணையற்ற பாறை புறம்போக்கு, அனாதீனம், கல்லாங்குத்து, கிராம நத்தம் என வகைபாடு செய்யப்பட்டுள்ள இடங்களில் வீடுகளை அமைத்துக் கொண்டு காலங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களில், 1,765 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மீதம் உள்ளவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் பயன் பெற வகை செய்யப்படும் என்றும் விவர அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றும் விதத்தில், நில வரித் திட்டப் பணிகள் உடனடியாக தொடங்கப்படுவதற்கு சிறப்பு ஆணை பிறப்பித்து, settlement வட்டாட்சியரை நியமித்து, குடியிருக்கிற நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா இவ்வாண்டே வழங்க அம்மா அவர்களின் நல்லரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு, அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய நிலையான கொள்கையாகும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைபோல, ஒவ்வோர் ஆண்டும் இலக்கு நிர்ணயித்து, 3 இலட்சம் என்கிற அளவிலே இலக்கு நிர்ணயித்து பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற திருத்தணி வருவாய் கிராமத்தில் பாறை, மலை, பச்சரிசி மலை, கல்லாங்குத்து,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2017 ஜுன் 24

பாறைமேடு, தீர்வை ஏற்பட்ட தரிசு, கிராம நத்தம் என பல்வேறு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பில் 2,951 குடும்பங்கள் வசித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 1,765 குடும்பங்கள் கிராம நத்தத்தில் உள்ளார்கள். கிராம நத்தத்தில் நில அளவுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து நில வரித் திட்டப் பணிகள் தொடங்கப்படும் என்று விவர அறிக்கையிலே தெரிவித்ததன் அடிப்படையிலே, மிக விரைவாக அந்தப் பணிகள் நடைபெற வேண்டுமென்று சொன்னார்கள். தற்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்த காரியங்கள் யாவையும் மிக விரைவாகச் செயல்படுத்தி, பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அந்த வகையிலே, நடைமுறையிலே உள்ள அரசு விதிகளின்படி உரிய நடவடிக்கைகளை மிக விரைவாக மேற்கொண்டு 1,765 குடும்பங்களுக்கு நத்தம் பட்டாக்கள் வழங்குவதற்கு போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும். நேற்றுகூட மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். ஆட்சேபணையுள்ள அரசு நிலத்தில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்மூலம் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் தகுதியின் அடிப்படையிலே பயன்பெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன் அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு தொகுதியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில் அடங்கிய ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலிருந்து பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டுமானால் சுமார் 100 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.



2017 ஜுன் 24] [திரு. பி.எம். நரசிம்மன்]

புதிய வட்டாட்சியர் அலுவலகம் ஆர்.கே. பேட்டையில் அமைக்க போதுமான மக்கள் தொகை, ஊராட்சிகள், தூரம் மற்றும் அனைத்து தகுதிகளும் உள்ளன. எனவே, பொது மக்கள் எளிதாக அணுகக்கூடிய நிலையிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டமான ‘மக்களைத் தேடி அரசு’ என்பதை செயல்டுத்துகிற விதத்திலும், பள்ளிப்பட்டு வட்டத்திலிருந்து பிரித்து ஆர்.கே. பேட்டையில் புதிய வட்டத்தை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) அவரைச் சார்ந்தது.

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பட்டாவிற்கு கவன ஈர்ப்பு கொடுத்துவிட்டு, தாலுகா அலுவலகத்தைக் கேட்டால் எப்படி?

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் வைத்திருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில், திருத்தணி தொகுதியிலே, திருத்தணி நகராட்சியிலே ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்த கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். அந்த நிலத்திற்கு விலை கிரயம் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கேட்ட உடனேயே நிறைவேற்றி இருக்கிற ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் பேருந்து நிலையத்திற்கு இடம் கிடைத்துவிட்டது. மக்களுக்குப் பட்டா கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து புதிய வட்டம் கேட்டிருக்கின்றார்கள். விதிமுறைகளை எல்லாம் பூர்த்தியாவதாகச் சொல்லியிருக்கின்றார். ஆகவே, பரப்பளவு, மக்கள் தொகை, வருவாய் கிராமங்கள், விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன்

எடப்பாடியார் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் அறிவிப்புக் கொடுக்கவில்லை, இருந்தாலும், மூத்த உறுப்பினர் கேட்பதால், நான் இல்லை என்று சொல்ல முடியவில்லை. என்னவென்று சொல்லுங்கள்?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன் அவர்கள் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருமையான பதிலைச் சொன்னார். அதாவது புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா என்று கேட்டார். வழங்கப்படும் என்று ஆதாரத்துடன் நல்ல பதில் சொன்னார். நான் ஒன்று கேட்கிறேன், இது திருத்தணி தொகுதிக்கு மட்டும்தானா? இதே formula எல்லோருக்கும் உண்டா? குறிப்பாக, எதிர்க்கட்சிக்கு வருமா, குறிப்பாக காட்பாடி தொகுதிக்கு வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு கவன ஈர்ப்புக் கொண்டு வந்திருந்தால், மாண்புமிகு அமைச்சர் அதற்கு விளக்கமாகப் பதில் சொல்வார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த காரணத்தினால், அவரைக் குறிப்பிட்டுச் சொன்னேன். பொதுவாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, உலகத் தமிழர்களுக்கும், பொதுவான விதியைத்தான் கடைபிடித்து வருகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, அவருடைய தொகுதிக்குட்பட, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட, அனைவருக்கும் அரசு விதிமுறைகள் பொதுவானவை என்ற வகையில்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (உ) தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் காலையிலிருந்து ஏதோ சொல்ல வருகிறீர்கள். (குறுக்கீடு) நான் நிகழ்ச்சி நிரலிற்குள் போய்விட்டேன். இப்போது நீங்கள் கேட்டால் எப்படி?

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு பிரச்சினை. ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன முக்கியமான பிரச்சினை, தெரியவில்லை. சரி சொல்லுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாக மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு, திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறோம். தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து, விவசாய நிலங்களுக்கும், மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கும் விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களால் 4(a) amendment என்ற சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் rules—சட்ட விதிகள் இன்னும் formulate செய்து அனுப்பப்படாத காரணத்தினால், சொந்த நிலங்களில் இருக்கக்கூடிய மரங்களைக்கூட முறிக்க முடியாமல், 300—க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். நீங்கள், அறிவிப்புக் கொடுக்காமல், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் எதிர்பார்த்தால் இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் வைத்திருக்க மாட்டார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பதிவு செய்ய வேண்டுமென்று நினைத்தீர்கள். பதிவு செய்யப்பட்டது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தில் இருக்கிறது. உட்காருங்கள்.

## 4. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

### திருத்தணி நகராட்சி, வீட்டுமனைப் பட்டா வழங்குதல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடந்த 15 வருடங்களாகக் ஒரே கேள்வியை கேட்டுக்கொண்டிருக்கிறார். 2004—ல் கடுமையான வறட்சி. வேலூர் மாவட்டத்திற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பத்து கோடி ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கினார்கள். அப்போதும் எழுந்து காட்பாடி தொகுதிக்கு அது cover ஆகுமா என்றார். வேலூர் மாவட்டத்திற்குட்பட்டதுதான் காட்பாடி தொகுதி. காட்பாடி தொகுதியில் இருக்கக்கூடிய மக்கள், என்னுடைய மக்கள்தான், அவர்களுக்கும் நான்தான் முதலமைச்சர் என்று சொல்லி, அன்றைக்கே இந்தப் பதிலைச் சொன்னார்கள். நேற்றையதினமும் அதேபோல் கேட்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று என்ன கேட்கிறார் என்றால், கல்லூரிகள் எல்லாம் எதிர்க்கட்சிகளுக்குத் தரமாட்டீர்களா என்கிறார். சென்ற முறை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரும்பாக்கத்தில் ஒரு கல்லூரியை அறிவித்தார்கள். அந்தப் பெரும்பாக்கம் பகுதிக்கு, சட்டமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர். ஆக, எந்தக் கட்சி என்று பார்க்க மாட்டார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து, அவருடைய ஆட்சிதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எதிர்க்கட்சி என்று பார்க்கமாட்டார்கள். தமிழகத்தில் உள்ள அத்தனை மக்களுக்கும் தான்தான் முதலமைச்சர் என்று சொல்லியவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவருடைய வழியில் வந்தவர்தான் இன்றைக்கு முதலமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். 15 வருடங்களாகப் புரியாமல் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே மாதிரியான கேள்வியைக் கேட்டுக்கொண்டேயிருக்கிறார் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். ஆகவே, அவருடைய அந்த எண்ணங்கள் அவரை விட்டு விலக வேண்டும். என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.





*முற்பகல் 11—50*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை ஆரம்ப





நிலையிலேயே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

[2017 ஜூன் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2017 ஜூன் 24]

## 6. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

----

### (அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 892, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2274, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2338, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2483, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4003, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4295, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

**திரு. க. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4803, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5328, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5359, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன்.

**திரு. எம்.கே. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5392, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5737, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6126, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6156, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6196, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

[திரு. த. மனோ தங்கராஜ்] [2017 ஜூன் 24

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6550, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6637, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6699, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

**திரு. வாகை சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1135, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1183, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1802, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2017 ஜூன் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4139, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி.

**திரு. ச. பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4348, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 473, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 640, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூக நலத் துறையில் பெண்களுக்கு சுயபாதுகாப்பு பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1310, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதிக்குட்பட்ட கூடலூர், பந்தலூர் வட்டங்களிலுள்ள சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கவும், காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2087, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் திருமண உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2130, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2206, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2388, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி, சோழபுரம் மேற்கு அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2552, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2629, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் இயங்கி வரும் சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களுக்கு மேஜை மற்றும் நாற்காலிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2646, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3773, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் அரசு சார்பில் வழங்கக்கூடிய உதவித் தொகையினை விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2676, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி, செங்கம் மற்றும் தண்டராம்பட்டு, ஜவ்வாது மலைப் பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2836, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதி, மணவாள நகர் நடேசன் செட்டியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய சமையற்கூடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2927, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2979, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் சத்துணவுக் கூடங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3083, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி.

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3174, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3550, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3728, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செஞ்சி தொகுதி, செஞ்சி மற்றும் மேல்மலையனூர் ஒன்றியங்களில் பழுதடைந்துள்ள சத்துணவு மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3791, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4032, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள குழந்தைகள் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4059, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.



**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சி அலுவலக வளாகத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4206, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கட்டடங்களைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4695, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4715, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.

**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியிலுள்ள சத்துணவு மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4747, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமண உதவித் திட்டத்தின் மூலமாக வழங்கும் நிதியினை திருமணத்திற்கு முன்பாகவே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4856, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் 6 மாதம் முதல் 24 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4933, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில்





ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5130, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, வளம்பகுடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5212, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்திவேலூர் தொகுதி, மோகனூர், பரமத்தி மற்றும் கபிலர்மலை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5785, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதியிலுள்ள பள்ளிகளில் சத்துணவு மையக் கட்டடங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5896, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கி. சரவணன்.

**திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5935, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதியில் பழமையான ஓட்டு கட்டடத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5969, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாளையங்கோட்டையிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம்



குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6028, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவில் கூடுதலாக பால் வழங்கும் திட்டம் கொண்டு வருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 906, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு .

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2275, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2325, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3999, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4804, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4935, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

[திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்] [2017 ஜூன் 24

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5073, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5318, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5358, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன்.

**திரு. எம்.கே. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5396, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.



2017 ஜூன் 24]

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5726, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6053, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6125, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6155, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6615, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

**திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6638, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6701, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

**திரு. வாகை சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1136, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1184, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1803, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4138, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி.

**திரு. ச. பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4349, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 476, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 633, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளாட்சி அமைப்புகளில் போட்டியிட மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2088, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2207, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் மூன்று சக்கர ஸ்கூட்டர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2482, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் மூன்று சக்கர பெட்ரோல் வண்டிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2630, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் தொகுதியில் வாழும் தகுதியான மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர பெட்ரோல் வண்டிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2651, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2677, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி, செங்கம், தண்டராம்பட்டு மற்றும் ஜவ்வாது மலைப் பகுதிகளிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2740, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதி, திருத்தணி வட்டம்,



சின்னம்மாபேட்டை கிராமத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் பயிற்சி மையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2875, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையினைக் கூடுதலாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2906, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3005, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் 50 சதவிகிதத்திற்கு மேல் பாதிப்படைந்துள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3084, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி.

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் 50 சதவிகிதத்திற்குமேல் பாதிப்படைந்துள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3220, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3424, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் துவங்க ரூ.3 இலட்சம் வரை ஜாமீன் இன்றி கடனுதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3544, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3668, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு உதவியாகக் கூடுதலாக உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3887, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3774, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மூன்று சக்கர வாகனங்களை விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3937, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “அனைத்து அரசு அலுவலகங்களிலும் பார்வையற்றோர் பயன்பெறும் வகையில் பிரெய்லி எழுத்துக்கள்மூலம் அறியும் பலகைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4205, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளுக்குக் கூடுதலாக ஸ்கூட்டர்கள் வழங்குவதற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4505, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “செஞ்சி மற்றும் மேல்மலையனூர் வட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4641, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4714, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.

**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4857, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளின் பிறவிக் குறையை ஆரம்பத்திலேயே கண்டறிந்து பயிற்சி அளிக்கும் “Early Intervention Centres” அமைப்பது குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4997, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5215, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “50 சதவிகிதத்திற்குமேல் பாதிப்புள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5484, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளில் 40 சதவிகித குறைபாடு உள்ள அனைத்து நபர்களுக்கும் அரசு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5692, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித்



தொகை காலதாமதமின்றி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5786, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “செய்யூர் தொகுதி, மாற்றுத் திறனாளிகளுக்கு தொகுதியில் உள்ள அலுவலகம்மூலம் மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5801, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகள் வளம் பெற கூடுதல் அளவில் வேலைவாய்ப்புகள் மற்றும் அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5820, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5936, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை அனைவருக்கும் கிடைக்க செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5970, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாளையங்கோட்டையில் தகுதி வாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6029, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதியில் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6547, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு தொகுதியில் உள்ள அலுவலகம்மூலம் மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12–00

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு

---

@ 221 முதல் 394 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இப்போது மணி 12–00. பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் நிறைய உறுப்பினர்கள் இன்றைக்கு காலையிலே என்னைச் சந்தித்து, 3 நாட்கள் தொடர்ந்து விடுமுறை வருவதால், ஊருக்குச் செல்வதற்கு இரயிலில் பதிவு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, 2–00 மணிக்கு அலுவல்களை முடிக்க வேண்டுமென்று என்னிடம் கேட்டுக்கொண்டுள்ளார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சரிடமும் விரைவில் பதிலுரையை முடிக்கச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களும் 2–00 மணிக்குள் சபை அலுவல்களை முடிக்க ஒத்துழைக்க வேண்டும். மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்குப் பிறகு சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. எல்லோரும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் துவக்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

***திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைர விழா நாயகர், முரசொலியின் பவள விழா கண்டவர், நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்றவர், முத்தமிழறிஞர், எங்கள் இதயங்களில் வீற்றிருக்கும் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினம் காக்கும் பெரும்படைக்கு தலைமை தாங்கி நடத்திச் செல்லும் திராவிட முன்னேற்றக் கழகச் செயல் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும், எங்கள் குடும்பத்தின் (மேசையைத் தட்டும் ஒலி) மூத்த சகோதரருமான மாண்புமிகு தளபதியாருக்கும் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞரின் முரட்டு பக்தரும், மறைந்த தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளரும், எனது தந்தையுமான திரு. என். பெரியசாமி அவர்களை இத்தருணத்தில் நினைவுகூர்கிறேன். பெண்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்று தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக என்னை நியமனம் செய்த தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. செயல் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகிறேன். தூத்துக்குடி தொகுதி மக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக செயல் வீரர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நலம்



மற்றும் சத்துணவுத் திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையைப் பொறுத்தவரை தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக தனியாக ஒரு துறையை உருவாக்கி, அந்தத் துறையை முதலமைச்சரே தன் நேரடி பார்வையில் வைத்து, அத்துறையின் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அத்துறையில் நடவடிக்கை எடுக்க வேண்டியவற்றில் முக்கியமானவைகளை தெரிவிக்க விரும்புகிறேன்.

மேல்பாக்கம் அரசு பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் கடந்த ஓராண்டாக ஓர் இல்லவாசிகூட இல்லை. ஆனால், பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. அப்படியென்றால் பிச்சைக்காரர்களே தமிழ்நாட்டில் இல்லையா? அல்லது சமூக நலத் துறையின் மெத்தனத்தால்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளதா? சாலைகளில் சுற்றித் திரியும் பிச்சைக்காரர்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆகவே, சமூக நலத் துறையும், காவல் துறையும் இணைந்து சுற்றித் திரியும் பிச்சைக்காரர்களை இந்த இல்லத்தில் சேர்த்து பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக செயல்முறைத் திட்டப் புத்தகம் பக்கம் 18 இல் 9 நபர்கள் மட்டுமே கடந்த ஆண்டு இருந்துள்ளனர் என்றும் அந்த 9 நபர்களுக்கு 56 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூபாய் 5 இலட்சம் மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று கலைஞர் ஆட்சியில் கட்டாயமாக்கப்பட்டது. அதனால் அதிகப்படியான மாற்றுத் திறனாளிகள் பயனடைந்து வந்தனர். எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 5 இலட்சம் நிதி கட்டாயமாக்கப்பட வேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் மூன்று சக்கர வண்டி பழுதாகி உபயோகிக்கப்படாத நிலை வந்தவுடன் வேறு மூன்று சக்கர

வண்டி அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று தாராளமாக மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்டது. ஆனால், தற்போது துறையில் மூன்று சக்கர வண்டிகள் மாற்றுத் திறனாளிகளுக்குக் கிடைப்பதில்லை. எங்கு கேட்டாலும் ஸ்டாக் இல்லை என்ற பதில் வருகிறது. பழுதுநீக்கம் செய்து கொடுக்கப்படுவதும் இல்லை. ஆகையால் மூன்று சக்கர வண்டி மாற்றுத் திறனாளிகளுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12–05

மேலும், செயல் முறைத் திட்டம் பக்கம் 21–ல் ஒதுக்கப்பட்ட தொகை கடந்த ஓராண்டாக செலவழிக்கப்படவேயில்லை என்றுள்ளது. ஆகவே, சிறப்புக் கவனம் எடுக்கவேண்டுமென்று அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆரம்பக் கால பயிற்சி மையத்தில்–Early Intervention Centre–ல் பணிபுரியும் தசை பயிற்சியாளர்கள், தொழில் முறை பயிற்சியாளர்கள், பேச்சுப் பயிற்சியாளர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கு சம்பளம் ரூ.10,000/– மட்டுமே வழங்கப்படுகிறது. ஆனால், கல்வித் துறையில் S.S.A. மூலம் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு ரூ.15,000/– வழங்கப்படுகிறது. ஆரம்பக் கால பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஒரே வேலைக்கு இரு துறைகளிடையே உள்ள சம்பள வேறுபாட்டை இந்த அரசு நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறையின் கீழுள்ள S.S.A. சிறப்புப் பள்ளிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களை, மாற்றுத் திறனாளிகள் துறையோடு இணைந்து செயல்படுத்த வேண்டும். ஏனென்றால், S.S.A. திட்டத்தின்கீழ் வட்டார, கிராம அளவில் பணியாளர்கள் உள்ளனர். ஆனால், மாற்றுத் திறனாளிகள் துறையில் இதுவரை வட்டார, கிராம அளவிலான பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. ஆகவே, S.S.A. மற்றும் மாற்றுத் திறனாளிகள் துறைகளிடையே மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு குழுவாவது அமைத்து திட்டங்களைச் செயல்படுத்தும்போது, தலைவர் கலைஞர் எந்த நோக்கத்திற்காக தனித் துறை உருவாக்கினார்களோ அந்த நோக்கம் நிறைவேறும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாற்றுத் திறனாளிகள் துறை மற்றும் வருவாய்த் துறைமூலம் வழங்கப்பட்டு வரும் மாற்றுத் திறனாளிகளின் மாதாந்திர உதவித் தொகை மற்றும் விதிமுறைகளில்கூட வேறுபாடு உள்ளன. அந்த



வேறுபாட்டைக் களைய வேண்டும். அப்போதுதான் அனைத்து மாற்றுத் திறனாளிகளும் பயனடைய முடியும்.

மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்துக்கு ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு வந்த ரூபாய் ஒரு கோடி 2016–2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்படாததால், அதாவது செலவழிக்கப்படாததால், ஈமக்கிரியை செலவுக்குக்கூட கடந்த ஓராண்டுக் காலமாக வழங்கப்படவில்லை. கலைஞர் ஆட்சிக் காலத்திலே ஒரு மாற்றுத் திறனாளி இறந்த உடனேயே ஈமக்கிரியை செலவு வழங்கப்பட்டு வந்தது. அதுகூட, வழங்கப்படாத ஒரு நிலையில் மாற்றுத் திறனாளிகள் அவதிப்பட்டு வருகிறார்கள். ஆகவே, திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும். செயல்முறை திட்டம்–Performance Budget–புத்தகத்தில் பக்கம் 38–ல் 1 கோடி ரூபாய் செலவழிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது என்ற விவரம் உள்ளது. இதுவரை வாரியக் கூட்டமும் கூட்டப்படவில்லை. மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கென தனியாக ஒரு மாநில ஆணையர் இதுவரைக்கும் நியமிக்கப்படவில்லை. முழுக் கூடுதல் பொறுப்பிலேயே அலுவலர் இருக்கிறார். மேலும், அரசு முதன்மைச் செயலாளர் பணியிடமும் காலியாக உள்ளது. இதன்மூலமே இந்த அரசு மாற்றுத் திறனாளிகள் நலனில் எந்த அளவுக்கு அக்கறை கொண்டுள்ளது என்பது வெட்டவெளிச்சமாகிறது.

கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் சாலைகளை எளிதாகக் கடப்பதற்கு வசதியாக சென்னை மாவட்டத்தில் மட்டும் 150 போக்குவரத்து சிக்னல்களில் குரல் ஒலிப்பான்கள் (Auditory Signals) அமைப்பதற்கு 2015–2016 ஆம் ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று வரை அதில் ஒன்றுகூட நடைமுறைக்கு வரவில்லை. அந்தப் பணிகளை இந்தத் துறை வேகப்படுத்த வேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் துறையில் கலைஞரின் செல்லப் பிள்ளைகளாக இருந்த மாற்றுத் திறனாளிகள் தற்போதைய அரசின் செயல்பாட்டால் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதுதான் உண்மையான நிலை. ஆகவே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் திட்டங்களை விரைவுப்படுத்துவதில் அக்கறை காண்பிக்க வேண்டும்.

அடுத்ததாக நம்முடைய சமூக நலத் துறையில் முக்கிய சேவிகா, கிராம சேவிகா போன்ற காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல்

உள்ளன. மேற்படி காலிப் பணியிடங்களை நிரப்பி திருமண உதவித் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவை திறன்பட செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். செயல்முறைத் திட்ட புத்தகத்தின் விவரப்படி நம்முடைய இலக்கைவிட சாதனை குறைவாக உள்ளது; அந்த target இன்னும் achieve செய்யப்படாமல் இருக்கிறது. அதிக demand உள்ள ஒரு திட்டம். ஆகவே, அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்பி சிறப்பாகச் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து, சட்டமாக்கி பெருந்தலைவர் காமராஜரை பெருமைப்படுத்தினார் எம் தலைவர் கலைஞர். மேலும், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்று காமராஜரின் தாயார் சிவகாமி அம்மையாரின் பெயரை, அத்திட்டத்திற்கு சூட்டினார். ஆட்சி மாற்றம் காரணமாக அந்தப் பெயரை நீங்கள் நீக்கிவிட்டீர்கள். கடந்த ஆண்டும் நான் இதைத் தங்களிடம் கேட்டிருந்தேன். சிவகாமி அம்மையாரின் பெயரை அந்தத் திட்டத்திற்கு மீண்டும் சூட்ட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு மறுவாழ்வு இல்லங்கள் இத்துறையின்கீழ்தான் செயல்பட்டு வருகின்றன. அதேபோல், மதுவுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு இல்லங்களையும் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் விதவை பெண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆகவே, சத்துணவு அமைப்பாளர், அங்கன்வாடி பணியாளர், சமையலர், உதவியாளர் பணியிடங்களுக்கு விதவை பெண்களுக்குத்தான் முன்னுரிமை என்பதை இந்த அரசு கொள்கை முடிவாக எடுக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மற்றும் தமிழக அரசின் தாலிக்குத் தங்கம் வழங்கும் திருமண உதவித் திட்டத்தின்கீழ் online மூலம் விண்ணப்பங்கள் விண்ணப்பிப்பதில் சில நடைமுறை சிக்கல்கள் உள்ளதாகத் தெரிய வருகிறது. அதுமட்டுமல்லாமல், அநேக கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு online மூலம் விண்ணப்பிக்க தெரிவதும் இல்லை. வழிகாட்டுபவர்களும் சரியாக வழிகாட்டாத ஒரு நிலைமை இருக்கிறது. அதனைக் களைவதற்கும், ஏழையெளிய மக்கள் online மூலம் விண்ணப்பிக்கும் நடைமுறைகளை மேலும் எளிமையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



பிற்பகல் 12–10

தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட, உருவாக்கப்பட்ட திருநங்கைகள் நல வாரியம் சிறப்பான முறையில் செயல்பட்டு வந்தது. 2011 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது முதல் திருநங்கைகள் நல வாரியம் செயலற்று உள்ளது. இதுவரை நல வாரியக் கூட்டம் ஒன்றுகூட கூட்டப்படவில்லை. இதன்மூலம் அரவாணிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், அவர்களின் நலன்களைப் பேணிக் காப்பதற்கும் இந்த அரசு தவறியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குழந்தை வளர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த ஆறு ஆண்டுகளாக தேவையுள்ள கிராமப்புறங்களில்கூட புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்கப்படவில்லை. தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் 11,762 புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்கப்பட்டன. ஆகவே கிராமப்புறங்களில் தேவையுள்ள இடங்களில் புதிய மையங்கள் தொடங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூக நலத் துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உள்ள அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களில் 30,000—க்கும் மேற்பட்ட பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதால், இம்மையங்களுக்கு வரும் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்மார்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால், அந்தத் திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக என் தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்த ஒரு சில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் இங்கு வைக்கின்றேன்.

தூத்துக்குடி மாநகரில், பாதாளச் சாக்கடைத் திட்டம் 2006 ஆம் ஆண்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, தூத்துக்குடி மாநகராட்சியில் விரைவாக பணி நடைபெற்று வந்தது. 2011 ஆம் ஆண்டு

வரை நடைபெற்ற பணியோடு, அத்திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை. அதற்கு முன்னுரிமை கொடுத்து சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, அத்திட்டம் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடி மாநகராட்சியில் புதிதாக உருவாக்கப்பட்ட 1, 2, 3, 5, 17, 18, 34, 48 முதல் 60 வரையுள்ள வார்டுகளில் கிராமப்புறங்களுக்கான திட்டங்களும், நகர்ப்புறங்களுக்கான திட்டங்களும் கிடைக்கப்பெறாமல் நிராதரவான நிலையில் மக்கள் சிரமப்படுகின்றனர். ஆகவே, அந்த வார்டுகளில் தார்ச்சாலை, கழிவுநீர்க் கால்வாய், குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை போர்க்கால அடிப்படையில் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தூத்துக்குடி தொகுதியில் நிரந்தர வீடுகள் இல்லாத மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தூத்துக்குடி சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன் ஏற்றுமதி நிறுவனம் மற்றும் mat தயாரிக்கும் நிறுவனம் உள்ளிட்ட பிற நிறுவனங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுவதில்லை. சுத்திகரிக்கப்படாமல் வெளியேறும் கழிவுநீரால் இந்தப் பகுதி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள குளம் மற்றும் கிணறுகளில் உள்ள நீர் மாசடைந்து கால்நடைகள் தண்ணீர் அருந்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, கழிவுநீரை சுத்திகரித்து வெளியேற்ற, தொடக்க நிலையிலேயே நடவடிக்கை எடுத்து, நிலத்தடி நீர் மாசடைவதை இந்த அரசு தடுக்க வேண்டுமென்று வேண்டுகோளாக வைக்கின்றேன்.

2015 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான மாநகர வார்டுகள் 1, 2, 3 மற்றும் 5 ஆகியவற்றில் குடியிருப்புப் பகுதிகளில், வெள்ளத் தடுப்பு நிதியில் எந்தவொரு பணியும் செய்ய திட்டமிடாமல், காட்டுப் பகுதியில் உள்ள காட்டு ஓடை மழைநீர் ஓடையை கான்கிரீட் தளம்மூலம் அமைக்க மாநகராட்சியினர் திட்டமிட்டுள்ளனர். நான் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கூறி வருகிறார்கள்.



ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வெள்ளத் தடுப்புத் திட்டத்தைச் செயல்படுத்த நிதி ஒதுக்கும்போது மக்களுக்கு பயன் தரக்கூடிய திட்டங்களை, மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, சமூகப் பாதுகாப்புத் துறையில், கூர்நோக்கு இல்லங்கள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சிறப்பு சிறுவர் இல்லங்களில் இருப்பவர்கள் எதிர்கால மாணவச் சமுதாயம், தமிழ்ச் சமுதாயம். அங்குள்ள மாணவ மாணவியருக்கு கல்வியுடன் தொழிற்பயிற்சி, ஆற்றுப்படுத்துதல் (counselling) கொடுக்க அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் மாணவர்கள் அந்த இல்லங்களில் இருந்ததைவிட இன்னும் அதிகமான சமூக விரோத எண்ணங்களுடன் வெளியே வருகிறார்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறது.

இளம் பிஞ்சுகளின் மேலுள்ள வழக்குகளை Juvenile Justice Board மூலம் விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கூர்நோக்கு இல்லங்களிலுள்ள சிறுவர்களின் பெற்றோர்கள் Juvenile Justice Board பற்றியோ Juvenile Justice (Care and Protection of Children) Act பற்றியோ விழிப்புணர்வு இல்லாமல், அரசு என்றைக்காவது விட்டுவிடுவார்கள் என்று இருப்பதால், அவர்களுக்கு அது பற்றிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும். மேலும் பெற்றோர்களின் அன்பிற்காகவும், ஆறுதலுக்காகவும் ஏங்கும் அந்த இளஞ்சிறார்களை அன்போடும், அரவணைப்போடும் பராமரிக்க, சமூகப் பாதுகாப்புத் துறையில் அதிகளவில் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த சமூக நலத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சமூகப் பாதுகாப்பு மற்றும் சத்துணவுத் துறை திட்டங்களைப் பொறுத்தவரையில் அரசின் சேவைகளை எதிர்நோக்கியிருக்கும் ஏழையெளிய பெண்கள், குழந்தைகள், நலிவடைந்தோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கான திட்டங்களை முறையாகச் செயல்படுத்த வேண்டும். திருமண உதவித் திட்டத்திற்கு விண்ணப்பித்த பெண்களுக்கு உரிய நேரத்தில் திட்டப் பலன்கள் கிடைக்காததால், இத்திட்டத்திற்கு ஏன் விண்ணப்பித்தோம் என்ற யோசிக்கும் வகையில் அவர்கள் வட்டிக்கு கடன் வாங்கி செலவு செய்து கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, விரைந்து அந்தத் திட்டங்கள்

அவர்களுக்கு கையில் கிடைக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும், செயல்படுத்தப்பட வேண்டும், வேகப்படுத்த வேண்டும் என்பதையும் கேட்டுக்கொண்டு, அதேபோல குழந்தை பாதுகாப்பு அலுவலர். ** என்பது கேள்விக் குறியாகவே உள்ளது என்று கூறி என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்களையே பின்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் விரைந்து முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரி திருமதி கீதா ஜீவன் அவர்கள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் குறித்த பல செய்திகளைப் பதிவு செய்திருக்கிறார். பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். அவர் ஏற்கெனவே அமைச்சராகப் பணிபுரிந்தவர். பிச்சைக்காரர்களை எப்படி மறுவாழ்வு இல்லத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பது சமூக நலத் துறையினுடைய பொறுப்பில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பிச்சைக்காரர்களாக தெருவோரங்களில் இருப்பவர்களை காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, அவர்கள் முறையாக விசாரித்து, அதன் பிறகு எங்கள் துறையின்கீழ் இருக்கின்ற சமூகப் பாதுகாப்பு அலுவலர்கள்மூலம் ஒப்படைத்தால் மட்டுமே அவர்களை இல்லங்களில் தங்க வைப்பதற்கு சமூக நலத் துறையின்கீழ் ஏற்பாடு செய்யப்படும். தெருவோரங்களில் இருக்கின்ற தெருவோர வாசிகளையோ அல்லது பிச்சைக்காரர்களையோ சமூக நலத் துறையோ அல்லது சமூகப் பாதுகாப்புத் துறையோ நேரடியாகச் சென்று அவர்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்று சக்கர சைக்கிள் வண்டிகள் வழங்கும் எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பதிலுரையில் தெளிவாக, விளக்கமாக அந்த வினாவிற்கு விடையளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தசைப் பயிற்சி சிறப்பு ஆசிரியர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தசைப் பயிற்சி சிறப்பு ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே இருந்த ரூ.5,000 தொகுப்பூதியத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 10,000 ரூபாயாக உயர்த்தி, தேவையின் அடிப்படையில் அதிகமான எண்ணிக்கையில் பயிற்சியாளர்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நியமித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுடைய நலத் திட்டங்களைப் பெறுவதில் மாற்றுத் திறனாளிகளுடைய வாரியத்தில் அவர்கள் பதிவு செய்து, இதுவரை பதிவு செய்த மாற்றுத் திறனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அனைத்தும், சமூக நலத் துறையின்கீழ் வழங்கப்படுகின்ற கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகள், அவர்களுடைய குடும்பம் மட்டுமல்லாமல், அவர்களுடைய குழந்தைகளுக்கும் அவர்கள் படிக்கின்ற படிப்புக்கு, அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற அந்த course–க்குத் தகுந்த மாதிரி 1,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு "Reaching the unreached" என்று சொல்லுவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்துப் பெண்களுக்கும் கருவிலிருந்து அவர்கள் வயது வரை அனைத்து வகையான உதவிகளையும் செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதை விளக்கமாக என்னுடைய பதிலுரையில் தெரிவிக்க இருக்கின்றேன்.

*பிற்பகல் 12–20*

சத்துணவுத் துறை பணியிடங்களில் விதவை என்ற அந்தப் பிரிவில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சத்துணவுப் பணியாளர் பணியிடங்களை நிரப்பும் விதத்தில் 25% special category–க்குக் கொடுக்கிறோம்.

மாற்றுத் திறனாளிகள், விதவைகள் மற்றும் இராணுவத்தில் பணியாற்றக்கூடியவர்கள் ஆகியோருக்காக ஒதுக்கப்படுகின்ற 25% இட ஒதுக்கீட்டில் விதவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விதவைகளுக்கு மட்டும் இட ஒதுக்கீட்டில் அதிக சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அரசு அதை கவனமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், உங்களுடைய பதிலுரையில் நீங்கள் இந்தக் கருத்துகளையெல்லாம் சொல்லலாம். இப்பொழுது சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** Online application குறித்து அனைத்து அரசு அலுவலர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, online application பெறும்போது பெற வேண்டிய சான்றிதழ்களை சரியாகப் பெற்றிட, Data Entry Operator என்ற பணியிடத்தைத் தோற்றுவித்து, அனைத்து பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களிலும் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும். அனைத்து விண்ணப்பங்களும் online–ல் முன்கூட்டியே அறிவிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கன்வாடி பணியாளர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்புவது குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த வழக்கில் அரசுக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள 30,000 பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் பேசும்போது, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்டங்களுக்கு ரூ.5 இலட்சம் ஒதுக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. அது இப்போது நீக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். அது நீக்கப்படவில்லை. 2015–2016 ஆம் ஆண்டுவரை இரண்டு சக்கர வாகனங்கள் 2 எண்ணிக்கைகள் என்றுதான் இருந்தது.





அதற்குக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்றுதான் 2015–2016 ஆம் ஆண்டிலிருந்து எவ்வளவு இரு சக்கர வாகனங்களுக்கு வேண்டுமானாலும் நிதி ஒதுக்கிக் கொள்ளலாம் என்றுதான் rules கொண்டு வந்திருக்கிறோம். கூடுதலாகவே கொடுக்கலாம். இந்த purpose–க்காகவே சொன்னார்கள். அதனால், கூடுதலாகவே வாங்கிக் கொள்ளலாம் என்பதற்காகத்தான் இவ்வாறு rules கொண்டு வந்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் இன்னும் உரையை முடிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவர்களுக்கு நன்றாகவே தெரியும். 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் கொண்டு வரப்பட்டன. அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 20 சதவிகிதம் பணிகளை முடித்திருந்தீர்கள். அதற்குப் பிறகு, 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு 98 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் பிரச்சினைகள் இருக்கின்றன. 24 எம்.எல்.டி. கொள்ளளவுக் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி சொந்த நிதியில் நிறுவி, இயக்கம், பராமரித்து ஒப்படைக்கும் முறையில் DBFOT ஒப்பந்த முறையில் 1–8–2014 அன்று பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், ஒப்பந்தப் பணிகளைத் தொடங்குவதில் காலதாமதம் செய்ததனால், மேற்படி நிறுவனத்துடனான ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. தற்போது மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்பணிகள் முடிவடைந்தால் 2,88,913 மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளத் தடுப்புப் பணிகளைப் பற்றிச் சொன்னார்கள். வெள்ளத் தடுப்புப் பணிகளைப் பொறுத்தவரையில், concrete road போடுவது பற்றிச் சொன்னார்கள். இதற்காக ரூ.73 கோடியில் விரிவான திட்ட அறிக்கையை சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். Concrete road போடுவது பற்றி ஆய்வு செய்து, அவசியம் இல்லையென்றால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துகள் குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் கழிவு நீர் வாய்க்கால்கள் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரியிருந்தார். விரிவாக்கப்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, சென்னை, கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிகளிலும், எங்கெங்கு விரிவாக்கப்பட்ட பகுதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பல பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சாலைகள் போடப்பட வேண்டுமென்று கோரினார். அவர் கோரிய இடங்களில் அவசியம் இருப்பின், அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகையில், சிப்காட் வளாகத்தில் தண்ணீர் சுத்திகரித்து பராமரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். சிப்காட் வளாகத்திலுள்ள கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் அனைத்தும் முதல் நிலை aeration மூலம் சுத்தப்படுத்தப்பட்டு, சிப்காட் வளாகத்தில், 10 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள மரங்களுக்குப் பாய்ச்சுவதற்காக பயன்படுத்தப்படுகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.





**திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி வளமான தமிழகத்தை உருவாக்கிட ‘மக்களைத் தேடி அரசு’ என்ற மகத்தான தத்துவத்தை முன்வைத்து ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்; உங்களால் நான், உங்களுக்காகவே நான்’ (மேசையைத் தட்டும் ஒலி) என முழங்கி அல்லும், பகலும் அயராது மக்கள் பணியாற்றி தமிழ்மொழி, தமிழினம் தலைநிமிர்ந்து வாழ தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்திட்ட தன்னிகரில்லாத் தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். எனது மயிலாடுதுறை தொகுதி மக்களுக்கு நன்றியினைக் காணிக்கையாக்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் தமிழக அரசு, பெண்கள், குழந்தைகள், மூதாட்டிகள் மற்றும் மூன்றாம் பாலினர், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காக புதுமையான பல எழுச்சி திட்டங்களைத் தீட்டி, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைமூலம் சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், பள்ளி செல்லும் மாணவர்களின் நலனுக்காக கிராமப்புறத்தில் சிறு வயதில் கஷ்டப்படுவதை உணர்ந்து, மகத்தான சத்துணவுத் திட்டத்தை முதன்முதலில் துவக்கினார். அந்த நேரத்தில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியுமா? நிதி எங்குள்ளது என்று தி.மு.க.–வினர் கேட்டபொழுது பிச்சை எடுத்தாவது இந்த சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றுவேன் என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிகரமாகச் செய்து காட்டியவர் மாண்புமிகு

[திரு. வி. ராதாகிருஷ்ணன்] [2017 ஜூன் 24

புரட்சித் தலைவர் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். மேலும், தமிழக அரசின் சார்பில் புரட்சித் தலைவர் அவர்களால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அன்றைய அமைச்சராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையில் பேசியபோது அந்த சபையே, உலகமே கைதட்டி வரவேற்றதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னை தெரேசாவின் பாராட்டுதலைப் பெற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் சீர்மிகு சிந்தனையில் உதித்த "தொட்டில் குழந்தைத் திட்டம்". 1992 ஆம் ஆண்டில் சேலத்தில் தொடங்கப்பட்டு, பெண் சிசுக் கொலையை அறவே ஒழித்து, கைவிடப்பட்ட பெண் குழந்தைகளைத் தத்துக் கொடுக்கும்வரை பாதுகாத்து, பராமரிப்பதில் மற்ற மாநிலங்களுக்குத் தமிழகம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடைமுறைப் படுத்தப்பட்ட பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மாநிலத்தின் முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம் பெண் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் வளமான எதிர்காலம் குறித்த நம்பிக்கையை வலுவூட்டுவதாகவும், அவர்கள் உயர் கல்வி பயில்வதை ஊக்குவிப்பதாகவும் விளங்குகிறது.

10 ஆம் வகுப்பு மற்றும் அதற்குமேல் படித்த பெண்களின் திருமணத்திற்காக திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்க நாணயத்துடன் ரூ.25,000/– மற்றும் பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்க நாணயத்துடன் ரூ.50,000/–ம் வழங்கப்பட்டு வந்ததை, 23–05–2016 அன்று முதல் 8 கிராம் தங்க நாணயமாக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவது போற்றுதலுக்குரியதாகும்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலமாக நடத்தப்படும் சேவை இல்லங்கள் ஆதரவற்ற பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் பாதுகாப்புடன் தங்குவதற்கும், கல்வியுடன் வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கும் மையமாகவும் திகழ்கிறது.



2017 ஜூன் 24] [திரு. வி. ராதாகிருஷ்ணன்]

பெண்கள் தங்களின் பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்கி, அதன்மூலம் அவர்கள் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான வருமானத்தைத் தேடிக்கொள்ள வழிவகுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், குழந்தைகளைக் கவரும் வண்ணம், மாண்புமிகு அம்மா அவர்கள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 4 வகையான மசாலா கலந்த முட்டையுடன்கூடிய 13 வகையான கலவைச் சாதத்தினை அறிமுகப்படுத்தினார்கள். இத்திட்டத்தைச் செம்மையாக இந்த அரசு செயல்படுத்தி வருவது போற்றுதலுக்குரியதாகும்.

ஒவ்வொரு வருடமும் சத்துணவுப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணமாக ரூ.5,000/–மும், பொங்கல் போனஸாக ரூ.1,000/–மும் வழங்குவதோடு பணியில் இருக்கும்போதே இறக்கும் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஈமச்சடங்கிற்கு ரூ.25,000/–மும், சத்துணவுப் பணியாளர்களுக்கு வருடத்திற்கு 12 நாள் தற்செயல் விடுப்பும், பெண் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஊதியத்துடன்கூடிய மகப்பேறு விடுப்பு 180 நாட்களும் வழங்கி சத்துணவு ஊழியர்களின் நலன் காக்கும் அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993 ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டு, தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

பிற்பகல் 12–30

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டுவரும் இந்த அரசு, இந்தியாவிலேயே முதல் முறையாக 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவருக்கு உதவிடும் வகையில், மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,000/– வழங்கும் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் 1993 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்வுக்கான இயக்குநரகம் உருவாக்கப்பட்டது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கென அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு மாநில கொள்கைத் திட்டத்தினை 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உருவாக்கியது. பல்வேறு திட்டங்களின்மூலம் மாற்றுத் திறனாளிகள் அதிகாரம் பெற்று உய்யும்வகையில் செயல்பட்டதால் 2013–2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறந்த மாநிலம் என்ற விருதை பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டினையும், உயர் கல்வியில் 5 சதவிகித இட ஒதுக்கீட்டினையும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதோடு, மாற்றுத் திறனாளிகள் தொடர்பான வழக்குகளில் விரைந்து தீர்வு காண ஏதுவாக சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவது மாற்றுத் திறனாளிகள் நலனில் இந்த அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் தேவையின் அடிப்படையில் சக்கர நாற்காலிகள், கருப்பு கண்ணாடிகள், மடக்கு ஊன்றுகோல்கள், பிரெய்லி கை கடிகாரங்கள், காதொலிக் கருவிகள், சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய மின்கலன்கள், கால் தாங்கிகள், தோள்பட்டை தாங்கிகள், செயற்கை அவயங்கள், மூன்று சக்கர சைக்கிள்கள் ஆகிய உபகரணங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றிடும்வகையில், வருடத்திற்கு, ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்கு 20,000 ரூபாய் அளவிற்கு மிகாமல் 50 சதவிகித மானியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் செய்து, தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள வங்கிக் கடன், வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு நிவாரண உதவித் தொகை, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், மூன்று சக்கர மோட்டார் வாகனம் ஆகியவை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் மாற்றுத் திறனாளிகளுக்காக அரும் பணியாற்றிவரும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு சுதந்திர தினத்தன்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாநில விருதுகளை வழங்கி வருகிறது என்பது பெருமைக்குரிய விஷயம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சமூக நலத் துறைக்கு ரூ.4,781 கோடியும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு ரூ.466 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். இத்தகைய சீர்மிகு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து செயல்பட அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை இந்த அவை முன் வைத்து, அவற்றை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாகப்பட்டினத்திற்கும், மயிலாடுதுறைக்கும் இடையே புதுச்சேரி மாநிலத்தின் காரைக்கால் மாவட்டம் அமைந்துள்ளதால், பொதுமக்கள் பல தடைகளைக் கடந்து செல்ல வேண்டியுள்ளதால், மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சியானது வளர்ந்து வரும் நகரமாகும். இந்நகரைச் சுற்றி புகழ்பெற்ற திருக்கோயில்கள் மற்றும் நவக்கிரக ஸ்தலங்கள் அமைந்துள்ளதால், அவற்றிற்கு வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் மயிலாடுதுறை நகரின் வழியாக பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மயிலாடுதுறை பேருந்து நிலையம் என்பது சுமார் 20 ஆண்டுக்கால மக்களின் கோரிக்கையாகும். தற்போது உள்ள பேருந்து நிலையம் 1963 ஆம் ஆண்டு சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டது. அப்போது 13 பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டன. இப்போது மயிலாடுதுறை அரசுப் பேருந்து நிலையத்தில் மட்டும்

81 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மொத்தமாக நாள் ஒன்றுக்கு சுமார் 250 பேருந்துகள் வந்து செல்கின்றன. மயிலாடுதுறை பேருந்து நிலையமானது மிகவும் பழமையானதாகவும், நெருக்கமான இடத்தில் அமைந்துள்ளதாலும், இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2005 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்திட அடிக்கல் நாட்டினார்கள். கடந்த 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் காரணமாக மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி கிடப்பில் போடப்பட்டது. 2011 ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மயிலாடுதுறை நகராட்சிப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்ட ரூ.33 கோடி மதிப்பீட்டில், மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அவர்களால் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை நகராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால், புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்குத் தேவையான 33 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்கி பணிகளைத் தொடங்கி, விரைந்து முடித்திட நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–35

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்ட வேண்டும் என்பது மயிலாடுதுறை மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். 2014 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110–ன்கீழ் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, மயிலாடுதுறை ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, குமாரமங்கலம், கடலூர் மாவட்டம், ஆதனூர் பகுதியில் சுமார் 400 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என அறிவித்தார்கள். இந்தத் தடுப்பணையின்மூலம் நிலத்தடி நீர் உயரும்; அதே சமயம் கடல் நீர் உள்ளே புகாமல் காக்கப்படும். கொள்ளிடம் ஆறு அடங்கிய மூன்று மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 15–க்கும் மேற்பட்ட போர்வெல் அமைத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.



நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நோயாளிகள் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனை 1880 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இம்மருத்துவமனை நாகப்பட்டினம் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை 324 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு புறநோயாளிகள் பிரிவில் சராசரியாக 2,060 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாள் ஒன்றுக்கு மொத்த பிரசவங்களின் எண்ணிக்கை 12. சாதாரண பிரசவம் 5, அறுவை சிகிச்சை 7. நாள் ஒன்றுக்கு சிகிச்சைப் பெறும் விபத்து நோயாளிகளின் எண்ணிக்கை 5. இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் ஸ்கேன் எடுக்க வேண்டுமென்றால் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அல்லது தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று ஸ்கேன் எடுத்து வரவேண்டியுள்ளதால் நோயாளிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே, நோயாளிகள் ஸ்கேன் செய்ய ஏதுவாக புதிய C.T. scan மற்றும் M.R.I. scan இயந்திரங்களை அமைத்துத் தர வேண்டும். தற்போது உள்ள படுக்கை வசதி போதுமானதாக இல்லை. எனவே, படுக்கை வசதியை அதிகரித்து புதிய வார்டுகள் அமைக்கவும், மருத்துவமனையைத் தரம் உயர்த்தவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், எனது மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணல்மேடு பகுதியில் உள்ள சுமார் 20 கிராமங்களைச் சுற்றி தீயணைப்பு நிலையம் ஏதும் இல்லாத காரணத்தால், இப்பகுதியில் ஏற்படும் திடீர் தீ விபத்துகளுக்கு சுமார் 20 முதல் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மயிலாடுதுறை, பந்தநல்லூர் மற்றும் வைத்தீஸ்வரன் கோவில் தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீயணைப்பு வண்டிகள் வந்து தீ விபத்தினைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளதால், திடீரென்று ஏற்படும் தீ விபத்தினைக் கட்டுப்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, மயிலாடுதுறை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க பேரூராட்சிக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மயிலாடுதுறை—கல்லணை சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் மாப்படுகை இரயில்வே கேட்டில் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை—முட்டம் பாலம் அணுகு சாலையை மேம்பாடு செய்திட வேண்டுகிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரம், மயிலாடுதுறை பழம் காவேரியை சீரமைத்துத் தூர் வாரிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரத்தில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. புறவழிச் சாலைக்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. விரைவாக இப்பணியை முடித்து நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மயிலாடுதுறையில் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் மையப்பகுதியான மயிலாடுதுறையில் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கு இந்த நல்வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.

**திரு. டி.எ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூக்கின்ற மலர்களெல்லாம் பூஜைக்கு வைக்கப்படுவதில்லை. அதுபோல், பிறக்கின்ற மனிதர்களெல்லாம் பெருமைக்கு உரியவர்கள் இல்லை. ஆயிரத்தில், இலட்சத்தில் ஒருவர்தான் இறந்தும், இறவாமல் வரலாற்றில் வாழ்கின்றனர்.



மனிதன் வரலாற்றில் வாழ வேண்டும், போற்றப்பட வேண்டும். அதுவே பெருமைமிக்க வாழ்வாகும்; போற்றத்தக்க வாழ்வாகும். இதற்கு உதாரணமாய், வீரனுக்கு வீரனாக, தொண்டனுக்குத் தொண்டனாக, துணிச்சல் மிக்கவராக, தென்னகத்துத் தங்கமாய் வாழ்ந்தவர் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12—40

இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாட்டு மக்களுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்து, ஏழையெளிய, சாதாரண, அடித்தட்டு மக்களையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, வாய்ப்புக் கொடுத்து, வரம் கொடுத்து, 'வெற்றி பெற்று வா' என்று சொல்லி, தாயுள்ளத்தோடு, என்னையும் பூந்தமல்லி தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராக்கி, இம்மாமன்றத்திலே அமர வைத்து என் வாழ்விலே ஒளியேற்றிய அம்மா அவர்களை நானும், என் குடும்பமும் என் உயிர் உள்ளவரை எங்கள் குல தெய்வமாக வணங்குவோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான் என்பது கேள்வியில்லை; அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால் வாழ்க்கையில் தோல்வியில்லை" என்ற பாடல் வரிகளை மெய்ப்பித்துக்காட்டிய நம் அம்மா அவர்களை வணங்குகிறேன். நல்வழிகாட்டி, நல்லரசாக நடத்தி வரும், அடிமட்டத் தொண்டர்களையும், ஒருங்கிணைத்து, ஒற்றுமைபடுத்திய, தென்னாட்டு தலைமகனே, கடலாக விரிந்த புகழே, கனிவாகிப் பொழியும் மழையே, அம்மா அவர்களின் அரசை சிறப்பாக நடத்திவரும் கொடையால், வீரத்தால், குன்றாத பண்பால், ஓங்கி நிற்கின்ற கொங்குச் சீமையினுடைய தங்கம் எங்கள் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, இங்கு சூழ்ச்சி வலைகள் பின்னப்பட்டு, சிக்கலிலே மாட்டிவிட்டு, ஆட்சியைக் கலைத்துவிட்டு, மலையேறிவிடலாம், மல்லிகைப் பூ வாங்கலாம், கொண்டையிலே வைத்துக்கொள்ளலாம் என நினைத்தார்கள், கனவு கண்டார்கள். ஆனால் வெள்ளை மாளிகையில் வெள்ளைப் புறாவைப்போல் ஒரு சமாதானப் புறா வந்து 'கவலைப்படாதீர்கள்', என்று ஆறுதல் காட்டி அடைக்கலம் கொடுத்து, 'இது அம்மாவின் அரசு, உங்களை அழகு பார்த்திடும் அரசு, நான் இருக்கிறேன் உங்களைக் காக்க, நம்பிக்கையோடு இருங்கள், ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுங்கள்,

[திரு. டி.எ. ஏழுமலை] [2017 ஜூன் 24

ஒற்றுமையாக இருங்கள், எது நடந்தாலும் தவிடுபொடியாக்கிவிடலாம், நான் உங்களில் ஒருவராக இருப்பேன்' என்று தட்டிக் கொடுத்து கவலையெல்லாம் போக்கி தைரியம் கொடுத்த எங்களின் கழகப் பொதுச் செயலாளர் எங்கள் சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த பூந்தமல்லி தொகுதி மக்களுக்கும், கழகத்தின் கடைக்கோடி தொண்டனிலிருந்து கிளைக் கழகச் செயலாளர், ஊராட்சி கழகச் செயலாளர், ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் பல அணி கழகச் செயலாளர்கள் மற்றும் நடுநிலையான பொதுமக்கள் அனைவரின் பாதங்களையும் தொட்டு வணங்குகிறேன். **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலம் பேணும் மகத்தான என் தாயரசில், சமூக நலம் மற்றும் சத்துணவு, மாற்றுத் திறனாளிகள் துறைமூலம் முதியோர், கணவனை இழந்த பெண்கள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள், பொருளாதாரத்தில் பின்தங்கியோர் என எண்ணிறைந்த மக்களின் எழில் குறைந்த வாழ்வுதனை ஏற்றமுடன் செப்பனிட சமூகப் பாதுகாப்பு உதவித் தொகையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கி வருகிறது. இந்த நிதியாண்டில், இந்தத் திட்டத்திற்காக 3,929.28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–45

மாண்புமிகு இதய தெய்வத்தின் உயிரோட்டத் திட்டமான பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் ஆகியவற்றுக்கு நடப்பு நிதியாண்டில், ரூ.140 கோடியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், திருமாங்கல்யத்திற்காக 8 கிராம் தங்கம் மற்றும் மேல்நிலைக் கல்வி படித்தவர்களுக்கு 25,000 ரூபாயும், பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 50,000 ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது. இந்தத் திட்டங்களுக்காக இந்த நிதியாண்டில் 723 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜூன் 24] [திரு. டி.எ. ஏழுமலை]

இந்த ஆண்டு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர்கள் இருசக்கர வாகனங்கள் வாங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்காக, இந்த நிதியாண்டில் ரூ.200 கோடியை ஒதுக்கி, தனது தேர்தல் வாக்குறுதிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றி வருகிறது.

இந்த ஆண்டு சமூக நலத் துறைக்காக ரூ.4,781 கோடி நிதி ஒதுக்கியுள்ள மாண்புமிகு வல்லமைத் தாயின் வழிகாட்டி அரசு மாற்றுத் திறனாளிகளையும் மனமுவந்து காக்கிறது. மனிதனாய் பிறந்தும் சிறகில்லாத மாற்றுத் திறனாளிகளையும் இந்த அரசு மதிக்கவே செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 11.79 இலட்சம் மாற்றுத் திறனாளி நபர்களுக்கு அடையாள அட்டையை வழங்கியுள்ளது. 435 சிறப்புப் பள்ளிகள் மற்றும் 42 தொழிற்பயிற்சி நிலையங்கள் நலமாக நடைபெற்று வருகின்றன. இவர்களுக்கு பாதுகாப்பு உதவித் தொகையாக மாதந்தோறும் 1,500 ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களின் எண்ணிக்கை, ஆண்டொன்றிற்கு 1,000–லிருந்து 2,000–மாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக, 11.97 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கியுள்ளது.

பார்வைத்திறன் குறைபாடுடையோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.1,000 மாதாந்திரப் பயணப் படியானது செவிதிறன் குறைபாடுடைய அரசுப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தி வருகிறது.

2017–2018 ஆம் ஆண்டில் 3.16 கோடி ரூபாய் செலவில் பார்வைத்திறன் குறைபாடுள்ள 10,000 நபர்களுக்கு உயர் தொழில்நுட்ப ஊன்றுகோல்கள்–Smart Cane வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தசைச் சிதைவு மற்றும் பக்கவாதத்தால் கை, கால் பாதிக்கப்பட்ட 1,000 நபர்களுக்கு 6.50 கோடி ரூபாய் செலவில் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் முதன்முறையாக வழங்கப்படவுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டில், அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த 10,000 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும்வகையில், ரூ.5 கோடி செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் (Skill Development Training) வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மற்றும் சிவகங்கையில் 3.31 கோடி ரூபாய் செலவில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் செவிதிறன் குறைபாட்டைக் கண்டறிவதற்காக ஒரு முன்னோடித் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து 17.68 சதவிகிதம் உயர்த்தி, 2017–2018 ஆம் ஆண்டிற்கு 466 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இந்த ஆட்சியை மாறுகண் கொண்டு பார்க்கிறார்கள். பாலாற்று நதிக்கரையில் இருந்தாலும், பட்டமரம் பட்டமரமாகத்தான் தெரியும்.

பிற்பகல் 12–50

என்னுடைய பூந்தமல்லி தொகுதி சம்பந்தமான பிரச்சினைகள் குறித்த கோரிக்கைகள்.

பூந்தமல்லி தொகுதி, மேல்மாநகர், கீழ்மாநகர் குடியிருப்புப் பகுதி முழுமையாக ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியாக இருக்கின்றது. பூந்தமல்லி சென்னைக்கு வரும் நுழைவாயிலாக இருக்கிறது. சென்னை, கோயம்புத்தூர், பெங்களூரு போகும் வழியாகவும் இருக்கிறது. அப்பகுதியில் வாழும் ஆதி திராவிட மக்கள் இதுநாள்வரை ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு அடுக்குமாடிக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேல்மாநகர், கீழ்மாநகர் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

பூந்தமல்லி நகருக்கு அரசு மருத்துவமனை வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் தாலுகா மருத்துவமனையில் இரண்டு கட்டடங்கள்



மட்டும்தான் இருக்கின்றன. இட நெருக்கடியாக இருக்கிறது. அரசு மருத்துவமனையை மாற்றி அமைக்க வேண்டும். ஏற்கெனவே இப்பொழுது 5 ஏக்கர் பொது இடம் இருக்கிறது. அங்கு அரசு மருத்துவமனையை மாற்றிக் கொடுத்தால் மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், பெங்களூரு போன்ற இடங்களிலிருந்து வாகனங்கள் வருகின்றன. அங்கு நிறைய விபத்துகள் நடக்கின்றன. வழித் தடங்களில் தடுக்கி விழுந்து நிறையபேர் இறந்துவிடுகிறார்கள். சிகிச்சைக்காக சென்னை மருத்துவமனைக்குத்தான் வர வேண்டியதிருக்கிறது. தாலுகா மருத்துவமனையை பெரியதாகக் கட்டிக் கொடுத்தால் மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்குமென்று மாண்புமிகு அம்மா அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவமனையை இடமாற்றம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூந்தமல்லி நகரில் அனைத்துக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூந்தமல்லி நகருக்குள் இருக்கும் பேருந்து நிலையம் சிறியதாக இருக்கிறது. பேருந்து நிலையத்தை பெரிதுபடுத்த வேண்டும். நகருக்கு நடுவிலே போகும் வழிகளில் நெருக்கடி ஏற்படுவதால் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் உரிய நேரத்தில் போய்ச் சேரமுடியவில்லை. எனவே பேருந்து நிலையத்தை 10 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் ஏற்படுத்திக் கொடுத்தால் பூந்தமல்லி நகரம் சிறப்பாக அமையும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரவாயலிலிருந்து பூந்தமல்லி, மாங்காட்டுக்குச் செல்லும் நான்கு வழிச் சாலையில் ஒரு ரவுண்டானா அமைத்துக் கொடுத்தால் அந்த நான்கு வழிச் சாலை சிறப்பாக அமையும் என்று மாண்புமிகு அம்மாவின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். குமணன்சாவடியில் ரவுண்டானா அமைத்து போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா மேல்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 1,500 மாணவர்களும், 2,500 மாணவிகளும் படிக்கின்றனர். அந்தப் பள்ளியின் சுற்றுச் சுவர் உடைந்துள்ளதால், சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளிக்கு ஒரு காவலர் பணியிடமும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூந்தமல்லி ஒன்றியத்தில் ஆறுகள் இருக்கின்றன. ஆறுகளில் தடுப்பணைகள் தேவைப்படுகின்றன. கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்ட வேண்டும். சித்துக்காடு மற்றும் கொசவன்பாளையத்திற்கு ஒரு தடுப்பணைக் கட்டித் தரவேண்டும் என்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூரில் கூட்டுறவு வங்கி இருக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து திருவள்ளூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் திருவள்ளூர் மாவட்டத்திற்கு தனியாக கூட்டுறவு வங்கி ஏற்படுத்தித் தரப்படவில்லை. திருவள்ளூரிலுள்ள கூட்டுறவு வங்கிகள் எல்லாம் காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி என்று சொல்லப்படுகின்றன. பொன்னேரி, பூந்தமல்லி, திருவள்ளூர் போன்ற இடங்களில் உள்ள வங்கிகளெல்லாம் காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி என்று சொல்லப்படுகிறது. எனவே திருவள்ளூர் மாவட்டத்திற்கு தனியாக கூட்டுறவு வங்கி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி மற்றும் சென்னையில் அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன. திருவள்ளூரில் ஓர் அரசுக் கல்லூரி ஏற்படுத்திக் கொடுத்தால் பெரும்பாலும் ஏழையெளிய ஆதி திராவிட மக்கள் வசிக்கும் திருவள்ளூரைச் சுற்றியுள்ள 200 கிராம மக்கள் பயனடைவார்கள். எனவே திருவள்ளூரில் ஓர் அரசு கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். வேப்பம்பட்டு, செவ்வாப்பேட்டை, புட்லூர் இரயில்வே மேம்பாலப் பணிகள் 10 ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கின்றன. மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டு அந்த மேம்பாலப் பணிகளை உடனடியாக முடித்துத் தரவேண்டுமன்று மாண்புமிகு அம்மா அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

பெருமாள்பட்டு கிராமத்தில் ஓர் அரசு ஆரம்ப சுதாதார நிலையம் இருக்கிறது. அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பள்ளிக்கூடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. வர்தா புயல் வந்தபோது நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நான் ஆய்வுக்காகச் சென்றிருந்தேன். வயதானவர்கள், பெரியவர்கள், சிறியவர்கள் எல்லாம் வரிசையில் நின்று மருந்து மாத்திரை வாங்குகிறார்கள். அங்கு மின் தடை ஏற்பட்டால் கருவுற்ற



பெண்களுக்கு பிரசவம் பார்க்கின்ற நேரத்தில் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அரசாங்கம் ஒதுக்கும் ரூபாயில் இரண்டு இலட்சம் ரூபாயினை உடனடியாக அந்த நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் Generator வாங்கிக் கொடுப்பதற்கு ஒதுக்க உத்தரவு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அதுதான் என்னால் முடியும். வேப்பம்பட்டிலுள்ள மருத்துவமனையை பக்கத்தில் உள்ள அரசு இடத்தில் கட்டிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 10 ஏக்கருக்கும்மேல் அரசு நிலம் இருக்கிறது. அதில் இரண்டு ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக் கொடுத்து மருத்துவமனைக் கட்டினால், சுமார் 20 கிராம மக்கள் பயனடைவார்கள் என்று அம்மா அவர்களின் அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு அலுவலகம் இருப்பதைப்போல, திருவள்ளூர் மாவட்ட வழக்கறிஞர்களுக்கு அலுவலகம் அமைக்க அம்மா அவர்கள் 10 இலட்சம் ரூபாய் வழங்கி உத்தரவிட்டிருந்தார்கள். அது இன்னும் பரிசீலனையில் இருக்கிறது, வரவில்லை என்பதால் வழக்கறிஞர்கள் அதை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை வழங்க அம்மா அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

எல்லபுரம் ஒன்றியம் மற்றும் செம்பேடு ஊராட்சியில் தடுப்பணைக் கட்டித் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நிலத்தடி நீர் உள்ளே போவதால், அங்குள்ள ஏறக்குறைய 25 கிராமங்கள் பயன்பெற தடுப்பணை கட்ட வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அம்மா அவர்களின் அரசு தயவு செய்து கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசி பெற்ற பூந்தமல்லி தொகுதிக்கு நான் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடிந்துவிட்டது இன்னும் இரண்டு தாள்கள்தான் இருக்கின்றன. கவலை வேண்டாம். சீக்கிரம் முடித்து விடுகிறேன். அம்மா அவர்களின் வரலாற்றை, தினம் பார்க்கும்போது, அம்மா அவர்களின் மறைவிலே நான் கண்டேன். ‘முதல்வருக்கெல்லாம் முதல்வர்’ என்று முத்திரைப்

பதித்துவிட்டார் என்று எதிர் அணியினரே சொல்லக் கேட்டேன். அம்மா அவர்கள் இம்மாமன்றத்திற்கு வந்தால். . . .

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அமைச்சர்களின் வரிசையில் அமர்ந்திருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் எப்போது மாண்புமிகு அமைச்சர் ஆனீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி.எ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) முதல்வருக்கெல்லாம் முதல்வர் என்று முத்திரையைப் பதித்ததாக எதிர் அணியினரே சொன்னதைக் கேட்டேன். அம்மா அவர்களின் தமிழ் ஆற்றலையும், ஆங்கிலப் புலமையும், பேசுகின்ற வார்த்தைகளைக் கண்டால் எதிரிகள் நடுநடுங்குவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். மீதியுள்ள கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள்.

**திரு. டி.எ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் சட்டமன்றத்திற்குள் வந்தால், எதிரிகள் நடுநடுங்குவார்கள். இந்த சட்டமன்றத்தின் வேதபுத்தகம் அம்மா அவர்கள் என்று சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் வேதா நிலையத்திற்கு வந்தால், போயஸ் தோட்டத்து ரோஜா மலர் என்று சொல்வோம். இந்த நாட்டு ஏழையெளிய மக்களுக்காக வாழ்ந்த போதி மரத்து பூங்கொத்தாக நாங்கள் நினைக்கிறோம். தமிழ்நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்து சாதி சமத்துவம் கண்ட ஒரு சாமி அவதாரம் என்று எங்கள் அம்மா அவர்களைச் சொல்லுவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். மீதியுள்ள கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். நீங்கள் கொடுப்பதைப் பதிவு செய்துகொள்ளலாம்.

**திரு. டி.எ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு மட்டும் பத்து நிமிடங்கள் கொடுக்கிறீர்கள். மற்றவர்களுக்கு ஒரு மணி நேரம் கொடுக்கிறீர்கள்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் 16 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. டி.எ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதோ என் உரையை முடித்துவிடுகிறேன். அம்மா அவர்களின் சரித்திர சாதனை படைத்திடும் ஆட்சி ஏழைகளின் ஆட்சியாக மீண்டும் மீண்டும் தொடரும் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்து, இந்த ஆட்சியில் என்னுடைய அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.

***திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் காளி அம்மனை வணங்குகிறேன். இந்த மாமன்றத்தில், இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், மாண்புமிகு ராகுல் காந்தி அவர்களுக்கும், வைர விழா நாயகர் கலைஞர் அவர்களுக்கும், ஐயா தளபதி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் எளிமை, எதிலும் புதுமை, புன்னகை மன்னன் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடுநிலை நாயகனே, செங்கோல் வேந்தனே, நல்ல மனம் படைத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா அவர்களுக்கு வைத்தியம் பார்த்து, இந்த மாமன்றத்திலே இந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சராக இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகள்மீதான என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 1–00

தமிழகத்திலுள்ள 43,000 சத்துணவு மையங்களிலும், 53,000–க்கும் மேற்பட்ட அங்கன்வாடி மையங்களிலும், பல இலட்சம் குழந்தைகள் இன்றைக்கும் சத்துணவு சாப்பிட்டு பயன் பெற்றுவருகிறார்கள். தமிழகத்தில் செயல்பட்டுவரும் இத்திட்டம் அகில இந்திய அளவில் மற்ற மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக இருக்கின்றது என்று கூறும்போது நாம் பெருமிதப்படுகின்றோம். இலவச மதிய உணவுத் திட்டத்தினை 1955 ஆம் ஆண்டு முதல் முறையாகத் தொடங்கி வைத்த கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் கருணை உள்ளத்தினையும் நினைத்து மகிழ்ச்சியடைகின்றோம். அதற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் பல இலட்சக்கணக்கான குழந்தைகளுக்குப் பசி போக்கும் மையமாகவும் செயல்படுத்தி சாதனை புரிந்தார்கள். அதன்பிறகு டாக்டர் கலைஞர் அய்யா அவர்கள் சத்துணவில் முட்டை வழங்கி பெருமிதப்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தில் கலவை சாதத்தை சேர்த்து, பலவிதமான சாதங்களைப் படைத்து சாதனைப் படைத்தார்கள். தமிழ்நாடு இருக்கும்வரை இந்த வரலாற்று நாயகர்களின் பெயர்கள் நினைவைவிட்டு மறையாது. சிறப்பான இத்திட்டத்தைச் செம்மையாகவும், செழுமையாகவும் செயல்படுத்துவதன் மூலமாக மகத்தான அந்தத் தலைவர்களுக்கு நம்முடைய நன்றிக் கடனை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில் மளிகைச் செலவுகள், காய்கறிச் செலவுகள் மற்றும் எரிபொருள் செலவுகள் என எல்லாவற்றையும் சேர்த்து ஒருவருக்கு சுமார் ரூ.1.30 தான் செலவிடப்படுவதாகத் தெரிகின்றது. இன்றையதினம் அனைத்துப் பொருள்களின் விலைவாசியும் உயர்ந்துள்ளது. எரிவாயு சிலிண்டர்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ள போதிலும் அதை ஈடு செய்யும் வகையில் கூடுதலாகத் தொகை எதுவும் வழங்கப் பெறாததால், அந்த மையங்களின் பயனாளிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். மேலும், அனைத்து மையங்களிலும் எரிவாயு இணைப்பு வசதி செய்யப்படாததால், விறகு தேடி பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையும் உள்ளது. எனவே நபர் ஒருவருக்கு தற்போது வழங்கப்படும் தொகையை, இன்றைய விலைவாசி உயர்வைக் கணக்கில்கொண்டு, ரூ.3/- ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கணிசமான எண்ணிக்கையில் உள்ள காலிப் பணியிடங்களையும் விரைவில் நிரப்ப வேண்டும். சத்துணவு மையங்கள், அங்கன்வாடி மையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களை நியமனம் செய்யும்போது அரசியல் தலையீடு இன்றி, அரசியல் குறுக்கீடின்றி, நேர்மையாகவும், சுதந்திரமாகவும், சட்ட விதிகளின்படியும் நியமனம் செய்திட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்றும் அப்படி நடைபெற்றால் இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி பெயர் எடுப்பதற்கான வாய்ப்பைத் தவற விட்டுவிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் மையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது மிகவும் குறைவான தொகையே ஓய்வூதியமாக வழங்கப்படுகின்றது என்று பணியாளர்கள் தெரிவிக்கின்றார்கள். குறைந்தபட்ச மாத ஓய்வூதியமாக ரூ.3,500/–ஐ நிர்ணயிக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை பணிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் gas cylinder இல்லாது எந்த மையமும் இருக்கக் கூடாது என்பதற்காக சென்ற நிதியாண்டில் 109 மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது மாநில மகளிர் ஆணையம் செயல்படாமல் முடங்கிய நிலையில் உள்ளது. பெண்களின் பிரச்சினைகளில் தலையிட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பினை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த அமைப்பிற்குத் தகுதியான தலைவரையும், உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டும். மேலும், போதிய பணியிடங்களையும் தோற்றுவித்து சட்டபூர்வமான முறையில் செயல்படுவதற்குத் தேவையான அதிகாரத்தையும் மாநில மகளிர் ஆணையத்திற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண் உரிமையில் தேர்ந்தவராகவும், மகளிர் நலச் சட்டங்களில் நல்ல அனுபவம் உள்ளவராகவும், பெண்வாதியாகவும் உள்ளவர்களையே இந்த ஆணையத்திற்குத் தலைவராகவும், உறுப்பினர்களாகவும் நியமிப்பதே இந்த

ஆணையத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இதில் தகுதி இல்லாதவர்களை வேறு ஏதாவது காரணத்திற்காக நியமித்தால், அது எந்த வகையிலும் பெண்கள் நலனுக்கு உதவிகரமாக இருக்காது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

கருணை அடிப்படையில் அரசுத் துறைகளில் பணி நியமனங்கள் செய்யும்போது பெண்களுக்கு நிலவும் பாரபட்சத்தை மாற்றி அமைக்க வேண்டும். அரசுத் துறையில் பணிபுரியும் ஆண்கள் இறக்க நேரிட்டால், வாரிசு அடிப்படையில் இறந்தவரின் மனைவிக்கு அந்தப் பணி வழங்கப்படுகிறது. ஆனால், பணியேற்ற அந்தப் பெண் மறுமணம் புரிந்தால், பெற்ற பணி உரிமை பறிக்கப்படுகின்றது. விதவை மறுமணத்தை அனுமதிக்கும் அந்தச் சட்டம் அவர்களின் வேலை உரிமையை ஏன் மறுக்க வேண்டும்? எனவே அந்த நடைமுறையை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு கவனம் செலுத்த வேண்டிய மிக முக்கியமான பிரச்சினை மாற்றுத் திறனாளிகளின் நலன். மாற்றுத் திறனாளிகள் குடும்பம் மற்றும் சமூகத்தால் புறக்கணிக்கப்படுவதால் எண்ணற்ற பல அவமதிப்புகளுக்கு ஆளாகி வலி மிகுந்த வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டு கண்ணீரோடு இருக்கின்றார்கள். அவர்களும் பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியைத் தொடர வேண்டும்; அவர்கள் குடும்பத்தோடு சேர்ந்து வாழ வேண்டும்; அவர்கள் அரசுப் பணியில் வேலைவாய்ப்புகளைப் பெற வேண்டும். அதற்கான சமூகச் சூழலை அரசு உருவாக்க வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு, இருப்பிடம், மருத்துவ வசதிகள் பெறுகின்ற உரிமைகளையும் சரியாக வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாம் பாலினத்தவர்களை சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மிகவும் பின்தங்கியவர்களாகக் கருதி இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியுள்ளது. 3 ஆண்டுகள் கடந்து விட்டன. இன்னும் அவர்கள் வாழ்வில் வெளிச்சம் ஏற்படவில்லை. அவர்கள் குடும்பங்களே அவர்களைப் புறக்கணித்துக் கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1–05

பிச்சை எடுக்கும் திருநங்கைகள் பிச்சைதான் எடுக்கின்றனர். பாலியல் தொழில் செய்பவர்கள் பாலியல் தொழில்தான்





செய்துகொண்டிருக்கின்றனர். பெரும் போராட்டத்திற்கு பிறகு, சமீபத்தில், திருநங்கை பிரித்திகா அவர்கள், காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரியும் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதை நினைத்து பெருமிதப்படுகிறோம். எனவே, மூன்றாம் பாலினத்தவர் நலனில் தமிழகம் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாற்று பாலினத்தவர் நலனில் பின்தங்கியிருந்த கேரள மாநிலம், தமிழகத்தைக் காட்டிலும் இன்று வேகமாக முன்னேறுகிறது. மேற்கு வங்காளம், கர்நாடகம், சட்டீஸ்கர், ஒடிஸா போன்ற மாநிலங்கள் அவர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிய முடிகிறது. ஆனால், நமது மாநிலம் இன்றும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இன்றைக்கு, முடங்கிய நிலையில் உள்ள திருநங்கைகள் நல வாரியத்தை மாற்று பாலினத்தவர் நல வாரியமாக உயிர் பெறச் செய்ய வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உரிய இட ஒதுக்கீட்டை வழங்கி, அவர்கள் குடும்பங்களோடு மகிழ்ச்சியாய் இணைந்து வாழ, தமிழக அரசின் சமூக நலத் துறை சூழ்நிலையை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்றும், இதற்காக சமூக ஆர்வலர்களும் பங்களிப்புச் செய்யும் சூழ்நிலையும் வரவேண்டும் என்றும், நல வாரியத்தின் மூலமாக அவர்களுக்குச் சட்டரீதியாக உதவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்கு எதிராக பாகுபாடுகள் இருந்தன. இன்றையதினம் பெண் குழந்தைகள் கல்வியில் சாதனை படைத்து வருகிறார்கள் என்பதை 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி முடிவுகள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. அகில இந்திய போட்டித் தேர்வுகளிலும் முதல் இடத்தைப் பிடித்து வெற்றிக்கொடி நாட்டினாலும்கூட, சமூகத்தில் நாம் பார்க்கும்போது, பெண் சிசுக் கொலை, வரதட்சணைக் கொடுமைகள், சிறு வயதில் திருமணம், பாலியல் வன்கொடுமைகள் போன்றவை நம்மை வெட்கப்பட வைக்கின்றன. இன்னும் நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறேன். பெண்களுக்கு அதிகாரங்கள் அளிக்கிறோம் என்கின்ற வார்த்தைகள் அடிக்கடி உச்சரிக்கப்படுவதையே கேட்க முடிகிறது. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் மற்றும் அநீதிகள் தொடர்ந்து நீட்டித்துக்கொண்டுதான் இருக்கின்றன. இவற்றைச் சரி செய்யும் முறையில் நம் சமூக நலத் துறை செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி.எஸ். காளிமுத்து] [2017 ஜூன் 24

நடப்பு நிதியாண்டில், சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு முறையே, ரூ.1,650 கோடி மற்றும் ரூ.1,779 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

2017–2018 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், சமூக நலத் துறைக்கு 4,781 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், இவ்வளவு நிதி ஆதாரத்தை ஒரு சில மாநிலங்களால்தான் வழங்க முடியும். அவ்வகையில், வளர்ந்த மாநிலங்களில் ஒன்றாக நாம் இருக்கிறோம். கண்காணிப்பதிலும், அரசு இயந்திரங்களை முறையாகக் கையாளுவதிலும் நாம் உறுதியாக இருந்தால், நம்முடைய குழந்தைகளும், தாய்மார்களும் எவ்வளவு பயனடைவார்கள் என்பதையெல்லாம் இந்த அவை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு, உலகத் தரத்தில் நம் தமிழகக் குழந்தைகளின் வளர்ச்சியும், பெண்களின் நலனும் அமைந்திருக்குமெனில், நாம் இந்திய சராசரியில் மட்டும் நல்ல செயல்பாட்டினைத் தொடர்ந்து வருகிறோம்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நடப்பு நிதியாண்டில் சென்ற நிதியாண்டைக்காட்டிலும் 17.60 சதவிகிதம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது நல்ல தொடக்கமாகவே இருக்கிறது. இவ்வாண்டில் மாற்றுத் திறனாளிகள் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள 466 கோடி ரூபாய் நிதி, மிகுந்த கவனத்தோடு கையாளப்பட வேண்டும். சமீபக் காலமாக மாற்றுத் திறனாளிகள் தங்களின் வேலைவாய்ப்பு, சலுகைகள், கூடுதல் உரிமைகள் போன்றவற்றிற்காக ஆங்காங்கே போராடி வருகிறார்கள். பெரும்பாலானோருக்கு வேலைவாய்ப்பு இன்றளவிலும் தனியார் துறைகளில்தான் உள்ளது. எனவே, அரசாங்கம் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்றவகையில், தொழில் பயிற்சிகளையும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் அதிக கவனத்தோடு அளிக்க வேண்டும். 2017–2018 ஆம் நிதியாண்டில், 10,000 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், அத்தகைய பயிற்சிகள் வழங்கிட 5.00 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதைக் கூடுதலாக அளிக்க பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 11.79 இலட்சம் மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது இயங்கிவரும் 435 மாற்றுத் திறனாளிகளுக்கான



2017 ஜூன் 24] [திரு. வி.எஸ். காளிமுத்து]

சிறப்புப் பள்ளிகள், 42 தொழிற்பயிற்சி நிலையங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சிறப்பான முறையில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், தர மதிப்பீடுகளைக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இத்தகைய பயிற்சி மையங்களைப் புதியதாக தொடங்கும் முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்றும் நம்புகிறேன்.

பிற்பகல் 1–10

மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உபகரணங்கள் குறித்து அரசு திட்டங்கள் அறிவித்துள்ளது. அவற்றிற்கான மானியங்கள் குறித்தும் அரசு சிந்தித்திட வேண்டும். கால்கள் இல்லாதோருக்கு பிரத்தியேகமாக செயற்கைக் கால்கள் உள்ளன. இவற்றை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், முதியோர்களுக்கு அரசு இலவசமாக வழங்கி வருகின்றது. இவற்றை தற்போதுள்ள உயர் தரத்தில் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்குவதற்காக தற்போது ஸ்பிரிங் கால்கள் latest ஆக வந்துள்ளன, அவற்றை தயவுசெய்து வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பெரும்பான்மையான மாற்றுத் திறனாளிகளுக்கு சுய தொழில் நல்ல தீர்வாக அமைகின்றது. எனவே, அவர்களுக்குத் தொழில் தொடங்க கடன் உதவியினை இந்த அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில்கூட இவர்கள் கடன் உதவி பெறுவதில் பல்வேறு தடைகள் உள்ளன. பெரும்பாலும் இவர்களுக்கு கடனுதவி காலந்தாழ்த்தப்பட்டு மறுக்கப்பட்டு வருகின்றது. எனவே, இதுகுறித்து தமிழக அரசு வங்கிகளுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த ஆண்டு ஸ்கூட்டிகளை அதிக அளவில் அரசு வழங்கியுள்ளது. இதனை அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகள் பதிவுத் திருமணம் செய்தபின் பதிவுச் சான்றிதழ்கள் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுத் திட்டத்தில் மாணவர்களுக்கு வாரம் ஒரு முறை உலர்ந்த பழங்களைத் தருமாறு தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதியில், சமூக நலத் துறையின் சார்பில் மகளிர் தங்கும் விடுதி அமைத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முடியுங்கள்.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** தமிழக பெண்கள், குறிப்பாக நலிவடைந்த உழைக்கும் பெண்களின் நலன்களையும், தேவைகளையும், புரிந்து அணுகவும், திட்டக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கவும், அதற்குத் தேவையான அளவு திட்ட நிதியினை பட்ஜெட்டில் ஒதுக்கவும், பாலின நிகர்நிலை பட்ஜெட் என்பது காலத்தின் கட்டாயம். இதைப்பற்றி விவாதம் பேரவையில் கேள்வியாக எழுப்பப்பட்டு, முதன்முதலாக பெண்களுக்கான பட்ஜெட் விவாதப் பொருளாக வேண்டும். இந்திய துணைக் கண்டத்தின் பல்வேறு மாநிலங்களில் பெண்களின் நிலை மற்றும் மேம்பாடு பற்றிய அறிக்கை, பாலின அறிக்கை வெளிவந்துவிட்டது. இதில் தமிழகம் பின்தங்கியிருப்பது வருத்தத்திற்குரியது. நலிவடைந்த பிரிவினர் குறிப்பாக பெண்கள் நிலை மற்றும் பெண்கள் தலைமையேற்று நடத்தும் இடங்கள், விதவை பெண்கள், மணமாகாத தனித்து வாழும் குடும்பப் பெண்கள் இவர்களின் பிரச்சினைகளும், தேவைகளும் கவனத்திற்குரியது. குழந்தைகள் பாரத்தை முதுகில் சுமக்கின்ற கூடுதல் சுமைகளையும், எண்ணற்ற சவால்களையும் சாமானியப் பெண்கள் எதிர்கொள்கிறார்கள். அவர்கள் நிலையைக் கருத்தில்கொண்டு, அதற்கேற்ப திட்டக் கொள்கைகளையும், கருத்துகளையும், திட்ட வழிமுறைகளையும், தனித்துவமான மாற்றுத் திட்டங்களையும் உருவாக்க நடைமுறையில் சாத்தியம் என்பதால் பாலின பட்ஜெட் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள் திரு. காளிமுத்து.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** என்னுடைய தொகுதி பற்றிய கோரிக்கைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் எழுதிக்கொடுங்கள் நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தாராபுரம் தொகுதியில் குடிதண்ணீர்ப்



பிரச்சினை மிகவும் அதிகமாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு அமராவதி நதியிலிருந்து தண்ணீர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கொங்கு மண்டலத்தில் எங்களுக்கு 5 அமைச்சர்கள் இருக்கின்றார்கள். கிழக்கே பார்த்தால் வனத் துறை அமைச்சர் அவர்களும், மேற்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், வடக்கே கல்வித் துறை அமைச்சர் அவர்களும், தெற்கே வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காளிமுத்து, நீங்கள் இருக்கும் மாவட்டத்தில்தான் நானும் இருக்கின்றேன். அதை மறந்துவிட்டீர்களே! (சிரிப்பு)

**திரு. வி.எஸ். காளிமுத்து:** வடக்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் இருக்கிறார்கள். எனவே, எனது தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றித்தர முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடிமராமத்துப் பணிகள் மூலமாக அமராவதி அணை, உப்பாறு அணை, நல்லதங்காள் ஓடைகளை தூர் வாருவதற்காக நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாவது திட்டம் நமது தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இத்திட்டம் சரியில்லாததுபோல் தோன்றுகின்றது. முதலில் போட்ட திட்டத்திற்கே தண்ணீர் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள்.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** இரண்டாவதாகப் போடப்பட்ட திட்டமும் சரியில்லாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதிக்கு திருமூர்த்தி அணை அல்லது அமராவதி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக மடத்துக்குளம், தாராபுரம், காங்கேயம் பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பொது மருத்துவமனை தொடர்பான இரண்டு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஓராண்டிற்கு முன்பே சொல்லியிருந்தேன்.

அவை இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. ஸ்டீமர் மற்றும் சாக்கடை வசதியினை உடனடியாகச் செய்து தருமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

தாராபுரத்திற்கு ஒரு மகளிர் கலைக் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்பகுதியில் 60 ஏக்கர் நிலம் இருக்கின்றது. கூட்டுறவு மில் செயல்படாமல் இருக்கின்றது. அதற்கான கட்டடமும் இருக்கின்றது. 60 ஏக்கர் நிலத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு பெற்று அரசு மகளிர் கல்லூரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளை அடுத்த மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிக் கொள்கிறேன் என்பதை தெரிவித்துக் கொண்டு நன்றியுடன் முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி, உட்காருங்கள். திருமதி கீதா ஜீவன் அவர்கள் உரையை நிறைவு செய்கையிலே ** குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

## 7. விதி 110–ன்கீழ் அறிக்கை

### மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கி, நாசா–வின் முதல் பரிசு பெற்ற கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி, திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழுவினருக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியை சேர்ந்த 18 வயது இளைஞரான திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான ஆறு மாணவர்கள் கொண்ட குழு உருவாக்கிய 64 கிராம் எடை கொண்ட மிகச் சிறிய செயற்கைக்கோள் சமீபத்தில், அமெரிக்காவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாசா" நடத்திய போட்டியில் கலந்து கொண்டு, உலகத்தின் 57 நாடுகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 80,000 மாதிரிகளில் முதல் பரிசு பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த செயற்கைக்கோள் கடந்த 22–6–2017 அன்று விண்ணில் "கலாம் சாட்" என்ற பெயரில் "நாசா" ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. முப்பரிமாண அச்சுத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள், வானிலை, வான்வெளியில் உள்ள கதிர்வீச்சு, வெப்பம் ஆகியவற்றை ஆராயும் திறன் கொண்டது.

சென்னையிலிருந்து செயல்படும் "ஸ்பேஸ்கிட்ஸ்" என்ற அமைப்பு இந்த மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உதவியது. இந்த சாதனையினை நிகழ்த்திய மாணவர்கள் ரிஃபாத் சாருக், யக்னா சாய், வினய் பரத்வாஜ், தனிஷ்க் திவேதி, கோபிநாத் மற்றும் முகம்மது அப்துல் காசிப் ஆகியோருக்கும், குறிப்பாக அந்தக் குழுவின் தலைமை விஞ்ஞானியாக செயல்பட்ட திரு. ரிஃபாத் சாருக்கிற்கும் இம்மாமன்றத்தின் சார்பிலும், தமிழ்நாடு அரசின் சார்பிலும், எனது தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாதனையை படைத்து, இந்தியாவிற்கு, குறிப்பாக தமிழகத்திற்கு பெருமை தேடித் தந்த மாணவர் திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான மாணவர் குழுவிற்கு, மேலும் இதுபோன்ற பல சாதனைகளைச் செய்ய ஊக்கப்படுத்தும்விதமாக தமிழக அரசின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கிய கரூர் மாவட்டம், திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழுவினருக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்கியது– மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அதில் என்ன இருக்கிறது? சொல்லுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** கல்லூரியில் படிக்கின்ற அந்த மாணவர்களும் இஸ்ரோ அதிகாரிகளுக்கு உதவியாக இருந்து, விண்ணில் ஏவப்பட்ட விண்கலத்தில் அவர்களும் பங்கேற்றிருக்கிறார்கள் என்பதை இந்த சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.

**திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டியைச் சேர்ந்த முகம்மது சாருக் ரிஃபாத் ராஜ், உலகிலேயே மிகச் சிறிய செயற்கைக்கோளை உருவாக்கி, "கலாம் சாட்" என பெயரிட்டு அமெக்காவின் "நாசா" விண்வெளி அமைப்பு ராக்கெட்மூலம் இந்த செயற்கைக்கோள் பறக்கவிடப்பட்டு, தமிழகத்திற்கும், அரவக்குறிச்சி தொகுதிக்கும், பள்ளப்பட்டிக்கும் பெருமை சேர்த்துள்ள அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசிற்கும், பள்ளப்பட்டி மக்களின் சார்பாகவும், அரவக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும், முகம்மது சாருக் ரிஃபாத் ராஜ் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது பணி சிறக்க, தமிழக அரசின் சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பிலும் வாழ்த்துகளை கூறியது அவருடைய பணிக்கு, அவருடைய செயல்பாட்டிற்கு இன்னும் மிகுந்த வேகத்தைக் கொடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொண்டு, அவருடைய தேவைகளை அவரிடத்திலே







கேட்டறிந்து இன்னும் முழுமையாக அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் வைத்து நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். என்ன? சொல்லுங்கள், சரி சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கு நன்றி சொல்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1–20*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியைச் சார்ந்த, அந்த இளம் விஞ்ஞானிகள் சம்பந்தமாக இதே அவையில் நேற்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். இன்று அந்த இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கின்றவகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அந்த விஞ்ஞானிகளுக்கு பத்து இலட்சம் ரூபாய் நிதியினை வழங்கி, கௌரவித்திருக்கிறார்கள். அந்த இளம் விஞ்ஞானிகளுடைய சாதனைகள் தொடர வேண்டுமென்று அவர்களை வாழ்த்தி, அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கிய தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது மாவட்டத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை
(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை
} தொடர்ச்சி

– – – –

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

**திருமதி ப. சத்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர் தமிழ் நாட்டிற்கு, வளர்ந்த மாநிலம் எனும் புரட்சி சரித்திரத்தை புகழ் மாலையாய் சூட்டிய பொன்மனத் தலைவி, வங்கத்து கடலோரம் துயில்கொள்ளும் எங்கள் வழித் துணை தெய்வம், வரலாறும் வாழ்த்திசைக்கும் வள்ளலின் வாரிசு, தமக்கென வாழா துறவியாக தமிழகம் தழைக்க, *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழினம் செழிக்க, தன் ஆயுளையே அர்ப்பணித்து, அன்னைத் தமிழ் பூமி காத்த தன்னிகரில்லாத் தலைவி, *(மேசையைத் தட்டும் ஒலி)* அகண்ட பாரதத்தின் அதிக நாள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த முதல் பெண் முதல்வர் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ற முத்திரையைப் பதித்த பெண் குலத்தின் பொன்விளக்கு, என் போன்ற சாதாரண உறுப்பினரையெல்லாம் சட்டமன்றத்தில் இடம் பெறச் செய்த சரித்திரத் தலைவி, எங்கள் குடும்பம் அன்றாடம் போற்றி வணங்கும் அன்பு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஏழரைக் கோடி தமிழினத்தை இமையாய் காத்து விலையில்லா அரிசியால் வறுமைக்கு விடை தந்து, வளர் தமிழ்நாட்டிற்குக் கல்வி தந்து, தாலிக்குத் தங்கம் தந்து, தமிழுக்கு தலைச்சிறந்த அங்கம் தந்து, பசுமை வீடு கட்டித் தந்து, பார்வியக்கும் திட்டங்களால் பாரத நாடே போற்றிய நற்றமிழ் தலைவியின் நல்லாட்சியில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளில் பேசுகின்ற பெருவாய்ப்பினை அளித்திட்ட இதய தெய்வம் அம்மா அவர்களின் எண்ணங்களை இம்மியளவும் பிசகாமல் இனிதே நிறைவேற்றிடும் பணியில் தன்னை அர்ப்பணித்துள்ள தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கி, மகிழ்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* சரித்திர வானில், சாதனைப் படைத்த சத்தியத் தாய் அம்மா அவர்கள் அளித்த வரலாறும் வாழ்த்து கூறிய வரியில்லா நிதிநிலை அறிக்கை போலவே வீரத்திருமகளின் பாத தடத்தையே வேதமென கற்ற விசுவாசம் குன்றாத நம் தமிழ்நாடு முதல்வர் அவர்களும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை, மார்ச் திங்கள் 16 ஆம் நாள் மக்கள் நலன் கருதும் மகத்தான நிதிநிலை அறிக்கை தந்து, ஆட்சி பொறுப்பேற்ற 100 நாட்களில் அனைத்து துறைகளிலும் அமல்படுத்திய திட்டங்கள் ஏராளம்.

குறிப்பாக, சமூக நலத் துறையில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு 43.98 கோடி ரூபாய். கடலூர்,



தருமபுரி, நாமக்கல், அரியலூர் ஆகிய மாவட்டங்களில் சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களுக்கு அனுமதி. 4.30 கோடி ரூபாயில் திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் பெரம்பலூரில் மகளிருக்கான புதிய தங்கும் விடுதிகள். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் 3.74 கோடி ரூபாயில் மாநில ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம். 1.16 கோடி ரூபாயில் புதுக்கோட்டை மாவட்டத்தில் செவித் திறன் குறைபாடு அரசு சிறப்பு பள்ளி தொழுநோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/–ஆக உயர்வு. இப்படி தருமத் தாய் அம்மா அவர்களின் திட்டங்களை எல்லாம் தேக்கமின்றி செயலாக்கும் தாய் வகித்த தலைமையிடத்திற்குத் தலைமையேற்ற மாண்புமிகு தமிழக முதல்வருக்கு எனது மனமார்ந்த நன்றியினை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–25*

அண்ணாவின் பெயரிலான இயக்கத்தை உலகம் அன்னாந்து பார்க்கும்வண்ணம் கண்ணிமையாய் காத்து, வரியில்லா நிதிநிலை, பொன்மனச் செல்வி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்நிதியாண்டில் 100 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி என்ற இலக்கு நிர்ணயித்துள்ளதும், கூடுதலாக 35 ஆயிரம் ஏக்கர் கரும்பு சாகுபடியை நுண்ணீர் பாசன முறையின்கீழ் கொண்டுவரவும், நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையை மேலும் 40 ஆயிரம் ஏக்கரில் விரிவுபடுத்த இலக்கு நிர்ணயித்துள்ளதும், பயிர்க் காப்பீட்டுக் கட்டண மானியத்திற்காக 522.71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதும், உழுதுண்டு வாழும் விவசாய பெருமக்களின் வாழ்வு மேம்படும் என்பதற்குச் சான்றாய் விளங்குகிறது.

ஆறு முறை முதல்வர், ஆற்றல்மிகு பொதுச் செயலாளர், முக்கடல் சூழ்ந்த பாரதத்தின் மூன்றாம் பெரும் இயக்கம் என அடுக்கடுக்காய் புரட்சிகளை வார்த்தெடுத்த சரித்திர செப்பேடு, சாதனைத் தலைவி, சரித்திரத் தாயின் நல்லாட்சியில் 2017–2018 ஆம் ஆண்டில் 150 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும் எனவும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 352 கோடி ரூபாயை

[திருமதி ப. சத்யா] [2017 ஜூன் 24

ஒதுக்கீடு செய்தும் மடிக்கணினிகள் வழங்க 758 கோடி ரூபாய் அளித்துள்ளதும், அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காக 2,656 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் வரவேற்கத்தக்கது. ஒட்டுமொத்தமாக 2017–2018 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் பள்ளிக் கல்விக்காக மட்டும் 26,932 கோடி ரூபாயை வாரி வழங்கி உள்ளதன்மூலம் கற்பக விருட்சம், காவியத் தலைவி அம்மா அவர்களின் கல்வித் துறை வளர்ச்சிக்கான எண்ணங்கள் ஈடேறுவதை அறிய முடிகிறது.

“எனக்காக ஏதுமில்லை, எல்லாமும் மக்களுக்கே” என தனக்கென வாழாத தவ வாழ்க்கை மேற்கொண்ட தங்கத் தலைவியின் தலைசிறந்த நல்லாட்சியில், சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்காக 3,790 கோடி ரூபாயும், அன்னை தெரசாவே நேரில் வந்து பாராட்டிய தொட்டில் குழந்தைத் திட்டத்திற்காக 140 கோடி ரூபாயையும், திருமண உதவித் தொகை திட்டங்களுக்காக 723 கோடி ரூபாயையும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்குவதற்கு 200 கோடி ரூபாயையும், சத்துணவுத் திட்டத்திற்கு ரூ.1,687 கோடி ரூபாயையும், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1,779 கோடி ரூபாயையும் ஒதுக்கி, இந்நிதியாண்டில் சமூக நலத் துறைக்காக மட்டும் 4,781 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. ஏழையெளிய மக்கள் வாழ்வு உயர்வு பெற எந்நாளும் அம்மாவின் அரசு பாடுபடும் என்பதற்கு ஏற்புடையதாய் விளங்குகிறது.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத்தரம் மற்றவர்களுக்கு இணையாக இருக்க வேண்டுமென்ற உயரிய நோக்கில், அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்திய ஸ்கூட்டர்களின் எண்ணிக்கையை ஆண்டு ஒன்றுக்கு 1,000–லிருந்து 2,000–ஆக உயர்த்தி உள்ளதும், பார்வைத்திறன் குறைபாடு உள்ள 10,000 நபர்களுக்கு உயர் தொழில்நுட்ப ஊன்றுகோல்கள் வழங்கிட அறிவித்துள்ளதும், 10,000 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும்வகையில் 5 கோடி ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கிட உள்ளதும், இதுபோன்று இந்நிதியாண்டில் இத்துறைக்கு 466 கோடி ரூபாய் அளித்துள்ளமை, சமூகத்தில் அனைத்து மக்களும் சமநிலையோடு வாழ்ந்திட வேண்டுமென்ற சரித்திரத் தலைவியின் சாதனைக்கு மேலும் புகழ் சேர்ப்பதாய் உள்ளது.



2017 ஜூன் 24] [திருமதி ப. சத்யா]

பிற்பகல் 1–30

‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ எனும் மாபெரும் இலட்சியத்தை முன்னிறுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர் முதல்வராய், ஆறாவது முறையாய் பொறுப்பேற்று, சரித்திர நிகழ்வை சாதித்துக் காட்டிய சமூக நீதி காத்த வீராங்கனை, என்னை ஆளாக்கி அழகு பார்த்த ஆராதனைக்குரிய அம்மா அவர்கள், 24–8–2016 அன்று எனது கன்னிப் பேச்சில் எமது தொகுதி நலன் சார்ந்து எடுத்து வைத்த கோரிக்கைகளில், பண்ருட்டி நகரில் முந்திரி தொழில் மையத்தையும், குளிர்பதன சேமிப்புக் கிடங்கையும் ஏற்படுத்திட ஆணையிட்டு, பணி நிறைவுற்று, விரைவில் செயலாக்கத்திற்கு வரவுள்ளது என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்வதுடன், பண்ருட்டி தொகுதி மக்களின் சார்பாக எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தரணி வியக்கும் உச்சங்களை தமதாக்கி, விண்தொட்ட வெற்றிகளைக் குவித்திட்ட விவேக தாயின் மக்கள் நல ஆட்சியில், பண்ருட்டி நகரில் பெண்களுக்கென அரசு மேல்நிலைப் பள்ளியையும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கென விடுதி வசதிகளுடன்கூடிய கலை அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியினை ஏற்படுத்தித் தந்து, தொகுதி வாழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்றித் தந்திடவும் வேண்டுகிறேன்.

கலப்பையை நம்பி உழைப்போரின் கவலையை போக்கிட, காவேரி உரிமையை மீட்டு கழனிக்குச் சேர்த்திட்ட கருணைத் தாய் அம்மா அவர்களின் அற்புத ஆட்சியில், தொகுதி வாழ் விவசாயிகளின் நீர் ஆதாரமான மலட்டாற்றை தூர்வாரி செப்பனிடவும், தென்பெண்ணை ஆற்றில் எனதிரிமங்கலம் கிராமத்தின் அருகில் தடுப்பணை ஒன்றினை அமைத்திடவும், அவியனூர், பைத்தாம்பாடி, மேல்குமாரமங்கலம் ஏரிகளையும், நீர்வரத்து வாய்க்கால்களையும் தூர்வாரி செப்பனிட்டு, விவசாயிகளின் வாழ்வில் விடியலை ஏற்படுத்திடவும் பணிவோடு வேண்டுகிறேன்.

மின்வெட்டைத் தீர்த்து வைத்து, மீத்தேனிடமிருந்து விளைநிலத்தைக் காத்து, கறவை மாடும், வெள்ளாடும் சேர்த்து தந்த கருணைத் தாய் அம்மா அவர்களின் அரசில்,

விவசாயத்தையே முழுமையாக நம்பி வாழும் பண்ருட்டி தொகுதி வாழ் மக்களால், அதிகமாகப் பயிரிடப்படும் கொய்யா மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவைமூலம் பயன்பெறும் வகையில், கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலையையும், மரவள்ளிக் கிழங்கு ஆலை ஒன்றினையும் ஏற்படுத்தித் தந்து, விவசாயிகளின் வாழ்விற்கு வளம் சேர்க்க வேண்டுகிறேன். பூமிக்கு வந்த சாமியாய், மக்களைக் காத்த மகராசி, அம்மா அவர்களின் அற்புத ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) பண்ருட்டி நகரத்திற்கும், தாலுகாவிற்கும் தனித்தனி காவல் நிலையங்கள் அமைத்திடவும், பண்ருட்டி நகர வாழ் மக்களின் நல்வாழ்வு கருதி பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்திடவும், பண்ருட்டி நகரிலிருந்து கடலூர் நகருக்குச் செல்ல பெண்களுக்கென தனி பேருந்து இயக்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஈகைக்கு இலக்கணமாய், ஏழை மக்களின் ஒளிவிளக்காய் வாழ்ந்து, இறைவனிடம் இளைப்பாற சென்றுள்ள எட்டாவது அதிசயம் எங்கள் அம்மாவின் ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) பண்ருட்டி நகரிலுள்ள அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தி, நடமாடும் நுண்கதிர் கருவி வழங்கிடவும், உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுபவர்களுக்கு அளித்திட 30 கட்டில்கள் மற்றும் மெத்தைகள், 10 குழந்தை கட்டில்கள் மற்றும் மெத்தைகள் வழங்கிடவும், தாய்–சேய் நல மேம்பாட்டு சிகிச்சைக்காக 40 படுக்கைகள்கொண்ட புதிய கட்டடம் ஒன்றினைக் கட்டித்தரவும், பிணவறை பகுதிக்குக் குளிர்சாதனப் பெட்டி வழங்கிடவும், வீரப்பெருமாநல்லூர், ஒறையூர் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையுறும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லிக்குப்பம் நகரிலுள்ள ஈ.ஐ.டி. பாரி கரும்பு ஆலையிலிருந்து வெளியேறும் கரித் துகள்கள், கழிவுநீர் போன்றவற்றால் நகரவாழ் மக்களுக்கும், அவ்வழியே பயணிப்பவர்களுக்கும் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளைக் களைந்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கென பூங்கா அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1–35

அரசாங்கத்தால் வழங்கப்படும் விலையில்லா ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் திருநங்கைகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வளர் தமிழ் பூமி காக்க வந்துதித்த தெய்வமாய், ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமாய் வாழ்ந்து, மண்ணுலகப் புண்ணியமென மாநில மக்களெல்லாம் வணங்கிப் போற்றும் வாகைத்தாய் அம்மா அவர்களின் 'எனக்குப் பின்னாலும் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் இந்த இயக்கம் மக்களுக்காகவே இயங்கும்' என்ற வேத வரிகளை (மேசையைத் தட்டும் ஒலி) முன்வைத்து, 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற வழியில் நிலையான ஆட்சி, நிரந்தர வளர்ச்சியை நாட்டிற்கு அளிப்போம். நம்மை எல்லாம் ஆளாக்கிய அன்பு தெய்வம் அம்மா அவர்களின் கனவை நனவாக்குவோம் என பணிவோடு தெரிவித்து, இப்பேரவையில் பேசுவதற்கு பெரும் வாய்ப்பினை அளித்திட்ட 'தாய் வழியே தன் வழி' எனப் போற்றி, தமிழக மக்களின் நல்வாழ்விற்கு நலன் சேர்த்திட வேண்டுகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினைக் காணிக்கையாக்கி வணங்கி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

***திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனம் உயர்வதற்காகவும், தமிழர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்பதற்காகவும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராகப் பணியாற்றி, 13 முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) 60 ஆண்டுகள் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய, தரணி போற்றும் தமிழ்த் தாயின் தலைமகன் தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் பேரவையில் வைர விழா கண்ட தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். எங்கள் வைர விழா நாயகர் தலைவர் கலைஞர் அவர்களால் 'உழைப்பின் மறு பெயர் தளபதி' என்று பாராட்டப்பெற்ற எங்களின் செயல் தலைவர், இளைஞர்களின் எழுச்சி நாயகன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளரான எனக்கு 1,12,675 வாக்குகள் அளித்து, என்னை 26,292 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பளித்த (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தளபதியார் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பு அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் மற்றும் செங்கல்பட்டு தொகுதியில் உள்ள தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி நிருவாகிகளுக்கும், செங்கல்பட்டு தொகுதியின் வாக்காளர் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, சட்டமன்றத்தில் என் கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் 2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துகளை இந்த மாபெரும் மாமன்றத்தில் கூறுவதற்கு வாய்ப்பளித்த தளபதி அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

செங்கல்பட்டு தொகுதி மக்களின் சார்பாக, செங்கல்பட்டு நகராட்சியில், பாதாளச் சாக்கடை அமைக்க வேண்டுமென்று, நான் 21–6–2016 அன்று வினா எண் 1255–ல் வைத்த கோரிக்கையை ஏற்று, நகராட்சியில் உள்ள 33 வார்டுகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை 124 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பணியை விரைந்து செயல்படுத்தி மக்கள் பயன்பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத் துறை என்பது ஏழையெளிய பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், ஆதரவற்றோர், திருநங்கைகள் ஆகியோரின் வாழ்வாதாரத்திற்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிவரும் துறையாகும். 1975 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் கணவனை இழந்த கைம்பெண் மறுமணம் செய்துகொள்வதற்காக அரசு நிதியுதவி வழங்குவதற்காக டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டம் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம். கிராமப்புறங்களிலுள்ள பெண்களின்



கல்வியை ஊக்குவிப்பதற்காக படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு அரசின் சார்பில் நிதியுதவி அளிப்பதற்காக 1989 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டமாகும். பிறப்பு அடிப்படையிலான சாதி பாகுபாடு பார்க்காமல் வெவ்வேறு நிலையிலான சாதிகளைச் சேர்ந்தவர்கள் அவற்றைப் புறந்தள்ளி கலப்புத் திருமணம் செய்துகொள்வதை வரவேற்கும்பொருட்டு, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட கலப்புத் திருமண உதவித் திட்டம், 2011 ஆம் ஆண்டு முதல் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

மேலும், 2008–2009 ஆம் ஆண்டில் மூன்றாம் பாலினத்தவர்களை ‘திருநங்கையர்’ எனப் பெயர் சூட்டி திருநங்கைகள் நல வாரியத்தை அமைத்துக் கொடுத்து, திருநங்கைகளுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கியவர் டாக்டர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

ஏழை நோயாளிகளுக்கு மருத்துவக் காப்பீடு, வீடுகளுக்கு இலவச தொலைக்காட்சிப் பெட்டி, மாணவர்களுக்கு இலவச bus pass, ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை, குடும்பத்திலுள்ள ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு சொத்துரிமை வழங்கி, பெண்கள் வாழ்வில் ஏற்றம் பெற செய்தவர் டாக்டர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலுள்ள குடிசைவாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி அவர்களைக் கான்கிரீட் வீடுகளில் வாழச் செய்து, நகர மக்களுக்கு இணையான வாழ்க்கை அளித்தவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள நகரங்களில் மனிதனை மனிதனே இழுக்கும் கைவண்டி ரிக்‌ஷாவை ஒழித்து, அவர்களுக்கு சைக்கிள் ரிக்‌ஷா வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்ந்தவர் டாக்டர் கலைஞர் ஆவார். தமிழ்நாட்டிலுள்ள ஆதரவற்றோர் மற்றும் தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு இல்லம் கட்டித்தந்து தொழுநோயை முற்றிலும் ஒழிக்க பாடுபட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து முறை முதலமைச்சராக இருந்து, இதுபோன்ற

நல்ல திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி, இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்ந்து சாதனைப் படைத்தவர். 2007 ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோர்களை 'மாற்றுத் திறனாளிகள்' என்று பெயரிட்டு, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையை உருவாக்கி மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் தலைவர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நலத் துறையில், 2017–2018 ஆம் நிதியாண்டில் சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்காக, 3,790 கோடி ரூபாயும், அனைத்து திருமண உதவித் திட்டங்களுக்காக 723 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது, தமிழகம் முழுவதும் 43,143 சத்துணவு மையங்களும், 54,439 அங்கன்வாடி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதில், 11,762 அங்கன்வாடி மையங்கள் தி.மு.க. ஆட்சியில் 2006 முதல் 2011 வரை டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டவையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

23–5–2016 முதல் 31–3–2017 வரை காஞ்சிபுரம் முழுவதும் மொத்தம், 9,486 பயனாளிகள் சமூக நலத் துறையில் செயல்படுத்தப்படுகின்ற மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் உட்பட அனைத்துத் திட்டங்களுக்கும் விண்ணப்பித்துள்ளனர். ஆனால், கடந்த மாதம், காஞ்சிபுரம் அண்ணா அரங்கத்தில் சமூக நலத் துறையின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 779 பயனாளிகளுக்கு மட்டுமே உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8,707 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படவில்லை. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதில் செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் வட்டத்தில்மட்டும் 664 பயனாளிகள் உள்ளனர். அதில், 65 பயனாளிகளுக்கு மட்டுமே உதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதியோர் ஓய்வூதியத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம், ஆதரவற்றோர் மற்றும் விதவை உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் முதிர்கன்னிகள் உதவித் தொகை வழங்கும் திட்டம் ஆகியவற்றையும் நல்ல முறையில் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாநகரப் பேருந்துகளில் சென்னையில் வசிக்கும் முதியோர்களுக்கு மட்டுமே இலவச



பயணம் அளிப்பதை செங்கல்பட்டு வரை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களை வண்டலூர் போன்ற பூங்காக்களில் நுழைவுக் கட்டணம் இல்லாமல் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் துறையில் பகுதி நேர ஊழியர்களை முழு நேர ஊழியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது தமிழ்நாடு முழுவதும் சத்துணவு மையங்களிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் நேர்முகத் தேர்வு நடந்து முடிந்துள்ளது. நேர்முகத் தேர்வு முடிந்து மாதக் கணக்குகள் ஆகியும் இன்னும் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

பிற்பகல் 1–45

அங்கன்வாடி மையங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை பணிபுரியும் அங்கன்வாடி அமைப்பாளர்களையும், உதவியாளர்களையும் முழு நேர அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்றும், பதவி உயர்வுக்காக காத்திருக்கும் ஊழியர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்க வேண்டுமென்றும், பள்ளிகளுக்குக் கோடை விடுமுறை அளிப்பதைப்போல் அங்கன்வாடி மையங்களுக்கும் கோடை விடுமுறை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அங்கன்வாடி பணியாளர்களைப் பிற துறைகளில் பணியாற்றுவதற்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்றும், அங்கன்வாடி அமைப்பாளர்களுக்கும் உதவியாளர்களுக்கும் முறையான ஊதியத்தை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பாலை கொள்முதல் செய்து அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், கீரப்பாக்கம் ஊராட்சி, முருகமங்கலம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க 2016–2017 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கி 8 மாதங்கள் ஆகியும், அங்கன்வாடி மையம் அமைக்க மாவட்ட நிருவாகத்தால் இதுவரை நிருவாக அனுமதி வழங்கப்படாததால் அப்பணி தொடங்கப்படவில்லை. எனவே, விரைவில் நிருவாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம். வெளிமாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பெண்கள், செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகரைச் சுற்றியுள்ள தனியார் விடுதிகளில் தங்கி தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, அவர்களுக்கு மறைமலைநகரில் அரசு சார்பில் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் கட்டித் தந்து உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகளிருக்கான 50 சதவிகித இட ஒதுக்கீட்டை தனியார் நிறுவனங்களிலும் செயல்படுத்திட அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மகளிரின் பாதுகாப்பை அரசு உறுதி செய்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பாலூட்டும் தாய்மார்களின் வசதிக்காக பேருந்து நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள தாய்ப்பால் ஊட்டும் மையங்களை சமூக விரோதிகள் பயன்படுத்துவதைத் தடுத்து, அந்த மையங்கள் முழுமையாகச் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு மகளிர் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னையிலுள்ள போக்குவரத்து சிக்னல், பேருந்து நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் திருநங்கைகள் உதவி கேட்டு நிற்பதைத் தடுக்கும்வகையில், அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பை அளித்து சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ வழிவகைச் செய்ய வேண்டுமென்றும், திருநங்கைகள் நலனுக்காக இந்த அரசு அதிகளவில் நிதி உதவி அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதுமுள்ள 11,79,303 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும்வகையில், அவர்கள் அரசு பேருந்தில் பயணம் செய்யும்போது அவர்களுடன் உதவிக்கு செல்பவர்களுக்கு 100 சதவிகித பயணச் சலுகை வழங்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பணியில் மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு அளிப்பதைப்போல தனியார் நிறுவனங்களிலும், தனியார் தொழிற்சாலைகளிலும் இட ஒதுக்கீடு அளிப்பதை அதிகப்படுத்த அரசு உறுதி செய்ய வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தில், ஊனத்தின் அளவு 60 சதவிகிதம் இருந்தாலும், அவர்களை மாவட்டத் தேர்வுக் கமிட்டி தேர்வு செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஸ்கூட்டர்கள் வழங்கும்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யும் நபர்களிலிருந்து மாவட்டத் தேர்வுக் கமிட்டி தேர்வு செய்து ஸ்கூட்டர்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் தற்போது மனவளர்ச்சி குன்றியவர்கள், தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், கடும் ஊனமுற்றவர்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றோர் ஆகியோரை பராமரிக்க வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகையை ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/– ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்கள் இரண்டு வகைகளாகச் செயல்படுகின்றன. ஒன்று பெரிய மையம். அதில் பணியாளர் ஒருவர், உதவியாளர் ஒருவர் பணிபுரிகின்றனர். இரண்டாவது குறு மையம், பணியாளர் ஒருவர் மட்டுமே பணிபுரிகின்றார். இந்த குறு மையத்திலுள்ள பணியாளருக்கு பணிச் சுமை அதிகமுள்ளது. எனவே, அவர்களின் பணிச் சுமையைக் கருத்தில்கொண்டு அவர்களின் ஊதியத்தை உயர்த்தித் தருவதோடு, 25 குழந்தைகளுக்கு மேல் உள்ள குறு மையங்களைத் தரம் உயர்த்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகள் ஜெராக்ஸ் கடை போன்ற கடைகள் நடத்துவதற்கு இந்த அரசு உரிமம் வழங்கி அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கல்பட்டு தொகுதியிலுள்ள காஞ்சிபுரம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திற்குப் பேருந்தில் வந்து செல்லும் மாற்றுத் திறனாளிகளுக்காக இந்த அலுவலகத்தின்முன் பேருந்து நிறுத்தம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

செங்கல்பட்டில் உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் அலுவலகத்தால் 2016 ஜூன் முதல் 2017 மார்ச் வரை மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்ட 530 விண்ணப்பங்களுக்கு, சென்னை மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையம் ஒப்புதல் வழங்காததால் 530 மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை பெறமுடியாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, அரசு

விரைந்து நடவடிக்கை எடுத்து மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகைக் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின் கோரிக்கைகளை நான் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நிறைய கோரிக்கைகள் இருந்தால் கொடுத்து விடுங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன்.

**திருமதி ம. வரலட்சுமி:** இல்லை, இரண்டு பக்கங்களை மட்டும் நான் சொல்லி விடுகிறேன். எஞ்சியதை கொடுத்துவிடுகிறேன்.

செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள பொது மக்களுக்குப் பாலாற்றிலிருந்து நீர் எடுத்து வழங்கிய பழவேலி குடிநீரேற்று நிலையம் மற்றும் குழாய்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால் தற்போது 10 நாட்களுக்கு ஒரு முறை பாலாற்றுக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே, இந்த பழுதடைந்த குடிநீர்க் குழாய்களுக்கு மாற்றாக புதிய குழாய்கள் அமைத்து, விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து பாலாற்றில் புதிய கிணறுகள் அமைத்து செங்கல்பட்டு நகர மக்களுக்கு தினமும் குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பாலாற்றில் பெருவெள்ளம் ஏற்பட்டு தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இதைத் தடுக்க செங்கல்பட்டு பழவேலி—மாமண்டூர் இடையே உள்ள பாலாற்றில் தடுப்பணைக் கட்டி குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

12 ஆண்டுகளுக்கு முன் ராஜ்யசபா உறுப்பினர் நிதி மற்றும் நகராட்சி பொது நிதியிலிருந்து கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கல்பட்டு நகருக்குள் போக்குவரத்திற்கு இடையூறாகச் செயல்படும் பேருந்துப் பணிமனையை செங்கல்பட்டு நகருக்கு வெளியே அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகத்தில் பதிவு செய்துள்ள சுமார் 20,000 காப்பீட்டாளர்கள் பயன்பெறும் வகையில் மறைமலைநகர் ஈட்டுறுதி மருந்தகத்தில் கூடுதல் மருத்துவர்களையும்,



செவிலியர்களையும் நியமித்து, கூடுதல் படுக்கை வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்பேட்டிலிருந்து செங்கல்பட்டுக்கு என்.எச். 45 நான்கு வழிச் சாலையில் விழுப்புரம் மார்க்கமாகச் செல்லும் விரைவுப் பேருந்துகள் செங்கல்பட்டு பாலத்திற்குக்கீழ் பயணிகளை இறக்கிவிட்டுச் செல்கின்றன. அந்த இடத்தில் ஒரு பேருந்து நிறுத்தத்தை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதியில், குண்ணவாக்கம், அஞ்சூர், கீரப்பாக்கம் ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் பகுதியில் கடந்த 5 வருடங்களாக குடிசையில் குடியிருந்து தற்போது அந்த இடத்தில் புதியதாக கான்கிரீட் வீடு கட்டியிருக்கும் ஏழை மக்களுக்குப் புதிய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிங்கபெருமாள்கோவில் ஒரகடம் நெடுஞ்சாலை விரிவாக்கத்தின்போது பாதிக்கப்பட்ட திருக்கச்சூர், பெரியார் நகர், ஆப்பூர் ஊராட்சி மக்களுக்கு மாற்று நிலம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்ட சிங்கபெருமாள்கோவில்—ஒரகடம் ஆறுவழிச் சாலையில் சிங்கபெருமாள்கோவில் இரயில்வே நிலையத்திற்கு மேற்குபக்கம் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மறுபக்கம் உள்ள சிங்கபெருமாள்கோவில் பகுதியில் இன்னும் பணிகளே தொடங்கப்படவில்லை. இரயில்வே நிருவாகம் பாலத்தை அமைத்துக் கொடுத்து பல ஆண்டுகள் ஆகின்றன. சிங்கபெருமாள் கோவில் பகுதியில் உள்ள மேம்பாலப் பணிகளை துரிதப்படுத்தி விரைவில் அங்கு போக்குவரத்து நெரிசல் தீர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வகங்கள் கட்டித் தர வேண்டுமென்றும், செங்கல்பட்டு நகராட்சி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில வழிப் பாடத் திட்டத்தை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலைக்காய சிகிச்சைப் பிரிவு தொடங்கப்பட வேண்டும். செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக அறிவிக்கும் திட்ட ஒப்புதலை விரைவாக வழங்க அரசு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். எஞ்சிய கோரிக்கைகளை நான் படித்ததாகக் கருதி, பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்து விடுங்கள். பதிவு செய்து கொள்ளலாம்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

செங்கல்பட்டு நகராட்சி, கொளவாய் ஏரியை தூர்வாரி, கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகராட்சி, குப்பைகளை அகற்றுவதற்கு புதிய வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள பூங்காக்களை சீரமைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

செங்கல்பட்டு நகராட்சிக்கு சிறப்புத் திட்டம் தீட்டி அதிக நிதி ஒதுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரிய அலுவலகம், குடிநீர் வாரிய அலுவலகம், வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு அரசு நிலம் ஒதுக்கி விரைவில் அரசின் கட்டடங்களில் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, வெங்கடாபுரம் கிராமம், பட்டா வழங்க கேட்டுக்கொள்கிறேன்.



செங்கல்பட்டு தொகுதியில் ஸ்மார்ட் குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், கொளவாய் ஏரி மாசுபடுவதைத் தடுக்க கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் நகராட்சியில் உள்ள தனியார் தொழிற்சாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்படாமல் அப்படியே நின்னகரை ஏரியில் கலந்து நீர் மாசுபட்டு வருகிறது. ஏற்கெனவே மறைமலை நகரிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சீரமைத்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் இரயில் நிலையம் எதிரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து சிக்னல் இல்லாததால் அடிக்கடி விபத்துகள் எற்படுகின்றன. இந்த விபத்துகளை தடுக்கும்பொருட்டு மறைமலைநகர் இரயில் நிலையம் எதிரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து சிக்னல் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொதுமக்கள் இரயில்வே நிலையம் செல்ல நடை மேம்பாலம் அமைத்துத் தரவும், கூடுவாஞ்சேரி, மறைமலை நகரில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளை பொதுமக்கள் கடந்து மறுபக்கம் செல்ல நடை மேம்பாலங்களை இந்த அரசு அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு, சிங்கபெருமாள்கோவில், வண்டலூர், ஊரப்பாக்கம், மறைமலை நகர் பகுதிகளில் கூடுதல் காவல் நிலையங்களைத் திறந்து, கூடுதல் காவலர்களை பணியமர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, ஆப்பூர், கீரப்பாக்கம், முருகமங்கலம், நெடுங்குன்றம் ஆலப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

குமிழி ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டவும்,

கொண்டமங்கலம் ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டவும், வண்டலூர் ஓட்டேரியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரியை முதல் நிலைக் கல்லூரியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள நல்லம்பாக்கம், கீரப்பாக்கம் பொதுமக்களின் போக்குவரத்திற்காக பழைய தார்ச் சாலையை சீரமைக்க வனத் துறை தடையில்லா சான்று வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

செங்கல்பட்டு–அஞ்சூர் புது கிராமம் வரை புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊரப்பாக்கம் ஊராட்சியில் உள்ள பிரியா நகர் 1, 2–ல் மழை நீர் வடிகால் அமைக்கவும், கட்டி முடிக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், வெங்கடாபுரம், ஆப்பூர் ஊராட்சிகளுக்கு பாலாற்றுக் குடிநீர் வழங்கவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மறைமலை நகர் நகராட்சி வார்டு 15–ல் கணபதி நகரிலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சீரமைத்து, மின்சார இணைப்பு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மறைமலை நகர் நகராட்சி, சாமியார் கேட் முதல் திருக்கச்சூர் செல்லும் சாலையை அரசு சீரமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, கீரப்பாக்கம் ஊராட்சி, திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துவதை அரசு கைவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதி, ஊரப்பாக்கம் முதல்நிலை ஊராட்சியில் உள்ள செல்லியம்மன் நகர் பகுதி, பணம் முழுமையாக செலுத்தியவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கிட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணினத்தின் பெருமையினை கண்ணியத் தென்றலாய் பாரெங்கும் பறைசாற்றிய பராசக்தி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) பெண்ணுரிமைப் போரில் வெற்றுப் பேச்சகற்றி, வெற்றிச்செயல் தந்த வெற்றிக் கீர்த்தி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் நலம்பெற, தவ வாழ்வு வாழ்ந்து இன்று மண்ணுலகம் துறந்து விண்ணுலகம் ஏகி, தனது அரசியல் ஆசான் தங்கத் தலைவன் துயிலிடம் அருகே மீளாத்துயில் கொண்டு கண்ணுறங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு கண்ணீரில் பூத்த என் வணக்க மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விசுவாசமிக்கத் தொண்டனாய், எதிர்பார்ப்பே இல்லாமல் இயக்கத்தில் தொண்டாற்றி, அம்மா அவர்களின் புகழ் காக்க, அம்மா அவர்களின் பெயருக்குப் பெருமை சேர்க்க, காலத்தின் கட்டளையை ஏற்று, அம்மா அவர்களின் அரசை தலைமையேற்று சிறப்புடன் வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மற்றும் அகிலம் போற்றும் கழகம், இவ்விரண்டும் எங்கள் கண்கள். எங்கள் உயிர் கொடுத்தும் இவற்றைக் காப்போம் என்ற உறுதியுடன், சுழன்று பணியாற்றும் இவ்வியக்கத்தின் தூய தொண்டர்களின் பாதம் தாங்கிப் பணிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்மீது அளவில்லா பாசம் காட்டி, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்தப் பேரவைக்கு அனுப்பி வைத்த ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், என்மீது அன்பு காட்டி, தடைகள் பல தாண்டி, ஒரு பெண்ணாக, மக்கள் பணி செய்யும் எனது பொதுவாழ்விற்கு உற்றத் துணையாக, உறுதுணையாக இருக்கும் என் குடும்பத்தாருக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன்.

[டாக்டர் வி. சரோஜா] [2017 ஜூன் 24

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கைகள்மீதான விவாதங்களுக்கான என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம். இந்த ஆண்டு, பாரத ரத்னா பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா. தமிழகம் வாழ தன்னைக் கரைத்த தனிப் பெரும் தலைவி, அம்மா எனும் அறிவு தெய்வத்தின் ஆதார தெய்வமாய், எட்டாவது வள்ளலாய், ஏழைகளின் கர்ணனாய், வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பூமி போற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும் அரசு சார்பில் கொண்டாட ஆணையிட்டு, 30–6–2017 அன்று மதுரையில் தொடங்கி, 30–12–2017 அன்று புதுக்கோட்டையில் முடித்து, மாநில அளவில் பிரம்மாண்டமான நிறைவு விழா சென்னையில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்தப்படும் என நாள் குறித்து, நலம் தந்திடும் முத்தான அறிவிப்பைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 35 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி மாவட்டத்தில் உள்ள பாப்பாகுறிச்சியில் சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அப்பள்ளியில் குழந்தைகளோடு தானும் ஒன்றாக அமர்ந்து சத்துணவு உண்டதும், தன் அருகே அமர்ந்து உணவு உண்டு முடித்த சின்னஞ்சிறு குழந்தைகளின் கைகளைக் கழுவி, இதயத்தை நெகிழ வைத்த காட்சியும் இன்றும் நம் கண் முன்னே நிழலாடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சத்துணவுத் திட்டத்தால், அன்றாடம் பள்ளிக்குச் சென்றால் குழந்தைகளின் பசியைப் போக்கிடலாம் என்ற நம்பிக்கையை மக்கள் பெற்றனர். இதனால் பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து, பள்ளி இடைநிற்றல் மொத்தமாய் குறைந்தது.



2017 ஜூன் 24] [டாக்டர் வி. சரோஜா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உன்னதத் திட்டத்தை எவ்விதக் குறைபாடுமின்றி சிறப்புடன் செயல்படுத்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை சத்துணவுத் திட்டத்தின் உயர் மட்டக் குழு உறுப்பினராக நியமித்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சத்துணவுத் திட்டத்தை சிறப்பாகச் செயலாக்கிட தமிழ்நாடு முழுவதும் சுற்றி, சுழன்று, சத்துணவுக் கூடங்களை ஆய்வு செய்து, சத்துணவுத் திட்ட செயலாக்கத்தை நேரில் பார்வையிட்டு, இத்திட்டம் மிகவும் சிறப்புடன் செயல்பட வழிவகுத்தார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சத்துணவுத் திட்ட உயர் மட்டக் குழு உறுப்பினராக அன்று இத்திட்டத்தை ஆய்வு செய்து, இந்தத் திட்டத்தில் என்னென்ன மாற்றங்களைக் கொண்டுவரலாம் என்று அன்றே நினைத்து, முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, இன்று நாடே போற்றுகின்ற நல்ல திட்டமாக, 13 வகை கலவை சாதங்களோடு, வேக வைத்த முட்டை மற்றும் சரி விகித உணவை வழங்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். 2013 ஆம் ஆண்டு முதல் உலகமே போற்றுகின்ற இந்த உன்னதத் திட்டத்தின் அனைத்து அம்சங்களையும், யாராலும், எப்போதும் குறை சொல்ல முடியாத அளவிற்கு ஒரு சிறப்பான திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்து, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயங்கி வரும் 43,143 சத்துணவு மையங்கள்மூலம் அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் 53.31 இலட்சம் குழந்தைகள் நடப்பாண்டில் பயன்பெற்று வருகிறார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களை நவீனமாக்கி, புகையில்லா சமையல்கூடங்களை உருவாக்கிட, ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் மாநில அரசின் நிதியுதவியுடன் 22,350 ரூபாய் வீதம் எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது. அந்த எரிவாயு அடுப்புகளைக் கையாளும் பயிற்சியும் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கும், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் சிறப்பு கால முறை ஊதியம் வழங்கப்பட்டு அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி மற்றும் 3 சதவிகித வருடாந்திர ஊதிய உயர்வு போன்றவையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்தவாறு, பிப்ரவரி 2016 முதல் ஓய்வுபெற்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1000/–லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதற்காக 2017–2018 ஆம் ஆண்டில் 152.49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்தவாறு, பிப்ரவரி 2016 முதல் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை ரூ.50,000/–லிருந்து ரூ.60,000/–ஆகவும் சமையலர், சமையல் உதவியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/–ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது. 2017–2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 35.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்கு குறைவாகவுள்ள சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்கள், குறு அங்கன்வாடி மையப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி மைய உதவியாளர்களுக்கு மாதச் சந்தா ரூ.150/–லிருந்து விலக்களிக்கப்பட்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கென 2017–2018 ஆம் ஆண்டிற்கு 1,793 கோடியே 69 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை பேரவைக்கு மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னும் மணியும் ஈடான பொன்னார் மேனி கொண்ட பெண் குழந்தைகளை கள்ளிப்பால் கொடுத்தும், கருவிலேயே முடித்தும் கொலை புரியும் மாபாதகக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து அப்பச்சிளம் தளிர்களை, பன்னீர் பூக்களை மரணப் படுக்கையிலிருந்து தொட்டில் குழந்தைத் திட்டம் என்னும் புதுமைத் திட்டத்தால் காப்பாற்றிய கருணைத் தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மனிதாபிமான சிந்தனையாலும், முற்போக்கு எண்ணத்தாலும் உதித்த இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் மே மாதம் 2017 வரை 4,066 பெண் குழந்தைகளும், 971 ஆண் குழந்தைகளும் ஆக மொத்தம் 5,037 குழந்தைகள் மரணப் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் பெறப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு நல்ல குடும்ப சூழ்நிலையை ஏற்படுத்தும்பொருட்டு தத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 17 மாநில தத்து நிறுவனங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் குழந்தைகள் பாரமல்ல, வரமே என்று எடுத்துக்காட்ட 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என்ற மகத்தான திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1992 ஆம் ஆண்டிலேயே உருவாக்கித் தந்தார்கள். இத்திட்டத்தின்கீழ் ஒரு பெண் குழந்தையுடன் நிரந்தரக் கருத்தடை செய்துகொள்ளும் பெற்றோரின் குழந்தைக்கு 50,000/– ரூபாய் நிரந்தர வைப்பீடு செய்து, 18 வயது நிறைந்தவுடன் ரூ.3 இலட்சம் ரூபாய் முதிர்வுத் தொகையாகவும், இரண்டு பெண் குழந்தைகளுடன் நிரந்தரக் கருத்தடை செய்துகொள்ளும் பெற்றோரின் பெண் குழந்தைகளுக்கு தலா 25,000/– ரூபாய் வீதம் நிரந்தர வைப்பீட்டில் முதலீடு செய்யப்பட்டு ரூ.1,50,000/– வீதம் ஒவ்வொரு குழந்தைக்கும் முதிர்வுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம்,

பெண் குழந்தைகளை வரவேற்று, அவர்களை நல்லமுறையில் வளர்ப்பதற்குரிய மனமாற்றத்தை பெற்றோர்களிடையே ஏற்படுத்தி வருகிறது.

பிற்பகல் 2–05

2001 முதல் 2017 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் 6 இலட்சத்து 85 ஆயிரத்து 989 பயனாளிகளுக்கு, 1,231 கோடியே 71 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டு, முதிர்வுத் தொகையாக 9 கோடியே 67 இலட்சம் ரூபாய் மார்ச் 2017 வரை, 3,406 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 2017–2018 ஆம் ஆண்டில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கென 140.13 கோடி ரூபாயும், தொட்டில் குழந்தைத் திட்டத்திற்கென 37.52 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகாகவி பாரதியார் தனது கவிதையைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது,

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது, சோதி மிக்க நவகவிதை"

என்று சொல்லுவார். பாரதி பாடிய நவ கவிதைப்போல, உலகமே பாராட்டிக் கொண்டிருக்கும் தொட்டில் குழந்தைத் திட்டம், இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்கும் சத்துணவுத் திட்டம், தாலிக்குத் தங்கம், தத்தெடுக்கும் திட்டங்கள் என்று புது, புதுத் திட்டங்களை அள்ளிக் கொடுத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த திட்டங்கள் அனைத்தும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையில் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். "பெண் குழந்தையைப் பாதுகாப்போம், பெண் குழந்தைக்குக் கற்பிப்போம்" என்ற திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக, தமிழகம் தேசிய அளவிலான விருதை பெற்றிருக்கிறது என்பதை மிகவும் பெருமிதத்தோடு இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதல் நடவடிக்கையாக 'தாலிக்குத் தங்கம்' வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருமண உதவித் திட்டத்தின்கீழ், 5 வகையான திருமண நிதியுதவித் திட்டங்களையும் அவரவர்கள் கல்வித் தகுதிக்கேற்ப 25,000 ரூபாயும், 4 கிராம் தங்கமும்; பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு 50,000 ரூபாயும், 4 கிராம் தங்கமும் என்று அறிவித்தார்கள். 2016 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதி, தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தில் கொடுத்த 4 கிராம் தங்கம் 8 கிராமாக உயர்த்தி வழங்கப்படும் என்பதுதான். இந்த வாக்குறுதியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே முதல் கையெழுத்திட்டு நிறைவேற்றி வைத்தார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு பெண்களின் பாதுகாவலராக விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இந்தத் திட்டத்தின்மூலம் 2011 ஆம் ஆண்டு முதல் மே 2017 வரை, 8 இலட்சத்து 62 ஆயிரத்து 953 பயனாளிகளுக்கு, 990 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 3,503.5 கிலோ தங்கமும், நிதியுதவியாக 3,134 கோடியே 20 இலட்சம் ரூபாயும், ஆகமொத்தம் 4 ஆயிரத்து 124 கோடியே 83 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2017–2018 ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 723 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் என்பவர்கள் நம் வீட்டை குதூகலப்படுத்த வந்த தேவதைகள். நம் துன்பம் நீக்கி, இன்ப மழை பொழிய வந்த தெய்வங்கள். அவர்கள் படபடக்கும் பட்டாம் பூச்சிகள்; பறந்து திரியும் கிளிக் கூட்டங்கள், பாய்ந்து ஓடுகின்ற புள்ளி மான்கள். குழந்தைச் செல்வங்கள், கருவிலிருக்கும் காலம் முதல் அவர்கள் பிறந்து

5 வயது முடிந்து, பள்ளி செல்லும் காலம் வரை தேவையான உதவிகளையும், சலுகைகளையும் வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பல்வேறு புதுமையான திட்டங்களைப் புகுத்தி, சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவுற்ற பெண்களுக்கு சத்து மாவு வழங்கி, தொடர் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு, உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கின்ற அதேவேளையில், அவர்களது மன நலனை மேம்படுத்தி, சமுதாய உணர்வு பெற்றிடும் வகையில், சமுதாய வளைகாப்பும் நடத்தப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, கடந்த ஆண்டில் 71,280 கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு நடத்தப்பட்டு, தேவையான கர்ப்ப கால அறிவுரைகள் வழங்கப்பட்டன. பிரசவம் ஆனவுடன் சீம்பால் அளிக்கவும், தொடர்ந்து 6 மாதம் தாய்ப்பால் அளிக்கவும், பாலூட்டும் தாய்மார்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, அவர்களுக்கு 6 மாதம் வரை சத்து மாவும் அளிக்கப்படுகிறது.

குழந்தையின் 6 மாதம் முதல் 3 வயது வரை எடை கண்காணிக்கப்பட்டு சத்து மாவு அளிக்கப்படுகிறது. கடும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்குக் கூடுதல் இணை உணவும் வழங்கப்படுகிறது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இணையாக அங்கன்வாடிகளில் பயிலும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு, அவர்களின் ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்துத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, விதவிதமான சத்துணவு வகைகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 20–3–2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகளின் புரதச்சத்தை மேம்படுத்த, வாரந்தோறும் 3 முட்டைகள் வழங்கப்படுகின்றன. 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தேசிய ஆரம்பக் கால குழந்தைகள் பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கை 2013–ன் அடிப்படையில் அனைத்து வகையான வளர்ச்சியையும் உறுதி செய்யும் வகையில், ‘ஆடிப்பாடி விளையாடு பாப்பா’ என்ற புதிய பாடத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பாடத் திட்டத்திற்கேற்ப கற்றல் மற்றும் கற்பித்தல், உபகரணங்கள், பாடத் திட்டப் புத்தகங்கள், குழந்தைகளுக்கான செயல்பாட்டுப் புத்தகங்கள் மற்றும்



ஆய்வுத்தாள்கள் ஆகியவற்றிற்காக 2017–2018 ஆம் நிதியாண்டில், 15.59 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 2016–2017 ஆம் ஆண்டு முதல் 5 வயது நிறைவடைந்து, தொடக்கக் கல்வி பயிலச் செல்லும் அங்கன்வாடி மையக் குழந்தைகளுக்கு முதன் முறையாக, சிறப்புத் திட்டமாக, முன் பருவக் கல்வி நிறைவுச் சான்றிதழ் வழங்கும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 13–6–2017 அன்று துவக்கி வைக்கப்பட்டு, குழந்தைகளுக்கு சான்றிதழ் வழங்கி, இவ்வரசு பெருமைப்படுகிறது, பெருமிதம் கொள்கிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் அங்கன்வாடிகளில் பயிலும் 2.63 இலட்சம் குழந்தைகளுக்கு முன் பருவக் கல்விச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆரம்பக் கல்வியில் சேருவதற்கு முன்பு, அங்கன்வாடிகளில் பயிலும் குழந்தைகளுக்கு அனைத்து வகையிலும் personal hygiene, அவர்களுடைய கற்றல், அவர்களுடைய அறிவுக்குத் தகுந்தாற்போல், அவர்களுடைய விருப்பத்திற்குத் தகுந்தாற்போல், பாடத் திட்டங்களை மாற்றியமைத்து, எப்படி, பள்ளிக் கல்வியில் பாடத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறதோ, அதேபோல், அங்கன்வாடி மையங்களில் படிக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும், பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதற்கான சிறப்பு ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, அங்கன்வாடி மையத்திற்குக் குழந்தைகள் வருவதை ஊக்குவிக்கும் வகையில் அங்கன்வாடி குழந்தைகளுக்கு 2 இணை சீருடைகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 54,439 அங்கன்வாடி மையங்களில், குழந்தைகள், வளரினம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் மூத்த குடிமக்கள், ஆக, 34.73 இலட்சம் பேர் நேரடியாக ஊட்டச் சத்து பெறும் சுகாதாரச் சேவைகளையும் பெற்று வருகின்றனர் என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அங்கன்வாடி மையங்களில்

உள் கட்டமைப்புகளை மேம்படுத்தி, கடந்த 5 ஆண்டுகளில் குழந்தைகள் நேய கழிப்பறையுடன்கூடிய 8,092 புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. 2016–2017 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் ஒருங்கிணைப்புடன் 1,000 அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 2–15

அங்கன்வாடி மையங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு, எரிவாயு அடுப்பு மற்றும் அடுகலன் ஆகியவை வழங்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலேயே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டச் செயலாக்கத்தில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்தகைய சிறப்பான செயல்பாட்டின்மூலம் தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடில்லாத மாநிலமாக உருவாக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய அரசு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்காக 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.1,917 கோடியே 55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் முன்னனுமதி வாங்கியிருக்கின்றேன். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தைப் பற்றி பொருளாதார மேதை டாக்டர் அமர்தியா சென் அவர்கள் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் பக்கம் 168 முதல் 177 வரை தமிழக அரசினுடைய சீர்மிகு திட்டங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அம்மா அவர்களுடைய அரசு தெற்காசிய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியான மாநிலம் என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொல்லும் இந்தப் புத்தகத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனைத்துத் திட்டங்களும், ஒவ்வொரு திட்டமாக 10 பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. “An Uncertain Glory: India and its Contradictions” என்ற புத்தகத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்காக அவர் என்ன கருத்தைப் பதிவு செய்திருக்கிறாரோ அதை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். “அங்கன்வாடி மையங்களில், மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தரப்படும்



ஆரம்பக் கல்வி, தடுப்பு மருந்துகள், ஊட்டச் சத்து போன்றவை 96 சதவிகிதத் தாய்மார்களிடம் தங்கள் குழந்தைகளை அங்கன்வாடி மையத்தில் கட்டாயமாகச் சேர்க்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது” என்று டாக்டர் அமர்தியா சென் அவர்கள் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தைப்போல வேறு எந்த மாநிலத்திலும் ஆறு மணி நேரத்திற்குமேல் அங்கன்வாடி மையங்கள் திறந்திருப்பதில்லை. அங்கன்வாடிகளில் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம்வரை அனைத்து பொறுப்புகளிலும் பெண்களே பணிபுரிவது ஒரு சிறப்பு என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தில் அவர் குறிப்பிட்ட இன்னொரு செய்தி என்னவென்றால், அந்த திட்டம் மக்கள் நல்வாழ்வுத் துறையோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு அனைத்து வகையிலும் ஒரு முக்கியத் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது என்பதுதான். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு வேறு சான்றும் வேண்டுமோ என்பதை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி,
சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி’

என்று பாடினார் பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடே நம்பியிருக்கும் நல்ல பிள்ளைகளை உருவாக்கி, இடர்ப்பாடான சூழ்நிலைகளிலிருந்து குழந்தைகளையும், அவர்களது உரிமைகளையும் பாதுகாப்பதை உறுதி செய்வதிலும், ஒழுக்கநெறி பிறழ்தலுக்கு உட்படுத்தப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கு மறுவாழ்வும், மகிழ்ச்சியான சூழலும் மற்றும் பராமரிப்பும் வழங்கிடும் பணியை சமூகப் பாதுகாப்புத் துறை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இப்பணிகளை குறைவின்றி மேற்கொள்ள மாநிலத்தில் இளைஞர் நீதிச் சட்டம், (குழந்தைகள் உரிமைகள் மற்றும் பாதுகாப்புச் சட்டம்) 2015 மற்றும் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டம், 1956 ஆகிய சட்டங்களைத் திறம்பட செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் சமூகப் பாதுகாப்புத்துறையின்கீழ் 36 குழந்தைகள் இல்லங்களும், 9 அரசு கூர்நோக்கு இல்லங்களும், 2 அரசு சிறப்பு இல்லங்களும், 3 அரசு பிற்காப்பு இல்லங்களும், தன்னார்வத்

தொண்டு நிறுவனங்கள்மூலம் 142 குழந்தைகள் காப்பகங்களும் அரசு நிதியுதவியுடன் இயங்கி வருகின்றன. இக்காப்பகங்களில் 12,155 குழந்தைகள் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 மகளிர் காப்பகங்களில் தங்கியுள்ள 98 பெண்களுக்கு கல்வி மற்றும் தொழிற்கல்வி வழங்கி அவர்களுக்கு மறுவாழ்வை அளித்து வருகிறது.

பிற்பகல் 2–20

குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதிசெய்யும்பொருட்டு, ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், Integrated Child Protection Scheme–ன்கீழ் மாநில அளவில் மாநில குழந்தைகள் பாதுகாப்புச் சங்கமும், மாவட்ட அளவில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நிறுவனம் சாரா நிதியுதவித் திட்டங்களின்கீழ், குழந்தைகளைப் பராமரிக்க ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.2,000/– வீதம், இதுவரை 3,442 குழந்தைகளுக்கு, மொத்தம் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்துள்ளவாறு, சென்னை, கெல்லீஸில் உள்ள அரசு கூர்நோக்கு இல்லத்திற்கு 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு, பொதுப் பணித் துறையால் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் உள்ள 16 முதல் 18 வயது வரையிலான கடும் குற்றம் இழைத்ததாகக் கருதப்படும் சிறார்களுக்கென்று 42 இலட்சம் ரூபாய் செலவில் வேலூர் அரசினர் வரவேற்பு பிரிவினைச் சீரமைத்து பாதுகாப்பான இடம் அமைத்திட, பொதுப் பணித் துறையின்மூலம் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதுவன்றி, சென்னை, இராயபுரத்தில் உள்ள சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் வளாகத்தில், ஒரு கோடி ரூபாய் செலவில், அனைத்து நவீன





உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய, புதிய வரவேற்பு இல்லத்திற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கு, ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 7 அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் 2 அரசு சிறப்பு இல்லங்களில் தங்கியுள்ள, இல்ல மாணவ, மாணவியர்களின் நலனுக்காக புதிதாக ஆற்றுப்படுத்துநர்கள் நியமனம் செய்வதற்காக 16.20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்புத் துறைக்கென 2017–2018 ஆம் ஆண்டில் 156.26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகள் நலத் துறை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> ‘பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து
> ஆள்வினை இன்மை பழி’

என்கிறார் திருவள்ளுவர். அதாவது, ஒரு மனிதருக்கு உதவுகின்ற கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் உடல் ஆகிய ஐம்பொறிகளில்– ஐம்புலன்களில் ஏற்படும் குறை ஒருவருக்கு குற்றம் ஆகாது. குற்றம் எதுவெனில், முயற்சி இல்லாமல் இருப்பதே குற்றம் என்கிறார் திருவள்ளுவர். இந்தச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாற்றுத் திறனாளிகளின் முன்னேற்றத்திற்காக, 1993 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான தனித் துறையை உருவாக்கி, 1994 ஆம் ஆண்டில், இந்தியத் திருநாட்டிலேயே முதன்முறையாக, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலக் கொள்கையை வெளியிட்டு, மாற்றுத் திறனாளிகளின் நலன் காத்திட்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக இந்தியாவிலேயே சிறப்பாகச் சேவைபுரிந்த தலை சிறந்த மாநிலம் என்னும் தேசிய விருதினை 2013 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக, 2010–2011 ஆம் ஆண்டில் 111 கோடியே 86 இலட்சம் ரூபாய் என்று இருந்த நிதி ஒதுக்கீட்டை, ஆண்டுதோறும் படிப்படியாக உயர்த்தி, 2016–2017 ஆம் நிதியாண்டில் 396 கோடியே 76 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியொதுக்கீடு செய்தார்கள். 2017–2018 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு 466 கோடி ரூபாயை நிதியொதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மிகவும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 11,79,693 மாற்றுத் திறனாளிகளில், 99 சதவிகிதம் நபர்களுக்கு மருத்துவச் சான்றிதழுடன்கூடிய அடையாள அட்டை வழங்கி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழகம் என்னும் பெருமையினை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பெற்றுத் தந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலனையும், உரிமையையும் பாதுகாத்திட, "மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம்–2016" தற்போது இயற்றப்பட்டுள்ளது. இதன்படி மாற்றுத் திறனாளிகளின் வகைப்பாடு 21 ஆக அதிகரிக்க இந்த சட்டம் வழிவகைகள் செய்கின்றது.

பிற்பகல் 2–25

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில், நடக்கும் அரசு, அரசின் அனைத்து துறைகள், வாரியங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க ஏற்கெனவே 3 சதவிகிதமாக இருந்த இட ஒதுக்கீட்டினை, 4 சதவிகிதமாக உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 29–5–2017 அன்று ஆணை வெளியிட்டார்கள் என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வாடிக்கிடந்த மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் வசந்தம் வீசிடச் செய்த இந்த அறிவிப்பிற்காக தமிழகம் முழுவதுமுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகள் சார்பாகவும், என்னுடைய மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாற்றுத் திறனாளிகளுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பை உருவாக்கிட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2014 ஆம் ஆண்டில் பின்னடைவுக் காலிப் பணியிடங்களைக் கண்டறிந்து அவற்றை நிரப்பிட ஆணையிட்டார்கள். 'C' மற்றும் 'D' பிரிவில் 1,928 பின்னடைவுக் காலிப் பணியிடங்கள் கண்டறியப்பட்டு, அதில் 1,238 பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளுக்கான 'A' மற்றும் 'B' பிரிவில் 268 பணிகள் கண்டறியப்பட்டு, அந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையங்களை (Early Intervention Centres) அமைப்பதில், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது.

மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான சிறப்புக் கல்வியினை மேம்படுத்த, கல்வி உதவித் தொகைக்காக 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், பள்ளி இடை நிற்றலைத் தடுக்கும் பொருட்டு, பார்வையற்ற குழந்தைகளுக்காக வாசிப்பாளர் உதவித் தொகை மற்றும் தேர்வு எழுதுபவர்களுக்கான உதவித் தொகையினை 1,000 ரூபாயிலிருந்து, 2,000 ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள், இதர பிரிவினரைக் காட்டிலும், செவித் திறன் பாதிப்படைந்தோரின் எண்ணிக்கை 3,00,318 என அதிகளவில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, இதனைத் தடுப்பதற்காக விதி 110–ன்கீழ், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தவாறு 3.3 கோடி ரூபாய் செலவில் முன்னோடித் திட்டமாக சென்னை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 21 மருத்துவமனைகளில் செவித் திறன் கண்டறிந்து, சிகிச்சை மேற்கொள்ளும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது.

கிராமங்கள்தோறும் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவையினை மேலும் வலுப்படுத்தும் வகையில், மறுவாழ்வுப் பயிற்சியுடன், உதவி உபகரணங்கள் வழங்கிட 2013–2014 ஆம் நிதியாண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் செயல்படும், நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்களை 32 மாவட்டங்களிலும்

மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோரின் துயரினைப் போக்கும் வண்ணம், 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பில், 960 பயனாளிகளுக்கு சிறப்பு நாற்காலிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் செயல்படுத்தப்படும் சிறப்பு நாற்காலிகள் திட்டம், அந்தந்த மாவட்டங்களில் தேர்வுக் குழுமூலம் தேர்வு செய்யப்பட்ட அனைத்துப் பயனாளிகளுக்கும் வழங்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தசைச் சிதைவு நோய் மற்றும் பக்கவாதத்தினால் பாதிப்பிற்குள்ளான 1,000 நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட நவீன சிறப்பு நாற்காலிகள் வழங்க இந்நிதியாண்டில் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மூளை வளர்ச்சி பாதிப்படைந்தோர் மற்றும் புற உலக சிந்தனையற்றோர், பிறருடன் எளிதில் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் வகையில், AWAZ எனப்படும் மென்பொருள் அடங்கிய கையடக்கக் கணினி (iPad) வழங்கப்படுகிறது. ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்கு, நடமாடும் சிகிச்சைப் பிரிவுமூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உபகரணத்தைக் கையாள்வதற்கான பயிற்சி, சிறப்பு ஆசிரியர்களுக்கும், மறுவாழ்வு பணிகள் மேற்கொள்ளும் களப்பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்மீது எப்போதும் கனிவோடும், அன்போடும், பரிவோடும் நடக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பார்வைக் குன்றியோர் எளிதாக நடமாட ஏதுவாக, ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கிவந்த நிலையில், அதனை மேலும் மேம்படுத்தி, நடக்கும்பொழுது எதிரே உள்ள தடைகளை, அதிர்வுகள்மூலம் எளிதில் உணர்ந்துகொள்ளச் செய்யும் Smartcane என்னும் "சீர் ஊன்றுகோல்" வழங்கிட ஆணையிட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 பார்வையற்ற நபர்களுக்கு Smartcane



வழங்குவதற்கு 3.16 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

பிற்பகல் 2–30

மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர், பள்ளி, கல்லூரிகளுக்கும், தொழில்புரியும் இடங்களுக்கும் எளிதில் சென்றுவர ஏதுவாக, தமிழ்நாடு முழுவதும் 400 பயனாளிகளுக்கு, இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5–9–2012 அன்று துவக்கி வைத்தார்கள். அந்த எண்ணிக்கையை படிப்படியாக உயர்த்தி 2016–2017 ஆம் நிதியாண்டில் 1,000 பெட்ரோல் வாகனங்களை வழங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடைபோடும் அரசு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அரசு 2017–2018 ஆம் நிதியாண்டில் 11.97 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, பயனாளிகளின் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்தி, அதாவது 2,000 மாற்றுத் திறனாளிகளுக்கு, இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளும் பொது கட்டடங்களை எளிதாகப் பயன்படுத்தும் வகையில், தடையற்ற சூழ்நிலையினை உருவாக்கும் நோக்கில், குறிப்பாக அடுக்குமாடிக் கட்டடங்களில் மின்தூக்கி, சாய்வுதளப்பாதை மற்றும் நவீன கழிப்பறைகள் உருவாக்குதல், செவித்திறன் குறையுடையோர் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் தகவல் குறியீடுகள் அமைத்தல், பார்வையற்றோருக்கு ஏதுவான பிரெய்லி எழுத்துகள்மூலம் தகவல் பலகைகள் பொருத்துதல், அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் வலைதளங்களை பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் Accessible Website உருவாக்குதல் முதலான பல்வேறு நடவடிக்கைகளை அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. இத்தகைய நடவடிக்கைகள் பற்றி, போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சார இயக்கமாக Accessible India Campaign என்னும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில், 49 அரசுக் கட்டடங்களில், தடையற்ற சூழல் அமைப்பதற்கான ஆய்வு (Access Audit) மேற்கொண்டு மத்திய

அரசால் 15.92 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு, முதல் கட்டமாக 7.96 கோடி ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சென்னையில் உள்ள 74 முக்கிய அரசுக் கட்டடங்களை தணிக்கை செய்வதற்கு 44.40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது அரசுத் துறைகளில் கட்டப்படும் அனைத்து புதிய கட்டடங்களும், மாற்றுத் திறனாளிகளின் நேயக் கட்டடங்களாக அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திற்கும் மேலாக, மாற்றுத் திறனாளிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் சென்னை, மெரினாவில், காமராஜர் சாலையில் தடையற்ற சூழல் கொண்ட அம்சங்களுடன் செயல்படும் வகையில் மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையரகத்திற்கு 3.74 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டது. அனைத்து வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்ட அக்கட்டடம் 3–5–2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், மறுவாழ்வு மற்றும் மருத்துவ சிகிச்சை பெறும் வகையில், பயனாளிகளை உறுப்பினர்களாகச் சேர்த்தும், சிறப்பு முகாம்கள்மூலம் அறுவை சிகிச்சை மேற்கொண்டும், செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு Cochlear Implant பொருத்தியும், நவீன செயற்கை அவயங்கள் பொருத்தியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், 2017–2018 ஆம் நிதியாண்டில் திருமண நிதி உதவி திட்டத்தின்கீழ் 460 பயனாளிகளுக்கு 2.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடுமையாக உடல் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையாக ரூபாய் 1,500/–ம், தொழுநோயால் பாதிப்படைந்தவர்களுக்கு இதுவரை வழங்கிவந்த ரூபாய் 1,000/–ஐ 1,500/– ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 1,46,398 பயனாளிகளுக்கு 242.10 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 2–35

மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்விற்கு மேலும் பல முன்னோடித் திட்டங்களை வகுத்து சமுதாயத்தில் ஒருங்கிணைந்து வாழ மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இவ்வரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மேலும் சிறப்பாகச் செயல்படும் என்பதை இப்பேரவைக்கு நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவி தந்த வரமாக, பொன் மனத்து தவமாக, புகழ் மணக்கத் தமிழ் நாடாண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம், தமிழ்நாட்டின் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் நம்பிக்கையை முழுமையாகப் பெற்று தொடர்ச்சியாக இரண்டாம் முறையும் வெற்றிகண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்த இந்த ஆட்சி, மக்களின் ஆட்சி, மக்களுக்கான ஆட்சி, மக்களாட்சியின் மாட்சிமைக்கு சாட்சி கூறும் மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்கள்மீது மக்கள் வைத்த நம்பிக்கையை ஈடேற்றி இன்னும் நான்காண்டுகள் இனிதாய் தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரமாயிரம் மலர்களின் மணமாக, இலட்சோப இலட்சம் நட்சத்திரங்களின் ஒளியாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை தமிழக மக்கள் 2021–ல் மீண்டும் அரியணையில் அமர வைப்பார்கள் என்பது சர்வ நிச்சயம் என்று கூறி, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டிருக்கும் எங்கள் கழகத்தின் காவல் தெய்வம், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும் அம்மா அவர்கள் வகுத்துத்தந்த பாதையே நெறிசார்ந்த பாதை என்று மரபு மாறாமல் இன்று தமிழகத்தை வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களது அனுமதியோடும், (மேசையைத் தட்டும ஒலி) சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை தொடர்புடைய புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**1. சென்னை கெல்லீஸில் அமைந்துள்ள சிறுமியர்களுக்கான அரசு கூர்நோக்கு இல்லத்திற்கு (Observation Home) ரூபாய் 4 கோடியே 40 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்**

தற்போது, சென்னை கெல்லீஸில் உள்ள அரசினர் கூர்நோக்கு இல்லம் செயல்பட்டு வரும் கட்டடம் 1972 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வகுக்கப்பட்டவாறு அடிப்படை வசதிகளை நிறைவேற்ற போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையிலும், கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையிலும் தற்போது உள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி சென்னை, கூர்நோக்கு இல்லத்திற்கு தரை மற்றும் முதல் தளம் என மொத்தம் 19,873.72 சதுர அடி பரப்பளவில் 150 சிறுமியர்கள் பயன்பெறும் வகையில் தங்கும் அறைகள், சமையலறையுடன்கூடிய நவீன உணவு அருந்தும் கூடம், தொழிற்பயிற்சிக் கூடம் மற்றும் வகுப்பறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் ரூபாய் 4 கோடியே 40 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**2. சென்னை, கெல்லீஸ் அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் இளைஞர் நீதிக் குழுமங்களுக்கிடையே (Juvenile Justice Boards) காணொலிக் காட்சி வசதி(Video Conference) ரூபாய் 50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்**

சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டு தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் காவல் துறையினரால் கையகப்படுத்தப்படும்போது, அந்தந்த மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் கூர்நோக்கு இல்லங்கள் இல்லாத நிலையில், விசாரணைக் காலங்களில் சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர்.



இவர்களை ஒவ்வொரு விசாரணை நாளிலும் சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்திலிருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு அழைத்துச் சென்று வர வேண்டியுள்ளது. பயணத்தின்போது சிறார்களின் பாதுகாப்பிற்கு வழித்துணைப் பாதுகாவலர்களை ஏற்பாடு செய்வதில் தேவையற்ற கால விரயம் ஏற்பட்டு, இளைஞர் நீதிச் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குட்பட்டு வழக்கினைத் தீர்வு செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. மேலும், பயணத்தின்போது அசம்பாவித சம்பவங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களை சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்துடன் இணைக்கும் காணொலிக் காட்சி வசதி ரூபாய் 50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**3. 54,439 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் செலவில் சுகாதார பைகள் (Hygiene Kits) வழங்கப்படும்**

அங்கன்வாடி மையங்களில் உள்ள முன் பருவக் கல்வி கற்கும் குழந்தைகளிடையே சுவாசத்தொற்று மற்றும் வயிற்று உபாதைகள் பரவாமலும் அவை மற்ற குழந்தைகளுக்கு எளிதில் தொற்றாமலும் இருக்க தன் சுத்தத்தை பாதுகாத்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது மற்றும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பது முக்கியமானத் தேவையாகும்.

அங்கன்வாடி மையக் குழந்தைகளிடையே தன் சுத்தம் பேணுதலை ஊக்குவிக்கும் முகமாக, மையம் ஒன்றிற்கு ரூபாய் 244 செலவினத்தில் கைத்துண்டு, குழந்தைகளுக்கான நக வெட்டி, சீப்பு, சோப்பு மற்றும் இவற்றை வைக்கும் பை ஆகியன கொண்ட சுகாதாரப் பையினை அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இதற்காக ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் செலவில் அங்கன்வாடி மையங்களுக்கு சுகாதாரப் பைகள் வழங்கப்படும். இதன்மூலம் சுமார் 24.10 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

**4. மகளிர் நலனுக்கென தொழில்நுட்ப வசதியுடன்கூடிய சமுதாய உதவி மையம் (Community Help Desk) ரூபாய் 1 கோடி செலவில் அமைக்கப்படும்**

சமூக நலச் சட்டங்களில் உள்ள சாராம்சங்கள் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த தகவல்கள், மக்களின் தேவைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடித் தீர்வு காணும் வகையில் தொழில்நுட்ப வசதியுடன்கூடிய தகவல் பரிமாற்றம் ஏற்படுத்துவது அவசியமாகிறது. தற்பொழுது கிராம ஊர் நல அலுவலர், விரிவாக்க அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர்கள்மூலம் தகவல்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிலை உள்ளது. எனவே நவீன தொடர்பு முறைகளைப் பயன்படுத்தி தகுதியான பயனாளிகள் உடனுக்குடன் பயன் பெறும் வகையில் ஸ்கைப் (Skype) வசதியுடன்கூடிய சமுதாய உதவி மையம் மற்றும் தொழில்நுட்ப வசதியுடன்கூடிய பன்முகத் தொடர்பு சாதனங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி முதற்கட்டமாக 16 மாவட்டங்களில் ரூபாய் 1 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**5. குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களிலுள்ள குழந்தைகளை ஆக்கப்பூர்வமான குடிமக்களாக, உளவியல் வாழ்வரங்கம் (Playback theatre) மூலம் ரூபாய் 30 இலட்சம் செலவில் உருவாக்குதல்**

சமூகப் பாதுகாப்பு துறையின்கீழ் செயல்படும் பல்வகையான குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ளுறையும் குழந்தைகளின் ஆரம்ப வாழ்க்கையிலேயே பிரச்சினைகள் வேரோடியதால், இவர்களின் எண்ணங்கள், தன்னை பற்றியும் பிறரைப் பற்றியும் எப்போதும் எதிர்மறையாகவே செயல்படுகின்றன.

இந்த எதிர்மறை வாழ்க்கை முறையில் இருந்து இவர்களை விடுவிக்க, வாழ்க்கைமீது நம்பிக்கையையும், வாழும் சமூகத்தின் மேல் ஒரு நேர்மறை எண்ணத்தை உருவாக்குவதும் அவசியமாகும். எனவே இக்குழந்தைகளுக்கு சரியான நேர்மறை எண்ணங்களை உருவாக்கி நடத்தை மாற்றங்களை அளித்து இக்குழந்தைகளை ஆக்கப்பூர்வமான குடிமக்களாக உருவாக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி "நாடக



அரங்க நிகழ்ச்சிகள் நடத்தும்" திட்டம் ரூபாய் 30.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**6. 19,230 சத்துணவு மையங்களுக்கு உயர் அழுத்த அடுகலன்கள் (Pressure Cooker) மற்றும் 12,000 சத்துணவு மையங்களுக்கு புதிய சமையல் உபகரணங்கள் ரூபாய் 10 கோடியே 80 இலட்சம் செலவில் வழங்கப்படும்**

தற்போது பள்ளி சத்துணவு மையங்கள் சீரமைக்கப்பட்டு, வைப்பறையுடன்கூடிய சமையலறைக் கட்டடம் மற்றும் எரிவாயு இணைப்பு போன்றவை பொருத்தி சத்துணவு மையங்கள் நவீனப்படுத்தப்பட்டு உள்ளதால், தற்போது பயன்பாட்டில் இருக்கும் எரிவாயு செலவினைக் குறைப்பதற்கும், குறுகிய காலத்தில் சுகாதாரமான முறையில் காய்கறி மற்றும் பருப்பு வகைகள் சமைக்க 12 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய அலுமினிய பிரஷர் குக்கர் வாங்கி வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு சுழற்சி அடிப்படையில் ரூபாய் 5,000/–க்கு சமையல் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 12 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட அலுமினிய குக்கர் 19,230 சத்துணவு மையங்களுக்கு ரூபாய் 4 கோடியே 80 இலட்சம் செலவிலும், புதிய சமையல் உபகரணங்கள் தலா ரூபாய் 5,000/- வீதம் 12,000 சத்துணவு மையங்களுக்கு ரூபாய் 6 கோடி செலவிலும் ஆக மொத்தம் ரூபாய் 10 கோடியே 80 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**7. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 8 கிராம் தங்க நாணயம் வழங்குவதை முகாம் வாழ் இலங்கைத் தமிழ் பெண்களுக்கு விரிவுபடுத்துதல்**

சமூக நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் திருமண நிதி உதவித் தொகை ரூபாய் 25,000/– மற்றும் ரூபாய் 50,000/–உடன் சேர்த்து திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 காரட்) தங்க நாணயம் வழங்கும் திட்டத்தினை 2011–

2012 ஆம் நிதி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள தகுதியான முகாம் வாழ் இலங்கைத் தமிழ் பெண்களுக்கும் விரிவுபடுத்தி அரசால் ஆணை வெளியிடப்பட்டது.

தற்போது, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வரும் திருமண நிதி உதவித் தொகையான ரூபாய் 25,000/– மற்றும் ரூபாய் 50,000/–உடன் சேர்த்து திருமாங்கல்யம் செய்திட 8 கிராம் (22 காரட்) தங்க நாணயம் வழங்கிட ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள தகுதியான முகாம் வாழ் இலங்கை பெண்களும் பயன்பெறும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**8. தமிழ்நாடு சமூக நல வாரியத்தால் நடத்தப்பட்டு வந்த 892 குழந்தைகள் காப்பகங்களை (Creches) மாநில அரசின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரகத்தின்மூலம் செயல்படுத்துதல்**

பணிபுரியும் பெண்களின் குழந்தைகளைப் பராமரிக்கவும், அவர்களது பணியினைத் தொடர்ந்து ஊக்கப்படுத்திடவும் குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்காப்பகத்தில் குழந்தைகளுக்குக் காலை மற்றும் மாலை வேளைகளில் சிற்றுண்டியும், மதிய உணவும் வழங்கப்பட்டு வருகிறது. அக்குழந்தைகளின் அறிவினையும், சிறப்பு திறமைகளையும் வெளிக்கொணர்வதற்கு ஏதுவாக முன் பருவக் கல்வியும் இம்மையங்களில் அளிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசால் மானியம் வழங்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு 60% மானியம் மட்டுமே வழங்கப்படும் என்ற மத்திய அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்தின்கீழ் உள்ள 892 குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் நலனிற்காகவும் பணிக்குச் செல்லும் அவர்களின் தாய்மார்களின் நலனிற்காகவும் இக்காப்பகங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மாநில அரசின் நிதி ரூபாய் 4 கோடியே 6 இலட்சம் செலவில் இக்காப்பகங்கள் தொடர்ந்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரகத்தின்மூலம் செயல்படுத்தப்படும்.



**9. முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஆம் நாளன்று அனுசரிக்கப்படும்**

முதியோர்களின் எண்ணிக்கையானது இந்தியாவில் தற்போது வேகமாக பெருகி வருகிறது. 2050–ல், 60 வயதிற்கும் மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை 14 சதவிகிதம் உயரும் என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. தமிழக அரசின் சீரிய முயற்சிகளின் விளைவால் முதியோர்களின் நலன்கள் தமிழ்நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், சிதைந்து வரும் கூட்டுக் குடும்ப வாழ்க்கைமுறை, மாறிவரும் பொருளாதாரம் மற்றும் சமூக சூழ்நிலையினால் முதியோர்கள் சமூகத்தில் உதாசினப்படுத்தப்படுவதும் மரியாதைக் குறைவாக நடத்தப்படும் நிகழ்வும் இன்றைய சமூகத்தில் நடைபெற்று வருவதனை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இம்மாதிரியாக முதியோர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுஞ்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தடுத்திட "ஜூன் 15 ஆம்" நாளினை முதியோர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுஞ் செயல் எதிர்ப்புத் தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

சமூகத்தில் குறிப்பாக மாணவச் செல்வங்கள் மற்றும் வளரும் இளம் தலைமுறையினரிடத்தில் முதியோருக்கு எதிரான கொடுஞ் செயல்களை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஆண்டுதோறும் ஜூன் 15 ஆம் நாள் முதியோருக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் அரசு அலுவலகங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் அனுசரிக்கப்படும்.

**10. பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பங்காற்றும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தேசிய பெண் குழந்தை தினமான ஜனவரி 24–ல் மாநில அரசின் விருது வழங்குதல்**

பெண் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, பெண் குழந்தைகள் மீதான பாலியல் பலாத்காரங்கள் குறித்த விழிப்புணர்வினை அனைத்து தரப்பிலும் ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 24 ஆம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுகின்றது.

பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படும்.

*பிற்பகல் 2–40*

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

### 1. மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு இல்லங்களில் தொழிற்பயிற்சி மேற்கொள்வதற்கான பயிற்சி உபகரணங்கள் வழங்குதல்

தற்போது மாநிலம் முழுவதும் 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு இல்லங்கள் 42 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் தங்கியுள்ள 1680 பயனாளிகளுக்கு ஊதுபத்தி தயாரித்தல், சாக்குகட்டி தயாரித்தல் போன்ற சாதாரண தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் விதமாகவும் இவர்களுடைய மூளை மற்றும் தசைகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பு ஏற்படுத்தும் வகையிலும், நவீன முறையில் பயிற்சி வழங்குவதற்காக தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் உதிரி பாகங்களை பொருத்தும் புதிய பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக்குத் தேவையான பயிற்சி உபகரணங்களை ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூ.30,000/– வீதம் 42 இல்லங்களுக்கு வழங்கவும், தொழிற்பயிற்சி ஆசிரியர்களுக்கு தலைமை பயிற்சி அளிக்கவும் ஆக மொத்தம் ரூ.13.00 இலட்சம் செலவு ஆகும்.

எனவே மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு இல்லங்களில் இத்தகைய தொழிற்பயிற்சி மேற்கொள்வதற்கான



பயிற்சி உபகரணங்கள் வாங்கவும் மற்றும் பயிற்சி அளிக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.13.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

### 2. ஆரம்ப நிலையில் மாற்றுத்திறன் குறைபாட்டினை சமுதாயம் சார்ந்த முறையில் கண்காணிக்கும் திட்டம்

தற்போது 0–6 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறன் குழந்தைகளின் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்கான சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பயிற்சிகள்மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன. தற்போது மாவட்ட அளவிலேயே இவ்வுதவி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சுமார் 3,000 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கிராமந்தோறும் ஒரே மாதிரியான சேவை கிடைக்கும் வண்ணம், இந்த சேவைகளை அனைவருக்கும் கிடைக்கும் வகையிலும் அதனை கண்காணிக்கும் வகையிலும் தாய்மார்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது.

நாமக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் தலா ஒரு வட்டாரத்தில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்த தேவையான கணினி மற்றும் மென்பொருள் உள்ளிட்ட கையடக்கக் கணினி கொள்முதல் செய்யவும், பயிற்சி வழங்கவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.12.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3. பார்வைத்திறன் குறையுடையவர்களுக்கு தகவல் பரிமாற்றத்திற்கான ஆவணங்களை பிரெய்லி எழுத்துகளால் பதிவு செய்யும் இயந்திரம் கொள்முதல் செய்தல்

தமிழக அரசு மாற்றுத் திறனாளிகளுக்குத் தடையற்ற சூழலை அமைக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பார்வைத்திறன் குறையுடையோருக்கு தகவல் பரிமாற்றம் செய்துகொள்வதில் உள்ள தடையினை நீக்கும் வண்ணம் ஆவணங்களில் உள்ள சாதாரண எழுத்துகளை பார்வையற்றோர் அறிந்துகொள்ளும் விதத்தில் அமைந்துள்ள

பிரெய்லி எழுத்துகள்மூலம் தயாரித்து வழங்குவதன்மூலம் இவர்கள் பெரிதும் பயனடைவர். இதற்கான அச்சு தயாரிக்கும் இயந்திரங்களை கொள்முதல் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

முதற்கட்டமாக சென்னையில் செயல்படும் மாநில ஆணையர் அலுவலகத்திற்கும், மாநில வளபயிற்சி மையத்திற்கும் இரண்டு பிரெய்லி அச்சு இயந்திரங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.6.30 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**4. மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைமூலம் ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் அறிவுத்திறன் மதிப்பீடு செய்து மறுவாழ்விற்கு உதவும் திட்டம்**

தமிழக அரசு சிறப்புப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு, உணவு, உறைவிடம், கல்வி மற்றும் உதவி உபகரணங்கள் ஆகியவற்றை விலையில்லாமல் வழங்கி, சிறப்புக் கல்வித் திட்டத்தினைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. இதனை மேலும் சிறப்பாகச் செயல்படுத்த இக்குழந்தைகளின் உடல் நிலையினை பரிசோதனைச் செய்து ஊட்டச்சத்து குறைபாட்டினைக் கண்டறிந்து அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இக்குழந்தைகளின் அறிவுத்திறனை மதிப்பீடு செய்து அதற்கு ஏற்றவகையில், மாணவர்கள் உரிய மேற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சியினை பெற்று, வேலைவாய்ப்பிற்கு உதவும் வகையில் முகாம்கள் நடத்தப்படும். இத்திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.11.00 இலட்சம் நிதி செலவில் செயல்படுத்தப்படும்.

**5. பார்வையற்ற மாணவர்களுக்கு தேர்வு எழுத உதவுபவர்களையும் செவித்திறன் குறையுடையோருக்கு சைகை மொழியினால் தகவல் பரிமாற்றம் செய்ய உதவுபவர்களையும் குழுக்களாக அமைத்து உதவுவதற்கான வள மையம் அமைத்தல்**

தமிழக அரசு மாற்றுத் திறனாளிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு, அவர்களுடைய முழுமையான மறுவாழ்விற்கு உகந்த சிறந்த முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பார்வையற்ற மாணவர்களுக்குத் தேர்வு எழுத உதவியாளர்களின் தேவை அவசியமாகிறது. அதைப்போல செவித்திறன் குறையுடையோருக்கும் பிறருடன் தகவல் பரிமாற்றத்தின்போது அவர்கள் எளிதில் அறிந்து



கொள்ளும் வகையில் சைகைமொழிபெயர்ப்பாளரின் உதவியும் பெரிதும் தேவைப்படுகிறது. எனவே பார்வையற்ற மாணவர்களுக்கும், செவித்திறன் குறையுடையோருக்கும் உதவி செய்யும் வகையில் அவர்களுக்கு உதவி செய்பவர்களுக்கான விவரப் பட்டியலைத் தொகுத்து தேவைப்படும் சூழ்நிலையில், அதாவது, தேர்வு எழுதும் மையங்களுக்கும் கருத்தரங்குகளுக்கும் அனுப்புவதற்கு ஏதுவாக வள மையம் அமைத்தல் அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டம் ரூ.5.00 இலட்சம் நிதி செலவில் செயல்படுத்தப்படும்.

**6. செவித்திறன் குறையுடையோருடன் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள சைகை மொழிபெயர்ப்பாளர் நியமனம் செய்தல்**

மாற்றுத் திறனாளிகளும் பிறரைப்போல சம உரிமை மற்றும் வாய்ப்புகளுடன் சமுதாயத்தில் முழுப் பங்கேற்பு வகிக்கும் நோக்கத்தில் தடையற்ற சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் செவித்திறன் குறையுடையோர், பிறருடன் தடையின்றி தகவல் பரிமாற்றத்தினை எளிதில் மேற்கொள்ள சைகை மொழிபெயர்ப்பாளரின் அவசியத்தை அறிந்து முதற்கட்டமாக அன்றாடம் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்கு வந்து செல்லும் செவித்திறன் குறையுடையோர் வசதிக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி சைகை மொழிபெயர்ப்பாளரை ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய ரூ.1.80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

**7. யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நாமக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் 0–6 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் மனவளர்ச்சி குறைகள் இருப்பதை ஆரம்ப நிலையில் கண்டறிதல்**

ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறன் குழந்தைகளின் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பயிற்சி அளிக்கும் வகையில் முதல் முறையாக யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் வட்டாரத்திலும், நாமக்கல் மாவட்டத்தில் கபிலர்மலை வட்டாரத்திலும் உள்ள 0–6 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளின் விவரங்கள் வீட்டுக்கு வீடு சென்று சேகரிக்கப்பட்டு, அங்கன்வாடி பணியாளர்கள்மூலம் அக்குழந்தைகளின் வளர்ச்சிக் குறைகள் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, உரிய

மருத்துவப் பரிசோதனையும், மறுவாழ்வு சேவைகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, இத்திட்டத்தினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.4.50 இலட்சம் செலவில் யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, நான் எடுத்துரைத்த கருத்துகள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மனநிறைவை அளித்திருக்கும் என்று நம்புகிறேன். சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, நான் எடுத்துரைத்த கருத்துகள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மன நிறைவை தந்திருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் G.S.T. என்று சொல்லக்கூடிய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தால், கடும் பாதிப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதுவரை வரி விலக்கைப் பெற்ற உபகரணங்கள் அனைத்தும், இப்பொழுது 5 முதல் 18 சதவிகிதம் வரையிலான வரிக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் அவர்களுடைய நலன் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பார்வையற்றோர் பயன்படுத்தக்கூடிய பிரெய்லி கடிகாரங்கள், பிரெய்லி பேப்பர், காது கேட்காத மாற்றுத் திறனாளிகள் உபயோகப்படுத்தக்கூடிய உபகரணங்கள், இவற்றுக்கெல்லாம் தற்போது, 12 சதவிகித வரி





விதிக்கப்பட்டிருக்கிறது. Braille typewriter–க்கு 15 சதவிகித வரியும், உடல் ஊனமுற்ற மாற்றுத் திறனாளிகள் உபயோகப்படுத்தக்கூடிய wheel chair, அவர்கள் கொண்டு செல்லக்கூடிய, உதவக்கூடிய மற்ற உபகரணங்களுக்கு 5 சதவிகித வரியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மாற்றுத் திறனாளிகளுக்கென்று பிரத்யேகமாக உருவாக்கப்படுகிற கார்களுக்கு 18 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மாற்றுத் திறனாளிகள் உபயோகிக்கக்கூடிய பிற உபகரணங்களுக்கு 5 சதவிகித G.S.T. வரி இருக்கின்ற நேரத்தில் மாற்றுத் திறனாளிகள் மிகவும் வேதனைப்படக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தில்லிக்குச் சென்று, இது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு, சில கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அப்படி எடுத்துச் சொல்கிறபோது, மாற்றுத் திறனாளிகளுக்கான இந்த வரி விதிப்பைப் பற்றி எடுத்து வைத்திருக்கிறாரா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். அப்படி எடுத்து வைத்திருந்தால் என்ன நிலை? அப்படி எடுத்து வைக்கவில்லை என்று சொன்னால், அதற்கான முயற்சிகளில் இந்த அரசு உடனடியாக ஈடுபடுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–45

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

***டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை என்றால் டாக்டர் கலைஞர் அவர்களின் சாதனைத் துறை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று நம்முடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு கருத்துகளைக் கூறினார்கள். மதிய உணவுத் திட்டத்தில் 5

[டாக்டர் (திருமதி) பூங்கோதை] [2017 ஜூன் 24

முட்டைகள் வழங்கி சத்துணவுத் திட்டமாக மாற்றிய பெருமை டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மிக மகிழ்ச்சியான ஒரு செய்தி, மிகவும் மன நிறைவாக இருந்தது, ஏனென்றால் நாங்கள் கொண்டுவந்த அனைத்துத் திட்டங்களும் இன்று தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. புகையில்லா சமையலறை ஆகட்டும், அடுகலன்கள் ஆகட்டும், பிறகு எங்கள் அன்பு அண்ணன், தளபதி, செயல் தலைவர் அவர்கள் துணை முதல்வராக இருந்தபோது, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள், (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். கடைசியில் நான் அனுமதிப்பது விளக்கம் கேட்பதற்காகத்தானே தவிர, நீங்கள் உரை ஆற்றுவதற்காக அல்ல. போதும், உட்காருங்கள். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நம்முடைய மாநிலம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு G.S.T. வரியிலிருந்து பல்வேறு பொருட்களை எடுக்க வேண்டும் என்றும், வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக வருகின்ற மாதம் G.S.T. அமல்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை இருப்பதாக ஒரு கருத்து. தமிழகத்தின் கோரிக்கைகள் வற்புறுத்தலின் காரணமாக கிட்டத்தட்ட 90 சதவிகிதம் ஏற்கப்பட்டு, G.S.T.–ல் மாறுதல் செய்யப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் கொடுத்த கோரிக்கைகளையெல்லாம் இன்றைக்கு மத்திய அரசு ஏற்றிருக்கின்றது. அந்த அடிப்படையில் நாம் தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வந்துகொண்டிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, அவர்கள் சில பொருட்களுக்கு வரிகளை அமல்படுத்தினாலும்கூட, அவர்கள் சொல்லக்கூடிய சில பொருட்களுக்கு நாம் மீண்டும் வற்புறுத்தலாம், அப்படி அதையும் மீறி அவர்கள் அமல்படுத்தக்கூடிய சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று மாநில அரசு அதன்மீது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜூன் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள் உரையாற்றுகையில் ** சொல்லியிருக்கிறார். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,777,13,16,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,04,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 2–50

### (ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.466,18,22,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 9. அரசினர் தீர்மானம்

### பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள்



வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2017), 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2017) மற்றும் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2017) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2017), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 24–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2017 ஜூன் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 34 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 34 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜூன் 24]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2017), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2017) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 24–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2017 ஜூன் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த சட்டமுன்வடிவின்மீது கருத்துக் கூற விரும்பும் உறுப்பினர்கள், இதே பொருள் குறித்து அடுத்து ஒரு சட்டமுன்வடிவும் வரவிருப்பதால், இரண்டு சட்டமுன்வடிவுகளுக்கும் ஒருங்கே சேர்த்து பேசலாம். பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றங்களிலே தற்போது பணியாற்றக்கூடிய தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை 6 மாதக் காலம் நீட்டிப்பு செய்வதற்காக இந்தச் சட்டமுன்வடிவு இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பிற்பகல் 2–55

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தச் சட்டமுன்வடிவினை நாங்கள் எதிர்க்கின்றோம். ஏற்கெனவே, தற்போது தேர்தல் நடத்த வேண்டிய காலத்திலிருந்து தள்ளிபோய், ஒன்பது மாதக் காலம் ஆகிவிட்டது. இந்த ஒன்பது மாதக் காலத்தில் கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். அடிப்படை பணிகள் எதுவும் முறையாக நடைபெறுவதில்லை. மக்கள் பிரதிநிதி இல்லாத காரணத்தால் தெருவிளக்காக இருந்தாலும் சரி, கழிவுநீர் ஓடைப் பணிகளாக இருந்தாலும் சரி, சாலைப் பணிகளாக இருந்தாலும் சரி, எந்தவிதமான அடிப்படைத் தேவைகளும் மக்களுக்கு முழுமையாக உள்ளாட்சி மன்ற அமைப்புகள் இல்லாத காரணத்தினால், இந்த அரசாங்கத்தால் நிறைவேற்றி கொடுக்க முடியவில்லை.

26–9–2016 அன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 12 மணிக்கு மேலாக நம்முடைய உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடத்துவதற்கான அறிவிக்கையினைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது. 12 மணிக்கு மேல் அறிக்கை வெளியிடப்படுகின்றது. கிட்டத்தட்ட 27 ஆம் தேதி அதிகாலையில் வெளியிடப்படுகிறது. அன்றைக்கே, காலை 10 மணியிலிருந்து வேட்பு மனு தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கின்றார்கள். அதே 27 ஆம் தேதி, ஆளுங்கட்சியாக இருக்கின்ற அ.தி.மு.க.–வின் வேட்பாளர்கள் பட்டியல் முழுமையாக வெளியிடப்பட்டது. ஆக, 27 ஆம் தேதி காலையில்தான் notification வெளியிடப்பட்டுள்ளது. அதில் இட ஒதுக்கீடு, எந்தெந்தத் தொகுதியில் பெண்கள் போட்டியிட வேண்டும், சாதி ரீதியாக எத்தனை இடங்கள் இருக்கின்றன போன்றவை அன்றைக்குத்தான்



2017 ஜூன் 24] [திரு. எஸ். ஆஸ்டின்]

எல்லோருக்கும் தெரிய வருகிறது. ஆனால், அதே தேதியில் அவர்கள் வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டுவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு தேர்தலைச் சந்திக்கத் தயாராகத்தான் இருந்தது. எங்களிடமும் வேட்பாளர்கள் எல்லாம் இருந்தார்கள். இருந்தாலும் இது ஒரு முறையற்ற நடவடிக்கை என்பதை நாங்கள் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருந்தோம்.

நீங்கள் தேர்தல் அறிவிக்கை வெளியிடுவதற்கு முன்பாகவே, ஜூன் மாதம் ஒரு வழக்கை நீதிமன்றத்தில் நாங்கள் பதிவு செய்திருந்தோம். அதாவது இட ஒதுக்கீடுகளை முறையாகச் செய்ய வேண்டும்; அதைப்போல மத்திய அரசு ஊழியர்கள், மத்திய அரசினுடைய பொதுத் துறை ஊழியர்களைத் தேர்தல் அலுவலராக நியமிக்க வேண்டும்; வெளி மாநில ஊழியர்களை பார்வையாளர்களாக, Returning Officer ஆக நியமிக்க வேண்டும்; தேர்தலுக்கு EV Machine–ஐ பயன்படுத்த வேண்டும்; ஒரேசமயத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெற வேண்டும்; வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடத்தில் web camera பொருத்தப்பட வேண்டும்; வேட்பு மனுக்களை உடனடியாக online–ல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்று சில கோரிக்கைகளை வைத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தோம். ஆனால், நீதிமன்றத்தில்கூட அதை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. தேர்தல் நடத்துவதற்கு அந்த வழக்கினால் எந்தவிதத் தடையுமில்லை. நீதிமன்றம் அதற்கு எதிராகத்தான் தன்னுடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

அதேநேரத்தில் மற்றொரு வழக்கையும் நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம். அதாவது முறையாகத் தேர்தலை அறிவித்து, தேர்தல் நடத்த வேண்டும்; எல்லாக் கட்சியினருக்கும், போட்டியிடும் அனைவருக்கும் சம வாய்ப்பினை வழங்கி தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்த வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்துள்ளோமே தவிர, தேர்தலை நிறுத்த வேண்டுமென்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகம் கோரிக்கை வைக்கவில்லை. ஆனால், நீதியரசர் திரு. கிருபாகரன் அவர்கள் அந்த வழக்கை எடுக்கின்றபோது, அவராகவே, suo motu ஆக இந்த அறிவிக்கை செய்திருப்பது தவறு. இது சட்டப்படி சரியில்லை. எல்லா வேட்பாளர்களுக்கும், எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சம வாய்ப்பை வழங்கிதான் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி, அந்த அறிவிக்கையை இரத்து செய்கின்றார்கள். நாங்கள் கேட்காத ஒரு prayer–ஐ, கேட்காத ஒரு கோரிக்கையை அவராக முன்வந்து, அதை இரத்து செய்துவிட்டு, மூன்று மாதக்

[திரு. எஸ். ஆஸ்டின்] [2017 ஜூன் 24

காலத்திற்குள்ளாக அதாவது டிசம்பர் 31 ஆம் தேதிக்குள்ளாக தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும், முறையாக அறிவிக்கை வெளியிட வேண்டும், எல்லோருக்கும் சம வாய்ப்பை வழங்கிடும் வகையில் கால அவகாசம் வழங்கிட வேண்டும்.

சட்டத்தில் amendment–ஐப் போட்டு, அரசாங்கத்திற்கும், தேர்தல் ஆணையத்திற்கும், ஒரு direction கொடுக்கிறார்கள். 31 ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று நினைத்திருந்தால், அரசாங்கம் நடத்தியிருக்கலாம். நாங்கள் அதற்குத் தடையாக இல்லை. ஆனால், தேர்தல் கமிஷன், ஜனவரி மாதம் வரை கால அவகாசம் கோரி, ஒரு மனுவைப் போடுகின்றார்கள். அரசு appeal மனுவைப் போடவில்லை. தேர்தல் கமிஷன்தான் போட்டது. நீதிமன்றம் எவ்வளவு கால அவகாசம் வேண்டுமென்று தேர்தல் கமிஷனைக் கேட்டது. எப்போது முடிப்பீர்கள் என்று கேட்டது. பள்ளிக்கூடங்களில் தேர்வு இருக்கின்றது என்றும் மற்றும் சில காரணங்களைக் காட்டி மே மாதம் 15 ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்தி முடித்து விடுவோம் என்று தேர்தல் கமிஷனே நீதிமன்றத்தில் வாக்குக் கொடுத்தது. உடனே, நீதிமன்றம் ஒரு நாள் முன்னதாக அதாவது மே மாதம் 14 ஆம் தேதிக்குள், தேர்தலை நடத்தி முடிக்க வேண்டுமென்று சொல்லி, அன்றைக்கு தீர்ப்பை வழங்கி அந்த வழக்கை முடித்து வைத்தது.

ஏப்ரல் மாதம் வரைக்கும் தேர்தலை நடத்த அறிவிக்கை வெளியிடவில்லை. மே மாதம் 14 ஆம் தேதிக்குள் தேர்தலை முடிக்க வேண்டும் என்று சொன்னால், நீங்கள் ஏப்ரல் மாதம் notification–ஐக் கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத காரணத்தினால் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஒரு contempt petition–ஐப் போட்டது. அந்த contempt petition இன்றைக்கும் pending ஆகதான் உள்ளது. தேர்தல் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அது முடிந்த பிறகுதான் எடுக்க முடியும் என்று சொல்லி, contempt petition pending–ல் இருக்கிறது. இதற்கிடையில் என்னவென்றால், (குறுக்கீடு) இல்லை நான் முடித்து விடுகிறேன். பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், முடியுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** இதற்கிடையில் உச்ச நீதிமன்றத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் வழக்கைப் போடவில்லை, தனி நபர்தான் ஒரு SLP petition–ஐப் போட்டிருக்கிறார். உச்ச நீதிமன்றம் same court–ல் நீங்கள் extension–ஐ வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டது. அதே உயர் நீதிமன்றத்தில், நம்முடைய தேர்தல் ஆணையம் ஜூலை 31, அதாவது ஜூலை மாத இறுதிக்குள்ளாக நாங்கள் தேர்தலை நடத்தி விடுவோம் என்று சொல்லி, அவர்கள் ஒரு affidavit–ஐ போடுகிறார்கள். ஆக, இன்றைக்கு நீதிமன்றங்கள்தான் காரணம் என்று சொல்லி, . . . (குறுக்கீடு)



2017 ஜூன் 24] [திரு. எஸ். ஆஸ்டின்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர் நியமனம் குறித்து இந்தச் சட்டம் வந்திருக்கிறது. முழுமையாக நான் அதற்குள் போகவில்லை. இதற்கு முன்னால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார். திரும்பவும் அதனையெல்லாம் பதிய வேண்டாம். நான் சுருக்கமாக இதைப் பற்றி பேசலாம் என்றிருக்கிறேன். எல்லாவற்றையும் அவர் detail ஆகப் பேசினால் நானும் அதற்கு விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டும் இல்லையா?

பிற்பகல் 3–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் சட்டமுன்வடிவின் ஷரத்துகள் குறித்து மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அந்த history–யைச் சொன்னீர்களென்றால் ஒவ்வொன்றிற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும். விவாதம் மாறி மாறிப் போகும். நீங்கள் ஷரத்துகள் குறித்து மட்டும் பேசுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** இப்போது Special Officers–தனி அலுவலர்களுடைய பணிக் காலத்தை 6 மாதக் காலம் நீட்டித்துக் கொடுப்பதற்கு சட்டமுன்வடிவை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தால் இன்னும் 6 மாதக் காலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் நீதிமன்றத்தில் எந்தத் தடையாணையும் இல்லை. எந்தத் தடை உத்தரவும் இல்லை. ஜூலை 31 ஆம் தேதிக்குள்ளாக தேர்தலை நடத்தி விடுவோமென்று நீங்களே வாக்குறுதியும் கொடுத்திருக்கின்றீர்கள். எனவே, நாளைக்கே நீங்கள் அறிவிக்கை

[திரு. எஸ். ஆஸ்டின்] [2017 ஜூன் 24

வெளியிட்டாலும்கூட, ஜூலை 31 ஆம் தேதிக்குள்ளாக தேர்தலை முடித்து விடலாம். அதற்கு நீதிமன்றத்தில் எந்தத் தடையும் இல்லை. நாளைக்கே நீங்கள் அறிவிக்கை வெளியிட்டாலும் தவறு என்று சொல்லப் போவதில்லை. ஜூலை 31 வரைக்கும் கால அவகாசம் கேட்டிருக்கிறீர்கள். நாளையோ, நாளை மறுநாளோ நீங்கள் அறிவிக்கை வெளியிட்டால்கூட, அதற்குப் பிறகு 15 நாட்கள் கால அவகாசம் இருக்கிறது. ஜூலை 31ஆம் தேதிக்குள் தேர்தலை முடித்துவிடலாம். நீங்கள் சொல்லக்கூடிய காரணம் என்பது ஏற்புடைய காரணம் இல்லை. உண்மையான காரணம் அல்ல. எனவே, பொதுமக்கள் என்ன கருதுகின்றார்கள் என்றால், நீங்கள் தேர்தலைச் சந்திப்பதற்குத் தயாராக இல்லை. மக்களைச் சந்திப்பதற்குத் தயாராக இல்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் சட்டமுன்வடிவில் பேசுங்கள். அதிலே ** எல்லாம் எங்கு வந்தது? மாண்புமிகு உறுப்பினர் ** குறித்து பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதெல்லாம் இதில் வரவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் சொன்னதெல்லாம் இந்தச் சட்டத்தில் வரவில்லை. நீங்கள் அதெல்லாம் பேசாதீர்கள். நீங்கள் தேர்தல் நிறுத்தப்பட்ட விஷயம் குறித்துப் பேசுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** நீங்கள் சட்டத்தில் நீதிமன்றத்தில் காரணம் காட்டியதால்தான் அந்தக் காரணமில்லை, இந்தக் காரணம் என்று நான் சொல்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சட்டத்தில் இல்லாமல் கற்பனையாக சொல்லுவதெல்லாம் சரியாக வராது. நீங்கள் சட்டத்தில் இருப்பதைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** தற்போது நீங்கள் தேர்தல் நடத்துவதற்குத் தயாரான நிலையிலே இல்லை. நீங்கள் நினைத்தால் ஜூலை 31ஆம் தேதிக்குள்ளாக நீதிமன்றத்தில் போட்ட affidavit–படி தேர்தலை நடத்தியிருக்க முடியும். அப்படித் தேர்தலை நடத்த வேண்டும், பொதுமக்கள் நலன் கருதி தேர்தலை நடத்த வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜூன் 24] [திரு. எஸ். ஆஸ்டின்]

கேட்டுக்கொள்கிறோம். அப்படி நடத்த முன்வராத இந்த அரசாங்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டித்து இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறோம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு மற்றும் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது. தற்போது Special Officers–தனி அலுவலர்களுடைய பணிக் காலம் நீட்டிக்கப்படக்கூடிய இந்த நடைமுறை என்பது தொடர்ந்து தேர்தலை நடத்தாமல் நாம் நீட்டித்துக் கொண்டிருக்கிறோம். இது பல சிரமங்களை உருவாக்குகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் தொடரப்பட்ட வழக்குதான் காரணமென்று முதலாவதாக அதற்குக் காரணங்கள் கூறப்பட்டன. அது கிடையாது. தடையாணை அதில் பிறப்பிக்கப்படவில்லை. அதை நாம் பார்க்க வேண்டும். எனவே, ஒரு தடையாணை இல்லாத வழக்கு என்பது எல்லோருக்கும் புரிந்த ஒன்று. Interim Relief–ம் அதிலே கொடுக்கப்படவில்லை. ஆனால், அதிலே ஒரு notification–ஐ set aside செய்கிறார்கள். அதன் பின்னர் தேர்தலை நடத்தச் சொல்லி அறிவுறுத்தல் இருக்கிறது. உயர் நீதிமன்றத்திலிருந்து குறிப்பாக, எப்போது தேர்தலை நீங்கள் நடத்துவீர்கள் என்று கேட்டு ஒரு அறிவுறுத்தலும் இருக்கிறது. அப்படி இருக்கும்போது தேர்தலை விரைந்து நடத்த வேண்டிய இடத்தில் அரசாங்கம் இருக்கிறது என்பதை நான் தெள்ளத்தெளிவாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் தெரிவிக்க விரும்புகிறேன். இதில் கடுமையான சிரமங்களை மக்களுக்குதான் நாம் ஏற்படுத்துகிறோம் என்பதை உணர முடிகிறது. குடிநீர் வழங்கல், சாலைகள் செப்பனிடல், குப்பைகள் அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், பஞ்சாயத்துக் குளங்களைத் தூர் வாருதல், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதுகுறித்து மட்டும் சொல்லுங்கள்

[2017 ஜூன் 24

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பதிவுதான். (குறுக்கீடு) ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் நீங்கள் குடிநீருக்கெல்லாம் பதில் சொன்னால் late ஆகும்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இல்லை, இல்லை, எப்படியும் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லப்போகிறார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள், R.D. & P.R. Department மூலமாக தேசிய நிதிகளைப் பெற்று செய்ய வேண்டியிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் கிடையாது. எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்த சட்டம் இது. இந்தச் சட்டத்தின்படி 6 மாதத்திற்குள் நாம் தேர்தலை நடத்தவில்லையென்றால் மத்திய நிதிகளை R.D. & P.R. Department மூலமாக நாம் பெற இயலாது. இந்த நிதிகளைப் பெற முடியாத காரணத்தால் மக்களைச் சென்றடைய வேண்டிய பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. ஆகையால், இந்தத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டுமென்ற இடத்தில் இந்த அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல, தமிழ்நாடு தேர்தல் ஆணையம், தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறது. அவ்வாறு அவர்கள் தெரிவித்த சூழ்நிலையில் உள்ளாட்சித் தேர்தலை விரைந்து நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன். எனவே, இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளையும் அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், தற்போது நிறைவேற்றப்படுவதிலும் எங்களுடைய முழுமையான எதிர்ப்பைப் பதிவு செய்கின்றோம்.

பிற்பகல் 3–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர். இந்த சட்டமுன்வடிவுகளை ஆதரிக்கின்றீர்களா அல்லது எதிர்க்கின்றீர்களா என்பதைத் தெரிவித்துவிட்டு உட்காருங்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவினை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றோம். இந்த



2017 ஜூன் 24] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும்கூட, தி.மு.க. தொடர்ந்த வழக்கு உண்மையான காரணம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலமாக, மக்களுக்கு மேலும் சுமையை ஏற்றக்கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கின்றது. உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், ஆங்காங்கே தெருவில் ஏற்படக்கூடிய சிறிய, சிறிய பிரச்சினைகளைக்கூட எங்களிடத்தில்தான் சொல்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய எங்களுக்கு, எங்களுடைய பணிகளுக்கிடையே, அவற்றையெல்லாம் கவனிக்க முடியவில்லை. தனி அலுவலர்களின் பணிக் காலத்தை நீட்டிப்பு செய்ததால், மேலும் சிரமங்கள்தான் ஏற்படுகின்றன. அவர்கள் எந்தவகையிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை. நாங்கள் அங்கே சென்று கூட்டங்கள் நடத்துவதற்குக்கூட அவர்கள் அனுமதி தருவதில்லை. எனவே, மேலும், மேலும் இதை காலந்தாழ்த்துவது என்பது மக்களாட்சித் தத்துவத்திற்கு முரணானது. எனவே, மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு ஏதுவாக, தமிழக அரசு மேலும் காலந்தாழ்ந்தாமல் உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, இந்த சட்டமுன்வடிவுகளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையில் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீட்டிப்பு செய்வதற்கான சட்டமுன்வடிவினைத்தான் கொண்டு வந்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள், எப்பொழுதும் நன்றாகப் பேசுவார்கள்; அடிக்கடி பேசுவதற்கு வாய்ப்புக் கேட்பார்கள். இதற்கு முன்பு சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டபோது, 'இந்த சட்டமுன்வடிவை எதிர்க்கின்றோம்' என்று மட்டும்தான் சொல்லியிருக்கின்றார்கள். தற்போது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பெருந்தன்மையோடு, தாராளமாக வாய்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதனால், அவர் நிறைய கருத்துகளைப் பதிவு செய்தார். இரண்டு நாட்கள் நடைபெற்ற இத்துறை

சம்பந்தமான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தின்போது, இதைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறைய பேசியிருக்கிறார்கள்; கருத்துகள் அனைத்தையும் பதிவு செய்திருக்கின்றோம். எனினும், தற்போது, திரு. ஆஸ்டின் அவர்கள், அரசியல்ரீதியாக பல கருத்துகளைப் பதிவு செய்திருக்கின்றார்கள். நீங்கள்தான் நீதிமன்றத்திற்குச் சென்றீர்கள். தற்போது கடைசியாக நீங்கள், ** என்று சொல்கிறீர்கள்.

2016 ஆம் ஆண்டு நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றபோது, 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர் ஆட்சியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தார்கள். (குறுக்கீடு) அப்படியிருக்கையில், நீங்கள் எதற்காக நீதிமன்றத்திற்குச் சென்றீர்கள்? நீங்கள் என்ன காரணத்திற்காக நீதிமன்றத்திற்குச் சென்றீர்கள்? இதைப் பற்றி deep ஆக நான் பேச விரும்பவில்லை. (குறுக்கீடு) தனி அலுவலர்கள் பதவிக் காலம் நீட்டிப்பு என்பது தற்காலிக ஏற்பாடுதான். இன்னும் சொல்லப்போனால், நீங்கள்தான் வழக்குத் தொடுத்தீர்கள். அதற்குள் நான் போக விரும்பவில்லை. அதுகுறித்து, முழுமையாக, deep ஆக discuss செய்து முடித்துவிட்டோம்.

உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் நிறைவு செய்து, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் 26–9–2016 அன்று தேர்தல் அறிவிக்கை வெளியிட்டது. இந்தத் தேர்தல் அறிவிக்கை முறையாக வெளியிடப்படவில்லை என தெரிவித்து, சென்னை உயர் நீதிமன்றம் உள்ளாட்சித் தேர்தலை இரத்து செய்தது. மேலும், 24–10–2016 அன்று அப்போதிருந்த உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக் காலம் முடிவடையவிருந்த நிலையில், உள்ளாட்சி அமைப்புகளை நிருவாகம் செய்ய, தேர்தல் நடத்தப்படும் வரை தனி அலுவலர்களை நியமனம் செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, நியமனம் செய்யப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலம் 31–12–2016 அன்றுடன் முடிவடையவிருந்த நிலையில், வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி, பள்ளி மாணவர்களுக்கான பொதுத் தேர்வு போன்ற காரணங்களைக் குறிப்பிட்டு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தனி அலுவலர்களின் பதவிக் காலம் 30–6–2017 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்பது ஒரு தனி அமைப்பு ஆகும். அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசாங்கம் செய்யும். தற்போது அவர்களுக்கும் நீதிமன்றத்திற்கும்தான் வழக்கு. இதுகுறித்து உங்களுக்கும் நன்றாகவே தெரியும். உள்ளாட்சித் தேர்தலுக்கான புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் பணி மற்றும் உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் மேல்முறையீட்டு வழக்குகள் நிலுவையிலுள்ள சூழ்நிலையில், 30–6–2017–க்குள் தேர்தலை நடத்தி முடிக்க இயலாத நிலையிருப்பதைக் கருத்தில்கொண்டு, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதக் காலத்திற்கு நீட்டிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் அரசைக் கேட்டுக்கொண்டது. எனவே, 30–6–2017 அன்றுடன் தனி அலுவலர்களின் பதவிக் காலம் முடிவடையவுள்ள நிலையில், உள்ளாட்சித் தேர்தல் நடத்தி முடிக்கப்படும் வரையில் அல்லது அதிகபட்சமாக 31–12–2017 வரை தற்காலிக ஏற்பாடாக தனி அலுவலர் பதவிக் காலம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 3–10

உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கிறது. உடனே தேர்தல் நடத்தச் சொல்லி உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு இருக்கிறது. தேர்தலை நடத்திவிட்டால் தனி அலுவலர் நியமனம் இரத்து செய்யப்பட்டுவிடும். தற்காலிக ஏற்பாடாக தனி அலுவலர் பணிக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அனைத்து உறுப்பினர்களும் இந்த சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ** குறித்து பேசப்பட்டது. நான் சொன்னதையும் நீக்கிவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** குறித்து பேசியது எல்லாம் நீக்கியாகிவிட்டது. நீங்கள் சொன்னது நான் சொன்னது எல்லாம் நீக்கியாகிவிட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக கொண்டுவந்திருக்கக்கூடிய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தினை நீட்டித்தல் குறித்த இந்த அரசினர் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் ஏற்கெனவே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2017 ஜூன் 24*

அறிமுக நிலையிலேயே எதிர்த்திருந்தாலும் அதை நிறைவேற்றுகின்ற நிலையில் எங்களுடைய உறுப்பினர் மிக விளக்கமாக, எதற்காக எதிர்க்கிறோம் என்ற விளக்கங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தும், இங்கு குரல் வாக்கெடுப்பின் மூலமாக நிறைவேற்றுகின்ற சூழ்நிலையிலே இதை நாங்கள் எதிர்த்து, கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையே சொல்லி கிண்டல் செய்யாதீர்கள். இது மக்கள் பிரச்சினை. அதற்காக நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. காங்கிரஸ் கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறோம். எங்களுக்கென்று கருத்து இருக்கிறது. நீங்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த விதத்தில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், உங்களுக்கும் அதுதான் நல்லது. உங்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் களத்தில் செயல்பட்டால்தானே உங்கள் கட்சியும் வலிமையாக இருக்கும். எங்கள் கட்சியும் வலிமையாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இதெல்லாம் எதற்கு? இப்போது விவாதம் முடிந்துவிட்டது. ஆதரிக்கப் போகிறீர்களா, எதிர்க்கப் போகிறீர்களா என்று மட்டும் சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தல் நடத்தப் பெறவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியும், தனி அலுவலர் நியமனத்தை நாங்கள் ஏற்கவில்லை என்பதை தெரிவித்தும், நீங்கள் நடத்தவிருக்கும் வாக்கெடுப்பில் எங்களால் பங்கேற்க முடியாது என்பதாலும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் இதை எதிர்த்து வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)*



*2017 ஜூன் 24*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி தனி அலுவலர்கள் பணி நீட்டிப்பு சம்பந்தமாக தீர்மானம் நிறைவேற்ற இருக்கிறீர்கள். இதை கண்டிக்கக்கூடிய வகையிலே இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக நானும் வெளிநடப்புச் செய்கின்றேன்.

*(அவ்வுறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

பிரிவுகள் 2 முதல் 14 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2017 ஜூன் 24

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2017), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜூன் 24]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பேசுவதற்கு யாரும் இல்லை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 இல் திருத்தம் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

---

@24–6–2017ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 28–6–2017 (புதன்கிழமை), காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

22. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

44. மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

45. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

46. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

47. மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

48. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

49. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

50. தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

51. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

———

# இணைப்பு I

*(107 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

# மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு, 2017—2018

## அத்தியாயம்–1

### முன்னுரை

ஐக்கிய நாடுகளின் பொதுப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட நீட்டித்த வளர்ச்சிக் குறிக்கோள்களின் (Sustainable Development Goals) அடிப்படையில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நிலையை எய்துவதும், வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் சமநிலை அடையவும் குழந்தைகளின் நல் ஊட்டச்சத்தினை எய்தவும் தமிழக அரசு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. மகளிர், குழந்தைகள், மூத்த குடிமக்கள், வயதானோர் மற்றும் மூன்றாம் பாலினரின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைமூலம் செயல்படுத்தி வருவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

துயருறும் சூழலில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்திட ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956 (Immoral Traffic (Prevention) Act, 1956) மற்றும் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (Juvenile Justice (Care and Protection of Children Act, 2015) ஆகியன சமூக பாதுகாப்புத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோருக்கு தேவைப்படும் நிறுவனப் பராமரிப்பினை குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் (Obervation Homes), சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள் (After Care Organisations) மற்றும் துன்புறும் துயருறும் சூழலில் உள்ள பெண்களின் மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்காக மகளிர் காப்பகங்கள், பாதுகாப்பு இல்லங்கள்,

[2017 ஜூன் 24

ஸ்வதார் மற்றும் உஜ்ஜவாலா திட்டங்களின்கீழ் குறுகிய கால தங்கும் இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றது.

பெண்களுக்கு அதிகாரமளிக்கும் நடவடிக்கையாக, குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக, பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தவும் பெற்றோர் பெண் குழந்தைகளைப் பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. பெண் சிசுக்கொலை என்னும் தீமையைத் தடுப்பதையும், கைவிடப்பட்ட குழந்தைகள் தத்து கொடுக்கப்படும் வரை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பதை உறுதி செய்யும் ஒரு தன்னிகரற்ற திட்டமாக தொட்டில் குழந்தைத் திட்டம் திகழ்கிறது. குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 நன்முறையில் செயல்படுத்தப்படுவதால் பெண் குழந்தையின் சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றை வளரச் செய்வதுடன் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் கருத்தரிக்கும் அபாயத்தைத் தடுக்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களின்மூலம் முறையே 0-5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கு வாரத்தில் ஐந்து நாட்களில் மசாலா கலந்த முட்டையுடன் 13 வகையான கலவை சாதம் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு 3 முட்டை வழங்கும் திட்டத்தால் அவர்களது ஊட்டச்சத்து அளவு மற்றும் உணவு ஆற்றலளவு உயர்த்தப்பட்டது, மத்திய அரசால் பாராட்டப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஊட்டச்சத்து, முன்பருவக்கல்வி, சுகாதாரம் மற்றும் குழந்தைகளின் தன்சுத்தம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய வழிகாட்டித் திட்டமாக செயல்படுகிறது. இத்திட்டம் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், குழந்தைகள் மற்றும் மகளிர் நலம் பேணுதல், வளரிளம் பெண்களின் மேம்பாடு மற்றும் சமச்சீரான வளர்ச்சியினை அடைதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் பிறந்தது முதல் ஆறு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு, சூடான சமைத்த உணவு வழங்குதல், சுகாதாரம் பேணுதல் மற்றும் முன்பருவக் கல்வி வழங்குதல், பெண்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்குதல் போன்ற விரிவான நலப் பணிகளை வழங்குகிறது. உடல் நலம், கல்வி விழிப்புணர்வு மற்றும் அறிவுத் திறனை மேம்படுத்துவதுடன் வளரிளம் பெண்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவும் வழங்கப்படுகிறது. மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்படி, அங்கன்வாடி மையங்கள், "எழுச்சிமிகு முன்பருவக் கல்வி வளர்ச்சி மையங்களாக" செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் கற்றல், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கும் முதல்நிலை மையங்களாக செயல்பட ஏதுவாக கூடுதல் மனிதவளம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2017 ஜூன் 24]

இத்துறை மகளிரின் பாதுகாப்பிற்கும், சமூக பொருளாதார அதிகார பகிர்விற்கும் முதலிடத்தை அளிப்பதுடன், பண்பாட்டுத் தேவையினை அங்கீகரிக்கும் விதமாக முக்கிய திட்டங்களாக ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துகின்றது. இதனால் பெண்கள் மற்றும் ஏழைப் பெற்றோர்களின் கண்ணியமான நிலையினை உறுதி செய்வதுடன் பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கின்றது.

10 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த பெண்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் ரூ.25,000 மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் ரூ.50,000 நிதியுதவியாக அரசால் வழங்கப்பட்டு வந்தது. இதனால், இத்திட்டத்தின்மூலம் 55 சதவிகித பெண்கள் ஆர்வத்துடன்

உயர்கல்வி கற்பது ஊக்குவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டங்கள் குறிப்பாக ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களின் மகள்கள், ஆதரவற்ற பெண்கள், கலப்புத் திருமணம் புரிந்த தம்பதியர், விதவையரின் மகள் மற்றும் மறுமணம் புரியும் விதவையர் ஆகியோருக்காக செயல்படுத்தப்படுகிறது. 23-5-2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு வழங்கப்படும் தங்க நாணயத்தின் அளவானது 8 கிராமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மூன்றாம் பாலினரின் வாழ்வாதாரத்திற்காக நிதியுதவி வழங்குவது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் ஆதரவற்ற பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பாதுகாப்புடன் தங்க இயலும். அதேசமயத்தில் அவர்கள் கல்வி மற்றும் தொழிற்பயிற்சியைத் தொடரலாம். குறைந்த வருவாயை ஈட்டும் பணிபுரியும் பெண்களுக்கு, அவர்களால் இயன்ற வாடகையில் பாதுகாப்பாக தங்குவதற்கு பணிபுரியும் மகளிருக்கான அரசு தங்கும் விடுதிகளும் இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்கள் தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில், தமிழக அரசு இலவச தையல் இயந்திரங்களை வழங்கி வருகிறது. இம்மாநிலத்தில் மதிய உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு வழங்குவதற்காக நான்கு இணை பள்ளிச் சீருடைகளை தைக்கும் பணிகளில் 98 மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்களின்கீழ், 75,807 பெண் உறுப்பினர்கள் தங்களது வீட்டிலிருந்தபடியே தொழிலில் ஈடுபட்டு வருவதன்மூலம் தேவையான வருமானத்தை ஈட்டுகின்றனர்.

வருவாய் நிருவாக ஆணையரகத்தின்மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் ஒருங்கிணைப்பு முகமையாக இத்துறைச் செயல்பட்டு வருகிறது.



பெண்கள் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் மிகப்பெரிய சாதனைகள் புரிந்திருந்தாலும் சமூகத்தில் அவர்களுக்கு எதிராக தற்போதும் நிலவி வரும் பாகுபாட்டின் பிரதிபலிப்பே பாலின அடிப்படையிலான வன்கொடுமை ஆகும். நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முழுமையாக பங்கேற்பதற்கு, வன்முறை மற்றும் வன்முறையால் ஏற்படும் அச்சம் போன்ற காரணங்கள் தடையாக உள்ளன. மேற்படி காரணிகளைக் கருத்திற்கொண்டு, பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்காக அரசு பெண்களை பாதுகாக்கும் சட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கிறது. ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956, வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம், 2006, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012, பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013, தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 போன்ற பல்வேறு சட்டங்கள் இத்துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை வாழ்க்கையின் அனைத்து தரப்பு மக்கள் குறிப்பாக ஏழை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக செயல்படுகிறது. பல ஆண்டுகளாக பல்வேறு நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதன்மூலம் நமது மாநிலத்தில் மனிதவள மேம்பாட்டில் இத்துறை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

[2017 ஜூன் 24

## அத்தியாயம் – 2

## குழந்தைகள் நலம்

**2.1** தமிழக அரசு சமூக நலனுக்காக குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகளுக்காக பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர்காலம் அமைகிறது. தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் போது குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பினை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகிறது. சமூகத்தில் பெண் குழந்தைகள் சமநிலையை அடைவதற்காக பெண் குழந்தைகள் குறித்த பிரச்சனைகள்மீது அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழித்திடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தன்னிகரில்லாத் திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டம் மற்றும் பெண் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" பெண் குழந்தைகளின் அனைத்து நலன்களையும் உறுதி செய்யும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெண் கல்வியை மேம்படுத்தவும், பெண் சிசுக் கொலையை அறவே ஒழிக்கவும், ஆண் குழந்தைகளை விரும்பும் மனப்போக்கை மட்டுப்படுத்தவும், சிறு குடும்ப நெறிமுறையை ஊக்குவிக்கவும் 1992 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் துவக்கப்பட்டது.

குழந்தைகளின் மிக அத்தியாவசிய தேவைகளான ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் வகுக்கப்படுவதன்மூலம் அவர்கள் ஆரோக்கியமாகவும், உரிய மதிப்புடன் வளர்வதற்கு தக்க வாய்ப்புகளையும் ஏராளமான வசதிகளையும் அரசு உருவாக்கி தந்துள்ளது.

இத்திட்டம் பெண் கல்வியினை முன்னிறுத்தி செயல்படுத்தப்படுவதால், 2001 ஆம் ஆண்டு 64.43% இருந்த பெண் கல்வி விகிதம் மேன்மை அடைந்து, 2011 ஆம் ஆண்டு 73.44% ஆக உயர்ந்துள்ளது. இப்பெண் கல்வி மேலும் முன்னேற்றம் அடையும் வகையில் அரசின்மூலம் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:



2017 ஜூன் 24]

1. தொட்டில் குழந்தைத் திட்டம்
2. பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்
3. பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்
4. குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006
5. பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்
6. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் காப்பகங்கள்

### 2.2 தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் குழந்தைகளின் நலனுக்காக ஒரு மகத்தான திட்டமான "தொட்டில் குழந்தைத் திட்டம்" 1992–ல் சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கம் தமிழ்நாட்டில் ஒரு சில பகுதிகளில் காணப்படும் 'பெண் சிசுக்கொலை' என்னும் கொடிய பழக்கத்தை அறவே ஒழிப்பதும், பெண் குழந்தைகளைப் பாதுகாப்பது மற்றும் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை உயர்த்துவது குறித்தது ஆகும். இத்திட்டத்தின்மூலம் மீட்கப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் பொருட்டு அக்குழந்தைகள் அரசிடம் ஒப்படைக்கப்படுவர்.

பெண் சிசுக் கொலையானது, வறுமை காரணமாகவும், ஆண் குழந்தையை விரும்புவதாலும், பெண் குழந்தைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு குறைவாக உள்ளதாலும், திருமணம் மற்றும் பிற கலாச்சார நடைமுறைகளில் ஏற்படும் செலவுகள், சமூகத்தின்மூலம் எதிர்பார்த்திருக்கும் செலவுகள் மற்றும் உடல் உறுப்பு குறையுடன் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இயலாமை போன்றவை பெண் சிசுக்கொலைக்கான காரணங்கள் ஆகும்.

2001 ஆம் ஆண்டில் இத்திட்டம் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பெண் சிசுக்கொலை நடைமுறையில் அதிகமாக இருந்ததால் நீட்டிக்கப்பட்டது. சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் குழந்தைப் பாலின விகிதம் மேற்படி மாவட்டங்களில் உயர்ந்துள்ளது.

[2017 ஜூன் 24




| | சேலம் | மதுரை | தேனி | திண்டுக்–கல் | தருமபுரி |
|---|---|---|---|---|---|
| ■கணக்கெடுப்பு 2001 | 851 | 926 | 891 | 930 | 826 |
| ■கணக்கெடுப்பு 2011 | 917 | 939 | 937 | 942 | 911 |

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் குறைவாக இருந்ததால் மேற்கண்ட மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தைத் திட்டம் 2011 ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்தப்பட்டது.




| | கடலூர் | அரிய–லூர் | பெரம்ப–லூர் | விழுப்–புரம் | திருவ ண்ணா–மலை |
|---|---|---|---|---|---|
| ■கணக்கெடுப்பு 2001 | 957 | 949 | 937 | 961 | 948 |
| ■கணக்கெடுப்பு 2011 | 895 | 892 | 913 | 938 | 932 |



2017 ஜூன் 24]

மேற்கண்ட மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள் திறக்கப்பட்டன. பல்வேறு சமூக சூழ்நிலைகளின் காரணமாக பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்ட தொட்டில்கள்மூலம் பெறப்பட்டன.

தொட்டில் குழந்தைத் திட்டம் தொடங்கியது முதல் மார்ச் 2017 வரை 5,024 குழந்தைகள் (ஆண்-966, பெண்-4058) வறுமையில் வாடும் பெற்றோர்கள் மற்றும் ஒற்றை தாய்மார்கள் குழந்தைகளை ஒப்படைத்துள்ளார்கள்.

2001 ஆம் ஆண்டு 942/1000 என்றிருந்த பெண் குழந்தைகளின் பாலின விகிதம் தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தைத் திட்டம் உருவானதன் விளைவாக 2011 ஆம் ஆண்டு 943/1000 ஆக அதிகரித்துள்ளது.

2017-18 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

1992 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளின் நலனுக்கான முன்னோடி மற்றும் வழிகாட்டும் திட்டமாகும். முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் நோக்கம் பெண் குழந்தை பாலின பாகுபாட்டைத் தடுத்து அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அரசால் நேரடியாக உதவி புரிவதாகும்.

### திட்டத்தின் நோக்கங்கள்

- பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், அவர்களுக்கு குறைந்த பட்சம் 10 ஆம் வகுப்பு வரை கல்வியைப் பயிலுவதற்கு ஊக்குவித்தல்.
- 18 வயதுக்கு பிறகே திருமணம் செய்து கொள்ளும் கருத்தினை பெண் குழந்தைகளிடம் ஊக்குவித்தல்.

- இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தவுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும் என்று பெற்றோர்களிடம் ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் நிதி நிலையில் அதிகாரத்தினை வழங்குதல்.
- பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்த குடும்பத்தின் பங்கினை பலப்படுத்துதல்.

**இத்திட்டத்தின்கீழ் வைப்புத் தொகை வழங்கப்படும் முறை**

**திட்டம்–1**

இத்திட்டத்தின்கீழ் 01.08.2011 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்து குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக ₹50,000/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்–2**

இத்திட்டத்தின்கீழ் 1-08-2011 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்து, குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா ₹25,000/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

மேற்படி வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு 18 வயது நிறைவடைந்ததும் திரண்ட வட்டி விகிதத்துடன் கூடிய வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை, அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படுகிறது. இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தைக்கு உயர்கல்வி பயில உதவுகிறது.





**முதிர்வுத் தொகை விவரம்**

| வ. எண் | திட்டங்கள் | ஆரம்ப வைப்பீட்டுத் தொகை (₹) | 18வயது நிறைவடையும் போது முதிர்வுத் தொகை ₹1,800 ஊக்கத்தொகை உட்பட தோராயமாக (₹) |
|---|---|---|---|
| 1. | திட்டம்-1 | 50,000 | 3,00,232 |
| 2. | திட்டம்-2 | 25,000 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) | 1,50,117 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) |

வைப்பீடு செய்யப்பட்ட ஆறாவது ஆண்டிலிருந்து கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் ஊக்கத்தொகையாக ₹1,800 வழங்கப்பட்டு வருகிறது.

2013-2014 ஆம் நிதியாண்டு முதல் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பயன்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1992 முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்த பயனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் உள்ள இரண்டு திட்டங்களுக்கும் ஆண்டு வருமான உச்சவரம்பு 14-10-2014 முதல் ₹24,000/-லிருந்து ₹72,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் சாதனைகள்**

தமிழ்நாட்டில் பெண் கல்வியின் முன்னேற்றம் 2001 ஆம் ஆண்டில் 64.43 சதவிகிதத்தில் இருந்து 2011 ஆம் ஆண்டில் 73.44 சதவிகிதமாக உயர்ந்துள்ளதற்கும், பள்ளிக்கு சென்ற பெண் குழந்தைகளின் இடைநிறுத்தல் குறைந்ததற்கும் இத்திட்டம் முக்கிய காரணியாக உள்ளது. 1997-2017 வரை 8,68,218 பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். ₹1,259.32 கோடி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹14,013 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 24

## 2.4 பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்

பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கவும் அவர்களின் கல்வியினை உறுதி செய்யவும் "பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்" (Beti Bachao Beti Padhao) என்ற திட்டம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் நாள் முதன்முதலாக அரியானா மாநிலம், பானிப்பட்டில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு அமைச்சகமாக செயல்படுகிறது.

2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு புள்ளி விவரத்தின்படி குழந்தைப் பாலின விகிதம் (Child sex ration) மிகவும் குறைந்து காணப்பட்டு தேசிய அளவில் 1000 ஆண் குழந்தைகளுக்கு, 919 பெண் குழந்தைகளே உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதன் காரணமாக குழந்தைப் பாலின விகிதம் குறைவாக உள்ள 100 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு அதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் மாநில அளவில் குறைந்தது ஒரு மாவட்டம் முன்னோடி மாவட்டமாக இத்திட்டத்தைச் செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், "பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிப்போம்" என்ற திட்டத்தைச் செயல்படுத்த குழந்தைப் பாலின விகிதம் மிகவும் குறைவாக உள்ள கடலூர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவில் உள்ள 919/1000 குழந்தை பாலின விகிதத்தைவிட தமிழ்நாட்டில் 943/1000 என சற்று உயர்வாகவே உள்ளது.

கடலூர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா குழந்தை பாலின விகிதம் கீழ்க்கண்டவாறு:

| | கணக்கெடுப்பு 2001 | கணக்கெடுப்பு 2011 |
|---|---|---|
| இந்தியா | 927 | 919 |
| தமிழ்நாடு | 942 | 943 |
| கடலூர் | 957 | 896 |



2017 ஜூன் 24]

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- கருவில் இருக்கும் குழந்தைப் பாலினத்தை கண்டறிவதை முற்றிலும் அகற்றுதல்.
- பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்புடன் கூடிய நல்வாழ்வினை உறுதி செய்தல்.
- பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதை உறுதிப்படுத்துதல்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திட்டத்தினை செயல்படுத்தும் தலைவர் ஆவர்.

### திட்டத்தின் சாதனைகள்

1. கடலூர் மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் 2015-ல் 886 ஆக இருந்தது 2016-ல் 895 ஆக உயர்ந்துள்ளது.

2. உயர் தொடக்கப் பள்ளி (மாணவிகள்) இடை நிறுத்தம் செய்வது 2015-ல் 1.5 சதவிகிதமாக இருந்தது 2016-ல் 1.0 சதவிகிதமாக குறைந்துள்ளது.

3. இடை நிலைப் பள்ளி (மாணவிகள்) இடைநிறுத்தம் செய்வது 2015-ல் 3.26 சதவிகிதமாக இருந்தது 2016-ல் 1.5 சதவிகிதமாக குறைந்துள்ளது.

4. சுகன்யா சம்ருதி யோஜனா திட்டத்தின்கீழ் 59,491 குழந்தைகளுக்கு வங்கிக் கணக்கு துவக்கப்பட்டுள்ளது.

5. பள்ளிகளில் ஒட்டுமொத்த கட்டமைப்பு வசதிகள், அதாவது உறைவிட பள்ளி, கழிப்பறை, தண்ணீர் வசதிகள் மற்றும் எரியூட்டிகள் அமைத்தல் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### விருது

கடலூர் மாவட்டம் சிறந்த மாவட்டமாக இத்திட்டத்தைச் செயல்படுத்தியதற்கு தேர்வு செய்யப்பட்டு "சிறந்த சமூக ஈடுபாட்டிற்காக" டெல்லியில் 24 ஜனவரி 2017 அன்று நடைபெற்ற தேசிய பெண் குழந்தைகள் தின விழாவில் மாண்புமிகு அமைச்சர், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அவர்களால் தேசிய விருது வழங்கப்பட்டது.

## 2.5 குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006

இந்திய சட்டத்தின்படி 18 வயதிற்கும்கீழ் உள்ள பெண் குழந்தைக்கும், 21 வயதிற்கும் குறைவாக உள்ள ஆண் குழந்தைக்கும் நடைபெறும் திருமணம் குழந்தைத் திருமணம்

[2017 ஜூன் 24

ஆகும். பெரும்பாலான குழந்தைத் திருமணங்கள் சமூக மற்றும் பொருளாதார வசதி குறைவு மற்றும் குழந்தைத் திருமணத்தின் தீய விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ள குடும்பங்களில் நடைபெறுகிறது.

அரசு மற்றும் சமுதாயத்தால் இதனை ஒழிப்பதற்காக பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், இந்தியாவில் குழந்தைத் திருமணம் இன்னும் ஒரு பொதுவான நிகழ்வாகவே இருந்து வருகிறது. சமூகத்தில் நடைபெற்றுவரும் குழந்தைத் திருமணத்தை அறவே ஒழிப்பதற்காக, மத்திய அரசால் 1929-ல் இயற்றப்பட்ட குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்கும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும் மற்றும் இச்சட்டத்தை மீறி அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள், நடத்துவதற்கு ஏற்பாடு செய்பவர்கள்மீது தகுந்த தண்டனையை அளிப்பதற்கு இச்சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

### சட்டத்தைச் செயல்படுத்துதல்

குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில விதிகளை வகுத்து அதனை 30-12-2009 அன்று அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூகநல அலுவலர்கள் குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமண தடுப்பு அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அவர்கள் குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்த ஏதேனும் தகவல் எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும், புகாரினை ஏற்று, அத்தகைய குழந்தைத் திருமணத்தினை இரத்து செய்திட மாவட்ட நீதிமன்றத்தில் புகாரினை பதிவு செய்வதோடு மற்றும் குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பெற்று வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், அது குறித்து தெரிவித்திடவும், ஊராட்சித் தலைவர் அவர்களின் தலைமையில், ஊராட்சி அளவிலான குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2017 ஜூன் 24]

### குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள்

1. பொம்மலாட்டம், தெருக்கூத்து, ஊர்வலம் மற்றும் கருத்தரங்கம் போன்ற பல்வேறு முறைகளில் குழந்தைத் திருமணம் தொடர்பான விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுகிறது.

2. குழந்தைத் திருமணம் என்னும் கொடுமையிலிருந்து பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்காக, குழந்தைத் திருமணம் தொடர்பான விளம்பரப்படம் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. மத்திய அரசால் இவ்விளம்பரப் படம் தொலைக்காட்சியில் ஆங்கில துணைத் தலைப்புடன் ஒளிப்பரப்பு செய்யப்பட்டது.

3. பெண் குழந்தைகளின் கல்வியை மையமாக கொண்டு தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. குழந்தைத்திருமணத்தை அடியோடு ஒழித்திடும் நோக்கத்தில் திருமண நிதியுதவித் திட்டங்கள் பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும் போது பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

4. 13 மாவட்டங்களில் யுனிசெப் (UNICEF) நிதி உதவியுடன் குழந்தைத் திருமணத்தை எதிர்த்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.

5. குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் மற்றும் விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சட்டமும் விதிகளும் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன. 2008 ஆம் ஆண்டில் இருந்து தமிழகத்தில் சுமார் 5,037 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

### 2.6 பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

பெற்றோர்கள் தங்களின் வேலை நிமித்தமாக குழந்தைகளைப் பராமரிக்க இயலாத நிலையில் பகல் நேரங்களில் பாதுகாப்பாக பராமரிக்கப்படும் இடம் குழந்தைகள் காப்பகம் ஆகும். தமிழ்நாட்டில் பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கு உதவிட குழந்தைகள் காப்பகங்கள் அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டிற்குக்கீழ்

உள்ள பெற்றோர்களின் 0-5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்கு இணை உணவுடன் கல்வியும் இக்காப்பகங்களில் வழங்கப்படுகிறது.

பணிபுரியும் தாய்மார்களுக்கு மட்டுமல்லாது, நோய்வாய்ப்பட்ட மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பத்தில் உள்ள தாய்மார்கள் வீட்டிலும், வெளியிலும் பல்வேறு பணிகளுக்கிடையில் குழந்தையைப் பராமரிப்பதில் சிரமப்படுவதால், அவர்களுக்கு உதவிடும் வகையில், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மாநில அரசு மானியத்துடன் 6 குழந்தைகள் காப்பகங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கன்னியாகுமரி, சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 4 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. 25 குழந்தைகளுடன் இயங்கும் ஒரு காப்பகத்திற்கு, அரசு மானியமாக ஆண்டொன்றிற்கு ₹25,410 வழங்கப்படுகிறது.

2017-18 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ₹3.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.7 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

இத்துறையின்மூலம் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காக 4 இல்லங்கள் கீழ்க்காணும் மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

1. பிரேமவாசம், காஞ்சிபுரம்
2. ஸ்ரீஅருணோதயம் டிரஸ்ட், சென்னை
3. குழந்தைகளுக்கான குடும்பங்கள், கோயம்புத்தூர்
4. கம்யூனிட்டி ஹெல்த் எஜுகேஷன் சொசைட்டி (CHES), திருவள்ளூர்

தற்போது இல்வில்லங்களில் 137 குழந்தைகளுக்கு தேவையான பராமரிப்பு மற்றும் வசதிகள் அளிக்கப்படுகின்றன. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பராமரிப்பிற்காக ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ₹120 வீதம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## அத்தியாயம்–3

### மகளிர் நலம்

**3.1** பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளைக்களையும் உடன்படிக்கை (Convention on Elimination of all forms of Discrimination Against Women), நீட்டித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (Sustainable Development Goals), தேசிய பெண்கள் மேம்பாட்டுக் கொள்கை மற்றும் மாநிலத்தின் இலக்கு 2023 ஆகியவற்றிற்கேற்ப மாநிலத்தில் உள்ள பெண் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு அதிகாரமளித்திட பல்வேறு முயற்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதில் நாட்டில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

ஆதரவற்ற பெண்கள், விதவைகள், ஆதரவற்ற குழந்தைகள், உதவி தேவைப்படும் முதியோர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கியுள்ளவர்களான மூன்றாம் பாலினர் ஆகியோர் சமூக சமநிலையை அடைந்திடவும் போதுமான சமூகப் பாதுகாப்பினை வழங்குவதற்கும் கவனம் அளிக்கப்படுகிறது. வாழ்வாதாரம் அற்றவர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் கல்வி ஆகியன சேவை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்கள் மூலமாக வழங்கப்படுகின்றன. இதனால் மாநிலத்தில் நலிவுற்ற சமூகத்தினரது சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி அறிவு ஆகியவற்றிற்கான குறியீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், பெண்கள் நலம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், மாநிலத்தின் வளர்ச்சித் திட்டத்தில் முன்னுரிமை பெற்று இருக்கின்றது. திருமண நிதியுதவித் திட்டங்கள், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதுடன் திருமணத்தின் போது பெண்களது பெற்றோர்களுக்கு நிதியுதவியும் வழங்குகிறது. தமிழ்நாட்டில், பெண் கல்வியை மேம்படுத்தி பெண் குழந்தைகளின் பள்ளி இடைநிறுத்தல் விகிதத்தினை குறைப்பதிலும் இத்திட்டங்கள் நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

ஏழை பெண்களின் திருமணத்திற்காக முன்னோடி திட்டமான திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் பட்டதாரி அல்லாதவர்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹25,000-மும்,

பட்டதாரி மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹50,000-மும் 17-05-2011 முதல் 22-05-2016 வரை வழங்கப்பட்டு வந்தது.

23-05-2016 முதல் ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் திருமாங்கல்யம் செய்திட வழங்கப்பட்டு வந்த 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்தின் எடையை உயர்த்தி 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஏழ்மை நிலையிலுள்ள குடும்பத்தினர் அதிக அளவில் இத்திட்டத்தின்கீழ் பயன் பெற்றிட அவர்களது ஆண்டு வருமானமானது ₹24,000-லிருந்து ₹72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சமூகத்தில் ஆதரவற்ற பெண்கள் அவர்களின் குழந்தைகளுடன் பாதுகாப்பான சூழலில் வசிப்பதையும், அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்வதையும் உறுதி செய்யும் வகையில், அரசால் சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த சேவை இல்லங்களில் ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு, உறைவிடம், உணவு, கல்வி, திறன் மேம்பாட்டு பயிற்சி போன்றவை வழங்கப்படுவதால் அவர்கள் சமூகத்தில் நம்பிக்கையுடனும், கண்ணியத்துடனும் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக வாழ்க்கையை எதிர்நோக்க உதவிகரமாக உள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய மிகவும் நலிவடைந்த நிலையிலுள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து, வருவாயைப் பெருக்கும் வகையில், தொழிற்கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக அவர்கள் சேர்க்கப்பட்டு உகந்த பயிற்சிகள் அளிப்பதன்மூலம், பள்ளி குழந்தைகளுக்கான நான்கு இணை சீருடைகள் தைக்கும் பணி வழங்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள மூன்றாம் பாலினத்தவரின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில், பல்வேறு நலத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்காகவும், பெண்களின் உரிமையைப் பாதுகாக்கவும், பல்வேறு சமூக





சட்டங்கள் இத்துறையின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவை வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த புகார்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் மீதான நடவடிக்கைக்கு பெண்களுக்கான மாநில மகளிர் ஆணையம் 1993 முதல் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

### 3.2 திருமண நிதி உதவித் திட்டங்கள்

தமிழகத்தில் பல்வேறு சமூகத்தினரால் மணப் பெண்ணிற்கு திருமணத்தின் போது தங்கத்தினால் திருமாங்கல்யம் அணிவிப்பது என்பது கலாச்சார பழக்க வழக்கமாகும். திருமணத்தில் ஏனைய செலவுகளுடன் தங்கத்தின் விலை பெற்றோர்களுக்கு ஒரு சுமையாகவே உள்ளது. எனவே, ஏழை பெற்றோர்களுக்கு உதவும் பொருட்டும், அவர்கள் தங்களது பெண்களை உரிய வயதில் படிக்க வைப்பதை ஊக்குவிக்கும் பொருட்டும் திருமண நிதி உதவி திட்டங்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏழைப் பெற்றோரின் மகள், ஆதரவற்ற பெண்கள், மறுமணம் செய்து கொள்ளும் விதவையர், விதவையரின் மகள், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் தமிழக அரசால் ஐந்து வகையான திருமண நிதி உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2011-2012-ல் 28% ஆக இருந்த பட்டதாரி பயனாளிகளின் எண்ணிக்கை 2016-2017 ஆம் ஆண்டில் 60% ஆக அதிகரித்துள்ளது.

2016-2017 ஆம் நிதியாண்டில் ஐந்து வகையான திருமண நிதி உதவித் திட்டங்களின்கீழ் 1,52,500 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

#### 3.2.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

18 வயது பூர்த்தி அடைந்த ஏழைப் பெண்களின் திருமணத்தின் போது, திருமண நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில்

பயன்பெற பெண்கள் 10 ஆம் வகுப்பும், பழங்குடி இனத்தவராக இருந்தால் 5 ஆம் வகுப்பு வரையும் படித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியும் வழங்குவதுடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 23-05-2016 முதல் 1 சவரன் (8கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் இறந்து விட்ட நிலையில் மகளுக்கு நேரடியாக இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன் அடைவதற்கு குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹67,078.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்

பெண்களுக்கான மேம்பாடு மற்றும் உரிமைகளை ஏற்படுத்துவதற்கான புதிய ஆரம்பமாக விதவைகள் மறுமணம் செய்து கொள்வதால், இளம் விதவைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வருகிறது. இளம் விதவைகளுக்கு சமூகத்தில் சமூக ஏற்பு மற்றும் கௌரவத்தையும் அளிக்கும் பொருட்டு தமிழக அரசால் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியில் ₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்குவதுடன் 23.05.2016 முதல் 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத் மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹76.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





### 3.2.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்

ஏழை விதவை தாய்மார்களுக்கு அவர்களது மகளின் திருமணத்திற்கு உதவிடும் வகையில் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விதவையர் தம் மகளுக்கு திருமணம் செய்ய உதவிடும் வகையில் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000-ம், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000-ம், அத்துடன் 23-05-2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத் மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹3,771.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்

ஆதரவற்ற ஏழை பெண்களின் திருமணத்திற்கு உதவி புரியும் பொருட்டு அரசால் அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டதாரியல்லாத பெண்களுக்கு ₹25,000-ம், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000-ம், திருமண நிதியுதவியாக வழங்கப்படுவதுடன் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவதற்கு வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹373.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.5 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்

சாதி அடிப்படையிலான வேறுபாடுகளைக் களையவும் சமுதாயத்தினரிடையே சமூக சமத்துவத்தை ஊக்குவிக்கும் பொருட்டும் அரசால் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்

[2017 ஜூன் 24

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கலப்புத் திருமணம் செய்யும் தம்பதியரில் பட்டதாரியல்லாதோருக்கு வழங்கப்படும் ₹25,000 நிதி உதவித் தொகையில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதி உதவித் தொகையில், ₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்குவதுடன் 23-05-2016 முதல் 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் பெற கல்வித் தகுதி மற்றும் வருமான வரம்பு எதுவும் தேவையில்லை.

### கலப்புத் திருமணத்தின் வகைகள்

### திட்டம் – I

இத்திட்டத்தின்கீழ் பயன் பெற கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தவராகவும், மற்றொருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

### திட்டம் – II

இத்திட்டத்தின்கீழ் பயன் பெற கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் முற்பட்ட அல்லது இதர வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத் மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1,100.41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3 அரசு சேவை இல்லங்கள்

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்டு, குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு, பராமரிப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசால் அரசு சேவை இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்று என தமிழகத்தில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.



2017 ஜூன் 24]

பல்வேறு சூழல்களால் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பெண்கள் அவ்விடத்திலேயே குழந்தைகளுடன் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இந்த சேவை இல்லங்கள், இல்ல உறைவாளர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை அளிக்கின்றன. இவர்களில் பெண் குழந்தையாக இருந்தால் 12 ஆம் வகுப்பு வரையிலும், ஆண் குழந்தையாக இருந்தால் 5 ஆம் வகுப்பு வரையிலும் சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம். உள்ளுறைவோர்களது திறமையை மேம்படுத்துவதற்காக தொழிற்கல்வி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆங்கிலம் பேசும் திறன், கணினி பயிற்சி, எதிர்காலத்தில் உயர் கல்வி படிப்பது, வாழ்க்கைத் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் இவ்வில்லங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் ஏழைப் பெண்கள் அதிகளவில் பயனடையும் வகையில் ஆண்டு வருமானம் ₹24,000-லிருந்து ₹72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹524.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.1 பெண்களுக்கான உயர்கல்வித் திட்டம்

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ஊக்கப்படுத்துவதோடு தொழிற்சார் கல்வி பயின்றிட ₹50,000 மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்திட ₹30,000 என்று நிதியுதவி அரசால் வழங்கப்படுகின்றது.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத் மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹33.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.2 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் காப்பகத்தில் மேல்நிலைப் படிப்பு முடித்த மாணவிகள்,

[2017 ஜூன் 24

அவர்களின் வாழ்க்கை தரம் உயர்வு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு தயார்படுத்தும் வகையில் தாம்பரத்தில் உள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கப்படுகின்றனர். இந்த இல்லத்தில் ஒவ்வோர் ஆண்டும் 40 மாணவிகள் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சி மாணவிகளை கல்வி சுற்றுலா அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படுவதால் வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், அருங்காட்சியகங்கள், அறிவியல் கண்காட்சிகள், உயிரியல் பூங்காக்கள், கேளிக்கைப் பூங்காக்கள் போன்ற இடங்களை பார்வையிட வாய்ப்பு ஏற்படுகிறது. சேவை இல்லத்தில் தங்கி கல்வி பயிலும் பெண் குழந்தைகளுக்கு கூடுதலாக இடவசதி ஏற்படுத்த புதிய துயிற்கூடம் உள்ளுறைவோர்கள் தங்கும் பொருட்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு ₹1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹9.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.4 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்

நகரம் மற்றும் பேரூர்களில் இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால் அவர்கள் தங்களுடைய பணி நிமித்தமாக தங்கள் வீட்டை விட்டு வெளியே தங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அதனால், நகரங்களில் அவர்களுக்கு தங்களால் இயன்ற வாடகையில் அச்சமில்லாமல் பாதுகாப்பான சூழலில் உள்ள தங்கும் விடுதி தேவைப்படுகிறது. மாநிலத்தில், 18 மாவட்டங்களில், 28 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் நடத்தப்படுகின்றன. சென்னையில் மாதம் ₹25,000 வரை பொருளீட்டும் பணிபுரியும் மகளிரும், பிற இடங்களில் ₹15,000 வரை பொருளீட்டும் மகளிரும் இவ்விடுதிகளில் தங்கி பயன்பெற தகுதியுடையவராவர். சென்னையில் உள்ள விடுதிகளில் தங்கிட ₹300-ம் பிற இடங்களில் உள்ள விடுதிகளில் தங்கிட ₹200-ம் மாத வாடகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உணவுக் கட்டணம், மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற செலவினங்கள்



2017 ஜூன் 24]

பகிர்ந்தளித்தல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹117.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.5 மகளிரின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள்

தமிழ்நாடு அரசு மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பல்வேறு சமூக பொருளாதார திட்டங்களை, கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயல்படுத்தி வருகிறது. மகளிருக்கு அதிகார பகிர்வு அளிப்பு என்பது அவர்களுடைய பொருளாதார தேவையினைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்காக அவர்களது திறன் மற்றும் அறிவினை மேம்படுத்துவதன்மூலம் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாகும்.

பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 98 மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள் சமூக நல இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. இவற்றில் 80 மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ / மாணவியர்களுக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மற்றும் இதர பள்ளிக் குழந்தைகளுக்கும் 4 இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதர 18 சங்கங்கள், அலுவலகத்திற்கு தேவையான பதிவேடுகள், ஆவணங்கள், சாக்குகட்டிகள் மற்றும் கயிறு தயாரித்தல் போன்ற பணிகளோடு சீருடைகள் தயாரிக்கும் பணிகளையும் கூடுதலாக செய்து வருகின்றன.

25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அதில் பதிவான உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | கூட்டுறவு சங்கங்களின் வகைகள் | கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 80 | 73,047 |
| 2 | மகளிர் எழுதுபொருள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 15 | 1,017 |
| 3 | இணை உணவு தயாரிக்கும் பெண்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,450 |
| 4 | இதர தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 3 | 1,743 |
| | மொத்தம் | 123 | 77,257 |

தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக ஆவதற்கு சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற பிரிவினர், 18 வயதிற்கு மேற்பட்ட வறுமை கோட்டிற்குகீழ் உள்ள பெண்கள், விதவை பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்கள், தையல் தொழில் தெரிந்தவர்கள் தகுதி உடையவர்களாவர். தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக இருக்கும் பெண்களுக்கு ஆண்டு முழுவதற்கும் நிலையான வருவாயை ஈட்டித்தரும் வகையில் வேலைவாய்ப்பினை அளிக்க இத்திட்டம் உறுதுணையாக உள்ளது. தமிழக அரசு 2012-2013 ஆம் ஆண்டு முதல் 4 இணை சீருடைகள் வழங்க ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து, 2016-2017 ஆம் கல்வியாண்டில் 43.00 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட 4 இணை சீருடைகள் இம்மகளிர் தையல் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலமாக





தைத்து வழங்கப்பட்டுள்ளது. சீருடை தைப்பதற்கான தையல் கூலி 2011-2012 ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சீருடைகள் தைப்பதற்கென ₹90 கோடி பள்ளிக் கல்வித் துறைமூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பெண் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சீருடை தைத்தல் மற்றும் வழங்குதல் பணியானது அவர்களுக்கு நிலையான கணிசமான வருவாயை ஈட்டித் தர வழிவகுத்துள்ளது.

10% அரசு மானியத்துடன் 15,500 நவீன ரக தையல் இயந்திரங்கள் மகளிர் தையல் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்படி நவீன ரக தையல் இயந்திரங்கள்மூலம் சங்க உறுப்பினர்களின் தைக்கும் திறன் மற்றும் உற்பத்தி திறன் அதிகரித்து வருகிறது.

இந்த சங்கங்கள் மகளிரின் சமூக நிலையை மேம்படுத்தும் மற்றும் நலிவுற்ற நிலையில் உள்ள மகளிரின் பொருளாதார நிலையை உயர்த்தும் சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சேலம் மற்றும் திருவண்ணாமலையில் பழங்குடியின பெண்களுக்கென செயல்படும் தையல் பயிற்சி மையத்தின்மூலம் ஆண்டுதோறும் 35 பழங்குடியினப் பெண்கள் தையல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.6 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், ஆண் / பெண் மாற்றுத் திறனாளிகள், சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவிடும் வகையில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின்மூலம், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் மோட்டார் பொருத்தப்பட்ட கூடுதல் வசதிகள் பொருந்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

[2017 ஜுன் 24

இத்திட்டத்தின்கீழ் ஏழை மக்கள் பயன் பெறுவதற்கு ஏதுவாக ஆண்டு வருமான உச்ச வரம்பு ₹24,000-லிருந்து ₹72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹135.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.7 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும் பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்ட ரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மனுதாரர்களுக்கு உடனடியாக தீர்வு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பெண்களுக்கான குறிப்பிட்ட இடர்பாடுகளை விசாரணை செய்திடும் வகையிலும் இவ்வாணையரகத்திற்கு தலைவி மற்றும் 9 உறுப்பினர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய மாற்றங்கள் மேற்கொள்ளுமாறு அரசுக்கு பரிந்துரை செய்திடும்.

பணிபுரியும் இடம் மற்றும் குடும்பத்தில் எதிர்கொள்ளும் அனைத்து வன்கொடுமைகளிலிருந்து பெண்களைப் பாதுகாத்திடவும், பாலின சமத்துவத்தை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் இவ்வாணையமானது வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013 ஆகியவை செயல்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

#### 3.7.1 மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்

1. இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சட்ட பிரிவுகள், பாதுகாப்புகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்கள் குறித்தான விவரங்களைக் கவனித்தல்.

2. பெண்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிறுவனங்கள்மூலம் முறையாக செயல்படுத்தப்படாதபோது அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.



2017 ஜுன் 24]

3. பெண்களுக்கு நீதி கிடைக்க தவறும்பட்சத்தில் தேவையான நீதியைப் பெறுவதற்கு உரிய சட்டத்திருத்தம் மேற்கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்தல்.

4. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும் நிகழ்வுகள்மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள்மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளவாறு பாதுகாப்பிற்கான உத்திரவாதம் வழங்கப்படாத நிலையிலும், பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மகளிர் ஆணையத்தை நேரிடையாக அணுகலாம். தேசிய மகளிர் ஆணையம் மூலமாக பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் ஒருங்கிணைத்து நடத்துகிறது.

### 3.8 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாட்டில் 1954 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக பின்வரும் நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது:-

1. மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

2. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் சேவைகளின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்துதல்.

3. மாநில மற்றும் மத்திய சமூகநல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதைக் கண்காணித்தல்.

தமிழ்நாடு சமூகநல வாரியம் ஒரு தலைவரையும் 30 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. கல்வி மற்றும் பயிற்சி மூலமாக பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், கூட்டு முயற்சி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்திற்கு

வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை தனது சேவைகளின்மூலம் தமிழ்நாடு சமூக நல வாரியம் ஊக்கப்படுத்தி உதவி செய்கிறது.

**3.8.1 தமிழ்நாடு சமூகநல வாரியத்தின்மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியம்**

மகளிர் மற்றும் குழந்தைகள் முன்னேற்ற பணியில் ஈடுபட்டுள்ள, சங்கங்கள் பதிவுச் சட்டம் அல்லது பொது அறக்கட்டளை சட்டத்தின்கீழ் பதிவு செய்து, குறைந்தபட்சம் 3 வருடங்கள் சிறப்பாக செயல்படும் 200 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்குவதற்கு தமிழ்நாடு சமூக நல வாரியத்திற்கு ₹10.00 இலட்சம் வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொண்டு நிறுவனத்திற்கும் மாநில அரசின் 50% பங்காக ₹5,000 மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டிற்கு ₹10.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.9 குடும்ப ஆலோசனை மையம் (மாநில அரசின் நிதி உதவி)**

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. இம்மையம் வரதட்சணை கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்ப பிரச்சனைகள் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தகுந்த ஆலோசனையும் வழங்கி வருகின்றது. தற்போது 6 குடும்ப ஆலோசனை மையங்கள், சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. 2017-2018 ஆம் ஆண்டிற்கு ₹4.80 இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவிமூலம் நடத்தப்படும் 3 குடும்ப ஆலோசனை மையங்கள் அனைத்து மகளிர் காவல் நிலையங்களைப் பயன்படுத்தி, அதன்மூலம் குடிப்பழக்கம், போதை பழக்கம், வரதட்சணைக் கொடுமை மற்றும் இதர குடும்ப பிரச்சனைகளுக்கு முறையான ஆலோசனைமூலம் சுமூகமாக தீர்க்கப்படுவதோடு, பாதிக்கப்பட்ட பெண்கள் குடும்பத்தில்



உரிய மதிப்போடு வாழ்வதற்கு ஏதுவாக ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. இதற்காக குடும்ப ஆலோசகர்களுக்கு கூடுதல் மதிப்பூதியமாக ஆலோசகர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ₹3,500/- வீதம் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

**மத்திய அரசு நிதியுதவிமூலம் நடைபெறும் திட்டங்கள்**

**குடும்ப ஆலோசனை மையம் (மத்திய சமூக நல வாரியம் மூலம் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்)**

தமிழ்நாட்டில் குடும்ப ஆலோசனை மையம் 1984 முதல் மத்திய அரசால் மத்திய சமூக நல வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 62 மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2016-2017-ல் ₹198.40 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டு 59,520 பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளார்கள்.

62 மையங்களில் 2 மையங்கள் சென்னை (புழல்) மற்றும் வேலூரில் உள்ள மத்திய பெண்கள் சிறைச்சாலையில் செயல்பட்டு வருகிறது, 3 மையங்கள் முறையே காவல் துறை ஆணையரகம், ஆயிரம் விளக்கு மற்றும் பூக்கடையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்மூலம் 2016–2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதியுதவி விவரம்**

| | தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை | மொத்த அலகுகள் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு (இலட்சம்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநில அரசு | 207 | 209 | 17.32 | 8,840 |
| மத்திய அரசு | 267 | 954 | 1,434.55 | 82,170 |

[2017 ஜூன் 24

**இராஜீவ் காந்தி தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் (தமிழ்நாடு சமூக நல வாரியம் மற்றும் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசு திட்டம்)**

பணிக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களுக்கு உதவும் வகையில் அவர்களின் குழந்தைகள் பயனடையும் வகையில் குழந்தைகள் காப்பகம் தொடங்கப்பட்டது. 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர்கள் வெளியிலிருக்கும்போது காலை முதல் மாலை வரை பயிற்சி பெற்ற 2 பணியாளர்களால் கவனிப்பும் பராமரிப்பும் வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு மூன்று வேளை உணவு, பொழுதுபோக்கு மற்றும் கல்வி வசதிகள் அவர்களின் உடல் மற்றும் அறிவு வளர்ச்சிக்காக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2016-2017 ஆம் ஆண்டில் 892 குழந்தைகள் காப்பகங்களிலுள்ள 22,650 குழந்தைகள் பயனடையும் வகையில் மத்திய அரசு ₹1,236.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**3.10 தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம்**

மூன்றாம் பாலினரின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களை சமூக வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஒன்றிணைப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மூன்றாம் பாலினரின் பிரச்சனைகளைப் பல்வேறு நலத் திட்டங்கள்மூலம் தீர்வு செய்வதற்காக அரசு, மூன்றாம் பாலினருக்கான நல வாரியத்தை அமைத்துள்ளது. தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நலவாரியம் மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் அவர்களைத் தலைவராகக் கொண்டு, அவர் உட்பட 11 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 9 அலுவல் சாரா உறுப்பினர்களைக் (மூன்றாம் பாலினர்) கொண்டது.

மூன்றாம் பாலினர் தங்களது வாழ்வாதாரத்திற்காக ஒழுக்கமும் மதிப்புமிக்க வகையில் தொழில் ஒன்றை அமைத்துக் கொள்வதே அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில் முதன்மையானதாகும். மூன்றாம் பாலினர் தங்களது வாழ்வாதாரத்தை, பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அவர்களின் சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவிகித மானியத்துடன் ₹15.00 இலட்சம் வரை வங்கிக் கடன் அளிக்கப்படுகிறது. மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், சோப்பு உற்பத்தி செய்தல், அணை ஆடை உற்பத்தி செய்தல், பால் பொருட்களை உற்பத்தி செய்தல், பயணிகள் ஆட்டோ, சரக்கு ஆட்டோ ஓட்டுதல் மற்றும் துணி வியாபாரம், அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு பொருளாதார செயல்பாடுகளை மூன்றாம் பாலினர் சுய உதவிக் குழுக்கள்மூலம் செய்து வருகின்றனர். பல்வேறு திட்டங்களுக்காக, 442 உறுப்பினர்களைக் கொண்ட 51 சுய உதவிக் குழுக்களுக்கு ₹2.20 கோடி மொத்த உதவித் தொகையில் 25 சதவிகித மானியமாக ₹55.00 இலட்சமும், வங்கிக் கடனாக ₹1.65 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.



2017 ஜூன் 24]

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு, 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினர்களுக்கு உதவிடும் வகையில், மாதாந்திர ஓய்வூதியம் ₹1000 வழங்கும் திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 1,000 மூன்றாம் பாலினர் மாதந்திர ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ் மற்றும் பிற முக்கிய ஆளறி அட்டைகளான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் மற்றும் வீட்டு வசதிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட துறைகளின்மூலம் மூன்றாம் பாலினருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மூன்றாம் பாலினரின் நலத் திட்டத்திற்காக 2017-2018 ஆம் நிதியாண்டில் ₹220.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.11 பெண்களுக்கான நலச் சட்டங்கள்**

மகளிரின் பாதுகாப்பிற்காக கீழ்க்காணும் சமூக நலச் சட்டங்கள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையை முகமையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
2. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும்' சட்டம், 2005 மற்றும் அதன் விதிகள், 2006
3. பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் சீர்படுத்தும்) சட்டம், 2013

[2017 ஜூன் 24

4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015

### 3.12.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

இச்சட்டம் சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பத்தில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய சட்டமாகும். இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது. மேலும் இச்சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்த 60 நாட்களுக்குள் தீர்வுபெற முடியும். இச்சட்டத்தின்கீழ் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தனது கணவர் மற்றும் கணவரைச் சார்ந்த உறவினர்கள் மீதும் வழக்கு தொடருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் குடும்பத்திற்குள் ஏற்படும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குகிறது.

### இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- ❖ பிரிவு 17-ன்கீழ் பெண்கள் தனது புகுந்த வீட்டில் வசிப்பதற்கான உரிமையை உறுதி செய்தல்.
- ❖ எதிர் மனுதாரர் குடும்ப வன்முறை புரிவதிலிருந்து தடுத்திடும் பாதுகாப்பு ஆணை.
- ❖ பராமரிப்புச் செலவினத்திற்கான நிதியுதவி வழங்குதல்.
- ❖ வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளை கண்டறிதல்.
- ❖ பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளைத் தற்காலிகமாக தன்னுடன் வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு வழங்குதல்.
- ❖ உணர்வுப் பூர்வமான துன்பங்கள் மன உளைச்சல் மற்றும் காயங்களுக்கு இழப்பீடு வழங்குவதை உறுதி செய்தல்.



2017 ஜூன் 24]

- ❖ வழக்கு பதிவு செய்த 60 நாட்களுக்குள் இடைக்கால ஆணை மற்றும் நீதிமன்ற தீர்ப்பினை பெற்று வழங்குதல்.
- ❖ ஒரே வழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.
- ❖ பாதிக்கப்பட்ட நபர்களுக்கிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005-ன்கீழ் வழக்குகளை பதிவு செய்யலாம்.
- ❖ குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து 30 நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல் முறையீடு செய்யலாம்.

### 3.12.2 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005—ன்கீழ் கிடைக்கும் நிவாரணங்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| பிரிவு 18 | — | பாதுகாப்பு ஆணை |
| பிரிவு 19 | — | கணவர் வீட்டில் தங்குவதற்கான வசிப்பிட ஆணை |
| பிரிவு 20 | — | பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர் தம் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பொருள் உதவி ஆணை |
| பிரிவு 21 | — | குழந்தைகளைத் தற்காலிகமாக வைத்துக் கொள்வது |
| பிரிவு 22 | — | வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீட்டு ஆணை |

### 3.12.3 பாதுகாப்பு அலுவலர்கள்

மனுதாரருடன் உறவு முறையில் உள்ள எதிர் மனுதாரரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறையினை எதிர்த்து வழக்கு பதிவு செய்திட, பாதுகாப்பு அலுவலர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்றத்தை நாடிட பாதுகாப்பு அலுவலர் உதவி புரிவார். இவர் உரிய நீதிமன்றத்தின்மூலம் தேவையான நிவாரணம் பெறுவதற்கு

[2017 ஜூன் 24

சட்ட உதவியை மனுதாரருக்கு அளிப்பதை உறுதி செய்வார். மேலும் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் ஆணைகளை காவல் துறையின் உதவியோடு செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பார். ஒவ்வாரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பாதுகாப்பு அலுவலர்கள் இருப்பார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள் இச்சட்டத்தின்கீழ் நேரடியாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலோ அல்லது சேவை அளிக்கும் நிறுவனத்திலோ அல்லது அருகிலுள்ள காவல் துறையிலோ புகார் மனு அளிக்கலாம்.

### 3.12.4 சேவை அளிப்பவர்கள்

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005-ன்கீழ் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த நபர்கள் சேவை அளிப்பவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இச்சட்டத்துடன் தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நிவாரணமும் பெற்றுத்தர உதவி செய்கின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குடும்ப நிகழ்வு அறிக்கை பதிவு செய்வதில் உதவுதல், தங்களது குழந்தைகளுடன் தங்குவதற்கு பாதுகாப்பான குறுகிய கால உறைவிடம் பெற்றுத் தருதல், ஆலோசனை மற்றும் தேவையெனில் மருத்துவ வசதி வழங்குதல் போன்ற உதவிகளை செய்கின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் சுயமாக வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக தொழிற்பயிற்சி பெறவும் உதவி செய்கின்றனர். ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் என்றும் சென்னை மாவட்டத்திற்கு இரு சேவை அளிப்பவர்கள் என்று மொத்தம் 33 சேவை அளிப்பவர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 3.12.5 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மருத்துவ வசதிகள்

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005–ஐ செயல்படுத்திட அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்படி தமிழகத்தில் 98 பாதுகாப்பு இல்லங்கள் அறிவிக்கை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிடும் வகையில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், தொழிலாளர் காப்பீட்டு நிறுவன மருந்தகங்கள் போன்றவற்றை சேர்த்து மொத்தம் 1,849 மருத்துவமனைகள் 'மருத்துவ வசதி மையங்களாக' அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.



2017 ஜூன் 24]

## 3.13 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டதுடன் தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. வரதட்சணை தடுப்பு விதிகள், 2004-ன்படி மாவட்ட சமூக நல அலுவலர்கள், வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு, அவர்கள்மூலம் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்த அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வரதட்சணை தொடர்பாக மாவட்ட சமூக நல அலுவலர்களால் நேரடியாக பெறப்படும் புகார் மனுக்கள் மற்றும் காவல் துறையின் மூலம் பெறப்படும் புகார் மனுக்கள் ஆகியவை வரதட்சணை தடுப்பு அலுவலர்களால் விசாரிக்கப்படுகின்றன. புகாரின் உண்மைத் தன்மை மாவட்ட சமூக நல அலுவலர்களால் கண்டறியப்பட்டு, அதன் அடிப்படையில் வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961-ன்கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு காவல் துறைக்கு / நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் நவம்பர் 26 ஆம் நாள் வரதட்சணை தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றையதினம், மாவட்ட சமூக நல அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

## 3.14 தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014

வீட்டை விட்டு வெளியில் தங்கியுள்ள குழந்தைகள், பெண்கள், பணிபுரியும் மகளிர் ஆகியோர்களின் பாதுகாப்பினை அதிகப்படுத்தவும், அவர்களுக்கு எதிரான வன்முறை செயல்களை தடுக்கவும், குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் பெண்கள் தங்கும் இல்லங்கள், விடுதிகள் மற்றும் ஏனைய பிற தங்கும் இடங்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 அரசால் இயற்றப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015, தமிழ்நாடு அரசிதழில்

அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற இல்லங்கள் மற்றும் விடுதிகளை பதிவு செய்யும் அதிகாரி மாவட்ட ஆட்சியரே ஆவார். தேவையின்றி குழந்தைகளை இல்லத்தில் வைத்திருப்பதை குறைப்பதும், விடுதிகளில் தங்கி பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் இச்சட்டத்தின் நோக்கமாகும்.

### 3.15 மாநில பெண்கள் வள மையம் (SRCW)

பெண்களின் ஒட்டுமொத்த திறன் மேம்பாட்டினை முதன்மை நோக்கமாக கொண்டு, தேசிய பெண்கள் மேம்பாட்டிற்கான குழுமம் விழிப்புணர்வு உருவாக்கும் நிகழ்ச்சிகள் வழியாக பெண்களை மையமாக கொண்ட பிற திட்டங்களை ஒருங்கிணைத்து மாநில பெண்கள் வள மையத்தினை சமூக நல இயக்ககத்தில் செயல்படுத்தி வருகிறது. மாநில பெண்கள் வள மையம் இந்திய அரசின் கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை 2012 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது:—

### 3.15.1 சகி – (ஒன் ஸ்டாப் சென்டர்) Sakhi-(One Stop Centre)

தனியார் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒருங்கிணைந்த அவசர மற்றும் அவசரம் அல்லாத உதவிகளான மருத்துவம், சட்டம், மன நல மேம்பாடு மற்றும் கலந்தாய்வு ஆகியவற்றை பெற்றுத் தருவது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். அரசால் முன்னோடி திட்டமாக சென்னையில் சகி தொடங்கப்பட்டுள்ளது. இம்மையம் துயருறும் சூழலில் உள்ள பெண்களுக்கு ஆலோசனை, மருத்துவம், சட்ட உதவி மற்றும் குறுகிய கால தங்கும் வசதிகள் ஆகியவற்றை வழங்குகிறது.

### 3.15.2 பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Women Help Line)

உதவி மற்றும் தகவல் தேவைப்படும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24 மணி நேர இலவச கட்டணமில்லா தொலைபேசி சேவை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நெருக்கடி மற்றும் நெருக்கடி அல்லாத நிகழ்வுகளில் உரிய முகமைகளான காவல் துறை / மருத்துவம்/ விரைவு ஊர்தி சேவை/ மாவட்ட சட்ட ஆணைக் குழு / பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் எளிதில்





அணுகுவதற்கு வழிவகை செய்கிறது. இவ்வாண்டில் சென்னையில் சகி (ஒன் ஸ்டாப் சென்டர்) பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

### 3.15.3 கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டம் (VCFS)

மாநிலத்தில் அனைத்து துறைகளிலும் மகளிருக்கு முழுமையாக அதிகாரமளிப்பதற்கு பாடுபடுவது இதன் முக்கிய நோக்கமாகும். இது, மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை முனைப்புடன் ஒருங்கிணைப்பதன் வாயிலாக பாலின உணர்வு குறித்த திட்டங்கள், சட்டங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு, மகளிருக்கு அதிகாரமளிக்கும் விவகாரங்களில் ஈடுபடும் அரசுக்கும், ஏனைய பொறுப்பாளர்களுக்கும் உதவுகிறது. தமிழ்நாட்டில் கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கடலூர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 3.15.4 பூர்ண சக்தி கேந்திரா (Poorna Sakthi Kendra)

அடித்தட்டு அளவில் உள்ள பெண்களுக்கு சேவைகளை வழங்குவதும், தரத்தினை ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசில் தேசிய பெண்கள் மேம்பாட்டுக் குழுமத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள சேலம் மாவட்டத்தில் 10 கிராம பஞ்சாயத்துகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் மாவட்டத்தில் உள்ள கிராம மற்றும் வட்டார அளவில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் ஒருங்கிணைப்பு சேவைகள் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.16 சுவதார் கிரஹ்

‘சுவதார் திட்டம்’ மற்றும் ‘குறுகிய கால தங்கும் இல்லங்கள்’ ஆகிய திட்டங்களை ஒன்றிணைத்து ‘சுவதார் கிரஹ்’ என்ற புதிய திட்டம் மத்திய அரசால் 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்ட 26 குறுகிய கால தங்கும் இல்லங்களும் சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த 12 சுவதார் இல்லங்களும் இணைக்கப்பட்டு சமூக நல இயக்ககத்தின்கீழ் சுவதார் கிரஹ்

இல்லங்களாக செயல்பட்டு வருகின்றன. தற்போது மாநிலத்தில் 38 சுவதார் கிரஹ் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் துயருறும் சூழ்நிலையில் உள்ள பெண்களுக்கு தங்குமிடம் மற்றும் பயிற்சி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லமும் 30 பெண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் மத்திய, மாநில அரசுகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கிடையே 60:30:10 என்ற நிதி பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.17 மாநில விருதுகள்

பெண்களுக்காக உலகம் முழுவதும் மார்ச் 8 ஆம் தேதி உலக மகளிர் தினமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில், இத்துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவ்வையார் விருது எனும் உயரிய விருது ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு 8 கிராம் (22 காரட்) எடையுள்ள தங்கப்பதக்கம், ₹1.00 இலட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகிறது.

பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த சமூக சேவகி மற்றும் பெண்களுக்காக சிறப்பாக தொண்டாற்றிய சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது. சிறந்த சேவகிக்கு 10 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கப்பதக்கம், சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ₹50,000 ரொக்கப் பரிசுடன் சால்வை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்படுகின்றன.





## அத்தியாயம் – 4

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

4.1 சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. உணவளிப்பதன்மூலம் பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதிசெய்திடவும், குழந்தைகளின் ஊட்டச்சத்தினை அதிகரிக்க வேண்டியும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1982-ல் தொடங்கப்பட்டது. பசியோடு உள்ள குழந்தையாலும், ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தையாலும் படிப்பின்மீது கவனம் செலுத்த இயலாது என்ற காரணியின் அடிப்படையில், அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின்கீழ் செயல்படும் சிறப்பு பயிற்சி மையங்கள், மதரசாக்கள் மற்றும் மக்தப்களில் பயிலும் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கும் மற்றும் உயர்துவக்கப்பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்மூலம் சமைத்து சூடான இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது.

### 4.2 இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்

1. அனைவருக்கும் ஆரம்ப கல்வியினை உறுதி செய்திடும் பொருட்டு, பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடை நிற்றலை குறைத்தல்
2. வறுமையால் வாடும் குழந்தைகளுக்கும் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துதல்
3. ஏழ்மையில் வாடும் பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்கப்படுத்துதல், முறைப்படுத்துதல் மற்றும் முறையான கல்வி வழங்குதல்
4. வேலைவாய்ப்பு வழங்குவதன்மூலம் பெண்களின் நிலையை மேம்படுத்தி முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்

## 4.3 திட்டத்தின் உட்கூறுகள்

(i) 5 முதல் 9 வயதிற்குட்பட்ட துவக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10 முதல் 15 வயது வரையிலான உயர் துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும், வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 220 நாட்கள், பள்ளி வளாகத்திற்குள்ளேயே சூடான, சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

(ii) தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய 16 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வருடத்தில் 312 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

(iii) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை துவக்கப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு, நாளொன்றுக்கு 100 கிராமும், 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை உயர் துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராமும் என்ற அளவில் சத்துணவு சமைப்பதற்காக அரிசி பயன்படுத்தப்படுகிறது.

## 4.4 தமிழகத்தில் சத்துணவுத் திட்டத்தின் கால முறை வளர்ச்சி

சத்துணவுத் திட்டமானது, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1-7-1982 அன்று 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5 வயது முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப் பள்ளி பயிலும் குழந்தைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்டது. பின்னர் 15-09-1982-இல் நகர்ப்புற பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டதோடு, 15-09-1984 அன்று 10 வயது முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.





| | |
|---|---|
| 15-9-1984 | 10 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது |
| 15-09-1982 | நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப் பட்டது. |
| 01-07-1982 | 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5 முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப்பள்ளி பயிலும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டது. |

## 4.5 நிர்வாகக் கட்டுப்பாடு

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள பள்ளி சத்துணவு மையங்கள், சென்னை மாவட்டம் மற்றும் 31 மாவட்டங்கள் அனைத்தும் சமூக நல இயக்குநரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை மாவட்டங்களில் செயல்படுத்தும் மாவட்ட அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தவர்கள். சென்னை மாவட்டத்தை பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சியின் கூடுதல் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலரின் ஆலோசனைபெற்று இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கான முன்பருவ கல்வி சத்துணவு மையங்கள், இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களது நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றது.

## 4.6 பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகள் விவரம் -2017-2018

26,810 சத்துணவு மையங்களில் (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) பயிலும் 26,18,063 துவக்கப்பள்ளி பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

16,064 சத்துணவு மையங்களில் (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) பயிலும் 20,63,766 உயர்துவக்கப்பள்ளி பயனாளிகள் மற்றும் 9 முதல் 10ஆம் வகுப்பு வரை 6,41,770 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். 269 தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் 7,612 பயனாளிகளும் பயன்பெற்று வருகின்றனர். ஆக மொத்தம் 43,143 பள்ளி சத்துணவு மையங்களில் 53,31,211 பயனாளிகள் 2017-2018 ஆம் ஆண்டில் பயன்பெற்று வருகின்றனர்.

### 4.6.1 பயனாளிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல்

மாவட்ட ஆட்சித் தலைவர்களால், ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும், ஒவ்வொரு மையத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கை, பள்ளிக்கு வந்து மதிய உணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனுப்பும் அறிக்கைகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு 3 மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், கல்வி உரிமைச் சட்டம், 2009-ன்படி, பள்ளிகளில் பயிலும் அனைத்து குழந்தைகளையும் முழுமையாக இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.7 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து வழங்குதல்

### 4.7.1 புதிய கலவை சாதம் வழங்கும் திட்டம் அறிமுகம் செய்தல்

2013 ஆம் வருடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் 13 வகையான புதிய வகை கலவை சாதம் மற்றும் 5 வகையான மசாலா முட்டைகள் இத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றிகரமான துவக்கத்தினைத் தொடர்ந்து அனைத்து சமையலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு, படிப்படியாக, விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டு திட்டம் வலுப்பெறச் செய்யப்பட்டது. 15.08.2014 முதல் இத்திட்டம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பல்வகை கலவை சாத உணவு வகைகள் பின்வருமாறு:





| நாட்கள் | வழங்கப்பட்டு வரும் உணவு வகை | |
|---|---|---|
| | முதல் மற்றும் மூன்றாம் வாரம் | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் |
| திங்கட் கிழமை | வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை | சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்) + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை | கருப்பு கொண்டைக்கடலை புலவு + தக்காளி மசாலா முட்டை | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம் + மிளகு முட்டை | புளி சாதம் +தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை | சாதம், சாம்பார்+வேகவைத்த முட்டை | எலுமிச்சை சாதம் + சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+ மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு | சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

### 4.7.2 சத்துணவில் முட்டை வழங்குதல்

பதிவுபெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதத்துடன் குறைந்தபட்சம் 46 கிராம் எடையுள்ள ஒரு முட்டை அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு 46 கிராம் எடையுள்ள முட்டையில்

[2017 ஜூன் 24

6.12 கிராம் புரதமும், 80 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது. முட்டைக்கான செலவினம் முழுவதும் மாநில அரசே ஏற்கிறது.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000-ஐ பின்பற்றி மாநில அளவில் அக்மார்க் 'A' குறியீட்டான நடுத்தர முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகிறது. குறைந்த பட்சம் 46 கிராம் முதல் அதிகபட்சமாக 52 கிராம் வரை எடையுள்ள முட்டைகள் அனைத்து சத்துணவு மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது. கண்காணிப்பை மேம்படுத்தும் பொருட்டு, உணவு தரம் வாய்ந்த வண்ணங்களைக் கொண்டு முட்டைகளின் மேல் முத்திரை பதிக்கும் வழக்கம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் 1989 ஆம் ஆண்டு முதல் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு முட்டை வழங்கப்பட்டது. பின்னர் 1998 ஆம் ஆண்டு வாரம் ஒரு முறை முட்டை என விரிவுபடுத்தப்பட்டு, 2005, 2007, 2010 ஆம் ஆண்டுகளில் ஒரு வாரத்திற்கு முறையே 2, 3 மற்றும் 5 முட்டைகள் என வழங்கப்பட்டு வருகிறது.

### 4.7.3 சத்துணவில் பயறு வகைகள் அறிமுகம் – கொண்டைக் கடலை / பாசிப் பயறு

ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது வாரங்களில் வரும் செவ்வாய் கிழமைகளில் 20 கிராம் கருப்பு கொண்டைக் கடலை, புலவுடன் சேர்த்து கொண்டைக் கடலை புலவாக வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 72 கிலோ கலோரி சக்தியும் 3.42 கிராம் புரதமும் கிடைக்கிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது வாரங்களில் வரும், வியாழக் கிழமைகளில் 20 கிராம் பச்சைப் பயறு வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 67 கிலோ கலோரி சக்தியும் 4.80 கிராம் புரதமும் கிடைக்கிறது.

### 4.7.4 சத்துணவில் உருளைக் கிழங்கு அறிமுகம்

ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் குழந்தைகளுக்கு மாவு சத்தின் (கார்போஹைட்ரேட்) அளவினை அதிகரிக்கும் வகையில், 20 கிராம் உருளைக் கிழங்கு, மிளகாய்பொடி தூவி வறுத்து வழங்கப்படுவதால் 19.04 கிலோ கலோரி சக்தியும், 0.32 கிராம் புரதமும் கிடைக்கிறது. 2015 ஆம் ஆண்டு முதல் 20 கிராம் உருளைக்கிழங்கிற்கான கொள்முதல் தொகை 16 பைசாவிலிருந்து 40 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.



2017 ஜூன் 24]

### 4.7.5 சத்துணவில் வாழைப்பழம் அறிமுகம்

முட்டை உண்ண விருப்பமில்லாத குழந்தைகளுக்கு, மாற்றாக 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1.2 கிராம் புரதமும், 116 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது. சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூர் சந்தைகளில் வாழைப்பழம் கொள்முதல் செய்யப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

### 4.7.6 சத்துணவில் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் சமையல் எண்ணெய் அறிமுகம்

சுகாதார மேம்பாட்டின் ஒரு பகுதியாக, அயோடின் மற்றும் இரும்புச்சத்து குறைபாட்டினைக் களையும் பொருட்டு இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, சத்துணவில் பயன்படுத்தப்படுவதால் அயோடின் மற்றும் இரும்பு குறைபாடு நோய்கள் நீக்கப்பட்டு தடுக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம், வைட்டமின் A மற்றும் வைட்டமின் B சத்துக்களுடன் செறிவூட்டப்பட்ட பனை எண்ணெய் (Palmolein) அனைத்து சத்துணவு மையங்களுக்கும் வழங்கப்படுகிறது.

### 4.8 தேசிய மதிய உணவுத் திட்டம்

- 1995 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாளன்று மத்திய அரசால் ஆரம்பக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம் தொடங்கப்பட்டது. 1997-1998 ஆம் ஆண்டு, நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. அக்டோபர் 2007 ஆம் ஆண்டு, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஆரம்பக்கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் என்ற பெயர், பள்ளிகளில் "தேசிய மதிய உணவுத் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது. நிதி பங்களிப்பு விகிதாசாரம் ஒட்டுமொத்த நிதியில் 60 சதவிகிதம் மைய அரசின் பங்காகவும் 40 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் வழங்கப்பட வேண்டும் என 2015-2016 ஆம் ஆண்டு முதல் மைய அரசால் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி உணவூட்டுச் செலவினம் மற்றும் பணியாளர்களுக்கு

[2017 ஜூன் 24

வழங்கப்படும் மதிப்பூதியம் மைய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரிசி, அதற்கான போக்குவரத்து செலவினம் மற்றும் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இனங்களுக்காக வழங்கப்படும் நிதி 100% மைய அரசால் வழங்கப்படுகிறது.

- குழந்தைகள் உட்கொள்ளும் மதிய உணவின் ஊட்டச்சத்து அளவினை, துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 450 கலோரியுடன் 12 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருக்க வேண்டும் எனவும், உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 700 கலோரியுடன் 20 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருத்தல் வேண்டும் என மைய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்ட மாநில அரசால் கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டு துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 553.30 கலோரிகளும், 18.12 கிராம் புரதமும், உயர்துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு 733.86 கலோரிகளும், 21.64 கிராம் புரதமும் கொண்ட மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஒரு மெட்ரிக்டன் அரிசி ₹3,000 வீதம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு மெட்ரிக் டன் அரிசிக்கான போக்குவரத்து செலவினமாக ₹750/-ம் வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின்கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு பயனாளிக்கும் ஆகும் தினசரி உணவூட்டுச் செலவினம் ₹4.13 எனவும், 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு, ₹6.18 எனவும் மைய அரசு நிர்ணயித்துள்ளது (பணியாளர் ஊதியம் மற்றும் நிர்வாக செலவினம் நீங்கலாக). இருப்பினும் மாநில அரசு தனது பங்கீட்டான 40 சதவிகிதத்தை விட கூடுதலாக செலவினம் மேற்கொள்கிறது.



2017 ஜூன் 24]

(₹ரூபாயில்)

| வகுப்பு | மதிய உணவு விதிகள் (60:40) | மத்திய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 4.13 | 2.48 | 1.65 | 2.81 | 6.94 |
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 6.18 | 3.71 | 2.47 | 0.86 | 7.04 |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | 100 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்பு | | | | 8.61 |

## 4.9 உணவு பொருட்கள் மேலாண்மை

- சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான உணவுப்பொருட்களை (பருப்பு, எண்ணெய், கருப்பு கொண்டைக்கடலை மற்றும் பச்சைப்பயறு போன்றவற்றை) விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படுகிறது.

- நயமிக்க சராசரி நல்ல தரமான (Fair Average Quality) அரிசியை வழங்க வேண்டியது இந்திய உணவுக் கழகத்தின் பொறுப்பாகும்.

- மைய அரசால் ஒதுக்கப்பட்ட அரிசி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் இந்திய உணவு கழகத்திடமிருந்து எடுக்கப்பட்டு, பின்னர் மாவட்ட அலுவலரின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் சத்துணவு மையங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது.

- இத்திட்டம் மாநில அரசால் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காகும் முழு செலவினமும் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு பயன்படுத்தப்படும் அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் ஒரு மெட்ரிக்டன் ₹10,438 என்ற விலையில் மையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

[2017 ஜூன் 24

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழ்நாடு உப்புக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்து சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்கிறது.
- இவ்வாறு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் உள்ள தொடரமைப்பின் காரணமாக சத்துணவு மையங்களுக்கு தங்குதடையின்றி நிலையான உணவுப் பொருட்கள் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.
- சத்துணவு அமைப்பாளர்களது வங்கி கணக்கில் மின்னணு பரிமாற்றம் (ECS) மூலமாக வரவு வைக்கப்படும் முன்பணத் தொகையினை பயன்படுத்தி சத்துணவு தயாரிப்பதற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்களை உள்ளூரிலேயே வாங்கி செலவினம் மேற்கொள்ள சத்துணவு அமைப்பாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் சத்துணவு அமைப்பாளர்களுக்கு இச்செலவினம் மேற்கொள்வதற்காக துவக்கப்பள்ளி மாணவர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ₹1.17, உயர்துவக்கப்பள்ளி மாணவர் ஒருவருக்கு ₹1.27, வழங்கப்படுகிறது.

## 4.10 உட்கட்டமைப்பு வசதிகள்

### 4.10.1 வைப்பறையுடன் கூடிய சமையலறை

2006-2007 ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு மையம் ஒன்றுக்கு ₹60,000 என நிர்ணயம் செய்து, 100 சதவிகித பங்கினை மைய அரசே வழங்கி வந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பரப்பளவு மற்றும் கட்டுமான செலவினத்தினை அடிப்படையாகக் கொண்டு பகிர்வு அடிப்படையில் நிதி நிர்ணயம் செய்யப்பட்டது. 100 குழந்தைகள் வரை உள்ள பள்ளிகளில் 20 சதுர மீட்டரும், ஒவ்வொரு 100 கூடுதல் குழந்தைகளுக்கு, கூடுதலாக 4 சதுர மீட்டர் பரப்பளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட செலவினத்திற்கு ஆகும் தொகையில் 60 சதவிகிதம் மத்திய அரசும் 40 சதவிகிதம் மாநில அரசும் மேற்கொள்கின்றன.



2017 ஜூன் 24]

2006-2007 முதல் 2012-2013 வரை 28,856 சமையல் கூடங்கள் கட்டுவதற்கு ₹59,035.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31-03-2017 வரை 20,496 கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி கட்டடங்களை முடிப்பதற்கு உண்டான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.10.2 சத்துணவு மையங்களை நவீனமயமாக்குதல்

புகையில்லா சுற்றுச்சூழல் மற்றும் வசதிகளை ஏற்படுத்த, சத்துணவு மையங்களில் எரிவாயு இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மையம் ஒன்றுக்கு எரிவாயு இணைப்பிற்காக ₹22,350 வீதம் சிறப்பினமாக மாநில அரசின் நிதியிலிருந்து முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை சமையல் மேடை கட்டுமானத்திற்கும், எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு பெறுவதற்கும் (பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்றவை உள்ளடங்கியவை) வழங்கப்பட்டுள்ளது. 34,721 மையங்களுக்கு எரிவாயு இணைப்பு கொடுத்து முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 8,422 மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. எரிவாயு அடுப்புகளை கையாளுவது குறித்த பயிற்சிகள் அந்தந்த எரிவாயு முகவர்கள்மூலம் சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 4.10.3 சமையல் உபகரணங்கள்

அனைத்து சத்துணவு மையங்களுக்கும் சமையல் இலகுவாக செய்திட போதுமான சமையல் உபகரணங்களான மூடியுடன்கூடிய சமையல் பாத்திரம், கரண்டி மற்றும் இன்டோலியம் கடாய் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. ஒரு சத்துணவு மையத்திற்கு சமையல் உபகரணங்கள் வாங்குவதற்கு மத்திய அரசால் ₹5,000 ஒரு முறை நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசின் நிதியிலிருந்து எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் சத்துணவுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாநில அரசின் சிறப்பு நிதியிலிருந்து அனைத்து சத்துணவு மையங்களுக்கும் கலவை இயந்திரம் (Mixie) வழங்கப்பட்டுள்ளன.

[2017 ஜூன் 24

## 4.10.4 சில்லரை செலவினம்

சத்துணவு மையங்களைச் சுத்தம் செய்ய தேவையான சோப்பு, துடைப்பம், பினாயில் போன்ற பொருட்கள் வாங்குவதற்கென மையம் ஒன்றுக்கு ₹50 வீதம் சில்லரை செலவினமாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 4.11 வெளிப்படைத் தன்மை மற்றும் கணக்கு காட்டும் பொறுப்புடைமை

அனைத்து சத்துணவு மையங்களிலும் வெளிப்படைத் தன்மை மற்றும் கணக்கு காட்டும் பொறுப்புடைமை ஆகியவற்றை உறுதி செய்யும் பொருட்டு ஒவ்வொரு மையத்திலும் பொதுமக்கள் பார்வைக்காக தகவல் பலகை வைக்கப்பட்டுள்ளது. அத்தகவல் பலகையில் பின்வரும் தகவல்கள் அளிக்கப்படுகின்றன:

i. பள்ளி குழந்தைகளின் வருகை.

ii சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை.

iii தினசரி வழங்கப்படும் உணவுப் பட்டியல்.

iv துவக்கப் பள்ளி மற்றும் உயர்துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு

## 4.12 கண்காணிப்பு அமைப்பு

- சமுதாய பங்கேற்பினை ஊக்கப்படுத்த வேண்டி, சிறப்பு நேர்வாக 2013 ஆம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தில் சமுதாயத் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் இரண்டு முறை, அதாவது, ஜனவரி 26 மற்றும் ஆகஸ்டு 15 ஆம் நாளன்று கிராம சபையில் இத்திட்டம் குறித்த சமுதாயத் தணிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் மாணவர்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த உத்வேகத்துடன் கலந்து கொண்டு திட்ட செயலாக்கம் பற்றி விரிவாக கலந்துரையாடப்படுகிறது.

- சத்துணவு மையங்களை திடீர் ஆய்வு மேற்கொள்ள, ஒவ்வொரு அலுவலர்களுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் போது சமைத்து வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அளவு, உண்ணும் மாணவர்களது எண்ணிக்கை, கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்கள், பதிவேடுகள் பராமரிப்பது போன்றவற்றையும் கண்காணிப்பு செய்திட வேண்டும்.



2017 ஜூன் 24]

- தலைமைச் செயலர் அவர்களின் தலைமையிலான, மாநில அளவிலான வழிப்படுத்தும் மற்றும் கண்காணிப்பு குழு ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து தனித்தனியே கண்காணிக்கப்படுகிறது.

- குழந்தைகளுக்கு மதிய உணவு பரிமாறுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களால் உணவினை சுவைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்கள் "சுவை பதிவேடு" ஒன்றையும் இது தொடர்பாக பராமரித்து வருகின்றனர்.

- மேலாண்மைத் தகவல் தொகுப்பு அடிப்படையில் தேசிய மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மதிய உணவு உண்ணும் பயனாளிகளின் விவரம், சத்துணவு மையங்களின் விவரம், வைப்பறையுடன் கூடிய சமையலறை, நவீன மயமாக்கப்பட்ட சத்துணவு மையங்கள், தண்ணீர் வசதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் வழங்கப்படும் பொருட்கள், பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் நிவர்த்தி செய்தல், சமையல் உதவியாளர்களின் விவரம் போன்றவை அரசின் இணையதளம்மூலம் வட்டாரம் மற்றும் மாவட்டம் வாரியாக மாதந்தோறும் பதிவேற்றப்படுகிறது.

## 4.13 குறை தீர்க்கும் முறை

- குறைகள் ஏதேனும் இருப்பின், அதனை சீராக்கும் பொருட்டு, 29 மாவட்டங்களில் கட்டணமில்லா இலவச தொலைபேசி செயல்பாட்டில் உள்ளது.

- திட்டத்தில் ஏதேனும் முன்னேற்றம் தேவைப்படின் அதன் பொருட்டு பள்ளிகளில், புகார் / ஆலோசனை பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

- குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை சரிசெய்யும் பொருட்டு மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின்

[2017 ஜூன் 24

நேர்முக உதவியாளர்கள் (ச.உ.தி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குறை தீர்க்கும் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 4.14 பயிற்சித் திட்டம்

பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில், ஊட்டச்சத்து, சுகாதாரம், நகம் வெட்டுதல், சமைப்பதற்கு மற்றும் பரிமாறுவதற்கு முன், சோப்பால் கை கால் சுத்தம் செய்தல் போன்ற தன் சுத்தம் பேணுதல் தொடர்பாகவும், சமைக்கும் மற்றும் பரிமாறும் பாத்திரங்களை சுத்தம் செய்வது, உணவுப் பொருட்களைச் சேமிப்பது, சுற்றுப்புறத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பது, கழிவுகளை அகற்றுதல் போன்றவற்றில் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து சத்துணவுப் பணியாளர்களுக்கும் சமையற்கலை வல்லுநர்களால் புதிய பலவகை கலவை சாதங்கள் தயாரிப்பது தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 4.15 பள்ளி சுகாதார திட்டத்துடன் இணைந்து செயல்படுதல்

குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை நோக்கமாக கொண்டு, அனைத்து பள்ளிகளிலும் சுகாதாரத் துறையின்மூலம், மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. பள்ளி சுகாதார திட்டத்தின் உட்கூறுகள் பின்வருமாறு:

i. இரத்தசோகை, பொது சுகாதாரம் மற்றும் இதர சுகாதார பிரச்சனைகளை பரிசோதித்தல் — சுகாதார பராமரிப்பு மற்றும் தொடர் சிகிச்சைக்கான பரிந்துரைக் குறிப்பு

ii. நோய் எதிர்ப்பு, கண் மற்றும் குறிப்பாக பல் பரிசோதனை

iii. நுண் ஊட்டச்சத்துக்களான இரும்பு சத்துடன்கூடிய போலிக் அமிலம் (IFA) மாத்திரைகள் மற்றும் வைட்டமின் ஏ மருந்து வழங்குதல்

iv. குடற்புழு நீக்கம் செய்யும் மருந்துகள்

v. அனைத்து குழந்தைகளுக்கும் தனிப்பட்ட சுகாதார அட்டைகள் பராமரித்து அவர்களின் சுகாதார நிலையினை கண்காணித்தல்.



2017 ஜூன் 24]

### 4.16 சத்துணவுப் பணியாளர்கள்

#### 4.16.1 ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை உள்ள 53.31 இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தில் பயனடைவதற்காக 43,143 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள பள்ளி சத்துணவு மையத்தில் ஒரு சமையல் உதவியாளர் கூடுதலாக நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறையின்படி 25 பயனாளிகளுக்கு ஒரு சமையல் உதவியாளர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு (60:40) பகிர்வின் அடிப்படையில் மதிப்பூதியமாக ₹1,000 வழங்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு, குழந்தைகளுக்கு சுவையான, சத்தான, பாதுகாப்பான உணவுகளை வழங்கும் பொருட்டு மையம் ஒன்றுக்கு சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் நியமனம் செய்துள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள சத்துணவுப் பணியாளர்கள்

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1. | அமைப்பாளர் | 42,423 |
| 2. | சமையலர் | 42,852 |
| 3. | சமையல் உதவியாளர் | 42,855 |
| | மொத்தம் | 1,28,130 |

சத்துணவுப் பணியாளர்களின் பணி நேரம் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஆகும்.

[2017 ஜூன் 24

### 4.16.2 ஊதிய விகிதம்

சத்துணவுப் பணியாளர்கள் "பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு கால முறை ஊதியம் பின்வருமாறு:

| வ. எண் | பதவி | காலமுறை உதியம் | பெற்று வரும் குறைந்த பட்சம் - அதிக பட்சம் ஊதியம் |
|---|---|---|---|
| 1. | சத்துணவு அமைப்பாளர் | ₹2,500-5,000 + தர ஊதியம் ₹500 | ₹7,530 –₹10,478 |
| 2. | சமையலர் | ₹1,300-3,000 + தர ஊதியம் ₹300 | ₹4,380 – ₹5,055 |
| 3. | சமையல் உதவியாளர் | ₹950-2,000 + தர ஊதியம் ₹200 | ₹3,368 – ₹4,380 |

### 4.16.3 சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம்

ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சிறப்பு மாதாந்திர ஓய்வூதியமாக 31-1-2016 வரை ₹1,000 ஒரே சீராக வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை 01-02-2016 முதல் அனைத்து பணியாளர்களுக்கும் ₹1,500ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2017-2018 ஆம் நிதியாண்டுக்கு இவ்வகை செலவினங்களுக்கு ₹8,534.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.16.4 ஒட்டு மொத்த தொகை

ஒட்டு மொத்த தொகையாக ஜனவரி 2016 வரை சத்துணவு அமைப்பாளர்களுக்கு ₹50,000, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ₹20,000 என அவர்கள் ஓய்வு பெறும்பொழுது வழங்கப்பட்டு வந்ததை, பிப்ரவரி 2016 முதல், சத்துணவு அமைப்பாளர்களுக்கு ₹60,000, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ₹25,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



2017 ஜூன் 24]

2017-2018 ஆம் நிதியாண்டுக்கு திட்ட மதிப்பீட்டில் இவ்வகை செலவினத்திற்கு ₹2,097.44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.16.5 பண்டிகை முன்பணம்

ஒவ்வொரு வருடமும் சத்துணவுப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணமாக ₹5,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 10 சம தவணைகளில் அவர்களுடைய மாத சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

2017-2018 ஆம் நிதியாண்டுக்கு இவ்வகை செலவினங்களுக்கு ₹4,774.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.16.6 பொங்கல் போனஸ்

சத்துணவுப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும், ஜனவரி மாதத்தில் பொங்கல் போனஸாக ₹1,000 வழங்கப்படுகிறது.

### 4.16.7 மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி

மலைப் பகுதிகளில் உள்ள சத்துணவுப் பணியாளர்களுக்கு மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி வழங்கப்படுகிறது. வருடம் முழுவதும் மலைவாழ்படியாக அடிப்படை ஊதியம் + தர ஊதியத்தில் 20 சதவிகிதம் கணக்கிட்டும் மற்றும் குளிர்காலப் படியாக அடிப்படை ஊதியத்தில் 5 சதவிகிதம் கணக்கிட்டும் வருடத்தில் 4 மாதங்கள் மட்டும் வழங்கப்படுகிறது.

### 4.16.8 சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்

மாதம் ஒன்றுக்கு ₹20 வீதம் 148 தவணைகளில் ₹2,960 பிடித்தம் செய்யப்பட்டு சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது மேற்படி தொகை மற்றும் அத்தொகைக்கான வட்டியுடன் அரசின் பங்கீடாக ₹10,000 சேர்த்து சிறப்பு சேம நல நிதியாக வழங்கப்படுகிறது.

### 4.16.9 சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் படி

மார்ச் 2015 வரை சத்துணவு அமைப்பாளர்கள் கூடுதலாக சத்துணவு மையங்களை கண்காணிக்க அவர்களுக்கு ₹10 கூடுதல் பொறுப்புப்படியாக வழங்கப்பட்டு வந்ததை, ஏப்ரல் 2015-ம் ஆண்டு முதல் ₹20 ஆக நாளொன்றுக்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

[2017 ஜூன் 24

### 4.16.10 குடும்ப நல நிதி

நிரந்தரப் பணியாளர்களைப் போல சத்துணவுப் பணியாளர்களுக்கும் மாதச் சந்தா ₹60 ஆக உயர்த்தி, அதனை அவர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு ஒட்டுமொத்த தொகை ₹3.00 இலட்சமாக உயர்த்தி இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு குடும்ப நல நிதியாக வழங்கப்படுகிறது.

### 4.16.11 பணியிடையே காலமான சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உடனடி நிவாரணம்

பணியிலிருக்கும்போது இறக்கும் சத்துணவுப் பணியாளர்களது ஈமச்சடங்கிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ₹5,000 பிப்ரவரி 2016 முதல் ₹25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை குடும்ப நல நிதி ₹3.00 இலட்சத்திலிருந்து சரிக்கட்டப்படும்.

### 4.16.12 புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012-ன்படி சத்துணவுப் பணியாளர்களுக்கு (சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்) 01.07.2012 முதல் 30-06-2016 வரையிலான 4 ஆண்டு தொகுப்புக் காலத்திற்கு ₹4.00 இலட்சம் வரை நிர்ணயித்து மாத சந்தாவாக ₹150 வீதம் அவர்களுடைய மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. மே 2015 முதல் ஆண்டு வருமானம் ₹72,000-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கு மாத சந்தாவான ₹150 பிடிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மேலும் “புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டம், 2016” என்ற பெயரில் 01-07-2016 முதல் 4 ஆண்டு தொகுப்புக் காலத்திற்கு விரிவுபடுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.16.13 பொது வருங்கால வைப்பு நிதி

சத்துணவுப் பணியாளர்களுக்கு 01.08.2015 முதல் பொது வருங்கால வைப்புநிதி சந்தாவாக அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 12 சதவிகிதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அவர்களுக்கு 9 இலக்கங்களைக் கொண்ட பொது வைப்பு நிதி கணக்கு எண்ணிற்கு பிறகு “சஊதி” என்ற பின் இணைப்புடன்கூடிய வைப்பு நிதி கணக்கு துவங்கப்பட்டு, இப்பொழுது வைப்பு நிதி கணக்கு அட்டவணைகளை அரசு தகவல் தொகுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.



2017 ஜூன் 24]

### 4.16.14 தற்செயல் விடுப்பு

சத்துணவுப் பணியாளர் அனைவருக்கும் வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படுகிறது.

### 4.16.15 மகப்பேறு விடுப்பு

மே 2015 முதல் திருமணமான பெண் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

### 4.16.16 விருப்ப ஓய்வு

சத்துணவுப் பணியாளர்களை, அவர்களுக்கான ஓய்வூதிய பலன்களுடன் மருத்துவ காரணங்களுக்காக தன் விருப்ப ஓய்வில் செல்ல ஏப்ரல் 2015 முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.16.17 கருணை அடிப்படையிலான பணி நியமனம்

பணியிடையே காலமான சத்துணவு ஊழியரின், தகுதியுள்ள பெண் மற்றும் ஆண் (பெண் வாரிசுதாரர் இல்லாதபட்சத்தில்) வாரிசுதாரர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதித்தளர்வு தேவைப்படும் இனங்களுக்கு மட்டும் விண்ணப்பங்கள் அரசிற்கு அனுப்பப்பட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயலாக்கத்தினைத் தொடர்ந்து மூன்று அளவுருக்களில் நேர்மறையான மாற்றம், அதாவது, பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை, மாணவர்கள் பள்ளி இடைநிற்றலை குறைத்து, முறையாக பள்ளிக்கு வருவதை உறுதி செய்துள்ளது. மேலும் முக்கியமாக கிராம புறங்களில் உள்ள மாணவர்களின் ஊட்டச்சத்து நிலை மேம்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களின் கற்றல் திறன் அதிகரித்துள்ளது. அதன்மூலம் அவர்கள் வகுப்பறையில் அதிக கவனமுடன் கல்வி கற்க வழிவகை செய்துள்ளது. மேலும் சத்துணவு திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் பாலின வேறுபாடுகள் களையப்பெற்று பெண் குழந்தைகளின் கல்வி, உணவு மற்றும் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு 2017-2018 ஆண்டுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையாக ₹1,687.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. (இத்தொகை மைய மற்றும் மாநில அரசின் கூட்டு பங்களிப்புத் தொகையாகும்).

*[2017 ஜூன் 24*

## அத்தியாயம்–5

### முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன்

*5.1 மனிதனின் வாழ்நாள் அதிகரித்து வருவதால் மக்கள் தொகையில் 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இந்திய ஜனத்தொகையில் முதியோர் எண்ணிக்கையின் அளவு அடுத்த நாற்பது ஆண்டுகளில் மேலும் கணிசமாக உயரும் என்றும், மொத்த ஜனத்தொகையில் 60 வயதிற்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டில் 8 சதவீதம் வளர்ச்சியடையும் என்றும், ஐக்கிய நாடுகள் மக்கள் தொகைப் பிரிவின்* (UN population Division 2011) *புள்ளியல் ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. நடப்பு நூற்றாண்டின் அரையிறுதியில் இந்தியாவில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களின் ஜனத்தொகை 323 மில்லியன் எண்ணிக்கையினை தாண்டக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் தொகையில் அதிகரித்து வரும் முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவர்கள் பாதுகாப்பான, கௌரவமிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களது நலனுக்காக செயல்படுத்தி வருகிறது.*

### 5.2 முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

*முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு இடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் என்றும், இத்திட்டம் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களின் உதவியுடன் அவர்களது தார்மீக சமூகக் கடமைகளின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் என்றும் 2011-2012 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.*

*முதற்கட்டமாக, 32 மாவட்டங்களில் (ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இல்லங்கள் வீதம்) 64 முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் 2012-ல் தொடங்கப்பட்டது.*



*2017 ஜூன் 24]*

*ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகமும் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கும் வசதியுடன் செயல்படுகிறது. இதன் மூலம், 1,189 குழந்தைகள் மற்றும் 1,144 முதியோர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் தற்போது 2016-2017 ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் உள்ள 50 ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு தொடர் செலவினம் ₹628.70 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹670.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

### 5.3 மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

*தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட மற்றும் வசிப்பிடமற்ற 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற முதியோர்களின் வாழ்வைப் பாதுகாக்கும்பொருட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பெறும் முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசு மானிய உதவி அளித்து வருகிறது. இவ்வில்லங்களில் உணவு, உறைவிடம், உடை, மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன.*

*தற்போது 19 மாவட்டங்களில் செயல்படும் 21 முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 40 முதியோர்களை பராமரிக்கும் பொருட்டு ₹5.60 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வில்லங்களில் 709 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர். முதியோர் இல்லங்களில் பயனைடையும் முதியோர்களுக்கு உணவூட்டு மானியம் ₹300-லிருந்து ₹1200-ஆக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் பொருட்டு, 2016-2017 ஆம் நிதியாண்டில் ₹75.13 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்திற்கென 2017-2018 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் ₹64.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

[2017 ஜூன் 24

## 5.4 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களை பராமரிப்பதற்கும், அவர்கள் நலன் காக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் உத்தரவாதமும், அங்கீகாரமும் அளித்து உறுதி செய்யப்பட்டுள்ளவாறு, சட்ட ரீதியான பாதுகாப்பை அளிக்கக்கூடிய பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007, இம்மாநிலத்தில் 29-09-2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் பராமரிப்பு மற்றும் நல விதிகள் உருவாக்கப்பட்டு, 31-12-2009 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தனது குழந்தைகள் / வாரிசுதாரர்களிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரி பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட தீர்ப்பாயம் ஒன்று இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் 81 தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின்கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டு வரையில் 2,030 விண்ணப்பங்கள் இச்சட்டத்தின்கீழ் பெறப்பட்டு நாளது தேதி வரையில் 1,547 வழக்குகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

### இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துகளிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்தால் தன்னுடைய பிள்ளைகள் அல்லது சட்டபூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கேட்டுப்பெற இச்சட்டத்தின் பிரிவு 5-ன்கீழ் பின்வருமாறு விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது:



2017 ஜூன் 24]

- இச்சட்டத்தின்கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- மூத்த குடிமக்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்த தவறினால் அபராதம் மற்றும் சிறை தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவுக்கு ஏற்றாற்போன்றோ வழங்க தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரை சிறை தண்டனை அளிக்கப்படும்.
- பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ₹10,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- விசாரணை நிலுவையில் இருக்கும் பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்கு தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம்.
- மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறை தண்டனை அல்லது ₹5,000/- வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனையாக அளிக்கப்படும்.

## 5.5 முதியோர் இல்லங்களுக்கான குறைந்தபட்ச/அத்தியாவசிய தரம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடல்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச/அத்தியாவசிய அளவுகோல்கள் அரசு நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 5.6 சர்வதேச முதியோர் தினவிழா கொண்டாடுதல்

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், அவர்களிடம் உள்ள அனுபவம், அறிவு ஆகியவற்றை வெளிக்கொணரவும், முதியோர் நலன் காக்க ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றி உள்ள தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டும், தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், மூத்த குடிமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். மூத்த குடிமக்களுக்கு ஏற்ற உணவு பற்றிய கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்விழாவில் கலந்துகொள்பவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மூத்த குடிமக்களின் நலன் தொடர்பான துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இவ்விழாவின்போது மூத்த குடிமக்களின் தேவைகள், பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதியோர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனையும் நடத்தப்படுகிறது. இவ்விழாவின்போது முதியோர்களின் நலனுக்காக சேவை புரியும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும், இவ்விழாவில் முதியோர்களுக்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

2017—2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ₹5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.7 முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக்குழுக்கள்

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டத்தினை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறப்பாகவும், இணைந்தும் செயல்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குவதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் மாநில அளவில் தலைமைச் செயலரைத் தலைவராக கொண்டு 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டு உயர் மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று, மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 2 மூத்த குடிமக்கள் உட்பட 4 அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.





## அத்தியாயம் – 6

### ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

குழந்தைகளின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், போதுமான ஊட்டச்சத்தினை வழங்கும் நோக்குடனும் அமைப்பு ரீதியான குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் நீண்ட நெடிய வரலாற்று பின்னணியினைப் பெற்றுள்ளது. 1956-ல் அப்போதைய சென்னை மாகாணத்தில் பள்ளி மதிய உணவுத் திட்டம் செயல்பாட்டில் இருந்து வந்தது. 1961 ஆம் ஆண்டு, கேர் நிறுவனம் (CARE) 30,000 பள்ளிகளில் பயின்ற குழந்தைகள் பயன்பெற உணவுப் பொருள் (உடைத்த கோதுமை) வழங்கியது. 1967-ல் இந்த திட்டம் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு 'மைய சமையல் கூடம்' (Central Kitchen) மூலமாக செயல்படுத்தப்பட்டு வந்தது. 1970—ல் பள்ளி செல்லும் வயதிற்குகீழ் உள்ள குழந்தைகளுக்கான சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

"குழந்தைகளுக்கென செய்யப்படும் முதலீடு நாட்டின் எதிர்கால நலனுக்கான முதலீடு" என்பதை உணர்ந்து, மத்திய அரசின் உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதாரம், ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி மற்றும் சுகாதாரக் கல்வி அளிப்பதேயாகும். இந்தியாவில், 1975 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகளின் 106-வது பிறந்த தினத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக 33 திட்டங்கள் (Projects) சிறு குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் வாழ்க்கைச் சுழற்சி மேம்பாட்டிற்கான தேவைகளைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆரம்ப நிலையிலேயே பாலின பாகுபாட்டை சீரமைத்து கருவிலிருக்கும் பெண் குழந்தைகள், சிறு குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்கள் ஆகியோர் உயிர் வாழ்தல், வளர்ச்சி, முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை மேம்படுத்த சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். தமிழ்நாட்டில் முதன் முதலாக, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமானது சென்னை - நகரம், நிலக்கோட்டை - கிராமம்

[2017 ஜூன் 24

மற்றும் மலைபிரதேசமான - தளி ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 6.1 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினைப் பரவலாக்குதல் – புதிய மையங்களைத் துவக்குதல்

இந்தியா முழுவதுமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினை பரவலாக்கவும், 14 இலட்சம் அங்கன்வாடி மையங்களை செயல்படுத்தவும், மத்திய அமைச்சக கூட்டுக் குழு சிறப்புப் பணி பிரிவின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு புதிய மையங்களை உருவாக்க மக்கள்தொகை, ஊட்டச்சத்து, நிதி தொடர்பான வழிமுறைகளை திருத்தி அமைத்துள்ளது.

மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளின்படி அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான மக்கள் தொகை அளவுகோல் விவரங்கள்:

| திட்டப் பகுதி | முதன்மை அங்கன்வாடி மையம் | | குறு அங்கன்வாடி மையம் | |
|---|---|---|---|---|
| | குறைந்தபட்ச மக்கள் தொகை | அதிகபட்ச மக்கள் தொகை | குறைந்தபட்ச மக்கள் தொகை | அதிகபட்ச மக்கள் தொகை |
| ஊரகப்பகுதி | 400 | 800 | 150 | 400 |
| நகர்புறம் | 400 | 800 | 150 | 400 |
| மலைப் பகுதி | 300 | 800 | 150 | 300 |

தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் 49,499 முதன்மை அங்கன்வாடி மையங்கள், 4,940 குறு அங்கன்வாடி மையங்கள், ஆக மொத்தம் 54,439 மையங்கள் 434 திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இதில் 385 திட்டப்பகுதிகள் ஊரகப் பகுதிகளிலும், 47 திட்டப் பகுதிகள் நகர்ப்புறங்களிலும் 2 திட்டப் பகுதிகள் மலைப் பகுதிகளிலும் செயல்படுகின்றன.



2017 ஜூன் 24]

### 6.2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் தொலைநோக்குப் பார்வை

மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் குறிக்கோள்கள்

1. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான உடல், மன, அறிவு மற்றும் மன எழுச்சி வளர்ச்சி கிடைத்தல்
2. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, குழந்தைநேயம், அதிக கவனத்துடன் சரியான ஆரம்ப கால பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றல் ஆகியவற்றை அளித்தல்
3. ஆண்-பெண் சமநிலையை மேம்படுத்தும் குடும்பம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்துதல்

### 6.3 தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் அமைப்பு

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

↓

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (குழும இயக்குநர்) / மாநில குழந்தை வளர்ச்சி சங்கம்

↓

மாவட்ட திட்ட அலுவலகம் / மாவட்ட குழந்தை வளர்ச்சி சங்கம், 32 மாவட்டங்கள்

↓

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் — 434 திட்டங்கள் (385 ஊரகம், 47 நகரம், மலைப்பிரதேசம் 2)

↓

அங்கன்வாடி மையங்கள் 54,439 (முதன்மை மையங்கள்—49,499 மற்றும் குறு மையங்கள்—4,940)

### 6.4 நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள்

- அனைத்து நிலைகளிலும் அத்தியாவசிய பணிகளை நெறிப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்துதல்

—ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுத்தல், குழந்தைகள் வாழ்க்கையை நெறிப்படுத்தி நல்லமுறையில் துவங்க தேவையானவற்றை உறுதி செய்தல், மூன்று வயதிற்குட்பட்ட ஆரம்ப கால குழந்தைகளின் கவனிப்பு மற்றும் கற்கும் சூழ்நிலைக்கு சிறப்பு கவனம் அளித்தல் போன்றவற்றிற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தைக் குழும இயக்ககத்தின்கீழ் செயல்படுத்துதல்

- அனைத்து நிலைகளிலும் செயல்திறனை அதிகரித்தல்

—திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சாதனைகளை எய்த அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் குழு செயல்பாட்டின் அடிப்படையில் பணிபுரிய பயிற்சிகள் அளித்தல்

- துறைகளுக்கு இடையேயான சரியான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல்

—தரமான நலப் பணிகள் மக்களைச் சென்றடைய சுகாதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய துறைகளுடனான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல் மற்றும் பலப்படுத்துதல்

- சமுதாய விழிப்புணர்வையும், பங்களிப்பையும் அனைத்து நிலைகளிலும் மேம்படுத்துதல்

—பயனாளிகள் மற்றும் பொது மக்களிடையே குழந்தை வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் அளிக்கப்படும் நான்கு அடிப்படை குழந்தை வளர்ச்சிப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அதற்கான தன்னார்வ ஈடுபாட்டையும், சமுதாய ஆதரவையும் மேம்படுத்துதல்.

- குழந்தை வளர்ச்சிப் பணிகளுக்கான தகவல் தளம் மற்றும் அறிவுசார் தளத்தை அமைத்தல்

—ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மேலாண்மை தகவல் அமைப்பை பலப்படுத்துதல். அடிப்படை தகவல் அமைப்புக்காக தகவல் தொடர்புக்கான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல். தகவல்களைப் பரப்ப, பகிர்ந்து கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்





**6.5 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குழுமத்தின்கீழ் வழங்கப்படும் நலப் பணிகள்**

i. ஆரம்ப நிலை குழந்தைகள் கவனிப்பு, கல்வி மற்றும் வளர்ச்சி

- இணை உணவு வழங்கல்
- முன்பருவக் கல்வி அளித்தல்

ii. ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் கவனிப்பு

- பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்.
- மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையை சமுதாய அளவில் மேலாண்மை செய்தல்.

iii. சுகாதாரப் பணிகள்

- உடல் நலப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி வழங்குதலை உறுதி செய்தல்.
- மருத்துவப் பரிந்துரை செய்தல்

iv சமுதாயப் பங்கேற்பு, விழிப்புணர்வு, ஆதரவு திரட்டுதல், தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் அளித்தல்.

**6.6 திட்டத்தின்மூலம் பயன்பெறும் பயனாளிகள்**

i. பிறந்தது முதல் 72 மாதம் முடிய உள்ள குழந்தைகள்

ii. வளரிளம் பெண்கள்

iii. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்

iv. முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்கள்

[2017 ஜூன் 24

### 6.6.1 2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதி மதிப்பீடு பின்வருமாறு:-

(₹கோடியில்)

| மொத்த திட்ட செலவினம் | மத்திய அரசின் பங்கு | மாநிலத்தின் மொத்த பங்களிப்பு |
|---|---|---|
| 1917.55 | 681.88 | 1235.67 |

2017-2018 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்களிப்பு 64% மற்றும் மத்திய அரசின் பங்களிப்பு 36% ஆகும்.

### 6.7 இணை உணவு

பல்வேறு ஊட்டச்சத்து திட்டங்களைச் செயல்படுத்தி “ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலம்” என்ற நிலையை அடைவதற்கு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அங்கன்வாடி பயனாளிகள் அன்றாடம் உட்கொள்ளும் உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உணவு இவற்றிற்கு இடையே ஏற்படும் சக்தி மற்றும் புரதச்சத்து குறைபாட்டினைச் சரிசெய்ய ஏதுவாக கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 6.7.1 ஊட்டச்சத்து மாவு

பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் பயனாளிகளான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், 9 மாவட்டங்களைச் சேர்ந்த வளரிளம் பெண்கள் மற்றும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ள 5 மாவட்டங்களில் உள்ள 3—5 வயதுடைய மிதமான மற்றும் கடும் எடைக்குறைவு உள்ள குழந்தைகளுக்கும் இணை உணவு வழங்கப்படுகிறது.



2017 ஜூன் 24]

சத்துமாவில் அடங்கியுள்ள மூலப் பொருட்கள்

| வ. எண் | மூலப் பொருட்கள் | கிராம் |
|---|---|---|
| 1. | கோதுமை/சோளம்/கம்பு | 52 |
| 2. | வெல்லத் தூள் | 30 |
| 3. | கடலைப் பருப்பு | 12 |
| 4. | முளைகட்டிய கேழ்வரகு | 5 |
| 5. | தாதுக்கள் (ம) வைட்டமின் கலவை | 1 |
| | மொத்தம் | 100 |

### 6.7.2 வார உணவு அட்டவணை

| வயது | வழங்கப்படும் உணவு | இணைஉணவு/ சத்துணவு வழங்கப்படும் அளவு மற்றும் செலவினம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 மாதம் முதல் 1 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு ₹8.30 செலவில் மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் வழங்கப்படுகிறது | 3,65,464 |

[2017 ஜூன் 24

| வயது | வழங்கப்படும் உணவு | இணைஉணவு/ சத்துணவு வழங்கப்படும் அளவு மற்றும் செலவினம் | பயனாளி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 முதல் 2 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + வாரத்திற்கு ஒரு வேக வைக்கப்பட்ட முட்டை (புதன் கிழமை) | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு ₹8.30 செலவில் மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் வழங்கப்படுகிறது | 6,77,959 |
| 2 முதல் 3 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + சத்துணவு + 20 கிராம் கருப்பு கொண்டைக் கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு ₹8.30 செலவில் மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் + சத்துணவு ₹4.79 செலவில் வழங்கப்படுகிறது. | 7,06,121 |



2017 ஜூன் 24]

| வயது | வழங்கப்படும் உணவு | இணைஉணவு/ சத்துணவு வழங்கப்படும் அளவு மற்றும் செலவினம் | பயனாளி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 3 முதல் 5 வயதுடைய குழந்தைகள் | சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) + 20 கிராம் கருப்பு கொண்டைக் கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | ₹4.79 செலவில் நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) வழங்கப்படுகிறது. | 6,52,558 |
| கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | இணை உணவு | நாளொன்றுக்கு ₹10.22 செலவில் 160கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது | 6,59,000 |
| வளரிளம் பெண்கள் | இணை உணவு | நாளொன்றுக்கு ₹8.30 செலவில் 130கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது | 4,12,119 |
| ஓய்வூதியம் பெறும் முதியோர்கள் | சூடான சத்துணவு | நாளொன்றுக்கு 200 கிராம் வழங்கப்படுகிறது | 71 |
| | | மொத்தம் | 34,73,292 |

[2017 ஜூன் 24

### 6.7.3 நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் சத்துமாவின் அளவு மற்றும் செலவின விவரம்

| பயனாளிகளின் விவரம் | நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் ஊட்டச் சத்துமாவின் அளவு (கிராமில்) | தொகை (₹) |
|---|---|---|
| 6 மாதம் முதல் 36 மாத வரையிலான இயல்பு நிலை மற்றும் மிதமான எடை குறைவுடைய குழந்தைகள் | 130 | 8.30 |
| 6 மாதம் முதல் 36 மாத வரையிலான கடுமையான எடை குறைவுடைய குழந்தைகள் | 190 | 12.14 |
| வளரிளம் பெண்கள் | 130 | 8.30 |
| கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 160 | 10.22 |

இணை உணவுக்கான செலவினத்தை மத்திய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதாச்சாரத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றாலும் தமிழக அரசு இந்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாக செலவினம் மேற்கொள்கிறது. மாதந்தோறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சத்து மாவு, உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற பகுப்பாய்வு கூடங்களில் ஆய்வு செய்து அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்பப்படுகிறது.



2017 ஜூன் 24]

### 6.7.4 ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள அதிகமான பகுதிகளில் இணை உணவு வழங்குதல்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஒரு வைரஸ் தொற்று நோயாகும். ஊட்டச்சத்து குறைபாடு குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் கடுமையான தாக்குதலுக்கு ஒரு முக்கியமான காரணியாகும். எனவே, நோய் தொற்று ஏற்படும் அபாயகரமான பகுதிகளில் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கரூர், மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களை ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயால் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் மாவட்டங்களாக கண்டறியப்பட்டுள்ளன. ஊட்டச்சத்துக் குறைபாடு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயிற்கான ஒரு காரணம் என்பதால் அம்மாவட்டங்களில் உள்ள 37 முதல் 60 மாதமுடைய மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 கிராம் வீதம் வருடத்திற்கு 300 நாட்களுக்கு ஊட்டச்சத்து மாவு அங்கன்வாடி மையங்கள் வாயிலாக வழங்கப்படுகிறது.

### 6.7.5 அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் பல்வேறு வகையான கலவை சாதம்

அங்கன்வாடி மையத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்கு அவர்களின் ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனை பெற்று பல்வேறு வகையான கலவை சாத வகைகள் 20-03-2013 முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் அதனுடைய வரவேற்பினைத் தொடர்ந்து, 15-08-2014 முதல் மாநிலத்தின் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

அங்கன்வாடியில் பயன்பெறும் 2 முதல் 5+ வயதுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான உணவு வகைகளின் விவரம் :-

[2017 ஜூன் 24

| கிழமை | உணவு வகைகள் |
|---|---|
| திங்கள் | தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை |
| செவ்வாய் | கலவை சாதம் + கருப்பு கொண்டைக்கடலை (அ) பச்சைப் பயறு |
| புதன் | காய்கறி புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழன் | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளி | பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக் கிழங்கு |
| சனி | கலவை சாதம் |
| ஞாயிறு | வீட்டிற்கு எடுத்து செல்லும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் |

### 6.7.6 செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள்

- இரும்புச்சத்து மற்றும் அயோடின் கலந்த (இருமுறை செறிவூட்டப்பட்டது) உப்பு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும், தமிழ்நாடு அரசு உப்புக் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், வைட்டமின் A மற்றும் வைட்டமின் D சத்துக்களுடன் செறிவூட்டப்பட்ட பனை எண்ணெய் (Palm oil) அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்படுகிறது.
- இணை உணவு மாவில் ஊட்டச்சத்தினை அதிகப்படுத்துவதற்கு நுண் ஊட்டச்சத்துக்கள் மற்றும் கரையும் வைட்டமின்கள் சேர்க்கப்படுகிறது.

### 6.7.7 ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி என்பது கருவாக உருவானது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு



2017 ஜூன் 24]

அவர்களின் உடல், மொழி, அறிவு, சமூக மன எழுச்சி, படைப்பாற்றல் மற்றும் அழகுணர்வைப் பாராட்டுதல் ஆகிய அனைத்து வளர்ச்சிகளுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து அம்சங்கள் ஒருங்கே கிடைக்கப் பெறுவதைப் பூர்த்தி செய்யும் திட்டங்களையும், சலுகைகளையும் குறிக்கிறது. இத்திட்டம் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலைக்கும் தொடர்ச்சி அளிக்கும் வகையில் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தேவைகளான கவனிப்பு, ஆரம்ப கால தூண்டுதல் செயல்பாடுகள், உரையாடுதல் போன்றவைகளையும், 3–6 வயது குழந்தைகளின் வளர்ச்சிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முன்பருவக் கல்வியும், 5-6 வயது குழந்தைகளுக்கு திட்டமிட்ட செயல்பாடுகள் மூலம் பள்ளி செல்ல தயார்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்பது பிரிக்கமுடியாத ஆதாரங்களை உள்ளடக்கி, கவனிப்பு, சுகாதாரம், ஊட்டச்சத்து, விளையாட்டு மற்றும் ஆரம்ப நிலைக் கற்றலைப் பாதுகாப்பாக குழந்தைகள் செயல்படுத்தக்கூடிய சூழ்நிலையில் வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இது அத்தியாவசியமான அடித்தளமாக வாழ்க்கை முழுவதிலும் வளர்ச்சிக்கும் மற்றும் கற்றலுக்கும் மனித முன்னேற்றத்திற்கும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இத்திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மையங்கள் “எழுச்சி மிகு மையங்களாக” மாற்றப்பட்டு 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இனிமையான கற்றல் சூழல், பச்சிளம் குழந்தைகளுக்கு பராமரிப்பு, தூண்டுதல், உரையாடுதல் போன்ற செயல்பாடுகள், 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி, 5-6 வயது முதல் குழந்தைகளுக்கு பள்ளிக்கு செல்ல தயார்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் தினசரி 4 மணி நேரத்திற்கு திட்டமிடப்பட்டு, அர்ப்பணிப்பு உணர்வுடன் குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கை 2013-ன் அடிப்படையில் தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்மூலம் மாநில தேவைக்கேற்ப, குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ற வகையில் சூழ்நிலைக்கேற்ற ஆண்டு பாடத் திட்டம் “ஆடிப்பாடி விளையாடு

பாப்பா" என்ற புதிய பாடத் திட்டம் உருவாக்கப்பட்டு, அது மத்திய அரசாலும் அங்கீகரிக்கப்பட்டு, அங்கன்வாடி மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடத் திட்டம் 11 மாதங்களுக்கு கருத்துகளின் அடிப்படையில் உரிய செயல்பாடுகளை குழந்தைகளுக்கு வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. 12 ஆம் மாதம் நினைவூட்டலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையான கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கான ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்விக்கான பாடத் திட்டப் புத்தகங்கள், குழந்தைகளுக்கான செயல்பாட்டு புத்தகங்கள் மற்றும் ஆய்வு அட்டைகள் ஆகியவை அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2016-2017 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி மையங்களில் பயின்று தொடக்கப் பள்ளிக்கு செல்ல உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், முன்பருவக் கல்வி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.7.8 ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சி

முறைசாரா முன்பருவக் கல்வித் திட்டம் என்பது வலுப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளில் மிகவும் அத்தியாவசியமான பிரிவாக உள்ளது. இது, சிறு குழந்தைகளுக்கான முழுமையான வளர்ச்சியை குறிக்கோளாக கொண்டுள்ளது. ஆரம்பகால கற்றலுக்கான வாய்ப்புகளை வழங்கிடத் தக்க வகையில், அங்கன்வாடி பணியாளர்களின் திறன்களை மேம்படச் செய்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இப்பயிற்சியானது மூன்றடுக்கு முறையில், மாநில, மாவட்ட மற்றும் தொகுதி அளவில் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் "ஆடிப்பாடி விளையாடு பாப்பா" பாடத்திட்டத்தை சிறப்பாக குழந்தைகளுக்கு கற்றல் மற்றும் கற்பிக்கும் முறைகள், குழந்தைகளுக்கான செயல்பாட்டுப் புத்தகங்கள் மற்றும் ஆய்வு அட்டைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் விதம் குறித்த அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

2015-2016 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்படி, ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி குறித்த பயிற்சி முதல் கட்டமாக நடத்தப்பட்டது. இதற்காக ₹387.20 இலட்சம் நிதி செலவிடப்பட்டது.





## 6.8 சுகாதாரம்

### 6.8.1 எடை கண்காணித்தல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பிறந்த மாதம் முதல் 60 மாதம் வரையிலுள்ள குழந்தைகளின் எடை எடுக்கப்பட்டு, அவை உலக சுகாதார நிறுவன வளர்ச்சி பதிவேட்டில் பதியப்பட்டு, வளர்ச்சி வளைவின் அடிப்படையில் அவர்களின் ஊட்டச்சத்து நிலை கண்டறியப்பட்டு, ஊட்டச்சத்துக் குறைபாட்டினை குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 6.8.2 அங்கன்வாடி மையங்களுக்கு எடைக் கருவிகள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களில், அங்கன்வாடி குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் எடையைக் கண்காணிக்க, வயதிற்கு ஏற்ற எடைக் கருவிகள், குழந்தைகள் எடைக்கருவிகள், பார் (Bar) எடைக்கருவிகள் மற்றும் பெரியவர்களுக்கான எடைக்கருவி போன்றவை வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஆண்டும் பழுதடைந்த 15 சதவீத எடைக்கருவிகளை மாற்றி, வேறு எடைக்கருவிகள் வழங்கப்படுகின்றன.

### 6.8.3 இரத்த சோகை

குழந்தைகள் மற்றும் பெண்களிடையே காணப்படும் மிக முக்கியமான பொது சுகாதார பிரச்சினைகளில் இரத்த சோகையும் ஒன்று. ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்த சோகையின் கடுமையான பாதிப்புள்ள பச்சிளம் குழந்தைகள், முன்பருவக் கல்வி குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு இரும்புச்சத்து மாத்திரை/சிரப் வழங்கப்படுகிறது. மேலும், இரத்த சோகை நோயினைச் சமாளிக்க, இரும்புச் சத்து அதிகமான மற்றும் இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட உணவின் முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் குறித்து பெண்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### 6.8.4 அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் மருந்து பெட்டிகள் வழங்குதல்

அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் பாரசிடமால் மாத்திரை/சிரப், வாய்வழி கரைசல் பொட்டலங்கள், பொவிடோன் அயோடின் களிம்பு, பாண்டேஜ் துணி, பஞ்சு, இரும்புச் சத்து

சிரப், குடற்புழு நீக்க சிரப், மல்டி வைட்டமின் சொட்டு மருந்து, ஜிங்க் (துத்தநாகம்) சத்து மாத்திரைகள் மற்றும் பொவிடோன் அயோடின் கரைசல் ஆகியவை அடங்கிய மருந்துப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இவை பொதுவான உடல் உபாதைகளான ஜுரம், பேதி, காயத்திற்கு மருந்து கட்டுவதற்கும், தோல் தொற்றுகளை குணப்படுத்தவும் உதவுகிறது. இம்மருந்துகள் மாநில பொது சுகாதாரத் துறையின் ஆலோசனையின் பேரில் அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

மருந்தை கையாளும் விதம், திறன், அறிவு, காலாவதியாகும் தேதி அதாவது மருந்தை வீணாக்குதல்/தவறாக பயன்படுத்துதல், அளவு, பாதகமான விளைவுகள், குழந்தைகளுக்கு எட்டாத நிலையில் மருந்துகளை பாதுகாப்பாக வைத்தல் போன்ற தகுந்த வழிமுறைகள் அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம்மூலம் மருந்துகள் பெறப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. உயர் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

2017-2018 ஆம் ஆண்டிற்கு அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கிட ₹5.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.8.5 தடுப்பூசித் திட்டம்

ஒரு நபர் தொற்றுநோயால் பாதிக்கப்படும்பொழுது, அத்தொற்றினை தடுப்பதற்கு தடுப்பூசி போடப்படுகிறது. இத்தடுப்பூசி அடுத்தடுத்த தொற்றுகள் அல்லது நோய்களுக்கு எதிராக அந்த நபரை பாதுகாப்பதற்கும், உடலிலுள்ள நோய் எதிர்ப்பு அமைப்பினை தூண்டுகிறது. துணை சுகாதார நிலையத்தில் உள்ள கிராம சுகாதார செவிலியர் மற்றும் அங்கன்வாடி பணியாளர் இருவரும் இணைந்து கர்ப்பகால பராமரிப்பு மற்றும் தடுப்பூசிப் பணிகள் போன்றவற்றில் பயனாளிகளை திரட்டி ஊக்கமளித்து வருகின்றனர். மேலும் அங்கன்வாடி பணியாளர் விடுபட்ட குழந்தைகளைக் கண்டறிந்து, கிராம சுகாதார செவிலியருக்கு துணையாக உதவி செய்து வருகிறார். கிராமப்புற மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவைகள் கிடைக்க செய்வதில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மிகவும் பங்கு வகிக்கிறது.





குழந்தை பிறந்தவுடன் அல்லது குழந்தைக்கு ஒரு வயது ஆவதற்கு முன்பு காசநோய் தடுப்பூசி (BCG) வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி குழந்தைகளுக்கு தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி, மஞ்சள்காமாலை–பி, ஹிமோபிளஸ் இன்புளுயன்ஸா-B (நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல்) ஆகிய ஐந்து கொடிய நோய்களைத் தடுக்கும் வகையில் ஒரே தடுப்பூசி 21-12-2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

தட்டம்மை மற்றும் ரூபெல்லா நிகழ்வுகளை குறைப்பதற்கென, தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி முகாம் சுகாதாரத் துறையினருடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மைய பயனாளிகள் 100 சதவிகிதம் பயன்பெறும் வகையில், மேற்பார்வையாளர்கள், பணியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஊக்கம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

### 6.9 முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களில் முறைசாரா மற்றும் விளையாட்டு மூலமாக 2 முதல் 5 வரையுள்ள குழந்தைகளுக்கு மழலையர் கல்வி அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் குழந்தைகளின் உடல், மொழி, அறிவு, சமூக மன எழுச்சி மற்றும் அழகுணர்வைப் பாராட்டுதல் ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கு ஏற்ற கற்றல் சூழலை வழங்குவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அனைத்து மையங்களுக்கும் முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இக்கல்வி உபகரணங்களைக் கையாள்வது பற்றி அங்கன்வாடி பணியாளர்களுக்கு உரிய பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய முன்பருவக் கல்வி குழந்தைப் பராமரிப்புக் கொள்கை, 2013-ன்படி அங்கன்வாடி மையங்களை “எழுச்சிமிகு முன்பருவ குழந்தை வளர்ச்சி மையங்களாக” மாற்றுவதற்கான செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2017-2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ₹15.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.10 அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளை மேலும் ஊக்கப்படுத்தும்

பொருட்டும், ஊட்டச்சத்து அளித்து, முன் பருவ கல்வி மற்றும் முறைசாரா கல்வி ஆகியவற்றினை வழங்குவது மட்டுமல்லாமல், அக்குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு தவறாது அனுப்பிட ஊக்கப்படுத்தும் வகையிலும், 2012-2013 ஆம் ஆண்டு, முன்னோடித் திட்டமாக மைய குழந்தைகளுக்கு ஒரு இணை வண்ணச் சீருடை ₹125 செலவில் இரண்டு இணை வண்ணச் சீருடைகள் சென்னை, வேலூர், தேனி, திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் வண்ணச் சீருடை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் சிறப்பாக நடைமுறைபடுத்தப்பட்டதன் அடிப்படையில், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களுக்கும் கூடுதலாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3,74,243 குழந்தைகள் பயனடையும் வகையில் முழுமையான தமிழக அரசு நிதியாக ₹9.36 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 6.11 அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள்

### 6.11.1 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் பல்வேறு நிதி ஆதாரங்கள்மூலம் படிப்படியாக கட்டப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பேரூராட்சி துறை ஆகிய துறைகளின் வாயிலாக இதுவரை 8,092 மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டில் 1,000 அங்கன்வாடி மையங்களுக்கு ஒரு மையத்திற்கு ₹7.00 இலட்சம் வீதம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் ஒருங்கிணைப்புமூலம் 1,000 அங்கன்வாடி மையங்களுக்கு ஒரு மையத்திற்கு ₹7.00 இலட்சம் வீதம் புதிய கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.





### 6.11.2 அங்கன்வாடி மையம் மற்றும் மழலையர் பராமரிப்பகம் தோற்றுவித்தல்

பணிக்குச் செல்லும் தாய்மார்களின் 5 வயது வரையுள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்கென “211 அங்கன்வாடி மற்றும் மழலையர் பராமரிப்பகங்கள்” 2014-2015 ஆம் ஆண்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், சேலம், திண்டுக்கல், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 மாவட்டங்களில் ₹2.31 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை 3,125 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### 6.11.3 அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்குதல்

அங்கன்வாடி மையங்களில் சமைக்கும் நேரத்தை சேமிக்கவும், சத்தான உணவு சமைக்கவும், புகையில்லாமல் சுற்று சூழலைப் பாதுகாக்கவும் ஒவ்வொரு மையத்திற்கும் எரிவாயு இணைப்புடன் அடுப்பு, பிரஷர் குக்கர் மற்றும் சமையல் மேடை அமைத்தல் ஆகிய பணிகளுக்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 54,439 மையங்களில், இதுநாள் வரையில் 50,201 அங்கன்வாடி மையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4,238 மையங்களையும் படிப்படியாக நவீனமயமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6.12 வளரிளம் பெண்களுக்கான திட்டங்கள்

### 6.12.1. கிஷோரி சக்தி யோஜனா

இத்திட்டம் 23 மாவட்டங்களை உள்ளடக்கிய 295 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 11 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்களின் வாழ்க்கைத்தரம், தொழிற்திறன் மற்றும் ஆளுமைத் திறனை மேம்படுத்துவதற்காகவும், தன்சுத்தம், சுகாதாரம், ஊட்டச்சத்து, சட்ட உரிமைகள், குடும்ப நலன் மற்றும் மன அழுத்த மேலாண்மை ஆகிய தகவல்கள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. 16 முதல் 18 வயதான வளரிளம் பெண்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் ஆடை வடிவமைப்பு, ஜர்தௌசி வேலைப்பாடு, செயற்கை ஆபரணங்கள்

தயாரிப்பு, கோழி வளர்ப்பு, அலைபேசி பழுதுநீக்கச் சேவை, அலங்கார மீன்கள் வளர்ப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள், மின் பழுதுநீக்கம் மற்றும் அடிப்படை மின்சார சேவைகள் போன்ற துறைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், அடிப்படை பயிற்சிக்கான செலவுத் தொகை, பயணப்படி தொகை, தங்கும் வசதி மற்றும் உணவிற்கான செலவுத் தொகை, ஆய்விற்கான செலவினம் போன்றவை, இத்திட்டத் தொகையுடன் சேர்த்து, கூடுதலாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. கிஷோரி சக்தி யோஜனா திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ₹1.60 கோடி மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டிற்கு கிஷோரி சக்தி யோஜனா திட்டத்திற்கு ₹3.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.12.2. வளரிளம் பெண்களுக்கான திட்டம் (சப்லா)

வளரிளம் பெண்களின் பல்வேறு பரிமாணங்களில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் 2011-2012-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை, கோயம்புத்தூர், கடலூர், இராமநாதபுரம், திருவண்ணாமலை மதுரை, சேலம், கன்னியாகுமரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 139 வட்டாரங்களில் முன்னோடித் திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இணை உணவு வழங்குதல் மற்றும் இணை உணவு அல்லாத பிற பணிகள் என இரண்டு பிரிவுகளின்கீழ் நலப் பணிகள் அளிக்கப்படுகின்றன. அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட 11 முதல் 18 வயதான பள்ளி செல்லாத வளரிளம் பெண்கள் மற்றும் 15 முதல் 18 வயதான பள்ளி செல்லும் அனைத்து வளரிளம் பெண்களுக்கும் இணை உணவு, வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் வருடத்தில் 300 நாட்களுக்கு, தலா ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ₹8.30 செலவில் வழங்கப்படுகிறது. இதற்கான 50 சதவிகித நிதியினை மாநில அரசு அளிக்கிறது. இணை உணவிற்கென 2016-2017 ஆம் வருடத்திற்கு ₹95.44 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தின்மூலம் 4.12 இலட்சம் வளரிளம் பெண்கள் பயனடைந்துள்ளனர். வளரிளம் பெண்களுக்கான இணை உணவு அல்லாத பிற பணிகளின்கீழ், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்குதல், வாழ்க்கைத் திறன் கல்வி,





ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல், வளரிளம் பெண்களை கல்வி பயில ஊக்குவித்தல், ஆலோசனை வழங்குதல், உடல் பரிசோதனை செய்தல், தொழிற்பயிற்சி அளித்தல் போன்ற நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 16 முதல் 18 வயதுடைய வளரிளம் பெண்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், அழகுக்கலைப் பயிற்சி, கணினி பயிற்சி, தையற்பயிற்சி, வீட்டு உபயோகப் பொருட்கள் பழுதுநீக்கும் பயிற்சி, அடிப்படை மின்சாரப் பணிகள் பயிற்சி, கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சி என பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகளின்மூலம் வளரிளம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதால் அவர்களின் பொருளாதார நிலை மேம்பாடு அடைகிறது.

2017-2018 ஆம் ஆண்டிற்கு, வளரிளம் பெண்களுக்கு இணை உணவு வழங்கல் திட்டத்தின்கீழ் ₹102.58 கோடி மற்றும் இணை உணவு அல்லாத பிற பணிகளுக்கு ₹5.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.13 மகப்பேறு நிதியுதவித் திட்டம் (Matritva Sahyog Yojana-MSY)

மத்திய அரசு 2011-2012 ஆம் ஆண்டில் மகப்பேறு நல உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் வாயிலாக தமிழக அரசின் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வரும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்துடன் இணைந்து முன்னோடி திட்டமாக கடலூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நல உதவியாக ₹4,000-ஐ வழங்கி வந்தது.

பின்னர் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி, 2013 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் முதல் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த பணப்பயன் ₹6,000 ஆக உயர்த்தப்பட்டு நிபந்தனைகளுக்குட்பட்ட மாநில அரசின் 60:40 என்ற விகித நிதிப் பகிர்வின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, இந்த மகப்பேறு நல நிதியுதவித் திட்டம் நிபந்தனைகளுக்குட்பட்டு பயனாளி ஒருவருக்கு

₹6,000 என மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் 01-01-2017 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்விரிவுபடுத்தப்பட்ட மகப்பேறு நல உதவித் திட்டம் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வரும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தில் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ₹18,000-த்துடன் இணைந்து வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2016-2017 ஆம் ஆண்டில் ₹20.86 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 6.14 பயிற்சி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பயிற்சி என்பது முக்கிய அடிப்படை அம்சமாக உள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட சேவைகளைத் திறமையாகவும், தரமாகவும், மேம்படுத்தப்பட்ட வகையிலும் வழங்கி திட்டப் பணிகளின் நோக்கத்தை அடைவது என்பது திட்டத்தினை களத்தில் முன்னெடுத்து செல்லும் களப்பணியாளர்களின் செயல் திறனைப் பொறுத்து உள்ளது.

சமுதாயத்தில் அனைத்து தகுதி பெற்ற பயனாளிகளுக்கும் திட்ட சேவைகளை வழங்குவதிலும், திட்டப் பணியாளர்களின் செயல்பாடுகளின் தரத்தினை உறுதி செய்வதிலும், அதைத் தக்க வைப்பதிலும் அவர்களுக்கான திறன் வளர்ப்பு முயற்சிகள் முக்கிய அம்சமாக விளங்குகின்றன. மேலும், சமுதாய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் மக்களை ஒருங்கிணைத்து செல்லும் பற்பல உத்திகளை திறமையாக கையாள, நன்கு பயிற்சி பெற்ற களப்பணியாளர்களே மிகுந்த திறன் பெற்றிருப்பார்கள். அதற்கேற்ப, அனைத்து கடைநிலை திட்டப் பணியாளர்களுக்கும், தெளிவான அறிவு (ம) திறன் மேம்பாடு பெறத்தக்க வகையில் பயிற்சித் திட்டம் உருவாக்கப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் திட்டப் பயன்களை திறம்பட கொண்டு செல்பவர்களாக இருப்பதுடன், சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் மனமாற்றங்களை ஏற்படுத்தும் "சமூக முகவர்"களாகவும் "மாற்று முகவர்"களாகவும் செயல்படுவர்.

தமிழ்நாட்டில் மட்டுமே பரவலாக்கப்பட்ட, தனித்துவம் வாய்ந்த, மூன்றடுக்கு பயிற்சி முறை அனைத்து நிலை களப்பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. திறன் மிக்க,





செலவு குறைவான, பொருளாதார பயன் நிரம்பிய, இப்பயிற்சி முறை பல தரப்பாலும் சிறப்பாக பாராட்டப்படும் முறையாக உள்ளது. அதுமட்டுமின்றி பயிற்சிகள் அளிக்கப்படும் போதும், மேற்பார்வையாளர்களின் களப்பணியின் போதும், பயிற்சி மதிப்பீடு உடனுக்குடன் செய்யப்பட்டு தேவையான உரிய வழிகாட்டுதல்கள் களத்தில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் களப்பணியாளர்களுக்கு பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்கு ஒரு பயிற்றுநர் பணிபுரிந்து வருகிறார். மாநில அளவில், இடைநிலை அளவில் மற்றும் திட்ட அளவில், பல்வகை பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் விவரம்:-

| வ. எண் | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியின் பெயர் | பயிற்சி பெறுபவர்கள் |
|---|---|---|---|
| 1. | மாநில பயிற்சி மையம், தரமணி, சென்னை-113. | பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் |
| 2. | | பணிப் பயிற்சி/ புத்தறிவுப் பயிற்சி (ம) புத்தாக்கப் பயிற்சி | அங்கன்வாடி பயிற்சி மைய பயிற்றுநர்கள் (மேற்பார்வையாளர்கள் நிலை-1) |
| 3. | இடைநிலை பயிற்சி மையம், இந்திய குழந்தைகள் நலச்சங்கம், சென்னை. | பணிப் பயிற்சி/ புத்தாக்கப் பயிற்சி | மேற்பார்வையாளர் நிலை–II |
| 4. | மாவட்டங்களில் உள்ள வட்டாரங்களில், திட்ட அளவிலான பயிற்சி | பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | அங்கன்வாடி பணியாளர்கள் |
| 5. | | பணிப் பயிற்சி/புத்தறிவுப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | அங்கன்வாடி உதவியாளர்கள் |

மேற்கண்ட வழக்கமான பயிற்சிகள் தவிர "பிற பயிற்சி" என்கிற பிரிவின்கீழ் மாநில அளவில் தேவைக்கேற்ப குறிப்பிட்ட தலைப்புகளில், பயிற்சித் திட்டங்களைக் கண்டறிந்து, வடிவமைத்து பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. திட்டப்பகுதிகளில்

[2017 ஜுன் 24

சூழ்நிலைக்கேற்ப புதிய முயற்சிகளை கையாளுதல், வாழ்க்கை—வேலை இரண்டிற்கும் இடையே சமநிலையை உறுதி செய்தல் போன்றவற்றில் திறன் மிக்கவர்களாக களப்பணியாளர்களை உருவாக்கிட உளவியல் முன்னேற்றம், மன அழுத்தத்தைக் கையாளுதல், யோகா போன்ற பயிற்சிகள் களப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, மாநில அளவில் முறையான பயிற்சி திட்டங்களின்கீழ் வழங்கப்படும் பயிற்சி பாடத் திட்டத்தில் 25% தேவைக்கேற்ப மாற்றம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதால், அதிக கவனம் தேவைப்படும் முக்கியத்துவம் நிறைந்த, புதிய பாடத் தலைப்புகளும் பயிற்சியின் போது, பரிசீலிக்கப்பட்டு, பயிற்சி வழங்கப்படுகிறது.

சமுதாயத்தில் குழந்தைப் பராமரிப்பு முறைகளை அவர்களின் பங்களிப்புடன் மேம்படுத்துதல், பிறதுறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல் போன்றவற்றில் களப்பணியாளர்களின் செயல்திறன்களைப் பொறுத்தே, திட்டத்தின் நோக்கமும்/இலக்குகளும் அடைய வேண்டிய சாதனைகளை எளிதில் அடையும் என்பதால், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பயிற்சி என்பது மிகவும் முக்கியமான பிரிவாக உள்ளது.

2017-2018 ஆம் ஆண்டில் ₹3.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.15 தகவல், கல்வி, தொடர்பு மற்றும் விழிப்புணர்வு பணிகள்

வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பராமரிப்பு, சரியான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் போன்றவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் சமுதாயப் பங்கேற்பை அதிகப்படுத்தவும் பல்வேறு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

“சமுதாய வளைகாப்பு”, “பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள், ஊட்டச்சத்து வார விழா, தாய்ப்பால் வார விழா, வானொலி மற்றும் தொலைக்காட்சியில் திட்டம் பற்றி விளம்பரப்படுத்துதல்” போன்ற பல்வேறான



2017 ஜுன் 24]

தகவல் தொடர்புப் பணிகள் திட்டமிடப்பட்டு, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான கவனம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தொடர்பான பழக்கவழக்கங்களில் சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்க செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தை வளர்ச்சி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான சுவரொட்டி, தொங்கும் அட்டைகள், புத்தகங்கள் போன்ற பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்கள் அச்சிடப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும், சுகாதார நிலையங்களுக்கும், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

திட்டம் குறித்த புதிய தகவல்கள் மக்களையும் பணியாளர்களையும் சென்றடைய “சிட்டுக்குருவி சேதி தெரியுமா?” என்ற இதழ் இருமாதங்களுக்கொருமுறை அச்சிடப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

“பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்” குறித்து பல்வேறான தகவல் தொடர்பு முனைப்பு இயக்கங்கள் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நடத்தப்பட உள்ளன.

2017-2018 ஆம் ஆண்டிற்கு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகளுக்கென ₹7.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.16 கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

திட்டம் தொடர்பான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை என்பது அத்திட்டம் சிறந்த முறையில் செயல்படுவதற்கு மிகவும் அவசியமானதாக கருதப்படுகிறது. இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி திட்டத்தின் அளவிடப்பட்ட உள்ளீடுகள், செயல்பாடுகள், வெளியீடுகள் மற்றும் விளைவுகளைக் கண்காணிக்கவும், மேம்படுத்தவும் மாநில, மாவட்ட, வட்டார மற்றும் மத்திய அளவில் துணைபுரியவும், உதவி அளிக்க கூடிய வகையில் கண்காணிப்பு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

2017-2018 ஆம் ஆண்டிற்கு கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் பணிகளுக்கென ₹5.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.17 அங்கன்வாடி மைய ஊழியர்களின் நலன்

தமிழகத்தில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. இதுதவிர அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி மற்றும் ஆண்டொன்றிற்கு 3 சதவீதம் ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது, ஒட்டுமொத்த ஓய்வுத் தொகையாக முதன்மை மற்றும் குறு அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ₹60,000-மும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ₹25,000-மும் 01-02-2016 முதல் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் சிறப்பு ஓய்வூதியமாக மாதந்தோறும் ₹1,500, 01-02-2016 முதல் வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு புடவைகள் சீருடையாக வழங்கப்படுகின்றன.

தமிழகத்தில் சிறப்பாக பணிபுரியும் 98 அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாநில விருதாக தலா ₹5,000 ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட குழுமம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்தில் பலவீனமான குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான ஒரு நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தி அதன்மூலம் சமுதாயத்தில் சுகாதாரம் மற்றும் கல்வியறிவை மேம்பட செய்கிறது. இந்த குழுமம் இலக்கை எய்துகையில் முன்னேற்றமடையும் சமுதாயத்தை உருவாக்கி அதன்மூலம் மாநிலத்தின் சமூகப் பொருளாதாரக் குறியீட்டினை உயர்த்தும் என்பது திண்ணம்.





# அத்தியாயம் – 7

## சமூகப் பாதுகாப்பு

**7.1** குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைக்கேற்ப, குழந்தை நேய அணுகுமுறையுடன் குழந்தைகளின் அடிப்படை தேவைகள், வளர்ச்சி மற்றும் சமூக ஒன்றிணைப்புடன் குழந்தைகள் பராமரிக்க மற்றும் பாதுகாக்கப்பட வேண்டுமென 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் அதிகபட்ச வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்ய, சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்த உறுதிகொண்டுள்ளதால், சமூகத்தில் குழந்தைகள் தற்போது பாதுகாப்பான சூழ்நிலையில் உள்ளனர்.

துயருறும் சூழலில் உள்ள சிறார்கள் மற்றும் பெண்களுக்கு சேவை புரிவதிலும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் புதுமையான திட்டங்களை உருவாக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தங்குமிடமில்லாத, ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் காணாமல் போன குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1887 ஆம் ஆண்டில், சீர்திருத்தப்பள்ளி ஒன்று செங்கல்பட்டில் துவங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சிறார்களின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் குழந்தைகளுக்கான நிறுவனங்களை நிருவகிப்பதற்காக 1920 ஆம் ஆண்டில், 'மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்' இயற்றப்பட்டது. இதன்மூலம், இந்தியாவிலேயே சிறார்களுக்கென தனிச் சட்டம் இயற்றிய முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

குழந்தைப் பாதுகாப்பு மற்றும் துயருறும் சூழலிலுள்ள பெண்களின் நலன் குறித்து சமூகப் பாதுகாப்புத் துறை மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இதற்கென, 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மற்றும் 1956 ஆம் ஆண்டின் பெண்களுக்கான, ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம் ஆகிய இரு முக்கிய சட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களான வரவேற்பு இல்லங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்கள் ஆகியவை அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு

வருகின்றன. 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவை அரசால் மட்டுமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. குழந்தைப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திட மாநில மற்றும் மாவட்ட அளவில் போதுமான கட்டமைப்புகளைக் கொண்டு ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தினையும் இத்துறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. 1956ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் இத்துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

## 7.2 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோருக்காகச் செயற்திறனுள்ள சட்ட விதிகளை ஏற்படுத்தி செயல்படுத்துவதை 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் வழிவகை செய்கிறது. பின்வரும் இரண்டு வகையான குழந்தைகளுக்கு தனித்தனியான நெறிமுறைகளை இச்சட்டம் வகுத்துள்ளது:-

1. பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்.
2. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்.

## 7.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்

பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் இல்லாத, உற்றார் உறவினர் எவரும் இல்லாத, எந்தவொரு வசிப்பிடமோ, வாழ்வாதாரமோ இல்லாத குழந்தைகள், தெருவோர குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள், கொடுமைப்படுத்தப்பட்ட சுரண்டலுக்குள்ளான, எளிதில் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய குழந்தைகள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் பிரிவின்கீழ் அடங்குவர்.





### 7.3.1 குழந்தை நலக் குழுக்கள்

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கு தமிழக அரசு மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் குழந்தை நலக் குழுக்களை நிறுவியுள்ளது. 1973 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஆகியோரின் அமர்வுக்கு உள்ள அதிகாரத்துடன் குழந்தை நலக் குழுக்களும் ஓர் அமர்வாக செயல்பட்டு வருகிறது. குழந்தை நலக் குழுவின் நடைமுறைகள் குழந்தைகளின் அதிகபட்ச நலனை முன்னிட்டு குழந்தை நேய சூழலுடன் நடத்தப்பட்டு வருகிறது.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹490.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.3.2 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

சமூக நல இயக்குநரகம் மற்றும் சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தின்கீழ் செயல்பட்டு வந்த குழந்தைகள் இல்லங்கள் செம்மையாக நிருவகிக்கப்படவும் சிறந்த சேவை அளிக்கவும் ஒன்றிணைக்கப்பட்டு தற்போது சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தின்கீழ் இயங்கி வருகின்றன. தற்போது, 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், 142 குழந்தைகள் இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அரசின் நிதி உதவியுடனும் இயங்கி வருகின்றன. இதில் மனநலம் குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 5 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இக்குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக உணவு, உடை, உறைவிடம், மருத்துவ உதவி, கல்வி, தொழிற்கல்வி போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு குழந்தைகள் இல்லங்கள் மற்றும் அரசின் நிதி உதவியுடன் செயல்படும் குழந்தைகள் இல்லங்களுக்காக ₹10,727.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 24

## 7.3.3 நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் பராமரிப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளிப் புகலிடங்கள்

வசிப்பிடமில்லாச் சிறார்கள், சாலையோரத்தில் வசிக்கும் சிறார்கள், உழைக்கும் சிறார்கள், மது மற்றும் போதை பழக்கத்திற்கு ஆளான சிறார்கள், பிச்சையெடுக்கும் சிறார்கள் போன்ற சுரண்டலுக்கும் ஆபத்திற்கும் உள்ளாகக்கூடிய சிறார்களுக்கு என தங்குமிட வசதி வழங்கும்பொருட்டு, தமிழ்நாட்டில் 13 திறந்தவெளிப் புகலிடங்கள் (சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தலா ஒன்று மற்றும் சென்னையில் 9 இடங்கள்) நகரங்களிலும், புறநகரங்களிலும் செயல்பட்டு வருகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ₹2,000 வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹265.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7.4 சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நாளன்று, பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணான செயல்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகள் 'சட்டத்துக்கு முரணாக செயல்பட்ட குழந்தைகள்' எனப்படுவர்.

### 7.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகளை இளைஞர் நீதிக் குழுமங்கள் தீர்வு செய்து வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இளைஞர் நீதிக் குழுமம் இருக்கும் வகையில் தமிழக அரசு மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவியுள்ளது. இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியில் அனுபவமுள்ள உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர்) ஆகியோரைக் கொண்டு செயல்படுகிறது. இளைஞர் நீதிக் குழும நடைமுறைகளும் குழந்தை நலக் குழு நடைமுறைகள் போன்றே ஒரு



2017 ஜூன் 24]

நீதிமன்றம் நடப்பது போன்ற தோற்றம் இல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தைநேய சூழலுடன் நடத்தப்படுகிறது.

இக்குழுமங்கள், திங்கள் முதல் வெள்ளி வரை மாதத்திற்கு 20 அமர்வுகளுக்கு மிகைப்படாமல் கூடுகின்றன.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹254.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.4.2 கூர்நோக்கு இல்லங்கள்

சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்களின் விசாரணை இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் மேற்கொள்ளப்படும் காலங்களில் தற்காலிகமாக தங்கவைப்பதற்காக அமைக்கப்பட்டவையே கூர்நோக்கு இல்லங்கள் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது அரசால் 9 கூர்நோக்கு இல்லங்கள் நேரடியாக நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மதுரையில் உள்ள அரசு கூர்நோக்கு இல்லத்தில் கட்டடப் பணிகள் நடைபெற்று. வருகின்றன. இவ்வில்லங்களில் உறையும் சிறார்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் முறைசாராக் கல்வி ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன. மேலும், இக்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யவும் மற்றும் அவர்களை உன்னிப்பாக கண்காணிப்புச் செய்வதற்கு ஏதுவாகவும், 7 அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வில்லச் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள்மூலம் ஆற்றுப்படுத்தும் சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹502.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.4.3 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

இளைஞர் நீதிக் குழுமத்தில் உரிய சட்ட விதிகளின்படி, விசாரணைக்குப் பின் குற்றம் உறுதி செய்யப்பட்ட சிறார்கள் மறுவாழ்விற்காக சிறப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இச்சிறார்கள் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்கலாம். சிறுமியர்களுக்காக சென்னையில் ஓர் அரசினர் சிறப்பு

இல்லமும், சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும் இயங்கி வருகின்றன. இவர்களது சுயசார்பிற்கான திறன்களை வளர்க்கவும், இவர்களுக்கு, இவ்வில்லங்களில் கல்வி, தொழிற்கல்வி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணைக் கல்வி செயல்பாடுகள் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் உன்னிப்பாக கண்காணிக்கவும், அரசினர் சிறப்பு இல்லங்களுக்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களும், தடையில்லா மின்சேவை அளிக்க 100 KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் மின்னாக்கியும் வழங்கப்பட்டுள்ளன.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹253.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.4.4 வள மையங்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகளின் வழக்குகள் முறையே குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களில் விசாரணைக்குள்ளாகும் போது அக்குழந்தைகளுக்கு சமூக உளவியல் ரீதியான உதவிகளும், வழிகாட்டுதல்களையும் வழங்குவதற்காக வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கண்காணிப்பாளர்மூலம் பரிந்துரைக்கப்படும், நிறுவனங்களில் உறையும் சிறார்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களின் உளவியல் ரீதியான தேவைகளையும் இவ்வள மையங்கள் பூர்த்தி செய்கின்றன. தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் அரசு நிதியுதவியுடன் இவ்வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹8.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.4.5 குழந்தைகளுக்கான உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல் சேவை

இளைஞர் நீதிக் குழுமம்மூலம் குற்றம் இழைத்ததாகக் கருதப்பட்டு பிணையில் விடுவிக்காத நிலையில் கூர்நோக்கு இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறார்கள் மற்றும் அதேபோன்று குற்றச் செயல்கள் உறுதி செய்யப்பட்டு, குடிப்பழக்கத்திலிருந்து





விலகியதன் தாக்கத்தால் சிறப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறார்கள் அவ்வப்போது உளவியல் ரீதியான உணர்வு பூர்வமான மற்றும் ஆக்ரோஷமான விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்விதமான உளவியல் தாக்கத்திலிருந்து விடுபடவும் நிறுவன சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்பட அவர்களுக்கு உதவும் பொருட்டு இவ்வில்லச் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள்மூலம் ஆற்றுப்படுத்தல் சேவை வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் வாயிலாக உளவியல் நிபுணர்கள்மூலம் ஒரு நாளைக்கு ஒரு உளவியலாளருக்கு ₹1000/- மதிப்பூதியத்தில் குழந்தைகளுக்கு வருடத்தில் 180 நாட்களுக்கு ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்கப்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹16.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.4.6 சென்னை அரசு கூர்நோக்கு இல்லத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

சென்னையில் இயங்கி வரும் அரசு கூர்நோக்கு இல்லம் தற்போது பழைய கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் குழந்தைகளின் தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இக்கட்டடம் பொருத்தமானதாக இல்லை. எனவே, இல்லங்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பினை வசதியான இருப்பிடத்துடன் மேம்படுத்த புதிய கட்டடம் கட்டுவதற்காக ₹250.00 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

### 7.4.7 சென்னை, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் வரவேற்பு இல்லத்திற்காக புதிய கட்டடம் கட்டுதல்

சென்னையில் இயங்கி வரும் அரசினர் குழந்தைகள் இல்லம் தற்போது பழைய கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் குழந்தைகளின் தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இக்கட்டடம் பொருத்தமானதாக இல்லை. மேலும், சென்னை பெருமாநகரமாக உள்ளதால் பல்வேறு மாநிலங்களிலிருந்து அதிக அளவில் மக்கள் இடம்பெயர்கின்றனர். குழந்தை நலக் குழு புலனாய்வு செய்து இச்சிறார்களை தத்தம் மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு

[2017 ஜுன் 24

போதிய காலஅவகாசம் தேவைப்படுவதால் இக்காலக்கட்டத்தில் இச்சிறார்களைப் பாதுகாப்பாக தங்க வைப்பது தவிர்க்க இயலாத தேவையாக உள்ளது. எனவே, கூடுதல் தங்கும் வசதிக்காகவும், பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பினை மேம்படுத்தவும் அரசு ₹100.00 இலட்சம் செலவில் வரவேற்பு இல்லத்திற்காக புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்துள்ளது.

### 7.4.8 பாதுகாப்பான இடம்

16 வயது மற்றும் 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகள் மற்றும் 18 வயதிற்கு முன் செய்த குற்றத்திற்காக 18 வயது பூர்த்தி அடைந்த பின் விசாரணைக்கு உட்படுத்தப்படுபவர்களைத் தங்க வைப்பதற்காக பாதுகாப்பான இடம் நிறுவப்பட வேண்டும் என 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் வலியுறுத்துகிறது. எனவே, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய விரிவான மறுவாழ்வுத் திட்டம் இப்பாதுகாப்பான இடத்திற்கு தேவை என்பது அவசியமாகிறது. வேலூரில் செயல்பட்டு வந்த வரவேற்பு இல்ல கட்டடத்தை பழுதுபார்த்து, சீரமைத்து மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்கு ₹42.00 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. பணி முடியும் நிலையில் உள்ளது.

### 7.4.9 இளைஞர் நீதி நிதி

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் படி, குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி ₹25.00 இலட்சம் குழும நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அவசர தேவைகள் மற்றும் துறையின் திட்டத்தின்கீழ் வராத ஏனைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.

### 7.4.10 அரசினர் பிற்காப்பு நிறுவனங்கள்

குழந்தைகள் இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் மறுவாழ்விற்கான திட்டங்களை முடித்த பின், சிறார்களின் 18 வயது முடிவுற்ற பின், 21 வயது நிறைவெய்தும் வரை நிறுவன பராமரிப்புத் தேவைப்படின், அத்தகைய இளைஞர்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். பிற்காப்பு இல்லங்களில் பல்வேறு காரணங்களால் தன் குடும்பத்துடன் மீண்டும்



2017 ஜுன் 24]

சேர முடியாத இளைஞர்கள் அல்லது கல்வியைத் தொடரும் குழந்தைகள் அல்லது பயிற்சியை எடுத்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர். இளைஞர்களுக்கான இரண்டு பிற்காப்பு நிறுவனங்கள் ஒன்று ஆத்தூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றொன்று மதுரையிலும் இயங்கி வருகின்றன. பெண்களுக்காக வேலூரில் ஒரு பிற்காப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இதுதவிர வயது முதிர்ந்த மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய புகலிடம் அரசு உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் செயல்பட்டு வருகிறது.

2017–2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹242.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.4.11 பள்ளிக் குழந்தைகளுக்கான தற்கொலைத் தடுப்புத் திட்டம்

குழந்தைகள் குறிப்பாக தங்களது பள்ளி இறுதி தேர்வின் முடிவுகாலங்களில் பல்வேறுவிதமான மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை எண்ணத்திற்கு உந்தப்படுவதை தவிர்த்திடும் பொருட்டு பள்ளிகளில் தற்கொலைத் தடுப்பு திட்டங்களை ₹15.04 இலட்சம் செலவில் துறை நடத்தியுள்ளது. இத்திட்டத்தினை உரிய கால இடைவெளிகளில் தொடர் திட்டமாக செயல்படுத்த ஏதுவாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிகளில் உள்ள 100 ஆசிரியர்களுக்கு ‘பயிற்றுநர்களுக்கான பயிற்று திட்டங்களை’ அதற்கென நிபுணத்துவம் வாய்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### 7.4.12 குழந்தைகள் தத்தெடுத்தல் திட்டம்

‘தத்தெடுத்தல்’ என்பது பெற்றோர்களிடமிருந்து நிரந்தரமாக பிரிய நேரிட்ட ஒரு குழந்தை வளர்ப்பு பெற்றோர் என்று அழைக்கப்படும் பெற்றோரின் உறவு முறையோடு இணைந்து அனைத்து தார்மீக உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளோடு அவர்களது சட்டபூர்வமான குழந்தையாக மாறும் செயல்முறையை குறிப்பதாகும்.

நிராதரவான, கைவிடப்பட்ட, ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு குடும்பச் சூழ்நிலையிலான

[2017 ஜூன் 24

கவனிப்பு மற்றும் பாதுகாப்பினை நல்கி, அவர்களது அறிவாற்றலையும், செயலாற்றலையும், வெளிக்கொணரும் வகையில் மகிழ்ச்சி, அன்பு மற்றும் புரிந்துகொள்ளும் சூழலை தத்தெடுத்தல் திட்டம் ஏற்படுத்தி தருகிறது. குழந்தைகளின் உணர்வுபூர்வமான, உடல் மற்றும் பொருள் ரீதியான பாதுகாப்பினை அளிக்கிறது. மேலும் குழந்தையின்றி தவிக்கும் தம்பதியருக்கு தங்களுக்கே உரிமையான ஒரு குழந்தையை சொந்தமாக்கிக்கொள்ள ஒரு வாய்ப்பினையும் மகிழ்ச்சியினையும் முழு திருப்தியினையும் உருவாக்கி தருகிறது.

அரசியலமைப்பின் உரிமைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்வதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை வேண்டும். இவ்வுரிமைகள் நிறைவேற்றும்பொருட்டு, அரசு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழங்கிட பல முயற்சிகள் எடுத்து வருகின்றது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில், மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் மத்திய தத்துவள ஆதார மையம் (CARA) தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது. மாநில அளவில் உள்நாட்டு தத்தெடுத்தல் மற்றும் வெளிநாட்டு தத்தெடுத்தலை கண்காணிப்பதற்கு மாநில தத்துவள ஆதார மையம் (SARA) நிறுவப்பட்டுள்ளது.

குழந்தைகளின் நலன் கருதி நல்ல சூழலை அளித்திடும் வகையில் இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் இந்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இளைஞர் நீதிச் சட்டம் 2015-ன்கீழ் ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு மற்றும் சமூக இணக்கத்துடன் வாழ்வளிப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இளைஞர் நீதிச் சட்டம், 2015-ல் தேவையான பாதுகாப்புகளுடன் குழந்தைகளை தத்து வழங்கும்போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் உள்நாடு மற்றும் வெளிநாட்டிற்கு தத்து வழங்குவதற்காக பல்வேறு நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

### சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 17 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேற்படி, நிறுவனங்கள் முறையே சென்னை (2), சேலம் (2), மதுரை (2),



2017 ஜூன் 24]

காஞ்சிபுரம் (3) மற்றும் கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், திருநெல்வேலி, நாமக்கல் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக அமைந்துள்ளன.

தொட்டில் குழந்தை திட்டத்தின்கீழ் பெறப்படும் குழந்தைகள் மட்டுமல்லாது, குழந்தைகள் வழிமம் (சைல்டு லைன்), காவல் துறை, பொதுமக்கள், மருத்துவமனைகள் மற்றும் பெற்றோர்கள் நேரடியாக ஒப்படைப்பு ஆகிய பல்வேறு வழிகளிலும் பெறப்படும் குழந்தைகளை மத்திய தத்து வள ஆதார மைய வழிகாட்டுதலின்படி தத்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் துவங்கப்பட்ட காலம் முதல் மார்ச் 2017 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம்:

| வ. எண் | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | ஆண் குழந்தைகள் | பெண் குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | உள்நாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 1178 | 3689 | 4867 |
| 2. | வெளிநாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 90 | 354 | 444 |
| மொத்தம் | | 1268 | 4043 | 5311 |

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தத்தெடுப்பை மேம்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில தத்தெடுப்பு ஆலோசனை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் சட்டங்களின்படி, குழந்தைகள் சட்டப்பூர்வமாக உரிய நீதிமன்றங்களால் தத்து அளிக்கப்படுகின்றனர்:

1. இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 (HAMA)
2. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.

தத்தெடுப்பு திட்டமானது வெளிப்படையாகவும் புதிய வழிமுறைகளின்படி தேசிய தகவல் மையத்தின்மூலம் ஆகஸ்ட் 2015-லிருந்து பதிவு செய்தல், குழந்தைகளின் விவரம் மற்றும் நிறுவனங்களின் விவரம் ஆகியவை இணையதளம் வழியாக செய்யப்பட வேண்டும். மேலும் www.cara.nic.in வலைதளத்தில் படிவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**7.4.13 திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு**

குழந்தைகள் நலத் திட்டங்களைக் (அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்) கண்காணிக்க யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநரகத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதோடு, அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இல்லங்கள் அனைத்தையும் இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது. குழந்தைகள் நலத் திட்டங்களைக் காலமுறையாக ஆய்வு செய்து அறிக்கையினை வளர்ச்சிக்கான காரணிகளுடன் தெரிவிப்பது, இப்பிரிவின் கடமையாகும். தற்போது இப்பிரிவிற்கான செலவினம் முழுவதும் மாநில வரவு-செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

**7.4.14 அரசால் மேற்கொள்ளப்பட்ட பிறவகையிலான நடவடிக்கைகள்**

**7.4.14.1 கட்டமைப்பு வசதிகள்**

மதுரையிலுள்ள சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறுமியருக்கான கூர்நோக்கு இல்லம் ஆகியவற்றிற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கும் மேலும் அவ்வளாகத்திலுள்ள கட்டடத்தைப் புதுப்பித்து அலுவலகமாகவும் மற்றும் இளைஞர் நீதிக் குழும அலுவலகமாகவும் மாற்றுவதற்கு அரசால் ₹6.04 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**7.5 கல்வி வசதிகள்**

அரசு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள், குழந்தைகள் தன்னுரிமை மிக்கவர்களாக்க, அவர்களுக்கு கல்வி அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. மேல்படிப்பு படிப்பதற்கு விருப்பம் உள்ள குழந்தைகள் கல்வியைத் தொடர்வதற்காக வெளியிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.





முறையான கல்வி வழங்குவதற்காக பெரும்பாலான குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களான கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் முறைசாராக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

***2017-2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக 4.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**7.6 நவீன தொழிற்பயிற்சி**

துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் பயிற்சிபெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர்மூலம் தையல், மரவேலை மற்றும் புத்தகம் கட்டுதல் போன்ற திறன் அடிப்படையிலான தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர தனியார் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் குறுகிய கால தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:

- ஹேண்டி மேன்-பிளம்பிங் / எலக்ட்ரிக்கல் / தச்சு
- வீடியோகிராபி /புகைப்படம் எடுத்தல்
- ஆடை தயாரித்தல்/ எம்பிராய்டரி தையல்
- பேப்ரிக் பெயிண்டிங் / புத்தகம் கட்டுதல்
- கைவினைப் பொருட்கள் / கலைப் பொருட்கள் தயாரித்தல் / வண்ணம் தீட்டுதல்
- மென்பொம்மைகள் / காகிதப்பை / தட்டுகள் தயாரித்தல் / செயற்கை நகைகள் தயாரித்தல் / துணி மற்றும் சுவர்களில் வர்ணம் தீட்டுதல்
- கணினி DTP பயிற்சி / உருப்படம் எடுத்தல்

[2017 ஜூன் 24

- அழகுக்கலை பயிற்சி / மருதாணி இடுதல்
- உணவு பதப்படுத்தல்

***2017-2018 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹79.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 7.7 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Child line) 1098

துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் உடனடியாக உதவி தேவைப்படும் குழந்தைகள் அல்லது அவ்வகையான குழந்தைகளைக் காண நேரிடும் நபர், உடனடி உதவி பெற 1996 ஆம் ஆண்டு சைல்ட் லைன் இந்தியா பவுண்டேசன் என்ற அமைப்பினால், (Childline India Foundation), துவங்கப்பட்ட 'சைல்ட் லைன்' - என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவி திட்டத்தின்மூலம் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். நாடு முழுவதும் இத்தொலைபேசி சேவைக்கான பொது எண்ணாக 'பத்து ஒன்பது எட்டு' (1098) உள்ளது. இச்சேவை, தனியார் தொண்டு நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், இதற்கான நிதியுதவி இந்திய அரசினால் வழங்கப்படுகிறது. இத்தொண்டு நிறுவனங்கள் மீட்பு மற்றும் தலையீட்டுச் சேவைகளை அளித்து வருகின்றன. தமிழ்நாட்டில், சிவகங்கை, நாமக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களைத் தவிர்த்து இத்தொலைபேசி சேவை அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

## 7.8 ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

குழந்தைப் பாதுகாப்பிற்காக மாநிலத்தில் இளைஞர் நீதி நிருவாகத்தினை சிறப்பாக மேம்படுத்துவதற்கு மைய அரசின் நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை அரசு மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு ஏற்படுத்த ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் முனைந்துள்ளது.



2017 ஜூன் 24]

### குறிக்கோள்கள்

இத்திட்டம் இளைஞர் நீதிச் சட்டத்தினைச் செம்மையாகச் செயல்படுத்துவதையும், துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளின் நலனுக்காகப் பங்களித்தலையும், சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றோடல்லாமல், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, சுரண்டல், புறக்கணித்தல், கைவிடப்படுதல் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பிரிதல், போன்றவற்றை ஏற்படுத்தக் கூடிய துன்பச் சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேற்கூறிய நோக்கத்தை அடைய கீழ்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துதல்
- இந்தியாவில் தற்போது நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்துதல்
- குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத் திட்டம், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தைப் பாதுகாப்புச் சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்
- அனைத்து பிரிவுகளுக்கிடையே எல்லா அளவிலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்

### 7.8.1 ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படும் சேவை அளிக்க கூடிய கட்டமைப்புகள்

ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:

1. மாநிலக் குழந்தைப் பாதுகாப்புச் சங்கம்

2. மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு சங்கங்கள் / அலகுகள்

3. மாநிலத் தத்தெடுப்பு வள முகமை

அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் சைல்ட் லைன் திட்டம் போன்றவற்றால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோர் நேரடியாக பயனடைகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வாயிலாக சமூகத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

***2017-2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹2,240.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 7.8.2 அனைத்து குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களையும் 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் பதிவு செய்தல்

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யப்படாமலிருந்தால் சட்டப்படி அதற்கான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லங்களைப் பதிவு செய்வதன்மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து இல்லங்களின் உண்மையான நிலை, அடிப்படை வசதிகள், போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதற்கு உதவிகரமாக உள்ளது.

மேலும் மாநிலத்திலுள்ள அனைத்து குழந்தைகளின் விவரங்களைப் பெற்று, குழந்தைப் பராமரிப்பு இல்லங்களிடையான





சேவைகளை ஒருங்கிணைக்க இல்லங்களைப் பதிவு செய்தல் உதவுகிறது. இதுவரை 1,096 இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் 841 இல்லங்கள் போதிய கட்டமைப்பு வசதி இல்லாததால் மூடப்பட்டுள்ளன.

### 7.9 குழந்தைகளின் பின்தொடர் முறைமை

காணாமல் போன குழந்தைகள், வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் கடத்தப்படும் குழந்தைகள், சுரண்டல்கள் மற்றும் பல்வேறு பாலியல் / உடல் ரீதியான கொடுமை மற்றும் மனித உரிமை மீறல் போன்ற சூழல்களுக்கு எளிதாக இலக்காகக் கூடிய இவ்வகையான குழந்தைகளை முன்கூட்டியே கண்டறிந்து அவர்களைக் குடும்பத்துடன் சேர்ப்பதே, அவர்களது வாழ்க்கையை மீண்டும் பெறுவதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்குமான சிறந்த தலையீட்டு சேவையாகும். காணாமல் போன குழந்தைகளின் பின் தொடர் முறைமை என்ற தேசிய இணையத்தினை காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்காக மத்திய அரசு தேசிய தகவல் மையம் (NIC) மூலம் அமைத்துள்ளது. மேற்படி தேசிய இணையத்தின்மூலம் காணாமல் போன குழந்தைகளைக் கண்டறியவும் நிறுவனங்களிலுள்ள குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கவும் நேரலை தகவல் தொகுப்பு பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் "குழந்தைப் பின்தொடர் முறைமை" சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணினி இணைப்பின்மூலம் மாநிலத்தின் உள்ளார்ந்த பகுதிகளில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்கள், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலகங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே இணைப்பை ஏற்படுத்தியதன் மூலமும், பங்களிப்பினருக்கும், பணியாளர்களுக்கும் காலமுறையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டதின் மூலமும் இது சாத்தியமாகியுள்ளது. காணாமல் போன குழந்தைகளின் பின்தொடர் முறைமையின்கீழ், தேசிய தகவல் தளத்தில் தகவல்களைப் பதிவு செய்வதற்கான மென்பொருள்களை உபயோகப்படுத்துதல் குறித்துப் பயிற்சி திட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை வகுத்துப் பயிற்சி வழங்கியுள்ளது.

[2017 ஜூன் 24

## 7.10 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம்

### 7.10.1 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் நோக்கமும் குறிக்கோள்களும்

i பெண்கள் மற்றும் சிறுமியர்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதைத் தடுத்தல்

ii ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்கள், பாலியல் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துபவர்கள் மற்றும் பாலியல் தொழில் சந்தையை ஏற்படுத்துபவர்களை நீதியின் முன் நிறுத்துதல்

iii பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பெண்கள், சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்

### 7.10.2 மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள, சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை தமிழக அரசு நடத்தி வருகிறது.

ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட பெண்கள் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ், நீதிமன்ற ஆணையின்படி இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இங்கு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் அடிப்படை வசதிகளான பராமரிப்பு, மருத்துவ உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மீண்டும் சமுதாயத்தில் மதிப்புடன் வாழ வழி ஏற்படுத்த அவர்களின் விருப்பதிற்கேற்ப பல்வேறு தொழிற்பயிற்சிகள் இவ்வில்லங்களில் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்களின் மாண்பை பாதுகாக்கவும், பாலியல் குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளைப் பாதுகாக்கவும் ஏதுவாக நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு பதிலாக காணொலி ஒளிக்காட்சிமூலம் விசாரணை மேற்கொள்ள ஏதுவாக ₹20.00 இலட்சம் செலவில் மயிலாப்பூர், அரசினர்



2017 ஜூன் 24]

மகளிர் காப்பகத்திற்கும், சைதாப்பேட்டை முதன்மை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே, காணொலி ஒளிக்காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் வழக்குகள் விரைவில் தீர்வு செய்யப்படுகின்றன.

### 7.10.3 மீட்புப் புகலிடங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் மீட்கப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிருக்காக 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமன்றத்தால் வழக்குகள் முடிக்கப்படும் வரை, பாதிக்கப்பட்ட பெண்கள் தற்காலிகமாக இங்கு தங்க வைக்கப்படுகின்றனர். இந்தப் புகலிடங்கள், பெண்கள் கண்காணிப்பு / பாதுகாப்பு இல்ல வளாகத்திலும், வேலூர், பிற்காப்பு நிறுவனத்திலும் இயங்கி வருகின்றன.

### 7.10.4 மணமாகாத தாய்மார்கள் இல்லம்

பாலியல் சுரண்டல்களுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மணமாகாத தாய்மார்களின் நலனுக்காக சென்னை, மைலாப்பூர் அரசினர் மகளிர் காப்பகத்துடன் இணைக்கப்பட்ட, மணமாகாத தாய்மார்கள் இல்லம் இயங்கி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அடைக்கலாபுரத்தில் ஒரு மணமாகாத தாய்மார்கள் இல்லம் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் செயல்பட்டு வருகிறது.

**2017-2018 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹502.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7.11 மறுவாழ்வுக்கான திட்டங்கள்

தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் நலனுக்காக மாநில அரசு பல்வேறு மறுவாழ்வு நடவடிக்கைகளையும், நலத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. அத்தகைய ஒரு நடவடிக்கையாக, தமிழக அரசு, 'பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி' ஒன்றை இத்துறையின்கீழ் உருவாக்கியுள்ளது. இல்லங்களிலுள்ள வசதிகளை மேம்படுத்துதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற செலவினங்களை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்கள் தொழில் தொடங்க ₹5,000 வரையிலான நிதியுதவி அல்லது

தேவையான கருவிகள், மூலப்பொருட்கள் வாங்க ₹10,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தச்சு வேலை, நெசவு, புத்தகம் கட்டுதல், தோட்ட வேலை, கட்டட வேலை, தையல், பூ தையல், பாய் நெசவு, குழாய் வேலை போன்ற தொழிற் பயிற்சிகள் சிறுவர் சிறுமியர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அதே போன்று, கண்காணிப்பு / பாதுகாப்பு இல்லங்களிலிருந்து வெளியேறும் பெண்கள் மற்றும் சிறுமிகள் சுய தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**7.11.1வணிக ரீதியிலான பாலியல் சுரண்டலுக்காக மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுத்துவதைத் தடுக்க மாநில அரசின் சிறப்பு முயற்சிகள்**

கடத்தப்படுதல் மற்றும் வணிகரீதியிலான பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக தமிழக அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

➢ மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச்செயலரின் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

➢ மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

➢ ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவது தொடர்பான பிரச்சினைகளைக் கண்காணிக்க கிராம ஊராட்சி தலைவர் தலைமையில் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

➢ பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுப்பதற்காக இம்மூன்றடுக்கு திட்டம், தோற்றுவிக்கப்பட்டதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது.

➢ மேற்குறிப்பிட்ட குழுக்கள் மட்டுமல்லாது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட மேற்பார்வைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் / வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை மேற்பார்வையிடுதலை, இக்குழு கவனிக்கும்.





➢ பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி, வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராக பிரசாரம் செய்யவும், சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால், அவர்களின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும் அதற்காக செயல்படும் அமைப்புகளுக்கு புத்தாக்க பயிற்சி இத்துறையின்மூலம் அவ்வப்போது அரசு மற்றும் யூனிசெப் போன்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

**7.11.2 எளிதில் வன்செயல்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதிக்கான திட்டம்**

கடத்தலிலிருந்து மீட்கப்படும் மகளிருக்கு அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மறுவாழ்விற்கு நிதியுதவியாக ₹10,000 வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவரை 209 பாதிப்பிற்குள்ளான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**'உஜ்ஜவாலா' திட்டம்**

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் சுரண்டலுக்காக கடத்தப்படுவதென்பது மனித உரிமைகளை மீறும் குற்றமாகும். கடத்தலுக்குள்ளாகக் கூடிய வாய்ப்பு மிகுதியாக உள்ள பகுதிகளில், கடத்தலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

மேற்கண்ட பிரச்சினையை சமாளிக்க, இந்திய அரசு, 'உஜ்ஜவாலா' என்றொரு விரிவான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் ஆட்கடத்தலைத் தடுக்கவும், வணிகரீதியான பாலியல் சுரண்டலைத் தடுக்கவும், கடத்தபட்டவர்களை மீட்டு, மறுவாழ்வளித்து, சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்கிறது. மத்திய, மாநில மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முறையே 60:30:10 என்ற நிதி பங்களிப்போடு தமிழ்நாட்டில் இத்திட்டம், எட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**போதை தடுப்புத் திட்டம்**

மத்திய அரசின் நிதியுதவியுடன், போதைத் தடுப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ்,

குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சுமார் 21 நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் 26 மையங்கள், இந்திய அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் இயங்கி வருகின்றன.

### 7.12 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

மனித வள மேம்பாட்டிற்கான தேசிய திட்டங்களில் குழந்தைகளுக்கான திட்டங்களுக்கு பிரதானமான இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதை 1974 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான தேசியகொள்கை அங்கீகரித்துள்ளது. இந்திய அரசானது ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையினை 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் ஏற்றுக்கொண்ட நிலையில், கடந்த 2004 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 9 ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2003 ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம், ஒவ்வொரு குழந்தையும் குழந்தையாக இருப்பதற்குரிய உள்ளார்ந்த, உள்ளடக்கிய உரிமை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தையே வலியுறுத்துகிறது.

2003 ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டம் தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் உருவாக்கிட வழிவகை செய்கிறது. தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் கடந்த 18-1-2013 முதல் தமிழகத்தில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் பின்வருமாறு:-





| அதிகாரங்கள் | செயல்பாடுகள் |
|---|---|
| இவ்வாணையம் உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டம், 1908-ன்படி வழக்குகளை விசாரிப்பதற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்கள் கொண்டதாகும். | குழந்தைகள் தொடர்பான கீழ்க்காணும் சட்டங்களின் அமலாக்கத்தினை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்<br>அ) குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005.<br>ஆ) குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1986.<br>இ) இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.<br>ஈ) குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006<br>உ) குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009.<br>ஊ) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012. |
| காவல் துறை மற்றும் பிற அரசு துறை அலுவலகங்களிலிருந்து குழந்தை உரிமை மீறல் தொடர்பான உரிய ஆவணங்களைக் கோரிப் பெறுதல்.<br><br>பாலியல் குற்றங்கள் மற்றும் பாலியல் சட்டம் 2012ன்கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தல்<br><br>உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உரிய நிவாரணம் மற்றும் உரிய மறுவாழ்வு நடவடிக்கை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல். | ➢ குழந்தை உரிமை மீறல்கள் மீது விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட அரசுத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்தல்.<br>➢ குழந்தை உரிமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.<br>➢ ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து பெறப்படும் குழந்தை உரிமை மீறல்கள் தொடர்பான புகார்கள் அடிப்படையில் மட்டுமின்றி குழந்தை உரிமை மீறலாகக் கருதப்படும் இனங்களில் ஆணையம் தானாக முன்வந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>➢ குழந்தை உரிமைகள் பாதுகாப்பு குறித்து அரசு / அரசு சாரா நிறுவனங்களின் அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்துதல்.<br>➢ குழந்தை நலன் சார்ந்த கொள்கைகளை வடிவமைத்தல். |

**குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009**

*தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009* (RTE Act) *பிரிவு 31-ன்படி, தமிழகத்தில் இச்சட்டத்தின் செயலாக்கத்தினை கண்காணித்து வருகிறது.*

*மேலும், இவ்வாணையம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம், 2009-ன் பிரிவு 12(1*C)*-ன்படி, தனியார் மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில், சமூகத்தில் நலிந்த மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகளுக்கான 25% பள்ளிச் சேர்க்கையினை உறுதி செய்யும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.*

**பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012**

*பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 44-ன்படி, தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது, தமிழகத்தில் இச்சட்டம் நடைமுறைப்படுத்துதலை கண்காணித்து வருகிறது.*

**இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015**

*இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 பிரிவு 109-ன்படி, இச்சட்டத்தின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கும் அதிகாரம் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.*

**ஆணையத்தால் கையாளப்பட்ட வழக்குகள்**

*இவ்வாணையம் துவங்கப்பட்ட நாள் (18-1-2013) முதல் இந்நாள்வரை செய்தித்தாள் மற்றும் ஊடகங்கள், பொதுமக்கள்/ தொண்டு நிறுவனங்கள், தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் இதர அமைப்புகள்மூலம் வரப்பெற்ற பல்வேறு குழந்தை உரிமைகள் மீறல்கள் தொடர்பான 1072 வழக்குகளைக் கையாண்டு தீர்வு செய்துள்ளது. இவ்வாணையத்தின் மின்னஞ்சல் முகவரி* scpcrtn@gmail.com *மற்றும் இணையதள முகவரி* www.scpcr.tn.gov.in





***2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு ₹53.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**7.13 குழந்தைப் பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு**

*குழந்தைப் பாதுகாப்பு என்பது பரந்த எல்லையைக் கொண்டதாகும். எனவே குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலுள்ள பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. பல்வேறு துறைகளிலுள்ள குழந்தைகளுக்கான பலதரப்பட்ட சேவைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த சமூகப் பாதுகாப்புத் துறை ஒரு பாலமாக செயல்படுகிறது.*

*சமூக நலம், கல்வி, தொழிலாளர் நலம், அனைவருக்கும் கல்வித் திட்டம்* (Sarva Shiksha Abhiyan), *தேசிய குழந்தைத் தொழிலாளர் தடுப்புத் திட்டம், இரயில்வே காவல், வருவாய், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி, மருத்துவம் மற்றும் சுகாதாரம், காவல், நீதி மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலம் ஆகிய துறைகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பினை சமூகப் பாதுகாப்புத் துறை கொண்டுள்ளது.*

*குழந்தைகளுக்கான சேவைகள் வழங்கக்கூடிய பல்வேறு துறைகளை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வலிமையான மாவட்ட அளவிலான செயலமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கள் மற்றும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு குழுக்களும் செயல்பாட்டில் உள்ளன. குழந்தைத் திருமணம், பாலியல் வன்கொடுமை, குழந்தை கடத்தல், பிச்சை எடுத்தல், சுரண்டல், குழந்தைத் தொழில் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தலிலிருந்து தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சமூகப் பாதுகாப்பு துறையால் நடத்தப்பட்டுள்ளன.*

**7.14 சமூகப் பாதுகாப்புத் துறைக்கான இணையதளம் மற்றும் மின்னஞ்சல்**

*இத்துறைக்கான இணையதள முகவரி* www.socialdefence.tn.gov.in *மற்றும் மின்னஞ்சல் முகவரி* dsd.tn@nic.in

[2017 ஜூன் 24

## அத்தியாயம்–8

### சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான ஆதரவற்ற மற்றும் ஏழை, வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர்களைப் பாதுகாப்பதற்காக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் வகையில் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ₹1,000/- ஆக வழங்கி வருகிறது.

இந்த ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை கணிசமாக 2016-2017 ஆம் ஆண்டில் ₹3,949.97 கோடியாக உயர்ந்துள்ளது. 31-3-2017 அன்று 29,75,885 பயனாளிகள் கீழ்க்கண்டவாறு பயன்பெற்று வருகின்றனர்:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31-3-2017 அன்று வரை |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 13,04,357 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 56,217 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 5,28,794 |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 2,18,572 |



2017 ஜூன் 24]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31-3-2017 அன்று வரை |
|---|---|---|
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,17,564 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | 3,10,514 |
| 7. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 1,14,248 |
| 8. | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட திருமணமாகாத உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 21,141 |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் | 4,478 |
| | மொத்தம் | 29,75,885 |

மத்திய அரசு கீழ்க்காணும் ஓய்வூதிய திட்டங்களுக்கு பகுதியாக நிதி வழங்குகிறது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 முதல் 79 வயது வரை | ₹200 |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேல் | ₹500 |

[2017 ஜுன் 24

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 முதல் 79 வயது வரை | ₹300 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 முதல் 79 வயது வரை | ₹300 |

பயனாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் படியான ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளை 2015-2016 ஆம் ஆண்டு அரசு தளர்த்தி வயது வந்த மகன் / மகள் இருந்தாலும் அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக் கோட்டிற்குகீழ் இருந்தால் ஓய்வூதியம் பெறும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், அவர்களின் அசையா சொத்தின் மதிப்பு ₹5,000 மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு அதனை ₹50,000 ஆக உயர்த்தியுள்ளது. மாற்றுத் திறானாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும் ஊனத்தின் தன்மை 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைத்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதிய திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெற கீழ்கண்டவாறு தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:



2017 ஜுன் 24]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். |
| 2. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும். |
| 3. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ➢ வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனம் நிலை 80% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களின்கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:

[2017 ஜூன் 24

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஒய்வூதியத் திட்டம் | ➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனத்தின் நிலை 40% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000-க்குள் இருத்தல் வேண்டும். |
| 2. | ஆதரவற்ற விதவைகள் ஒய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000-க்குள் இருத்தல் வேண்டும்.<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும். |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000-க்குள் இருத்தல் வேண்டும். |



2017 ஜூன் 24]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் |
|---|---|---|
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஒய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவரால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்தில் இருந்து சட்டப்பூர்வமாக பிரிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000-க்குள் இருத்தல் வேண்டும். |
| 5. | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட திருமணமாகாத உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்களுக்கான ஒய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000-க்குள் இருத்தல் வேண்டும். |

உயிர்ப்புள்ளி அட்டையைப் (Bio-metric smart Card) பயன்படுத்தி, பயனாளிகளை உறுதி செய்து வங்கிகள்மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. 31-3-2017 நிலவரப்படி மொத்தமுள்ள 29,75,885 பயனாளிகளில் 29,75,033 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாகவும் இதர பயனாளிகளுக்கு அஞ்சலகங்கள் மூலமாகவும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்கு இரு முறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்

திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின்கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது:

- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி
- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி

## விபத்து நிவாரணத் திட்டம்

44 வகையான தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம் ஈட்டும் பிரதான நபர் விபத்தின்மூலம் மரணமடையும்போது வாரிசுதாரருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ₹15,000-லிருந்து ₹20,000 ஆக, 31 டிசம்பர், 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும் பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ₹10,000-த்திலிருந்து ₹20,000 ஆக, 31 டிசம்பர், 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.





## பிற்சேர்க்கை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2017–2018

## மானியக் கோரிக்கை எண் 45

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ₹4,78,117.21 இலட்சம்.

| 2017-2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| | | (₹ இலட்சத்தில்) |
| கணக்குத் தலைப்பு | | ஒதுக்கீடு |
| வருவாய் பகுதி | | |
| 2059 | பொதுப் பணிகள் | 262.50 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 30.26 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 15082.27 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 101428.71 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 8150.95 |
| 2236 | தலைமைச் செயலகம் | 23.16 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 168737.00 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 183566.74 |
| 2251 | தலைமைச் செயலகம் | 431.56 |
| 2551 | சமூக நல இயக்ககம் | 0.01 |
| வருவாய் பகுதி மொத்தம் | | 477713.16 |
| மூலதனப் பகுதி | | |

[2017 ஜூன் 24

| 2017-2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| | | (₹ இலட்சத்தில்) |
| கணக்குத் தலைப்பு | | ஒதுக்கீடு |
| 4235 | சமூக நல இயக்ககம் | - |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 404.01 |
| 4236 | சமூக நல இயக்ககம் | 0.01 |
| 4236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 0.01 |
| மூலதனப் பகுதி மொத்தம் | | 404.03 |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 0.02 |
| கடன் பகுதி மொத்தம் | | 0.02 |
| பெரு மொத்தம் | | 478117.21 |

பெரு மொத்தம் :

வருவாய் பகுதி : ₹477713.16 இலட்சம்

மூலதனப் பகுதி : ₹404.03 இலட்சம்

கடன் பகுதி : ₹0.02 இலட்சம்

மொத்தம் : ₹478117.21 இலட்சம்
அல்லது

₹4781.17 கோடி

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் ₹3929.28 கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

------

# இணைப்பு II

*(107 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 52—மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2017—2018

### முன்னுரை

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது. இக்குறிக்கோளை அடைந்திடும் விதமாக தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென தனித் துறை ஒன்றை 1993-ம் வருடம் உருவாக்கியது. மேலும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக முழுமையான பல்நோக்குடைய மாநில கொள்கையை 1994 ஆம் ஆண்டில் முன்னோடியாக நடவடிக்கை எடுத்து வகுத்தது. பல்வேறு வகைகளில் மாற்றுத் திறனாளிகள் அதிகாரம் பெற்று உய்யும் வகையில் செயல்பட்டதைக் கருதி 2013-2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு “சிறந்த மாநிலம்” என்ற தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகள் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான தடைகள் அனைத்தையும் நீக்கி இந்த சமுதாயத்தில் அவர்கள் ஏனையோருடன் எல்லா வகையிலும் சமமான பங்குதாரர்களாக முழுப்பங்கேற்று சமுதாயத்தின் வெள்ளோட்டத்தில் அவர்களை இணைப்பதே இம்மாநில அரசின் முதன்மையான கருத்தியல் கொள்கையாகும். இம்மாநிலத்தில் அனைவருக்கும் ஊனமில்லா தன்மையை உருவாக்கவும், ஊனத்தின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுத்து கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசால் பல்வேறு புதுமையான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் சமூகத்தின் வழியே, மறுவாழ்வுத் திட்டங்கள் கிடைக்கப்பெற்று பயன்பெறும் வகையில் பல நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு பல்வேறு வகையான திட்டங்களை ஒருங்கிணைத்து பலதரப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நலத் திட்டப் பணிகளை

[2017 ஜூன் 24

பெற்று பயன்பெறும் வகையில் பதிவு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அரசு சாரா அமைப்புகள் (Non Governmental Organisations) மூலம் செயல்படுத்தி வருகிறது. இவ்வகையில் கடந்த 6 ஆண்டுகளில் வரவு-செலவு திட்டத்தில் பல்வேறு நலத் திட்டங்களுக்காகவும், மாற்றுத் திறனாளிகளுக்கென பணியாற்றும் அரசு சாரா நிறுவனங்கள்மூலம் பல நலத் திட்ட உதவிகள் வழங்கவும் அதற்கான நிதி ஒதுக்கீட்டை கணிசமாக உயர்த்தியுள்ளது.

புதிதாக இயற்றப்பட்ட, ஊனமுற்ற நபர்கள் உரிமைகள் சட்டம், 2016 மாற்றுத் திறனாளிகள் பல்வேறு உரிமைகளை பெறுவதை உறுதிபடுத்திடவும், பலவகையான ஊனத்தினை உள்ளடக்கிய மாற்றுத் திறனாளிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு அனைத்து மாற்றுத் திறனாளிகளது நலன்களைக் காத்து பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் மறுவாழ்வு சேவைகள் அவர்களுக்கு கிடைத்திடும் வகையில் தமிழகத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் பற்றிய முழுமையான தகவல் தொகுப்பை உருவாக்கவும் மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் முறையாகப் பதிவு செய்து அடையாள அட்டைகள் வழங்கவும் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

**2. மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016**

மத்திய அரசினால் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 இயற்றப்பட்டு, 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாளிலிருந்து அமலுக்கு வந்துள்ளது. இச்சட்டமானது மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களது உரிமைகள் மற்றும் அதிகாரப் பங்களிப்பு வழங்கும் விதத்தில் பின்வரும் கொள்கையின் அடிப்படையில் இயற்றப்பட்டுள்ளது:

(i) மாற்றுத் திறனாளிகளுக்கு சுயமரியாதை, பிறரை சாராது முடிவெடுக்கும் திறன் அடங்கிய தனிப்பட்ட பொருளாதார நிலை;

(ii) பாரபட்சமின்மை;

(iii) முழுமையான பங்கேற்பு மற்றும் சமுதாயத்துடன் ஒன்றிணைதல்; மற்றும்

(iv) வேற்றுமை நிறைந்த சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகளின் மாறுபட்ட நிலையினை மனித நேயத்துடன் மதித்தல்



2017 ஜூன் 24]

**புதிய சட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வகைப்பாட்டில் பின்வரும் கூடுதல் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன:**

(அ) மூளை முடக்குவாதம், உயரம் குறைவு தன்மை, தசைச்சிதைவு பாதிப்பு, அமிலம் உள்ளிட்ட அரிக்கும் தன்மையுடைய வேதிப்பொருளின் தாக்கத்தினால் உருவத்தோற்றம் பாதிப்பு;

(ஆ) பேச்சு மற்றும் மொழி தடை பெற்ற நிலை;

(இ) அறிவு சார்ந்த குறைபாடுகளான கற்றலில் குறைபாடு, புறஉலக சிந்தனையின்மை, மனநலம் பாதிப்பு மற்றும் மத்திய நரம்பு மண்டல பாதிப்பு, பார்கின்சன்ஸ் நோய்;

(ஈ) இரத்த (சோகை) சம்பந்தமான குறைபாடுகளான ஹீமோபீலியா, தலசிமியா, சிக்கிள் செல் நோய்; மற்றும்

(உ) பல்வகை குறைபாடு

இவ்வரசு புதிய சட்டப் பிரிவு 34-ன்படி மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவிகித இடஒதுக்கீட்டினை, அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கிய கல்வி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவிகித இட ஒதுக்கீட்டினை உயர் கல்வியிலும், விவசாய நில ஒதுக்கீடு மற்றும் வீட்டுவசதி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகள் தொடர்பான வழக்குகளில் விரைவில் தீர்வு காண ஏதுவாக சிறப்பு நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய சட்டத்தின் பிரிவு-19(2)-ல் வலியுறுத்தியுள்ளவாறு, மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் முதற்கட்ட நடவடிக்கையாக 1000 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் திறன் மேம்பாட்டு கழகம்மூலம் தொழிற்பயிற்சி வழங்க அரசாணை (நிலை) எண் 67, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (S2) துறை, நாள் 12-4-2017-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 24

## 3. தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவு புத்தகம் வழங்குதல்

தமிழகத்தில் உள்ள 11.79 இலட்சம் மாற்றுத் திறனாளிகளில் அநேக மாற்றுத் திறனாளிகளுக்கு (99%) அவர்களது ஊனத்திற்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் போன்ற அடிப்படை ஆவணங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் பெறும்பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. 40% மற்றும் அதற்கு மேலாக ஊனமுள்ள மாற்றுத் திறனாளிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் தொடர்பு கொண்டு அங்கே பதிவு செய்யலாம். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், அவ்வாறான விண்ணப்பங்களைப் பரிசீலித்து தேசிய அடையாள அட்டையும், உதவிகள் பெறுவதற்கான பதிவு புத்தகத்தையும் வழங்குவார். அவ்வாறு தேசிய அடையாள அட்டை பெற்ற மாற்றுத் திறனாளிகள் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில் பதிவு செய்து உறுப்பினராவதன்மூலம் அதன் பல்வேறு சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை தமிழகத்தில் 11,79,303 மாற்றுத் திறனாளிகளுக்கு ஊனத்திற்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 4. மாற்றுத் திறனாளிகளுக்காக சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் பதிவு செய்தல்

### (அ) மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்

தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறை சட்டம், 1973-ன்படி, தமிழகத்தில் செயல்படும் மாற்றுத் திறன் கொண்ட மாணவ, மாணவியருக்கான சிறப்பு பள்ளிகளுக்கு அங்கீகாரம் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரால் வழங்கப்படுகிறது. இதுவரை 397 சிறப்பு பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### (ஆ) மாற்றுத் திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல்

மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995, பிரிவு 51—ன்படி, மாற்றுத் திறனாளிகளுக்காக சேவைபுரியும் எந்த ஒரு நிறுவனமும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை பெறவேண்டியது மிகவும் அவசியம். பிரிவு 52 மற்றும் 53-ன்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மட்டுமே, பதிவுச் சான்றிதழை வழங்கவும், புதுப்பிக்கவும் மற்றும் இரத்து செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார். இதுவரை 196 நிறுவனங்கள் மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995, பிரிவு 52-ன்படி பதிவு செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக 593 தொண்டு நிறுவனங்கள் பதிவு மற்றும் அங்கீகாரம் பெற்று மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக செயல்படுகின்றன.



2017 ஜூன் 24]

## 5. மனநல மறுவாழ்வு மையங்கள் பதிவு

தமிழ்நாடு மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள் பதிவு விதிகள் 2002-ன் அடிப்படையில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனநல மறுவாழ்வு மையங்கள் முறைப்படுத்தப்படுகிறது. இவ்விதிகளின்படி, இம்மையங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும். இவ்விதிகளை அமல்படுத்துவதால், அனுமதியற்ற மையங்கள் செயல்படுவது தடுக்கப்படுவதோடு, அனுமதி பெற்ற மையங்களை வரன்முறைப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் சாத்தியமாகிறது.

## 6. செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்ப நிலையில் கண்டறியும் மையம்

பிறவியிலேயே ஏற்படும் குறைபாடுகளில் இன்று செவித்திறன் குறைபாடு பொதுவான ஒன்றாக இந்தியாவில் நிலவுகிறது. தீவிரமான அல்லது கடுமையான செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்ப நிலையில் கண்டறிவது என்பது மிகவும் இன்றியமையாதது. ஆரம்ப நிலையில் கண்டறிவதால் இக்குழந்தைகளின் கேட்கும் தன்மையை அதிகரிக்கக்கூடிய பொருத்தமான காதொலி உபகரணங்களை பொருத்தி ஆரம்பநிலை பயிற்சியை குழந்தை பிறந்த 6 மாதத்திற்குள்ளாகவே துவங்கிட இயலும். எனவே, உயர் தொழில்நுட்பம்மூலம், குழந்தை பிறந்த உடனே செவித்திறன் குறைபாட்டினை அறிவதற்கான வாய்ப்பும், அதை சரிசெய்திடுவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகரித்துள்ளன. தற்போது, செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்பநிலையில் கண்டறிந்திடுவதற்கான மையங்கள்

[2017 ஜூன் 24

27 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில், ஏறக்குறைய 10,000 குழந்தைகளுக்கு செவித்திறன் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

**7. பிறந்த குழந்தைகளுக்கு செவித்திறன் குறைபாட்டினைக் கண்டறிய சென்னை மற்றும் சிவகங்கையில் பரிசோதனை மையங்கள்**

பிறந்த குழந்தைகளுக்கு செவித்திறன் குறைபாடு கண்டறிதல் பரிசோதனைக்காக 2015-2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தில் (Tamil Nadu Innovation Initiatives) அரசாணை (நிலை) எண் 28, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந 2.1)த் துறை, நாள் 23-09-2016-ல் ரூ.3,30,77,600/- நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. இப்பரிசோதனை சென்னை மாவட்டத்திலுள்ள 11 மாநகராட்சி மருத்துவமனைகளிலும் சிவகங்கை மாவட்டத்தில் 10 இடங்களில் மாவட்ட தலைமையிட மருத்துவமனை, வட்ட மருத்துவமனை மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார தலைமையிட மருத்துவமனை, வட்டார மருத்துவமனை மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையங்களில் நடத்தப்படும். மேற்கண்டுள்ள 21 மருத்துவமனைகளில் ஒலி புகாத அறைகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம்மூலம் (Immittance Audiometer, Screening ABR and Screening Oto Acoustic Emission) முதலிய கருவிகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவில் பணிபுரியும் குழந்தைகள் நல மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு செவித்திறன் குறைபாடு கண்டறிதல் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

**8. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்**

குழந்தைகள் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிகள், மனிதனது கற்றல் மற்றும் வளர்ச்சிநிலை குழந்தைப் பருவத்தில்தான் மிகவும் துரிதமாக உள்ளதாகத் தெரிவிக்கிறது. செயல்திறன் பாதிப்புக்கு உட்பட்ட குழந்தைகள், குழந்தை பருவத்தில் பெறக்கூடிய வளர்ச்சி நிலையினை இழந்திடும் அபாயத்தினை ஆரம்ப நிலை பயிற்சிமூலம் தவிர்க்கலாம். இளங்குழந்தைகளுக்கு ஏற்படும் ஊனத்தைத் தடுக்கும் நோக்கோடு, ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் அவர்களின் தேவைகள், சிறப்புக் கல்வி, சிறப்புப் பயிற்சி போன்றவை இளங்குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் அவர்களின் பெற்றோர்களுக்கும் வழங்கப்படுகிறது.



2017 ஜூன் 24]

இதனைக் கருத்தில் கொண்டு, மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. மாற்றுத் திறனாளி குழந்தைகள் மற்றும் அவர்களுடன் வரும் பெற்றோர் / பாதுகாவலர் ஆகியோர் அவரவர் வீடுகளில் இருந்து ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு வந்து திரும்பிச் சென்றிட அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்திட அனுமதி அளிக்கப்படுகிறது. ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ரூ.10,000/- வழங்கப்படுகிறது.

**(அ) செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையங்கள்**

செவித்திறன் குறைபாடு என்பது மரபு வழியில் பொதுவாக ஏற்படும் குறைபாடுகளில் ஒன்றாக, 1000 குழந்தைகளில் 2 முதல் 4 குழந்தைகளிடம் இக்குறைபாடு காணப்படுகிறது. வயதிற்கேற்ற பேச்சுத்திறன், மொழித்திறன் அறியும் திறமை ஆகியவற்றின் வளர்ச்சியில் செவித்திறன் முக்கியமானதால், ஆரம்ப நிலையில் இக்குறைபாட்டினைக் கண்டறிந்து பயிற்சி அளிப்பது மிகவும் அவசியமானதாகும். எனவே செவித்திறன் பாதிக்கப்பட்ட மழலையர் மற்றும் இளஞ்சிறார்களுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள், குழந்தைகள் 5 வயதை அடையும் முன்னரே போதிய பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி பெற்று 1 ஆம் வகுப்பில் சேருவதற்கு ஆயத்தமாகும் அளவிற்கு தீவிர பயிற்சி அளிப்பதை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மையங்கள் 29 மாவட்டங்களில் தொடங்கப்பட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகின்றன. 2½ வயதிற்கு குறைவுடைய செவித்திறன் குறையுடைய இதர ஊனம் ஏதும் இல்லாத குழந்தைகள் இம்மையங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். சேர்க்கைக்கு குறைந்தபட்ச வயது வரம்பு ஏதும் இல்லை. பெற்றோரில் ஒருவர் குழந்தையுடன் ஆரம்ப நிலை பயிற்சி மையத்திற்கு வருகை தருவது அவசியமாகும். இம்மையங்களில் 263 ஆண் மற்றும் 229 பெண் குழந்தைகள் பயிற்சி பெறுகின்றனர். 55 சிறப்பாசிரியர்கள் இம்மையங்களில் பணிபுரிகின்றனர்.

***2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.85.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

[2017 ஜூன் 24

**(ஆ) மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்**

6 வயதிற்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் 31 மாவட்டங்களில் (தருமபுரி மாவட்டம் நீங்கலாக) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகின்றன. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்/குடும்பத்தினரைப் பயிற்றுவித்து, அதன்மூலம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இயக்கம், அன்றாட வாழ்க்கையில் ஒட்டுறவாடுதல், அன்றாடச் செயல்கள், சமூகமயமாக்கல் மற்றும் பிற திறன்களை இக்குழந்தைகளிடம் உருவாக்குவதே இம்மையங்களின் நோக்கமாகும்.

கற்பித்தல், கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இம்மையங்களில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக வழங்கப்படுகின்றன. இம்மையங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மையங்களில் 881 சிறுவர்கள் மற்றும் 591 சிறுமியர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. 144 சிறப்புப் பயிற்சியாளர்கள் மற்றும் இயன்முறை பயிற்சியாளர்கள் இம்மையங்களில் பணிபுரிகின்றனர்.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.212.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) பார்வை குறைபாடுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம்**

கண்பார்வையற்ற குழந்தைகளின் தேவை மிகவும் தனித்துவம் வாய்ந்தது என்பதால், தனது சூழலை புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுவதற்கான தனிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். பிறவியிலேயே கண்பார்வையற்ற மற்றும் கண்பார்வை குறையுடைய குழந்தைகளின் புரிந்துகொள்ளும் அனுபவம் மாறுபட்டதாக இருக்கும். இக்குழந்தைகளின் 85 சதவீத வளர்ச்சிநிலை பார்வைத் திறனைப் பொறுத்தே அமைவதால் வளர்ச்சி நிலையும், தாமதம் ஏற்படக்கூடிய அபாயத்தினை எதிர்நோக்குகின்றனர். எனவே பயிற்சி என்பது அவர்களது பார்வை திறன் ஆரம்பநிலை மற்றும் இதர திறன்களை



2017 ஜூன் 24]

வளர்ப்பதற்கும் அவசியமாகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பார்வையற்ற குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் அனுபவமிக்க தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் சென்னை, கோயம்புத்தூர், கடலூர், திருச்சி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டு செயல்படுகின்றன. இக்குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை கருத்தில்கொண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. 6 வயதிற்குக்கீழ் உள்ள 70 ஆண் மற்றும் 58 பெண் குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைகிறார்கள். இம்மையங்களில் 14 சிறப்பாசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

**2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.21.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஈ) மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம், திருச்சி மாவட்டம்**

மூளை முடக்குவாதம் என்பது ஒரு அசாதாரணமான நிலை என்பதால் இதனைக் குணப்படுத்த தசைப் பயிற்சியாளர், தொழில்முறை பயிற்சியாளர், பேச்சுப் பயிற்சியாளர் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் ஆகிய பல்துறை நிபுணர்கள் கொண்ட குழுவின் மூலம் பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. இம்மையங்களில் இக்குழுவினர் இணைந்து 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மழலை தூண்டுதல் பயிற்சியும், 3-6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு குறித்த காலத்திற்குள் தூண்டுதல் பயிற்சியும் அளிக்கின்றனர். இம்மையத்தில் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 39 ஆண் மற்றும் 14 பெண் குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.7.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) புற உலக சிந்தனையற்ற குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் – திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர்**

மன இறுக்கம் அல்லது புற உலக சிந்தனை அற்றவர்களுக்கு தனித்துவமிக்க சிகிச்சை / பயிற்சி தேவைப்படுகிறது. இம்மையத்தில்

[2017 ஜூன் 24

ஆரம்ப நிலைப் பயிற்சிமூலம் சிகிச்சை முறைகள் மற்றும் நடத்தைப் பயிற்சி அளிப்பதால், அவர்களுடைய நிலையில் நல்ல மாறுதலுக்கான வழிவகுக்கும். பிரதிபலிப்பு திறன், மொழி, அறிவை புரிந்து கொள்ளும் திறன், பயன்படுத்தும் திறன், முறையான விளையாட்டுத் திறன் மற்றும் சமூக பயிற்சி இவை அனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஒரு முன்னோடி திட்டமாக திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 3 ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் 78 புற உலக சிந்தனையற்ற குழந்தைகள் பயிற்சி பெறுகிறார்கள்.

***2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.8.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 9. ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் சத்துணவு வழங்குதல்

மாற்றுத் திறனுடைய குழந்தைகள் சாதாரண குழந்தைகளைப் போலவே ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் மோசமான சுகாதார கேடுகள் மற்றும் வளர்ச்சிப் படிநிலைகளில் தாமதமும் ஏற்படுகிறது. இத்தகைய நிலையினை களைந்திடும் விதமாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களின்மூலம் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 78 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிலும் 2463 மாற்றுத் திறனுடைய குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

***2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 10. நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்

ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மாவட்ட தலைநகரங்களில் உள்ளதால் 0-6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் துணையாளரின் உதவியுடன் இம்மையங்களுக்கு வர இயலாத நிலை உள்ளது. இத்தகைய குழந்தைகளுக்கு உதவுவதற்காக மாநிலம் முழுவதும் 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் ரூ.4.49 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இச்சிகிச்சைப் பிரிவுகளில் ஆரம்ப நிலையில் குறைபாடுகளை தடுக்கும் நோக்கில் மறுவாழ்வு சிகிச்சை



2017 ஜூன் 24]

மற்றும் பணிகளுக்கு தேவையான அனைத்து உபகரண வசதிகளும் அமைக்கப்பட்டு பயனாளிகளின் இருப்பிடத்திற்கே, இவ்வசதிகள் சென்றடையும் வண்ணம் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையினை உறுதிபடுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான உள்ளூர் முகாம்கள் மற்றும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இதுவரை 964 முகாம்கள்மூலம் 8878 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

***2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.99.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 11. மாநில வள மற்றும் பயிற்சி மையம், சென்னை மாவட்டம்

அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சிறப்புச் சேவைகள் மற்றும் அனைத்துத் தகவல்களும் ஒரே குடையின்கீழ் வழங்கும் நோக்கோடு சென்னையில் மாநில வள மற்றும் பயிற்சி மையம் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இரயில் போக்குவரத்து சலுகை, மாற்றுத் திறனாளி உதவியாளர் ஒருவருடன் பயணம் செய்வதற்கான பேருந்து பயணச் சலுகை, வருமானவரி விலக்கு மற்றும் அரசு தேர்வுகளில் கூடுதல் நேரம் ஆகிய சலுகைகள் பெற ஏதுவாக 4208 மாற்றுத் திறனாளிகளுக்கு ஊனத்திற்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

செவித்திறன் பாதிக்கப்பட்ட, மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட, புற உலகச் சிந்தனையற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மற்றும் புலன் சார்ந்த ஒருங்கிணைப்பு மையம் ஆகியவையும் இப்பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 0-5 வயதிற்கு கீழ் உள்ள 1682 மாற்றுத்திறனுள்ள குழந்தைகள் இம்மையத்தில் பயிற்சிபெறுகின்றனர். பல்வேறு வகையான பயிற்சி வகுப்புகளும் இம்மையத்தில் நடத்தப்படுகின்றன. டிஜிட்டல் இந்தியா திட்டத்தின்கீழ் அனைத்து சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் அன்னையர்களுக்கு பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. ஐக்கியநாடுகள் குழந்தைகள் கல்வி நிதி அமைப்பின் (UNICEF) கீழ் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்களுக்கு சிறப்பு குழந்தைகளுக்கான சத்தான உணவு மற்றும் சத்துணவு

[2017 ஜூன் 24

முக்கியத்திற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் CSR நிதியின்மூலம் புதிய இயன்முறை சேவை மைய கட்டடம் ஒன்று புதிதாக கட்டப்பட்டு தற்போது அம்மையம் மாநில வள மற்றும் பயிற்சி மைய வளாகம், சென்னையில் செயல்பட்டு வருகிறது.

***2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.27.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**12. வட்டார வள மற்றும் பயிற்சி மையம், திருச்சி மாவட்டம்**

இம்மையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஊனத்திற்கான சான்றிதழ் மற்றும் உதவிகள் பதிவு புத்தகம் வழங்கப்படுகிறது. இம்மையத்தில், புறஉலக சிந்தனையற்றோர், பல்வகை ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆரம்ப பயிற்சி மையங்கள், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான பகல்நேர மையம் மற்றும் ஆலோசனை மற்றும் தகவல் மையங்கள் செயல்படுகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள சேவைகளினால் 5000 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

***2017-18 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.9.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**13. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள்**

மனநலம் பாதிக்கப்பட்ட நபர்கள் சமுதாயத்தின் பார்வையில் ஒதுக்கப்படுபவர்களாக உள்ளதால் அவர்களின் நலன்களை பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது அரசின் முக்கிய கடமையாகும். ஆரம்ப நிலையிலேயே மனநல பாதிப்பு கண்டறியப்படுமானால், அதனை முற்றிலும் குணப்படுத்த இயலும். எனவே, மன நோய் குறித்து தவறான எண்ணம் கொள்ள வேண்டிய தேவையில்லை. எனவே, மற்ற நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களைப் போலவே மனநலம் பாதிக்கப்பட்டோர்களும் கவனிக்கப்பட வேண்டும் என்பதுடன் சாதாரண நபர்களுக்கான சூழலைப் போலவே மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உருவாக்க வேண்டியது அவசியம்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடம், உணவு, மருத்துவம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை வழங்குவதற்காக



2017 ஜூன் 24]

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் அனைத்து மாவட்டங்களிலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு இல்லத்திலும் அதிகபட்சமாக 50 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தற்பொழுது 1385 மனநலம் பாதிக்கப்பட்ட நபர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

***2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.286.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**14. சிறப்புப் பள்ளிகள்**

ஊனத்தின் நிமித்தம் மாற்றுத் திறனாளி மாணவர்கள் இலவச கட்டாய ஆரம்பக் கல்வி மற்றும் உயர் கல்வியிலிருந்து விடுபடக்கூடாது என்பதனை உறுதி செய்திடுவதற்கான குறிக்கோளில் தமிழ்நாடு அரசு முழு கவனம் செலுத்தி வருகிறது. இக்குறிக்கோளினை அடைந்திடும் விதமாக தமிழ்நாட்டில் 76 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான சிறப்புப் பள்ளிகள் சிறப்புக் கல்வியை அளித்து வருகின்றன. இதில் 22 அரசு சிறப்புப் பள்ளிகள் (10 பார்வை குறைபாடுடையோருக்கான பள்ளிகள், 10 செவித்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகள், 1 கடும் கை, கால் பாதிக்கப்பட்டோருக்கான பள்ளி, 1 மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி) செயல்பட்டு வருகின்றன. 54 அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி 22 அரசு சிறப்புப் பள்ளிகளில் பார்வை குறைபாடுடையோருக்கான மூன்று மேல்நிலைப் பள்ளிகள் அடங்கும். அவை பூவிருந்தவல்லி (ஆண்கள்), திருச்சிராப்பள்ளி (பெண்கள்), தஞ்சாவூர் (இருபாலர்) ஆகும். மேலும், இரண்டு செவித்திறன் குறைபாடுடையோருக்கான மேல்நிலைப் பள்ளிகள் முறையே தருமபுரி மற்றும் தஞ்சாவூரில் இயங்கி வருகின்றன.

இந்தச் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு இலவச தங்கும் வசதி மற்றும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விளையாட்டுப் பொருட்கள், கற்பித்தல் மற்றும் கற்றல் உபகரணங்கள், சூரிய ஒளிமூலம் வெந்நீர்

பெறும் சாதனம், உயர்தர மின்சலவை இயந்திரம் ஆகியவையும் இச்சிறப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆண்டிற்கு ஒரு முறை இச்சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

மேலும், சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள்) உணவூட்டு மானியமும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டில், தமிழக அரசு ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.450/- என வழங்கி வந்த உணவூட்டு மானியத்தை ரூ.650/- என உயர்த்தி அளித்துள்ளது. 2014-2015 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 2015 முதல், காலை பள்ளிக்கு வந்து மாலையில் வீடு திரும்பும் மாணவர்களுக்கும், மற்ற மாற்றுத் திறனாளி மாணவர்களைப் போலவே மதிய வேளையில் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்புக் கல்வியின் பலனாக, பத்தாம் வகுப்பில் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய சிறப்புப் பள்ளிகள் மற்றும் 12 ஆம் வகுப்பில் பார்வையற்றோர் அரசு மகளிருக்கான மேல்நிலைப்பள்ளி, திருச்சி ஆகிய சிறப்புப் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி அடைந்துள்ளனர். சிறப்புப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள செவித்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிக்கு சொந்த கட்டடம் ரூ.1.16 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

## 15. கல்வி உதவித்தொகை

அனைத்து மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியருக்கும் இலவசக் கல்வி தமிழ்நாடு அரசால் அளிக்கப்படுகிறது. மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர் கல்வி பயிலும் காலக்கட்டத்தில் ஏற்படும் இடைநிகழ் செலவுகளை மேற்கொள்ளும்பொருட்டு, அம்மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித் தொகையானது மாணவ/மாணவியர் பயிலும் வகுப்புக்கு ஏற்றவாறு இருக்கும். மேலும், இளங்கலைப் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்பு மற்றும் தொழிற் கல்வி மற்றும் ஏனைய கல்விப் பிரிவில் பயில்வோருக்கும், அவர்கள்





பயிலும் கல்வி பிரிவிற்கு ஏற்றவாறு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2013-2014 ஆம் நிதியாண்டு முதல், கல்வி உதவித்தொகை உயர்த்தப்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

| வ. எண் | பாடப் பிரிவு | உயர்த்தப்பட்ட உதவித் தொகை |
|---|---|---|
| 1. | 1 முதல் 5 ஆம் வகுப்பு | ரூ.1,000/- |
| 2. | 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.3,000/- |
| 3. | 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை | ரூ.4,000/- |
| 4. | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.6,000/- |
| 5. | தொழிற்கல்வி மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு | ரூ.7,000/- |

***2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 16. வாசிப்பாளர் உதவித் தொகை

பார்வை குறைபாடுடைய மாணவர்களின் கல்வி கற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு 9 ஆம் வகுப்பு முதல் முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் வரையிலும் கீழ்க்கண்டவாறு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கி வருகிறது:

[2017 ஜூன் 24

| வ. எண் | பாடப் பிரிவு | உயர்த்தப்பட்ட வாசிப்பாளர் உதவித்தொகை |
|---|---|---|
| 1. | 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை | ரூ.3,000/- |
| 2. | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.5,000/- |
| 3. | தொழிற்படிப்பு மற்றும் முதுகலை பட்டப் படிப்பு | ரூ.6,000/- |

2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.79.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 17. தேர்வு எழுத உதவுபவர்களுக்கான உதவித்தொகை

9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பார்வை குறைபாடுடைய மாணவ / மாணவியர் தேர்வு எழுதிட உதவும் வகையில், அவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.250/- வீதம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகையானது 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து ரூ.250/-லிருந்து ரூ.300/- ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட 6 பார்வை குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் சுமார் 500 மாணவர்கள் இந்தத் திட்டத்தால் ஒவ்வோர் ஆண்டும் பயனடைந்து வருகின்றனர்:

(1) அரசு பார்வை குறைபாடுடையோருக்கான ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி.

(2) அரசு பார்வை குறைபாடுடையோருக்கான பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.

(3) அரசு பார்வை குறைபாடுடையோருக்கான மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.

(4) சிறுமலர் பார்வை குறைபாடுடையோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை.

(5) புனித லூயிஸ் பார்வை குறைபாடுடையோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை.



2017 ஜூன் 24]

(6) இந்திய பார்வை குறைபாடுடையோருக்கான சங்கம் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

**2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.39.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 18. அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல்

தமிழ்நாடு பாடநூல் கழகம் ஆண்டுதோறும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்பு பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கும் ப்ரெய்லி புத்தகங்கள் உட்பட இலவச பாட புத்தகங்களை வழங்கி வருகிறது.

## 19. அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக சீருடை வழங்குதல்

அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் 1301 மாணவ / மாணவியர்களுக்கு இலவச சீருடை இணைகள் வழங்கப்பட்டுள்ளன.

2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.13.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் பார்வை குறைபாடுடைய மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு இலவசமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் 400 மாணவ / மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 1906 மாணவ / மாணவியர்கள் இலவச மடிக்கணினிகளை பெற்றுள்ளனர்.

[2017 ஜூன் 24

## 21. பார்வை குறைபாடுடைய மாணவர்களை கல்வி கற்க ஊக்குவிக்கும் பொருட்டு இலவசமாக DVD Player கல்வி உபகரணம் வழங்குதல்:

வளர்ந்து வரும் கல்வியின் அவசியத்தை கருத்தில் கொண்டு, மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு புதிய கல்வி கற்கும் உபகரணங்களை, அவர்கள் நன்றாக கல்வி கற்கும் பொருட்டு அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். இதனை நன்குணர்ந்த தமிழ்நாடு அரசு, பார்வை குறைபாடுடைய மாணவ/மாணவியர்களுக்கு, குறிப்பாக அரசு பார்வை குறைபாடுடையோருக்கான ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி, அரசு பார்வை குறைபாடுடையோருக்கான பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மற்றும் அரசு பார்வை குறைபாடுடையோருக்கான மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூரில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு இலவசமாக DVD Player with Head Phones and Pen Drive ஆகிய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. 2016-2017 ஆம் கல்வியாண்டில் 135 மாணவ / மாணவியர்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.7.77 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. மாணவர்கள் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத் தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத்திறன் படைத்த மாணவ / மாணவிகள் கல்வியைத் தொடர முடியாமல் இடையில் படிப்பை நிறுத்துவதைத் தவிர்க்கும்பொருட்டும், அவர்கள் உயர்கல்வியைத் தொடரவும் 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகைகள் கீழ்க்குறிப்பிட்டவாறு வழங்கப்பட்டுவருகிறது. 2016-2017 ஆம் ஆண்டில் 1235 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.



2017 ஜூன் 24]

| வ. எண் | வகுப்பு | வருடத்திற்கு ரொக்க ஊக்கத்தொகை |
|---|---|---|
| 1. | 10 ஆம் வகுப்பு | ரூ.1,500/- |
| 2. | 11 ஆம் வகுப்பு | ரூ.1,500/- |
| 3. | 12 ஆம் வகுப்பு | ரூ.2,000/- |

2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.21.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 23. செவித்திறன் குறைபாடுடைய, வாய்பேச இயலாதவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு

செவித்திறன் குறைபாடுடைய மற்றும் பேச இயலாதவர்களுக்காக சென்னை மாநிலக் கல்லூரியில் பி.காம்., மற்றும் பி.சி.ஏ., பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இப்பாடப்பிரிவுகளில் தலா 15 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டம் செவித்திறன் குறைபாடுடைய மற்றும் பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவர்களும் பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு உதவி செய்கிறது.

2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.4.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 24. சட்டப்படிப்பு பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு உதவித் தொகை

சட்டப்படிப்பு பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்கள், சட்டப்புத்தகங்கள் வாங்கிக் கொள்வதற்கும் மற்றும் வழக்கறிஞர் சங்கத்தில் (Bar Council) வழக்கறிஞராக பதிவு செய்து கொள்வதற்காகவும், ரூ.3,000/- உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சமாக 15 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர்.

2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.0.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 24

**25. செவித்திறன் மற்றும் பார்வை குறையுடையோருக்கான அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம்**

அரசு அங்கீகாரம் பெற்ற செவித்திறன் மற்றும் பார்வை குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியமாக ஒரு சிறப்பு ஆசிரியருக்கு மாதம் ரூ.10,000/- வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு சிறப்புப் பள்ளிக்கு 3 சிறப்பாசிரியர்கள் வீதம் இந்த ஊதிய மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

2017-2018 ஆம் நிதியாண்டிற்கு இந்த திட்டத்திற்கு ரூ.176.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**26. பயிற்சி திட்டங்கள்**

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் பொருட்டு அவர்களுக்கு திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்க அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகள் நலத் துறைமூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான திறமைகளை ஊக்குவிக்கும் விதமாக பின்வரும் பயிற்சிகள் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன:-

**(அ) மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்க புகைப்படப் பயிற்சி**

கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட 200 மாற்றுத் திறனாளிகளுக்கு சென்னையில் உள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் வட்டார அலுவலகத்தின்மூலம் ஒரு மாதம் பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்க புகைப்பட பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் மாற்றுத் திறனாளிகள் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். பல்லூடகப் பயிற்சி பெற்ற நபர்கள் பொழுதுபோக்கு நிறுவனங்களில், குறிப்பாக தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் விளம்பரத்துறை போன்றவற்றில் அதிகம் தேவைப்படுகின்றனர். ஒவ்வொரு வருடமும் இத்திட்டத்தின்கீழ் 200 மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றுள்ளனர். 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.21.75 இலட்சம் செலவிடப்பட்டது.



2017 ஜூன் 24]

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ரூ.21.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு 'பொருத்துநர்' பயிற்சி**

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில், காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு இரண்டாண்டு பொருத்துநர் பயிற்சியளிப்பதற்காக சிறப்பு பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 21 மாற்றுத்திறனாளிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.300/—வீதம் உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ரூ.0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**27. இட ஒதுக்கீட்டின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்துதல்**

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் அரசு கட்டுப்பாட்டில் செயல்படும் நிறுவனங்களில் இடஒதுக்கீடு அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகின்றது. தற்போது புதியதாக இயற்றப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைச் சட்டம் 2016-ன்படி, மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீட்டினை அரசு பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு தொகுதி A மற்றும் B பிரிவில் உகந்த பணியிடங்களை கண்டறியும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

தலைமைச் செயலாளர் தலைமையில், பல்வேறு அரசுத் துறை செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவினை அரசு அமைத்துள்ளது. இக்குழு, அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களில் மூன்று விழுக்காடு இடஒதுக்கீடு அமல்படுத்தப்படுவதை கண்காணிக்கும். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களில், பணியிடம் நிரப்பும் வருடத்தில் மாற்றுத் திறனாளிகள் இல்லாதபட்சத்தில், அப்பணியிடங்களை மூன்று

ஆண்டுகளுக்கு முன் கொணர அரசாணை (நிலை) எண் 200, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 26-12-2006-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் (சமவாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995-ல் வலியுறுத்தியுள்ளவாறு மாநில அரசுத் துறைகளில், தொகுதி ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 99, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 26-02-1988-ல் தொகுதி A, B, C, மற்றும் D-ன்கீழ் உகந்த பணியிடங்களை கட்டாயமாக கண்டறிய அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் அரசாணை (நிலை) எண் 10, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 04-03-2014-ன்படி, பல்வேறு அரசுத் துறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 1928 பணியிடங்கள் பின்னடைவு பணியிடங்களாக கண்டறியப்பட்டு நிரப்பப்பட ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 13, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 2-3-2016-ல் தொகுதி ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவுகளில் 263 பணியிடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக கண்டறியப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### (அ) திறன் மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு தொலைநோக்கு 2023-ல் வலியுறுத்தியுள்ளவாறு, மாற்றுத்திறனாளிகளுக்கு பொதுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் 2016-2017 ஆம் நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதற்காக 1000 மாற்றுத் திறனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### (ஆ) தனியார் துறை மூலம் வேலைவாய்ப்பு வழங்கல்

தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதற்கு அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2016-2017 ஆம் நிதியாண்டில் இச்சிறப்பு முகாம்களின் வாயிலாக 966 மாற்றுத் திறனாளிகள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.





### 28. சிறு தொழில்கள் மற்றும் பெட்டிக் கடைகள்

மாற்றுத்திறனாளிகள் சுயமாக தொழில் செய்யவும், குறுதொழில் நிறுவனங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதன்பொருட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் வங்கிக் கடன் பெற ஏற்பாடு செய்யப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையில், மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.10,000/- இதில் எது குறைவான தொகையோ, அத்தொகை மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. 2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,200 மாற்றுத்திறனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கென ரூ.120.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 29 (அ) பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு, சுயவேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் நோக்கில், வங்கிக் கடன் பெற ஊக்குவிக்கப்படுகிறது. அதன்படி, உற்பத்தி, வர்த்தகம் மற்றும் சேவை ஆகிய பிரிவுகளில் சுய தொழில் செய்ய வங்கிமூலம் கடன் பெற ஏற்பாடு செய்யப்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் வங்கிக் கடன் பெறும் போது விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டிய 5 விழுக்காடு பங்குத் தொகைக்கான நிதியினை, மாநில அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ், மாற்றுத்திறனாளிகள் உரிய விண்ணப்பங்களை நேரடி கணினி தொடர்பு (online) மூலம் மாவட்ட தொழில் மையத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்பங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவில் பரிசீலிக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். 2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 18 மாற்றுத் திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கென ரூ.5.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 24

### (ஆ) வேலையில்லா படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

வேலையில்லா படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், மாற்றுத் திறனாளிகளுக்கு, சுயவேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் நோக்கில், வங்கிக் கடன் பெற ஊக்குவிக்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் வங்கிக் கடன் பெறும் போது, விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டிய 5 விழுக்காடு பங்குத் தொகையை மாநில அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் உரிய விண்ணப்பங்களை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் மாவட்ட தொழில் மையத்திற்கு அனுப்ப வேண்டும். அவ்விண்ணப்பங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவில் பரிசீலிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 2016-2017 ஆம் நிதியாண்டில் ரூ.13.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 122 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.29.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 30. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் சுய தொழில் திட்டம்

மத்திய அரசின் தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் சுய தொழில் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க மாநில அரசு முனைப்புடன் செயல்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்மூலம் சுயவேலைவாய்ப்புக் கடன் வழங்க, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியினைச் செயல்படுத்தும் நிறுவனமாக மத்திய அரசு நியமித்துள்ளது. மாற்றுத் திறனாளிகள் அருகிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபட்டு, தங்களை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக, மாநில அரசு, கூட்டுறவு வங்கிகளின்மூலம், வட்டியில்லாக் கடனை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வட்டித் தொகை முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. 2016-2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.17.00 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3355 மாற்றுத் திறனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.



2017 ஜூன் 24]

### 31. மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான நிவாரணத் தொகை

18 வயதிற்கு மேற்பட்ட வேலைவாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி, மாநில அரசு அவர்களின் கல்வித் தகுதியினைப் பொறுத்து, கீழ்க்கண்டவாறு நிவாரணத் தொகையினை வழங்கி வருகிறது:

| வ. எண் | கல்வித்தகுதி | மாதம் ஒன்றிற்கான நிவாரணத் தொகை |
|---|---|---|
| 1. | பத்தாம் வகுப்பு வரை | ரூ.600/- |
| 2. | மேல் நிலை வகுப்பு | ரூ.750/- |
| 3. | பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.1000/- |

இத்திட்டத்தில் பயன் பெற மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் குறைந்தபட்சம் ஓராண்டாவது பதிவு செய்து, காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

2016-17 ஆம் ஆண்டில் 24,556 மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் ரூ.22.66 கோடி செலவிடப்பட்டது.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.2267.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 32. சமூகப் பாதுகாப்பு

அரசு கடுமையாக கை, கால் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கி வருகிறது.

### (அ) மனவளர்ச்சி குன்றியவர்கள், கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை

மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/- வீதம் 12 மாதங்களுக்கு கீழ்க்காணும் விவரப்படி வழங்கப்படுகின்றன:-

[2017 ஜூன் 24

| வ. எண் | மாற்றுத்திறனாளியின் வகை | சதவீதம் | வருமான வரம்பு | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றியோர்கள் | 45% மற்றும் அதற்கு மேல் | இல்லை | 125561 |
| 2. | கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் | 75% மற்றும் அதற்கு மேல் | இல்லை | 18526 |
| 3. | தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோர் | 40% மற்றும் அதற்கு மேல் | இல்லை | 2572 |

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.244.49 இலட்சம் மனவளர்ச்சி குன்றியோர்கள், கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2012 டிசம்பர் முதல், மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்கள். 2014-2015 ஆம் நிதியாண்டு முதல் கருவூலம் மூலமாக மின்னணு பட்டுவாடா முறையில் (ECS) உதவித் தொகை நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டில் 5729 தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும் 07-06-2017 முதல் தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பு உதவித் தொகை ரூ.1000/-லிருந்து ரூ.1500/- ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1039.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 33. மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் மையம்

மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் மையம் மாநில வள மற்றும் பயிற்சி மைய வளாகம், கே.கே.நகர், சென்னை-78 என்ற



2017 ஜூன் 24]

முகவரியில் இயங்கி வருகிறது. மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மத்திய மற்றும் மாநில அரசுமூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்த விவரம் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை, உதவி உபகரணங்கள், பயணச் சலுகைகள், பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம், ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள், ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் மையம், சிறப்புப் பள்ளிகள், கல்வி, தொழிற் பயிற்சி, வேலைவாய்ப்பு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் விவரங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. தகவல் மையத்தினை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 044-2471 9942. இலவச சேவை அழைப்பு 1800 425 0111, நிகரி எண் 044-24719943. 2016-2017 ஆம் ஆண்டில் இதுவரை 1776 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டு அதற்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.4.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 34. உதவி உபகரணங்கள்

மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு உதவி உபகரணங்களை வழங்கி, அவர்கள் தன்னிச்சையாகவும், சமுதாயத்தில் தன்னம்பிக்கையுடனும் செயல்பட அரசு உதவி வருகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கு கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள் அவர்களின் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன:

1. சக்கர நாற்காலிகள்
2. கருப்பு கண்ணாடிகள்
3. மடக்கு ஊன்றுகோல்கள்
4. பிரெய்லி கை கடிகாரங்கள்
5. காதொலிக் கருவிகள்
6. சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய மின்கலன்கள்

[2017 ஜூன் 24

7. கால் தாங்கிகள்

8. தோள்பட்டை தாங்கிகள்

9. செயற்கை அவயங்கள்

10. மூன்று சக்கர சைக்கிள்கள்

கால்தாங்கிகள் மற்றும் செயற்கை அவயங்கள் போன்ற உதவி உபகரணங்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் பணிபுரியும் முடநீக்கு வல்லுநர்கள் மற்றும் தோல் பணியாளர்களால் மாற்றுத் திறனாளிகளின் தேவைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு பொருத்தப்படுகின்றன.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**35. நவீன உதவி உபகரணங்கள்**

அ. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்

ஆ. காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள்

இ. மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்.

ஈ. பார்வைத்திறன் குறைபாடுடைய கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Digital Magnifier)

உ. முதுகுத் தண்டுவடத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்

**(அ) இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்**

இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கும், பணிக்கு செல்பவர்களுக்கும் இணைப்பு



2017 ஜூன் 24]

சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இவை மாற்றுத் திறனாளிகள் எளிதில் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு செல்வதற்கு பெரிதும் உதவியாக உள்ளது. 2016-2017-ம் நிதியாண்டில் 1017 இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் ரூ.598.64 இலட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. தற்போது 2017-2018 ஆம் நிதியாண்டு முதல் 2000 எண்ணிக்கையில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட உள்ளது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.599.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள்**

செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு உடலுடன் பொருந்திய காதொலிக் கருவிகளை அரசு வழங்கி வருகிறது. ஆனால், இக்கருவிகளை பயனாளிகள் பொது இடங்களில் பயன்படுத்துவதில் தயக்கம் காட்டி தவிர்ப்பதால் செவித்திறன் பாதிப்படைகிறது. அதற்கென காதுக்கு பின்னால் அணியும் நவீன காதொலிக் கருவிகள், மாணவர்கள், பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரிபவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.1.00 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 3460 செவித்திறன் குறையுடையோர் பயனடைந்துள்ளனர்.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்**

மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு வருகிறது. மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் சிறப்பு தேவைகளைக் கருத்தில் கொண்டு பிரத்தியேகமாக சிறப்பு

[2017 ஜூன் 24

சக்கர நாற்காலிகள் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.26.39 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 473 பயனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.27.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) பார்வைக் குறைபாடுடையவர்களுக்கு உருப்பெருக்கி

பார்வைக் குறைபாடுள்ள மாணவ மாணவியருக்கு, பாடங்களை சுயமாக படிப்பதற்காக, 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து உருப்பெருக்கிகள் (Magnifier) வழங்கப்பட்டு வருகிறது. குறைபார்வையுள்ள 138 மாணவர்களுக்கு 2015-2016 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.9.52 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) முதுகுத் தண்டுவடத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலிகள்

முதுகுத் தண்டுவடத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் பயனாளிகளின் வசதியையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதிபடுத்தும் வகையில், உருவாக்கப்பட்டு, 2015-2016 ஆம் நிதியாண்டில் மொத்தம் 960 சிறப்பு சக்கர நாற்காலிகள் ரூ.1.92 கோடி செலவில் வழங்கப்பட்டது.

## 36. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட உதவி உபகரணங்கள் (2016–2017)

### (அ) பார்வையற்றோருக்கான நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள்

பார்வையற்றோருக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்படவுள்ளது. நவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நவீன ஒளிரும் மடக்குச் குச்சிகள் பயன்படுத்துவதன்மூலம் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் தங்களின் அனைத்துப் பக்கங்களிலும் உள்ள தடைகளை எளிதில் அறிந்து கொள்ள உதவியாக அமைந்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.1.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஏறத்தாழ 5000 நபர்கள் பயன் அடைவர்.



2017 ஜூன் 24]

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.245.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் பிறருடன் தொடர்பு கொள்ள உதவும் மென்பொருளுடன் கூடிய உதவி உபகரணம் வழங்கும் திட்டம்

நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட சிறப்புப் பள்ளிக் குழந்தைகள் மாற்று வழியில் தகவல் தொடர்பு மேற்கொள்ள ‘ஆவாஸ்’ எனப்படும் மென்பொருள் அடங்கிய கையடக்கக் கணினி வழங்க இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஆரம்ப நிலைப் பயிற்சி மையம் மற்றும் நடமாடும் சிகிச்சைப் பிரிவு திட்டம்மூலம் பயன் பெறும் குழந்தைகளுக்கு, இந்த உபகரணம் வழங்கப்பட்டது. 2016-2017 ஆம் நிதியாண்டில் 391 சிறப்புக் குழந்தைகள் ரூ.1.06 கோடி செலவில் பயன் பெறுவார்கள்.

## 37. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் பயணச் சலுகை

மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வண்ணம் அரசு போக்குவரத்து கழகப் பேருந்துகளில் பயணச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு போக்குவரத்து கழகப் பேருந்துகளில், வருமான உச்ச வரம்பின்றி பயணச் சலுகைகள் வழங்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து கட்டணம் ஏதுமின்றி பயணம் மேற்கொள்ளலாம். பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் அவர்கள் இருப்பிடத்திலிருந்து 100 கி.மீ. வரை நிபந்தனைகள் ஏதுமின்றி கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

ஏனைய மாற்றுத் திறனாளிகளுக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு கல்வி நிலையங்கள், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மையம் மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்றுவர இச்சலுகை வழங்கப்படுகிறது.

மனவளர்ச்சி குன்றியவர்கள், துணையாளர் ஒருவருடன் பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் மாநிலத்தின் எந்தவொரு இடத்திற்கும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் குளிர்சாதன வசதியுள்ள பேருந்தினைத் தவிர்த்து, பிற வகைப் பேருந்துகள் அனைத்திலும் எத்தனை முறை வேண்டுமானாலும் 75% பேருந்து கட்டணச் சலுகையுடன் சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளருடன் செல்ல அனுமதியும், துணையாளருடன் சேர்த்து 75% பேருந்துக் கட்டணச் சலுகையில் பயணம் செய்யவும் அனுமதிக்கப்படுகின்றனர். எவ்வித கட்டணமுமின்றி அனைத்து வகை மாற்றுத் திறனுடைய குழந்தைகளும் துணையாளர் ஒருவருடன் தங்கள் இருப்பிடத்திலிருந்து, ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் முன்பருவப் பள்ளிகளுக்கு சென்று திரும்ப சலுகை வழங்கப்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.3334.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 38. திருமண நிதி உதவித் திட்டம்

மாற்றுத் திறனாளியைத் திருமணம் செய்து கொள்ளும் நபர்களை ஊக்குவிக்கும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. திருமண உதவித் தொகையாக ரூ.25,000/-ம் மற்றும் மணப்பெண்ணிற்கு “திருமாங்கல்யம்” செய்வதற்காக 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகள் பட்டம் அல்லது பட்டயம் பெற்றிருந்தால் ரூ.50,000/- உதவித் தொகையும், மணப்பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த திருமண நிதியுதவியுடன் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது. பல்வேறு வகையான திருமண நிதியுதவித் திட்டங்களின் விவரம் கீழ்வருமாறு:-





| வ. எண் | திட்டத்தின் பெயர் | பட்டம் / பட்டயம் பெற்றவர்கள் | பட்டம் / பட்டயம் பெறாதவர்கள் |
|---|---|---|---|
| 1 | பார்வை குறைபாடுடையவரை திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/- | நிதியுதவி ரூ.12,500/- |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/- | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/- |
| | | தங்க நாணயம் 8 கிராம் | தங்க நாணயம் 8 கிராம் |
| 2 | கை, கால் பாதிக்கப்பட்டோரை திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/- | நிதியுதவி ரூ.12,500/- |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/- | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/- |
| | | தங்க நாணயம் 8 கிராம் | தங்க நாணயம் 8 கிராம் |
| 3 | காது கேளாத, வாய்பேச இயலாதோரை திருமணம் செய்யும் சாதாரண நபருக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/- | நிதியுதவி ரூ.12,500/- |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/- | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/- |
| | | தங்க நாணயம் 8 கிராம் | தங்க நாணயம் 8 கிராம் |
| 4 | மாற்றுத்திறனாளியை திருமணம் செய்யும் மாற்றுத் திறனாளிக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/- | நிதியுதவி ரூ.12,500/- |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/- | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/- |
| | | தங்க நாணயம் 8 கிராம் | தங்க நாணயம் 8 கிராம் |

இத்திட்டத்தின்கீழ் பயனடைய இலக்கு ஏதுமில்லை. எனவே, திருமண நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த

[2017 ஜூன் 24

அனைவருக்கும் நிதியுதவி கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் நிதியாண்டில் மொத்தம் 858 பயனாளிகள் இத்திட்டத்தின்மூலம் ரூ.4.24 கோடி செலவில் பயனடைந்துள்ளனர்.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.265.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 39. மீட்புத் திட்டம்

குடும்பத்தினரால் கவனிக்கப்படாமல் சாலைகள் மற்றும் இதர பொது இடங்களில் சுற்றித் திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனை/ மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டில் 632 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனை / மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.7.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 40. தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு மையங்கள்

தனி மனிதனின் தசை இயக்கம் படிப்படியாக பலவீனமுற்று, முழுமையாக செயலற்ற தன்மை அடைவதே தசைச் சிதைவு நோய் எனப்படும் மரபணு தொடர்பான நோய் ஆகும். இந்நோய்க்கு தொடர் மருத்துவ சிகிச்சை, இயன்முறை சிகிச்சை மற்றும் துணை சேவைகள் அவசியமாகிறது. தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி, இயன்முறை சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் வழங்கிடுவதற்காக சென்னை, வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் பகல் நேர பராமரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பகல் நேர பராமரிப்பு மையங்கள் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.29.47 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



2017 ஜூன் 24]

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.29.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (அ) மாலிக்குலார் டயக்னாஸ்டிக்ஸ், கவுன்சிலிங், கேர் அண்ட் ரிசர்ச் செண்டர், கோயம்புத்தூர்

“மாலிக்குலார் டயக்னாஸ்டிக்ஸ், கவுன்சிலிங், கேர் அண்ட் ரிசர்ச் செண்டர், (MDCRC) கோயம்புத்தூர்” என்பது ஒரு லாப நோக்கற்ற நிறுவனம். இந்நிறுவனம் பொது சுகாதாரம் -முக்கியமாக Duchenne தசை சிதைவு நோய் மற்றும் Spinal தசைச் சிதைவு நோய் குறித்த சேவைகள் அளித்து வருகிறது. இந்த மையம்மூலக் கூறு கண்டறிதல், கலந்தாய்வு, பன்முக மருத்துவ சேவை மற்றும் மறுவாழ்வு சேவைகளை அளித்து வருவதோடு, அனைத்து சேவைகளையும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இலவசமாக வழங்குகிறது. அரசு நிறுவனங்கள் மற்றும் பிற நன்கொடையாளர்களின் உதவியோடு இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. “மாலிக்குலார் டயக்னாஸ்டிக்ஸ், கவுன்சிலிங், கேர் அண்ட் ரிசர்ச் செண்டர், (MDCRC) கோயம்புத்தூர்” நிறுவனம் பல்வேறு அரசு நிறுவனங்களுடன், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு தமிழ்நாட்டில் உள்ள தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளின் விவரங்களைச் சேகரித்து வருகின்றது. மேலும், மரபணு மாற்றத்தினைக் கண்டறிதல், கருத்தரித்தலுக்கான ஆலோசனை மற்றும் பிரசவத்துக்கு முந்தைய கருவின் வளர்ச்சியைக் கண்டறிதலுக்கு உதவுகிறது. டி.என்.ஏ. (DNA) கண்டறிதல்மூலம் இந்நோயினைக் கண்டறிந்து உறுதி செய்வதன்மூலம், குடும்பத்தில் அடுத்த குழந்தை இந்நோயுடன் பிறப்பதை தடுக்க இம்மையம் உதவுகிறது.

## 41. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம்

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கு புதிய நிர்வாகிகள் நியமனம் செய்து அரசாணை (1D) எண்31, மாற்றுத் திறனாளிகள் நலத்(மா.தி.ந.2.1) துறை, நாள் 31-03-2017 வெளியிடப்பட்டுள்ளது. மேலும் மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் கீழ்க்குறிப்பிட்ட சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:

[2017 ஜூன் 24

| | | | |
|---|---|---|---|
| 1. | தனி நபர் விபத்து நிவாரணம் | | |
| | இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு: | | |
| | (அ) | இறப்பு | ரூ.1,00,000/- |
| | (ஆ) | கை அல்லது கால் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ.1,00,000/- |
| | (இ) | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ.50,000/- |
| | (ஈ) | நிரந்தரம், மொத்த ஊனம் ('ஆ' மற்றும் 'இ' தவிர்த்து) | ரூ.25,000/- |
| 2. | மாற்றுத் திறனாளி நபரின் இறுதிச் சடங்கிற்கு | | ரூ.2,000/- |
| 3. | மாற்றுத் திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கு | | ரூ.15,000/- |
| 4. | மாற்றுத் திறனாளியின் மகன் அல்லது மகள் கல்வி பயில உதவித் தொகை | | |
| (அ) | (i) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | ரூ.1,000/- |
| | (ii) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகளுக்கு | ரூ.1,000/- |
| (ஆ) | (i) | விண்ணப்பதாரரின் +1 வகுப்பு மற்றும் அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ.1,000/- |
| (இ) | (i) | விண்ணப்பதாரரின் +2 அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ.1,500/- |
| | (ii) | விண்ணப்பதாரரின் +2 தேர்வு தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகளுக்கு | ரூ.1,500/- |
| (ஈ) | (i) | விண்ணப்பதாரரின் முறையான பட்டப் படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கு | ரூ.1,500/- |



2017 ஜூன் 24]

| | | | |
|---|---|---|---|
| | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.1,750/- |
| | (iii) | விண்ணப்பதாரரின் முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ.2,000/- |
| | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.3,000/- |
| (உ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் சட்டம்/பொறியியல்/மருத்துவம்/கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொடர்பான தொழிற்கல்விப் படிப்புகள் ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | ரூ.2,000/- |
| | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.4,000/- |
| | (iii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்கல்வி, பட்ட மேற்படிப்பு படிக்க ஒவ்வொரு கல்வி ரூ. 4,000/- ஆண்டிற்கும் | |
| | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.6,000/- |
| (ஊ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்குகளில் படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ.1,000/- |
| | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.1,200/- |
| 5. | திருமண உதவித் தொகை கணவன் அல்லது மனைவி இருவரும் விண்ணப்பித்தாலும் ஒருவருக்கு மட்டுமே இவ்வுதவி வழங்கப்படும் | | ரூ.2,000/- |

[2017 ஜூன் 24

| | | | |
|---|---|---|---|
| 6. | வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு பிரசவம் அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கு நிதியுதவி | | |
| | 1. | மகப்பேறு | ரூ.6,000/- |
| | 2. | கருச்சிதைவு | ரூ.3,000/- |
| | 3. | கருக்கலைப்பு | ரூ.3,000/- |
| 7. | மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க நிதியுதவி | | ரூ.500/- |

10 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள், நல வாரியத்தில் சேர்ந்து மேற்காணும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 42. அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தெருக்களில் பிச்சை எடுக்கும் நபர்களுக்காக, அரசு 10 மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவ உதவியும், மறுவாழ்வும் அளிப்பதற்காக இந்த இல்லங்கள் தொடங்கப்பட்டன. கீழ்க்காணும் இடங்களில் இவ்வில்லங்கள் செயல்படுகின்றன:

1. பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம்.
3. பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. மனையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
6. யா.புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
7. மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம்.
8. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.



2017 ஜூன் 24]

9. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.
10. விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம்.

2016-2017 ஆம் ஆண்டில் 1010 இல்லவாசிகள் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ளனர். மருத்துவரீதியாக சிறப்பு மருத்துவரால் இந்நோய் உறுதி செய்யப்பட்ட பின்னர், ஒருவர் தானாகவே ஏதேனுமொரு மேற்குறிப்பிட்ட இல்லத்தில் சேர்ந்துகொள்ளலாம். குற்றவியல் நீதிமன்ற நடுவரால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட, பொது இடங்களில் பிச்சை எடுக்கும் தொழுநோய் பிச்சை எடுப்போர் உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். தொழுநோயாளிகள் அவர்களது குடும்பத்தாருடன் இந்த இல்லங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். குணமடைந்த நிலை அல்லது ஒழுங்கு நடவடிக்கையின் அடிப்படையில் இல்லத்திலிருந்து இல்லவாசிகள் விடுவிக்கப்படுகிறார்கள்.

இல்லவாசிகளுக்கு உணவும், உறைவிடமும், உடையும், மருத்துவ வசதியும், நூலகம், விளையாட்டு கருவிகள், இசைக் கருவிகள் மற்றும் தொலைக்காட்சி ஆகிய பொழுதுபோக்கு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடல் திறனுடைய இல்லவாசிகளுக்கு பாய் நெய்தல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணி தயாரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளில், பெரியவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.42/-ம், சிறார்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.37/-ம் உணவுக்காகச் செலவிடப்படுகிறது. தீபாவளி, பொங்கல், குடியரசு தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்தநாள், தொழுநோய் எதிர்ப்பு நாள் மற்றும் ஆண்டு விழா ஆகிய சிறப்பு நாட்களில் ரூ.5/- கூடுதல் மதிப்பில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளில் இரண்டு இணை ஆடைகள் விநியோகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மைக்ரோ செல்லுலார் ரப்பர் காலணிகள் மற்றும் பாய்கள் வழங்கப்படுகின்றன. தட்டு மற்றும் டம்ளர்கள் ஐந்தாண்டுக்கு ஒரு முறையும், போர்வைகள் மூன்றாண்டுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகிறது. 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்களும் குறிப்பேடுகளும் விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள மருத்துவ அலுவலரால் இல்லவாசிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. தேவையான

[2017 ஜூன் 24

மருந்துகள், தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. கீழ்க்கண்ட பொருட்களுக்கு ஒவ்வொரு இல்லத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | பொருட்கள் | ஆண்டிற்கு செலவின ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | சிறப்பு வகை காலணிகள் மற்றும் செயற்கை அவயங்கள் (தேவைப்படும் இல்லவாசிகளுக்கு) | ரூ.1,000/- |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குதல் | ரூ.5,000/- |
| 3. | பல்துலக்கிகள் மற்றும் பற்பொடி | ரூ.2,500/- |
| 4. | விளையாட்டு சாதனங்கள் | ரூ.1,200/- |
| 5. | இசைக் கருவிகள் | ரூ.400/- |

மேலும், அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகள், மரணமடைந்தால் அவர்களது ஈமச்சடங்கு நடத்துவதற்காக ரூ.2,000/- வழங்கப்படுகிறது. தகுதியுள்ள 326 இல்லவாசிகளுக்கு அன்றாட வாழ்க்கைக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் ரூ.13.27 இலட்சத்தில் வழங்கப்பட்டது.

அரசு மறுவாழ்வு இல்லம், தேவியாக்குறிச்சியில் புதிய நவீன சமையலறை கட்டுவதற்காக ரூ.27.53 இலட்சம் 2016-2017ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.877.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 43. மன வளர்ச்சி குன்றிய 14 வயதிற்கு மேற்பட்டோருக்கான இல்லங்கள்

அரசு 32 மாவட்டங்களில் வயது வந்த மனவளர்ச்சி குறையுடையோருக்கான இல்லங்களை நடத்தி வருகிறது. ஆண்/ பெண் என இருபாலருக்கான 7 இல்லங்கள், ஆண்களுக்கான 16 இல்லங்கள் மற்றும் பெண்களுக்கான 19 இல்லங்கள் என மொத்தமாக 42 இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. ரூ.400.59



2017 ஜூன் 24]

இலட்சம் செலவில் மொத்தம் 1640 நபர்கள் பயனடைந்து வருகின்றனர்.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.406.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 44. மன வளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களைப் பராமரிக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி

மன வளர்ச்சி குன்றியோர்கள்மீது அக்கறை மற்றும் பாதுகாப்பு வழங்கிடும் நோக்கில் அரசு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. இல்ல உள்ளுறைவாளர்களுக்கான உணவூட்டு செலவினம், வாடகை செலவினம் மற்றும் புதிய கட்டடம் கட்ட / கட்டட விரிவாக்கம் செய்திட உதவி என்பன இதில் அடங்கும்.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.340.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 45. தன்னார்வ தொண்டு நிறுவனத்தின்மூலம் தேனி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மூன்று பகல் நேர பராமரிப்பு மையங்கள்

தேனி மாவட்டத்தில் 90 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயன்பெற்றிடும் வகையில் மனவளர்ச்சி குன்றியோருக்கான மூன்று பகல்நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் அனைத்தும் அரசு வழங்கிடும் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.11.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.11.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2017 ஜூன் 24

**46. தேனி மாவட்டத்தில் தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளிக்கு நிதியுதவி**

தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குறையுடைய குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 25 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் சிறப்பு கல்வி பெற்றிடும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.2.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.3.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**47. மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் சிகிச்சையாளர்கள் (இயன்முறை சிகிச்சையாளர், தொழில் முறை சிகிச்சையாளர் மற்றும் பேச்சுப் பயிற்சியாளர்) ஊதிய மானியம்**

தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி சிகிச்சையாளர்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் வழங்கப்படும் ஊதியம் மட்டுமின்றி அரசால் ஊதிய மானியம் வழங்கப்படுகிறது. சிறப்பாசிரியர்கள் மற்றும் சிகிச்சையாளர்கள் (இயன்முறை பயிற்சி சிகிச்சையாளர், தொழில் முறை பயிற்சி சிகிச்சையாளர்/பேச்சுப் பயிற்சி சிகிச்சையாளர்) மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக தொடர்ந்து பணிபுரிவதை ஊக்குவித்திடும் வகையில் மாதம் ரூ.5,000/- என வழங்கப்பட்டு வந்த ஊதிய மானியம் டிசம்பர் 2012 முதல் ரூ.10,000-/ ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.869.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**48. இரவலர்கள் முகாம், மேல்பாக்கம்**

இரவலர்கள் பிச்சை எடுக்கும் குற்றங்களைத் தடுக்கவும், அவர்களை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தி பயனுள்ள குடிமக்களாக்க மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் இம்முகாம் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் பிச்சை எடுப்பதை தடுக்கும்



2017 ஜூன் 24]

சட்டம், 1945-ன்படி, தண்டனை வழங்கப்பட்ட இரவலர்கள் நீதிமன்ற ஆணைப்படி தண்டனைக் காலத்தில் அனுமதிக்கப்பட்டு தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உணவும், உறைவிடமும், உடை மற்றும் மருத்துவ வசதியும் அளிக்கப்படுவதோடு நெசவு, தச்சுவேலை, மண்பாண்டத் தொழில், தையல் ஆகிய கைத்தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.72.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**49. மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த தடையில்லா சூழல்**

மாற்றுத்திறனாளிகள் பொதுக் கட்டடங்களில் தடைகளின்றி செல்ல ஏதுவாக கைப்பிடிகள், சாய்வு தளங்கள், தடையில்லா கழிப்பறைகள் முதலான அமைப்புகள் அமைத்திடும் பணிகளில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதுவரை 1,80,050 ஊரக வளர்ச்சித் துறை கட்டடங்கள், 2,802 சென்னை மாநகராட்சி கட்டடங்கள் மற்றும் 5,890 வணிக வளாக கட்டடங்களில் தடையில்லா வசதியுடன்கூடிய கட்டடங்களாக மாற்றப்பட்டுள்ளது.

மேலும், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் சாலையில் செல்லவும் பேருந்துகளில் பயணிக்கவும் ஏதுவாக 75 சாலை போக்குவரத்து சந்திப்புகளில் "ஒலி எழுப்பும் சமிக்ஞைகள்" கருவி சென்னை மாநகரில் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**50. மாற்றுத் திறனாளிகளுக்கான தடையில்லாச் சூழல் உருவாக்கத்திற்கான இந்திய அரசின் பிரச்சார திட்டம் (சுகம்ய பாரத் அபியான்)**

ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு, முழுபங்கேற்பு) சட்டம் 1995 மற்றும் தேசிய அறக்கட்டளை சட்டம், 1999 செயலாக்கத்தை தொடர்புடைய இதர அரசுத் துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகள் நலச் சட்ட செயலாக்க நடவடிக்கைகளில் குறிப்பாக, மத்திய அரசின் தலைமைத் திட்டமான தடையில்லா கட்டமைப்பு உருவாக்கும் பிரச்சார திட்டத்தின்கீழ் அரசு பொது கட்டடங்களில் தடையில்லா கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது முக்கியமானதாகும்.

உலகளாவிய அளவில் தடையில்லா கட்டமைப்பு ஏற்படுத்துவதன் அடிப்படையில் சமவாய்ப்புகள் மற்றும் தனித்து செயல்படும் திறன்களை மாற்றுத் திறனாளிகள் பெறும் வகையிலான அவர்களை உள்ளடக்கிய சமூகத்தினை ஏற்படுத்துதலே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். கட்டடங்கள், போக்குவரத்து அமைப்புகள், தகவல்கள் மற்றும் தகவல் பரிமாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் முதலானவற்றில் தடையில்லா கட்டமைப்புகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் இலக்காகும். மத்திய அரசின் சிப்டா (SIPDA) திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் 49 அரசுப் பொது கட்டடங்களில் தடையில்லா கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசு பொது கட்டடங்களில் தடையில்லா கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திடும் பணிகளுக்காக ரூ.15.93 கோடி அனுமதி ஆணை வழங்கப்பட்டு, ரூ.7.96 கோடி மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தடையில்லா கட்டமைப்பு உருவாக்கும் பிரச்சார திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஜூலை 2019-க்குள் சென்னை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் 50 அரசு கட்டடங்கள் தடையில்லா கட்டமைப்புள்ள கட்டடங்களாக அமைக்கப்படும்.

**51. ஊனமுற்றோர் நலச் சட்டம் 1995 செயலாக்கத் திட்டம் (சிப்டா):**

ஊனமுற்றோர் நலச் சட்டம், 1995-ன்படி இந்திய அரசின் ஆதரவுடன் சிப்டா (SIPDA) திட்டத்தின்கீழ், அரசுப்பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் நலன் கருதி தடையற்ற கட்டமைப்பு வசதிகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு ரூ.230.00 இலட்சம் (Notional allocation) வழங்கியுள்ளது.

**52. பார்வையற்றவர்கள் பயனடையும் வகையில் சாலை சந்திப்புகளில் ஒலி எழுப்பும் சமிக்ஞைகள் பொருத்துதல்**

பார்வையற்றவர்கள் பயனடையும் வகையில் சென்னை மாநகரில் 150 சாலை சந்திப்புகளில் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி எழுப்பும் சமிக்ஞைகள் விரைவில் பொருத்தப்பட உள்ளது. சென்னை மாநகர பேருந்துகளின் வழித்தடத்தினை



பார்வையற்றவர்கள் அடையாளம் கண்டு எளிதில் பயணித்திட ஏதுவாக 10 வழித்தடங்களில் இயங்கும் 75 பேருந்துகளில் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் "ஒலி எழுப்பும் சமிக்ஞைகள்" கருவி பொருத்தப்பட்டுள்ளது.

**53.பொதுத் துறை நிறுவனங்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் நலத்திட்ட உதவிகள்**

மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் செயல்படுத்திட ஏதுவாக பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து நிதிகள் பெறும் முயற்சியின் விளைவாக 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.1.09 கோடி நிதி பெறப்பட்டு ரூ.90.40 இலட்சம் செலவில் கீழ்க்கண்டவாறு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன:

| வ. எண் | திட்டம் | எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பிறருடன் பேச இயலாத நிலையில் உள்ள குழந்தைகள் மாற்று வழியில் பிறருடன் தொடர்புகொள்ள சிறப்பு மென்பொருளுடன் கூடிய உதவி உபகரணம் | 197 | 49.25 |
| 2. | எழுத்துக்களை பெரிதாக்கிக் காட்டும் கருவிகள் ((Digitial Magnifiers) | 200 | 13.80 |
| 3. | மாற்றுத்திறனாளிகள் பயன்பாட்டிற்காக பேட்டரியால் இயங்கும் கார்கள் (Buggy Vehicles) | 2 | 9.90 |
| 4. | பிரெய்ல் கைக்கடிகாரம் | 42 | 0.45 |
| 5. | உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல் | | 17.00 |
| | மொத்தம் | | 90.40 |

இத்துடன் இயன்முறை சிகிச்சை மையக் கட்டடம் ரூ.15.00 இலட்சத்தில் சென்னையில் கட்டப்பட்டது.

2016-17 ஆம் நிதியாண்டில் பொதுத் துறை நிறுவனங்களின் பங்களிப்பாக ரூ.17.20 இலட்சம் பெறப்பட்டது.

## 54. மாநில விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத் திறனாளிகளுக்காக அரும்பணியாற்றிவரும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, சுதந்திர தினத்தன்று பின்வரும் மாநில விருதுகளை அரசு வழங்கி பெருமைப்படுத்துகிறது:

| வ. எண் | விருதின் பெயர் | விருதின் விவரம் |
|---|---|---|
| 1. | அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த தனியார் தொழிலதிபர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | சிறந்த நிறுவனம் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைபுரியும் சிறந்த நிறுவனம்) | 10 கிராம் தங்கப் பதக்கம் ரூ.50,000/- ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 3. | சிறந்த சமூகப் பணியாளர் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு அரும்பணியாற்றியமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறந்த மருத்துவர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5. | சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.25,000/- ரொக்கப் பரிசு |
| 6. | அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கி | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 55. அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம்

அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 3 ஆம் தேதி, ஐக்கிய நாடுகள் சபையின்





தீர்மானத்தின்படி மாநில அரசால் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மற்றும் அவர்களுடைய மதிப்பு, திறமைகள் பற்றிய விழிப்புணர்வையும், அவர்களது சிறப்பு தேவையையும் சமுதாயத்திற்கு உணர்த்தும் வகையில் இத்தினம் தமிழக அரசால் அனுசரிக்கப்படுகிறது.

அன்றைய தினம் மாற்றுத் திறனாளி குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகளும் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் நாளை முன்னிட்டு, மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 5000 மாற்றுத் திறனாளி குழந்தைகள் கலந்துகொள்கின்றனர். பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் மற்றவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. அன்றைய தினம் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. இவ்விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறந்த சேவையைப் பாராட்டி சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த நிறுவனம், சிறந்த நடத்துநர் மற்றும் ஓட்டுநர் ஆகியோருக்கு மாநில விருதுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

| வ. எண் | விருதின் பெயர் | விருதின் விவரம் |
|---|---|---|
| 1. | வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த நிறுவனம் | 10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | சிறந்த பணியாளர் விருது (5 பிரிவுகள்) | 10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3. | சிறந்த ஆசிரியர் விருது (3 பிரிவுகள்) | 10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறந்த நிறுவன விருது | 10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5. | சிறந்த ஓட்டுநர் விருது | 10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6. | சிறந்த நடத்துனர் விருது | 10 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ் |

[2017 ஜூன் 24

இந்நாளில், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அரசு / அரசு நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகள் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை கொண்டாடுவதற்காக சிறப்பு தற்செயல் விடுப்பும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.19.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 56. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

அரசு பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்தும்போது, அனைத்து மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் வருமான உச்ச வரம்பின்றி பயன்பெறும் வகையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டமானது தமிழ்நாடு சுகாதார பணிகள் திட்டம் (Tamil Nadu Health Services Project) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயனாளிகள் செலுத்த வேண்டிய பிரிமியம் தவணைத் தொகையினையும் அரசே காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பமும் ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சமும், சிறப்பு மருத்துவத்திற்கு ரூ.1.50 இலட்சம் வரையிலும் மருத்துவ உதவிகள் பெறலாம்.

## 57. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் சிறப்புக் குழந்தைகளுடன் சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஒரு நாள் சுற்றுலாத் திட்டம்

குழந்தைகளின் உடல் மற்றும் மனவளர்ச்சிக்கு, ஆரம்ப காலத்தில் அவர்கள் பெற்றிடும் கற்றல் மற்றும் அனுபவங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு, தமிழ் நாட்டில் உள்ள 78 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிலும் 1560 குழந்தைகளுடன், சிறப்பாசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஒரு நாள் சுற்றுலா சென்று வருவதற்காக ரூ.7.80 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2017 ஜூன் 24]

## 58. இணையதளம்மூலம் விண்ணப்பம் செய்தல்

மாற்றுத் திறனாளிகளின் நலனை கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசு, இணையதளவழி விண்ணப்பித்தல்மூலம் பயன்பெற கீழ்க்கண்ட வசதிகளை ஏற்படுத்தியுள்ளது:

| வ. எண் | சேவையின் பெயர் |
|---|---|
| 1. | உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பம் |
| 2. | உதவி உபகரணங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் |
| 3. | அரசிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கான விண்ணப்பம் |
| 4. | கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்கான விண்ணப்பம் |
| 5. | கடன் உதவி பெற வேண்டி விண்ணப்பம் |
| 6. | மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை வேண்டி விண்ணப்பம் |
| 7. | சிறப்புக் கல்விக்கான உதவிகள் வேண்டி விண்ணப்பம் |
| 8. | பராமரிப்பு உதவித் தொகை வேண்டி விண்ணப்பம் |
| 9. | திருமண நிதியுதவி வேண்டி விண்ணப்பம் |
| 10. | பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வேண்டி விண்ணப்பம் |

## 59. யுனிசெப் (UNICEF) நிறுவனத்தால் வழங்கப்படும் சத்துணவு மற்றும் திறன் உருவாக்கப் பயிற்சித் திட்டம்

சாதாரணக் குழந்தைகளை விட மாற்றத்திறனாளி குழந்தைகள் சத்துக் குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு பல காரணங்கள் இருப்பினும், சுகாதார வசதிக் குறைபாடு, உடல் குறைபாடு போதுமான உணவு உட்கொள்ளாதது அல்லது செரிமானக் குறைவு போன்றவை இதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. மாற்றுத் திறன் குழந்தைகளின் குடும்பத்தின் குறைவான வருமானம் சாதாரண குழந்தைகளை விட சிறப்பு குழந்தைகளின் உடல்நலம் பேணுவதில் பின்னடைவு, குறைவான

சத்துணவு மற்றும் நல வாழ்வு குறைபாடு ஆகிய காரணிகளால் அளவிலேயே யுனிசெப் நிறுவன உதவியுடன் சிறப்புக் குழந்தைகளுடைய ஊட்டச் சத்து நிலையை அதிகரிக்க இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி, ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணிபுரியும் 78 சிறப்பாசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. சத்துணவு பற்றிய உண்மை நிலை, குறைபாட்டின் காரணம் மற்றும் நோயின் தீவிரத்தைக் குறைப்பது ஆகியவை இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். குறிப்பிட்ட தகவல், கற்பித்தல் மற்றும் தொடர்பு பற்றிய பயிற்சி கையேடு உருவாக்கப்பட்டது. அனைத்து ஆரம்ப நிலை பயிற்சி மையங்களும் அருகிலுள்ள குழந்தைகள் ஒருங்கிணைப்பு மையத்துடன் இணைக்கப்பட்டு, அயோடின் மாத்திரைகள் மற்றும் வைட்டமின் மாத்திரைகள், வயிற்றுப் பூச்சியை ஒழிக்கும் மாத்திரைகள் போன்றவை ரேஷன் பொருட்களுடன் சேர்த்து ஆரம்ப நிலை பயிற்சி மையத்திற்கு வரும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக மாற்றுத் திறனாளி குழந்தைகளுடைய ஊட்டச் சத்து நிலையானது கணிசமாக உயருகிறது. இத்திட்டத்திற்கு 2016—17 ஆம் நிதியாண்டில் ரூ.11.41 இலட்சம் யுனிசெப் நிறுவனத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 60. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக புதிய கட்டடம்

சென்னை, காமராஜர் சாலை, லேடி விலிங்டன் கல்லூரி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்திற்காக புதிய கட்டடம் ரூ.3.74 கோடி செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் 1035.22 சதுர மீட்டர் பரப்பளவில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன், எந்த சிரமமும் இன்றி மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொது மக்கள் வந்து செல்லும் வகையில் தடையற்ற சூழலில் அமைந்துள்ளது.

## முடிவுரை

தமிழக அரசு மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு தடையற்ற சமூகச் சூழலை உருவாக்கி அதன்மூலம் அவர்கள் சமுதாயத்தில் சமவாய்ப்புகளை பெற்று அவர்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவும் வகையில் எப்போதும் திண்ணிய முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.